# ஒப்பியல் அரசாங்கம்



சி. அ. யோதிலிங்கம்

குமரன் புத்தக இல்லம்

ஒப்பியல்
அரசாங்கம்

# ஒப்பியல் அரசாங்கம்

சி.அ.யோதிலிங்கம்
B.A.(Hons), M.A., சட்டத்தரணி

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2006

வெளியீட்டு எண் : 106

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
- 361,1/2 டாம் வீதி, கொழும்பு-12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
- 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026

ஒப்பியல் அரசாங்கம்
- சி. அ. யோதிலிங்கம் எழுதியது.

பதிப்புரிமை © 2006 சி. அ. யோதிலிங்கத்துக்கு

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது
- 361,1/2 டாம் வீதி, கொழும்பு - 12

அட்டை வடிவமைப்பு : கனவு நிலையம்

*Published by* Kumaran Book House
- 361,1/2 Dam Street, Colombo - 12, Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Comparartive Governments
By S.A. Jothylingam.

Copyright © 2006 by S. A. Jothylingam

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
- 361,1/2 Dam Street, Colombo -12

*ISBN: 955-659-001-3*

*Cover Design by* Dream Station

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.



என் மீது மாறாத அன்பு செலுத்தி
உதவிக்கரமாக நின்ற எனது
அன்பு மாணவியும், சக ஆசிரியையுமான
அமரர் திருமதி அஞ்சலீனா - டேவிற்றிற்கு
இந்நூல் சமர்ப்பணம்.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | முன்னுரை | viii |
| 1. | ஒப்பீட்டுச் சிந்தனை | 1 |
| 2. | அமெரிக்க அரசாங்கமுறை | 3 |
| 3. | இங்கிலாந்து அரசாங்கமுறை | 49 |
| 4. | இந்திய அரசாங்க முறை | 96 |
| 5. | பிரான்ஸ் அரசாங்கமுறை | 173 |
| 6. | சோவியத் யூனியன் அரசாங்கமுறை | 201 |
| | உசாத்துணை நூல்கள் | 250 |

# முன்னுரை

ஒப்பியல் அரசாங்கங்கள்" என்ற இந்நூல் எனது ஏழாவது நூலாக வெளிவருகின்றது. க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும். முதற்பட்ட படிப்பு மாணவர்களுக்குமென எழுதப்பட்ட இந்நூல் மாணவர்களுக்கு மாத்திரமல்ல அரசியலை உலகளாவிய கண்ணோட்டத்தில் பார்க்க விரும்புகின்ற அனைவருக்கும் பயனுடையதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

ஒப்பியல் கற்கை நெறி என்பது இன்று எல்லாக் கற்கைத்துறைகளிலும் வளர்ந்து வரும் ஒரு நெறியாகும். அரசறிவியலில் நீண்டகாலமாகவே இக்கற்கை துறை வளர்ந்து வந்திருக்கின்றது. பல்வேறு முறைகளையும் ஒப்பிட்டு அம்முறைகளின் சிறப்புகளைப் பற்றி விளங்கிக் கொள்வதே ஒப்பியல் கற்கை நெறியின் பிரதான நோக்கமாகும்.

இந்நூல் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், சோவியத்யூனியன் ஆகிய ஐந்து நாடுகளின் அரசாங்க முறைகளை ஒப்பிடுகின்றது. சுவிஸ் அரசாங்க முறையினைத் தவிர்த்துக் கொண்டால் உலகின் ஏனைய அரசாங்க முறைகள் எல்லாம் இவ் ஐந்து அரசாங்க முறைகளில் ஒன்றாகத் தான் இருக்க முடியும் என்று துணிந்து கூற முடியும்.

ஒவ்வொரு நாட்டினதும் அரசாங்க முறையிலுள்ள சிறப்பியல்புகள், சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, அரசியற் கட்சிகள், அடிப்படை உரிமைகள், அழுத்தக்குழுக்கள் என்பன பற்றி சிறப்பாக இந்நூலில் எடுத்துக் கூற முயற்சித்திருக்கின்றேன்.

இந் நூலில் கூறப்பட்டுள்ள ஐந்து நாடுகளில் அமெரிக்கா, ஜனாதிபதி அரசாங்க முறை, கூட்டாட்சி முறை என்பவற்றிற்கும் இங்கிலாந்து, பாராளுமன்ற அரசாங்கமுறை, இருகட்சி முறை என்பவற்றிக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி முறை-பாராளுமன்றமுறை இரண்டும் கலந்த அரசாங்க முறைக்கும் ஆட்சித்துறை நீதிமன்றத்திற்கும் சிறப்பாகப் பேசப்படுகின்றது. சோவியத்யூனியன் அரசாங்க முறை இன்று நடைமுறையில் இல்லாவிட்டாலும் சோசலிச அரசாங்க முறைக்கான மாதிரியாகக் கொள்ளப்படுகின்றது. இந்தியா தென்னாசியாவிலுள்ள ஒரு ஜனநாயக அரசாங்க முறை என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

எனவே இவ் ஐந்து அரசாங்க முறைகளையும் கற்கும் போது பல்வேறு அரசியல் எண்ணக்கருக்களின் நடைமுறைப் பிரயோகங்களை அறிந்து கொள்ள முடியும் என்று நினைக்கின்றேன்.

இரண்டு வருட கடுமையான உழைப்பின் பின்னரே இவ் நூல் வெளிவருகின்றது.கிடைக்கபெற்ற தகவல்களுக்கேற்ப விடயங்களை விளக்கியிருக்-



கின்றேன். சில அரசாங்கமுறைகளைப் பொறுத்தவரை கூடிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன. வேறு சிலவற்றைப் பொறுத்தவரை குறைவாகவே தகவல்கள் கிடைத்திருக்கின்றது. எனவே விடயதானங்களில் ஒரு சமநிலையற்ற தன்மை இருக்கலாம். வாசகர்கள் அதனைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அடுத்தடுத்த பதிப்புகளில் இக் குறையினை நீக்க முயற்சிக்கின்றேன்.

என்னுடைய நூல்களில் உத்தியோகபூர்வ இணையத்தளங்களை அதிகளவில் பயன்படுத்திய நூல் இதுவேயாகும். நவீன தொடர்பூடகங்களை நூலாக்கத்தில் பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ் நூலாக்கத்திற்கு பலர் உதவியிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் நன்றி கூறுவது எனது கடமைப் பொறுப்பாகும்.

எனது நண்பரும் சட்டத்தரணியுமான நிலக்சன் பிரித்தானிய தூதுவராலயத்திலிருந்து பல நூல்களை எடுத்து தந்து உதவினார். அவருக்கு நன்றிகள்.

எனது அன்பு மகள் யாழினி பல்வேறு இணையத்தளங்களிலிருந்து தகவல்களைத் தந்து உதவினார். அவருக்கும் நன்றிகள்.

இந்நூலை தட்டச்சு செய்வதில் எனது மாணவிகளான லிண்டா, நிரோஷினி ஆகியோர் உதவியுள்ளனர். அவர்களுக்கும் ; நாடுகள் பற்றிய அட்டவணையினைத் தயாரித்துத் தந்த எனது அன்பு மாணவி மேகலாவிற்கும், எனது மோசமான கையெழுத்துக்களை பிரதி செய்து தந்த எனது துணைவியார் ஈஸ்வரிக்கும் எனது நன்றிகள்.

இந்நூலை வெளிக்கொண்டு வருவதில் தொடர்ச்சியாக ஊக்குவித்தவர் குமரன் புத்தக நிலைய அதிபர் நண்பர் குமரன் ஆவார். அவருக்கும் எனது நன்றிகள்.

இறுதியாக என்மீது மாறாத அன்பு செலுத்தி எனக்கு உதவிக்கரமாக நின்றவர் எனது அன்பு மாணவியும், சக ஆசிரியையுமான அமரர் திருமதி அஞ்சலீனா-டேவிற் ஆவார் அவருக்கு இந்நூலை காணிக்கையாக்குவதில் ஒரு ஆசிரியன் என்ற வகையில் மனநிறைவடைகின்றேன்.

அவளது மரணம் எனது வாழ்வில் மிகவும் வலியினை ஏற்படுத்திய ஒரு மரணம். மாணவரின் மரணம் என்பது ஆசிரியரைப் பொறுத்தவரை மிகவும் சோகத்திலாழ்த்துகின்ற ஒன்று. அந்தச் சோகம் தந்த வலியிலிருந்து நான் இன்னமும் மீளவேயில்லை. இந்தச் சமர்ப்பணத்தின் மூலம் தாங்கமுடியா சோகத்திற்குள்ளும் ஒரு நிறைவைக் காண்கின்றேன்.

**" சந்திரா "**
**குப்பிழான்**
ஏழாலை.

**நன்றி**

**அன்புடன்**
**சி.அ. யோதிலிங்கம்**
**நல்லாயன் கன்னியர் மடம்**
**கொட்டாஞ்சேனை**

# 1

# ஒப்பீட்டுச் - சிந்தனை ஓர் அறிமுகம்

அரசறிவியலில் ஒப்பீட்டு அணுகுமுறை என்பது நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வந்த ஓர் அணுகுமுறையாகும். கடந்த கால, நிகழ்கால அரசியல் நிறுவனங்களையும் அரசியல் நடவடிக்கைகளையும் ஒப்பீடு செய்வதன் மூலம் அரசறிவியலில் சில பொது முடிவுகளையும் விதிகளையும் அடைவதற்கு எத்தனிக்கின்ற ஒரு முறையே ஒப்பீட்டு அணுகுமுறையாகும்.

இவ் அணுகுமுறை தரவுகளைச் சேகரித்தல், தெரிவு செய்தல், ஒப்பிடுதல், நீக்குதல், ஆய்வு செய்தல் என்ற செய்முறைகளினூடாக் முடிவுகளை தீர்மானிக்கின்றது.

அரசறிவியலின் தந்தையாகிய அரிஸ்டோட்டிலின் காலத்திலிருந்தே இவ்வணுகுமுறை பயன்பாட்டில் இருந்திருக்கின்றது. அவர் தன்னுடைய ஆசிரியரான பிளேட்டோவின் கருத்துகளோடு ஒப்பிட்டே சில அரசியல் முடிவுகளுக்கு வந்திருந்தார். பிளேட்டோவைப் போல இலட்சியக் கொள்கைகளுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்காது அனுபவத்திற்கும் பகுப்பாய்விற்கும் முன்னுரிமை வழங்கினார்.

ரோமானிய காலத்தில் ரோமானிய அறிஞர்களான பிளன்சிலி, நீரோ போன்றவர்கள் அரிஸ்டோட்டிலின் கருத்துகளோடு தங்கள் கருத்தினை ஒப்பிட்டு புதிய முடிவுகளை முன்வைத்திருந்தனர். அவர்கள் அரிஸ்டோட்டலின் கருத்தினை அபிவிருத்தி செய்து முடியாட்சி பிரபுத்துவம் ஜனநாயகம் ஆகிய மூன்றும் கலந்த கலப்பு அரசாங்க முறையைச் சிபார்சு செய்தனர்.

15ம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலிய அறிஞரான மாக்கியவல்லியின் கருத்துக்கள் ஒப்பீட்டுச் சிந்தனைக்கு மேலும் ஒரு படிநிலை வளர்ச்சியினைக் கொடுத்தது. முன்னைய அரசாங்க முறைகளையும், நிகழ்கால நாட்டு

நிலைமைகளையும் ஒப்பிட்டு புதிய வகைத் தன்மைகளைக் கொண்ட அதிகாரம் என்ற கருத்தினை அவர் முன்வைத்தார். இவருடைய கருத்துக்கள் அரசறிவியல் ஆய்விற்கு விஞ்ஞானத் தன்மையை வழங்கியிருந்தது.

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த மொண்டெஸ்கியூ ஒப்பீட்டுச் சிந்தனையை மேலும் விருத்தி செய்தார். அரசியல் சமூகக் காரணிகளான குழுக்கள், பொருளாதார வர்க்கங்கள், கல்வி மரபு, போன்றவற்றின் தாக்கங்களை இவர் ஆராய முற்பட்டார்.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜே. எஸ். மில் அரசியல் முறைகளை ஒப்பீடு செய்து பிரதிநிதித்துவம், அரசாங்கம் பற்றிய தனது கருத்துக்களை முன் வைத்தார். பிரான்சிய அறிஞரான ஜீன் போடினின் இறைமை பற்றிய கருத்துக்களும் ஒப்பீட்டளவில் பல வளர்ச்சிகளை உருவாக்கின.

நவீன காலத்தில் அல்மண்ட் (Almound), தல்கட் பார்சன் (Talcot Parsons), மக்ஸ்வெபர் (Max Weber), டேவிற் (David Apter) ஆகியோர் ஒப்பீட்டுச் சிந்தனைக்கு பங்களித்துள்ளனர்.

மரபுரீதியான ஒப்பீட்டுச் சிந்தனை விவரணத் தன்மை வாய்ந்ததாக இருந்ததே தவிர பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவோ, விளக்கமளிப்பதாகவோ, கோட்பாடுகளை அபிவிருத்தி செய்வதாகவோ, பரிசோதனைகளைச் செய்வதாகவோ, முக்கியமான தரவுகளைத் தொகுப்பதாகவோ இருக்கவில்லை. நவீன ஒப்பீட்டுச் சிந்தனை இக்குறைபாடுகளையெல்லாம் நிவர்த்தி செய்வதாக அமைந்தது.

புதிய சிந்தனை தன் பரப்பெல்லையை அதிகரித்தது. மேலைத்தேச அரசியல் முறைகளை மட்டும் கவனத்திற் கொள்ளாது மேலைத்தேயமல்லாத முறைகளையும் கவனத்திலெடுத்தது. அரசாங்கங்களை மட்டுமல்லாது அழுத்தக் குழுக்கள், அரசியற் கட்சிகள், அரசியல் நடத்தைகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தும் சித்தாந்தங்கள், உயர்குழாம் கட்டமைப்பு போன்றவற்றின் மீதும் கவனம் குவிக்கப்பட்டது. இதனூடாக அரசியல் முறைகளுக்கும் அந்த முறைகளுக்கான காரணிகளுக்கு இடையிலுள்ள தொடர்புகளைக் கண்டு பிடிக்க முயற்சித்தது.

நவீன அணுகுமுறையில் அரசியல் முறைமை பற்றிய பகுப்பாய்விற்கும், மக்களின் அரசியல் நடத்தைக்கும், நுட்பமுறைகளுக்கும் முக்கிய இடம் வழங்கப்படுகின்றது.

ஒப்பீட்டுச் சிந்தனையில் அரசாங்கமுறைகளை ஒப்பிடுவது இன்று பிரசித்தமாகவுள்ளது . இவ் ஒப்பீட்டு அணுகுமுறையில் அரசாங்க முறையின் வரலாற்றுப் பிண்ணணி, சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, அரசியற்கட்சிகள், அமுக்கக்குழுக்கள் என்பனவும், அடிப்படை உரிமைகள் வழிகாட்டி நெறிகள் என்பனவும் ஆராயப்படுகின்றன. இவ்வாறு ஒப்பிடுகின்ற போது போதாமைகளைக் கண்டு பிடிப்பதுடன் அதனைச் சீர்செய்வதற்கான ஆய்வுகளும் முடுக்கிவிடப்படுகின்றன. ஆனாலும் ஆய்வு செய்பவனின் அகரீதியான தாக்கங்கள், தவறான தரவுகள் போன்றன வரவிடாமல் பார்ப்பது அவசியமாகும்.

# 2

# அமெரிக்க அரசாங்க முறை

## அரசாங்க முறையின் பின்னணி

அமெரிக்கா 50 மாநிலங்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சி நாடாகும். இது வட அமெரிக்காவின் மத்திய பகுதியில் அமைந்துள்ளது. அலாஸ்காவையும் ஹவாய்த் தீவுகளையும் தவிர மீதி 48 மாநிலங்களும் தொடர்ச்சியான நிலப்பகுதிகளைக் கொண்டவை. இந்நிலப் பகுதி கிழக்கே அத்திலாந்திக் சமுத்திரத்தில் இருந்து மேற்கே பசுபிக் சமுத்திரம் வரை பரவிக் கிடக்கின்றது. வடக்கே கனடாவும் மேற்கே மெக்சிக்கோ நாடும் மெக்சிக்கோ வளைகுடாவும் நாட்டின் எல்லைகளாக உள்ளன.

அலாஸ்கா மாநிலம் 1959ஆம் ஆண்டு அமெரிக்கக் கூட்டாட்சியில் 49வது மாநிலமாக இணைந்துகொண்டது. இது வட அமெரிக்கக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ளது. ஹவாய்த் தீவு அமெரிக்கக் கூட்டாட்சியில் 50வது மாநிலமாக இணைந்து கொண்டது. இது அமெரிக்காவில் மேற்கு பசுபிக் கடற்கரைக்கும் ஜப்பானுக்கும் இடையில் உள்ளது.

இவ் 50 மாநிலங்களைத் தவிர. பியூடோரிக்கோ, வர்ஜின் தீவுகள், குவாம், பனாமாக் கால்வாய்ப் பகுதி போன்ற சில வெளி நிலப்பரப்புக்களும், அமெரிக்காவுக்குச் சொந்தமானவையாக உள்ளன. அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பு 9.372.614 சதுர கிலோமீற்றர் ஆகும். மக்கள்தொகை 271.8 மில்லியன் (1997) ஆகும். ஐரோப்பாக் கண்டத்தில் இருந்து 3000 கடல் மைல் அத்திலாந்திக் கடலினால் அமெரிக்கா பிரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புராதன குடிமக்கள் செவ்விந்தியர் ஆவர். இவர்களை விட, குடியேறிய வெள்ளையர்கள். கறுப்பர்கள் ஆகியோரும் பிற்காலங்களில் குடியேறிய

ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அமெரிக்காவின் குடிமக்களாக உள்ளனர். அமெரிக்காவின் பிரதான மொழியாக ஆங்கிலமும் பிரதான மதமாக கிறிஸ்தவமும் உள்ளது. அமெரிக்க நாணயம் டொலர் என அழைக்கப்படுகின்றது. நாட்டின் தலைநகராக வாஷிங்டன் இருக்கின்றது.

விவசாயம், கைத்தொழில், தகவல் தொடர்புச் சாதனங்கள் போன்றன அமெரிக்காவின் முக்கியமான பொருளாதார வளங்களாக உள்ளன. பெரிய சிறிய வேறுபாடுகள் இல்லாது அனைத்து மாநிலங்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலம், ஜேர்மன் என பல்லின கலாசாரத்தை சார்ந்த மக்கள் அங்கு குடியேறியபோதும் அமெரிக்கர்கள் பொது அடையாளத்தை நோக்கி அவர்கள் முன்னேறுகின்றனர். பிந்திக் குடியேற்றப்பட்ட ஆபிரிக்க கறுப்பின மக்கள் அமெரிக்க சமூகத்துடன் சம அந்தஸ்துடன் இணைக்கப்பட்டுள்ளார்கள் எனக் கூறமுடியாதபோதும் இன்று அதை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றார்கள்.

## அமெரிக்க அரசியல் யாப்பின் தோற்றம்

அமெரிக்க சுதந்திரப் போரினைத் தொடர்ந்து 13 குடியரசுகள் இணைந்தே அமெரிக்க கூட்டாட்சி உருவாக்கப்பட்டது. 1776 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4ஆம் திகதி அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. 13 குடியேற்ற நாடுகளில் 12 குடியேற்ற நாடுகள் இணைந்து அமெரிக்காவின் அரசியல் யாப்பினை உருவாக்கின. RHODE தீவு இதில் கலந்து கொள்ளவில்லை. 1787 ஆம் ஆண்டு பிலடெல்பியாவில் கூட்டப்பட்ட மாநாட்டில் அமெரிக்காவுக்கான அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. 1789ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. இன்றுவரை சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சுமார் 27 திருத்தங்களுடன் தொடர்ந்தும் இவ்யாப்பு நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆரம்பத்தில் 13 அரசுகளைக் கொண்ட கூட்டாட்சி தற்போது 50 அரசுகளைக் கொண்டதாக விளங்குகின்றது.

## அமெரிக்க அரசாங்க முறையின் சிறப்பியல்புகள்

### 1. எழுதப்பட்ட அரசியல் யாப்பு

எழுத்து வடிவில் இருக்கின்ற யாப்புகள் எழுதப்பட்ட அரசியல் யாப்புகளென அழைக்கப்படுகின்றன. அமெரிக்க அரசியல் யாப்பு ஒரு எழுதப்பட்ட யாப்பாகும். உலகிலேயே முதன் முதலில் எழுதப்பட்ட அரசியல் யாப்பு இதுவேயாகும்.

உலகிலுள்ள அரசியல் யாப்புகளில் மிகச்சிறிய அரசியல் யாப்பாகவும் இதுவே விளங்குகின்றது. மொத்தம் 7 உறுப்புரைகள் யாப்பில் காணப்படுகின்றன. ஒரு முன்னுரையும் காணப்படுகின்றது.



**ஐக்கிய அமெரிக்கக் குடியரசு (United States of America)**




| | | |
|---|---|---|
| பரப்பளவு | : | 93,72,614 ச.கி.மீ |
| மக்கள் தொகை | : | 29,57,34,134 |
| தலைநகர் | : | வாஷிங்டன் |
| தற்போதைய அதிபர் | : | ஜோர்ஜ் புஸ் |
| அரசு | : | இரு சட்டசபைகளைக் கொண்ட கூட்டாட்சிக் குடியரசு ஜனாதிபதி அரசாங்க முறை |
| நாணயம் | : | டொலர் |
| பொருளாதாரம் | : | விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, பெற்றோலியம், இலத்திரனியல்பொருட்கள் |
| மொழி | : | ஆங்கிலம் |
| இனம் | : | வெள்ளையர் - 81 . 7% ,கறுப்பர் - 12. 9% , ஆதிவாசிகள் 1.2% |
| சமயம் | : | கிறிஸ்தவம் பிரமதம்இஸ்லாம் |

## 2. நெகிழா அரசியல் யாப்பு

இலகுவில் திருத்தமுடியாத. மாற்றமுடியாத அரசியல் யாப்புகளே நெகிழா அரசியல் யாப்புகள் என அழைக்கப்படுகின்றன. அதாவது சாதாரண சட்டங்களைப் போலல்லாது விசேட வழி முறைகளினூடாக யாப்பினைத் திருத்தக் கூடிய. மாற்றக்கூடிய நிலை இருக்குமாயின் அவை நெகிழா அரசியல் யாப்புகள் எனப்படும். அமெரிக்காவின் அரசியல் யாப்பு ஒரு நெகிழா அரசியல் யாப்பாகும். இவ் அரசியல் யாப்பினைத் திருத்துவதற்கெனச் சிறப்பான வழிமுறைகள் காணப்படுகின்றன. திருத்தம் ஒன்று ஏற்படுவதற்கு, அது மத்திய, சட்ட சபையின் இரு சபைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன் திருத்தம் நிறைவேற்றப்படுவதோடு 3/4 பங்கு மாநிலச் சட்ட மன்றங்களின் சம்மதத்தினை பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

## 3. கூட்டாட்சி முறை

நாட்டில் மத்திய அரசாங்கம் பிரதேச அரசாங்கங்கள் என இரு வகையான அரசாங்கங்கள் உருவாக்கப்பட்டு அரசியல் யாப்பு ரீதியாக அதிகாரங்கள் அவற்றுக்கிடையில் பங்கிடப்பட்டிருக்குமாயின், அவ்வாட்சி முறை கூட்டாட்சி முறை என அழைக்கப்படுகின்றது. அமெரிக்கா கூட்டாட்சி முறையைக் கொண்ட ஒரு நாடாகும். உலகில் முதன் முதலாக கூட்டாட்சி முறையை அறிமுகப்படுத்திய நாடும் இதுவேயாகும். இன்று உலகில் உள்ள கூட்டாட்சி நாடுகளில் சிறந்த கூட்டாட்சி நாடாக இதுவே கருதப்படுகின்றது. அதிகாரப் பங்கீட்டில் மாநில அரசாங்கங்களிற்கு அதிகளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 50 மாநில அரசாங்கங்கள் தற்போது நடைமுறையில் செயற்படுகின்றன.

## 4. ஜனாதிபதிமுறை அரசாங்கம்

பாராளுமன்றத் துறையைச் சாராத நிர்வாகத்துறையைக் கொண்ட அரசாங்க முறையே ஜனாதிபதி அரசாங்க முறை என அழைக்கப்படுகின்றது. அமெரிக்கா ஜனாதிபதி அரசாங்க முறையைப் பின்பற்றுகின்ற ஒரு நாடாகும். உலகில் முதன் முதலாக ஜனாதிபதி அரசாங்க முறையை அறிமுகப்படுத்திய நாடும் இதுவேயாகும். இங்கு ஜனாதிபதியிடம் வலுவான அதிகாரங்கள் காணப்படுகின்றன. அமெரிக்கா உலக வல்லரசாக விளங்குவதினால் உலக மட்டத்திலும் அமெரிக்க ஜனாதிபதி செல்வாக்குடையவராக விளங்குகின்றார்.

## 5. அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு

ஒரு அரசின் துறைகளான சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பன ஒன்றோடொன்று தலையீடோ. கட்டுப்பாடோ இன்றிச் சுதந்திரமாக இயங்குதலையே அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு குறித்து நிற்கின்றது. உலகிலுள்ள நாடுகளில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை அதிகளவில் பின்பற்றுகின்ற நாடு



அமெரிக்காவே ஆகும். இந்த 3 துறைகளும் ஒன்றோடொன்று சார்புகள் பெரிதளவின்றி தனியாக இயங்குகின்றன. சமூக செயற்பாட்டிற்காக சில தடைகளும் சமநிலைகளும் இங்கு காணப்படுகின்றன. ஆனால், அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு அமைய ஒரு துறையில் அங்கம் வகிப்பவர் இன்னோர் துறையில் அங்கம் வகிக்கக்கூடாது என்பதும், ஒரு துறையின் கடமைகளை இன்னோர் துறையினர் புரிதல் கூடாது என்பதும் வலிமையாகப் பின்பற்றப்படுகின்றன.

## 6. உரிமைகள் மசோதா

மக்கள் தமது குடியியல் வாழ்க்கையினையும், அரசியல் வாழ்க்கையினையும் மேற்கொள்வதற்குத் தேவையான இன்றியமையாத நிபந்தனைகளே உரிமைகள் எனப்படும். அமெரிக்க அரசியல் யாப்பு இவ்வுரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அரசியல் யாப்பினை உருவாக்கிய போது இவை இல்லாவிட்டாலும் யாப்பின் முதல் 10 திருத்தங்களாக இவை கொண்டு வரப்பட்டுள்ளன. அமெரிக்கா தனது யாப்பில் உரிமைகளைச் சேர்த்ததன் பின்னரே ஏனைய நாடுகளும் தங்களது யாப்புகளில் உரிமைகளெனும் விடயத்தினை சேர்க்கத் தொடங்கின.

## 7. வலுவான மேலவை

அமெரிக்க சட்டசபையில் 2 வது சபையாக விளங்கும் செனற் சபையே மேலவை என அழைக்கப்படுகின்றது. இது வலுவான அதிகாரத்தினைக் கொண்டதாக விளங்குகின்றது. இவ்வகையில், உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த 2வது மன்றமாக இருப்பது இதுவேயாகும். ஜனாதிபதி உயர் நியமனங்களை மேற்கொள்கின்றபோதும், வெளிநாட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்கின்ற போதும் இச்சபையின் சம்மதத்தைப் பெறுவது அவசியமாகும். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தலா 2 உறுப்பினர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு மொத்தம் 100 உறுப்பினர்கள் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

## 8. நீதிப்புனராய்வு பெற்ற நீதித்துறை

சட்டசபை இயற்றுகின்ற சட்டங்களை மறுபரிசீலனை செய்கின்ற அதிகாரமே நீதிப்புனராய்வு அதிகாரம் எனப்படுகின்றது. அமெரிக்க தலைமை நீதிமன்றமான உயர்நீதிமன்றத்திற்கு இவ்வதிகாரமுண்டு. இவ் நீதி மன்றம் மத்திய சட்ட மன்றமும் மாநிலச் சட்ட மன்றங்களும் இயற்றும் சட்டங்களைச் செல்லுபடியானதாகவும் செல்லுபடியற்றதாகவும் கூறக்கூடிய அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இவ் நீதிப்புனராய்வு அதிகாரம் அமெரிக்க கூட்டாட்சியை நல்ல முறையில் இயங்கச் செய்வதற்கு வழி வகுக்கின்றது.

## 9. இரட்டைக் குடியுரிமை

ஒவ்வொரு குடிமகனும் தேசிய அளவிலான குடியுரிமையையும் மாநில அளவிலான குடியுரிமையையும் பெறுகின்றனர். ஒவ்வொரு மாநிலமும் தமக்கென தனியான அரசியல் யாப்பினையும் கொண்டுள்ளன.

## 10. இருகட்சி முறை

பல கட்சிகள் நடைமுறையில் செயற்படுகின்றபோதும் இருகட்சிகள் மாத்திரம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய நிலை இருக்குமாயின் அந்நாடு இருகட்சி முறையைப் பின்பற்றும் நாடாகக் கொள்ளப்படுகின்றது. அமெரிக்காவில் பல கட்சிகள் நடைமுறையில் செயற்படுகின்றபோதும், குடியரசுக் கட்சியும் ஜனநாயகக் கட்சியும் மட்டுமே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றக்கூடிய செல்வாக்குடைய கட்சிகளாக விளங்குகின்றன. மக்களிடையே தேசிய உணர்வினை வளர்ப்பதற்கும், ஐக்கியத்தினை வளர்ப்பதற்கும் இவ்விருகட்சி முறை உதவுகின்றது. அமெரிக்க மக்கள் தேசிய விடயங்களைப் பொறுத்தவரை ஒருமைப்பாடான கொள்கைகளையே கொண்டிருக்கின்றனர். தற்போதைய ஜனாதிபதி புஷ், குடியரசுக்கட்சியைச் சேர்ந்தவராக விளங்குகின்றார்.

## அரசியல் யாப்பினைத் திருத்துதல்

அரசியல் யாப்பின் 5ம் உறுப்புரை இது பற்றிக் கூறுகின்றது. இதற்கு இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன.

### முதலாவது வழிமுறை

அரசியல் யாப்புத் திருத்தப் பிரேரணை சட்ட சபையான காங்கிரஸின் இரு சபைகளிலும் 2/3 பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். பின்னர் அப்பிரேரணையை 3/4 பங்கு மாநிலச் சட்ட மன்றங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாநிலச் சட்டமன்றங்கள் தங்களினுடைய ஒப்புதலை சாதாரண சட்ட மன்றக் கூட்டங்கள் மூலமாகவோ அல்லது அதற்காகக் கூட்டப்பட்ட பிரத்தியேக மாநாடுகள் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

### இரண்டாவது வழிமுறை

அரசியல் யாப்புத் திருத்தம் தேவையென 2/3 பங்கு மாநிலச் சட்ட மன்றங்கள் விரும்பிக் கேட்டால் அதனடிப்படையில் மத்திய சட்ட சபையான காங்கிரஸ் பிரத்தியேக கூட்டத்தைக் கூட்டும். அந்தத் திருத்தப் பிரேரணை 2/3 பங்கு பெரும்பான்மையுடன் அங்கு நிறைவேற்றப்படல் வேண்டும். பின்னர் அப்பிரேரணைக்கு 3/4 பங்கு மாநிலச் சட்ட மன்றங்கள் தமது சம்மதத்தினைத் தெரிவித்தல் வேண்டும்.



## அமெரிக்க அரசாங்க முறையின் முக்கிய அம்சங்கள்

(1) அமெரிக்க கூட்டாட்சி முறை

(2) அமெரிக்காவில் அடிப்படை உரிமைகள்

(3) அமெரிக்காவின் வலுவேறாக்கம்

(4) அமெரிக்க ஆட்சித்துறை

(4) அமெரிக்க சட்டத்துறை

(5) அமெரிக்க நீதித்துறை

(6) அமெரிக்க கட்சி முறை

(7) அமெரிக்க அமுக்கக் குழுக்கள்

## 1 அமெரிக்க கூட்டாட்சி முறை

அமெரிக்க கூட்டாட்சி 50 மாநிலங்களைக் கொண்டதாக விளங்குகிறது. கூட்டாட்சியின் அடிப்படைப் பண்புகளான எழுதப்பட்ட நெகிழா அரசியல் யாப்பு, மத்திய மாநிலங்களுக்கிடையே அதிகாரப் பங்கீடு, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கிடையேயும் எழும் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு சுதந்திரமான பாரபட்சமின்றி செயற்படும் உயர்நீதிமன்றம் போன்றன வலுவாகவுள்ளன. இவற்றினை விட மத்திய சட்டமன்றத்தின் ஒரு பிரிவான செனட் சபையில் சம பிரதிநிதித்துவம், இரட்டைக் குடியுரிமை போன்றன அமெரிக்க சமஷ்டிக்கேயுரிய தனிப் பண்புகளாகக் காணப்படுகின்றன.

அமெரிக்க சமஷ்டியின் சிறப்பான தன்மை அதன் அதிகாரப் பங்கீடே யாகும். மாநில அரசுகளுக்கிடையேயுள்ள பொதுவான விடயங்களை மட்டும் மத்திய அரசின் அதிகாரங்களாக வரையறுத்து விட்டு ஏனைய அதிகாரங்கள் யாவும் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நாணயம் வெளியிடல், அயல்நாட்டு உறவுகள், முப்படைகள் மீது கட்டுப்பாடு செலுத்துதல், போர்ப் பிரகடனம் செய்தல், சமாதானம் செய்தல் போன்ற 18 விடயங்களே மத்திய அரசின் அதிகாரங்களாக உள்ளன. ஏனைய அதிகாரங்கள் மாநில அரசுகளின் பொறுப்புகளாக விடப்பட்டுள்ளன.

மத்திய சட்டமன்றமான காங்கிரஸிற்கும் கூட்டாட்சியின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சில கட்டுப்பாடுகளை அரசியல் யாப்பு விதித்துள்ளது.

உ-ம்: மத்திய அரசாங்கம் மாநிலங்களிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்கள் மீது வரி விதித்தல் கூடாது, நேர்முக வரிகளை மாநிலங்களின் மக்கள் தொகைக்குத் தக்கபடி விதித்தல் வேண்டும். வர்த்தகத்தினைப் பொறுத்தவரை எல்லா மாநிலங்களையும் சமமாக நடத்துதல் வேண்டும் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதேவேளை மாநில அரசாங்கங்களின் மீதும் அரசியல் யாப்பு பல

கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. சமயச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றைக் குறைப்பதற்கான சட்டங்களை உருவாக்கக் கூடாது, தனியான நாணயம் வெளியிடக் கூடாது, படைகளை வைத்திருத்தல் கூடாது போன்றன இவற்றுள் சிலவாகும்.

அதிகாரப் பங்கீட்டில் அரசியல் யாப்பு ரீதியாக மாநிலங்களின் அதிகாரங்கள் அதிகமானதாக இருந்தபோதும் பிற்காலங்களில் அதிகாரங்கள் மத்திய அரசினை நோக்கி குவியும் போக்கு வளர்ந்து வருகிறது. அமெரிக்காவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களும் நிலப்பாட்டின் விரிவும் மக்கள் தொகைப் பெருக்கமும், உள்நாட்டுப் போரும், சர்வதேச வல்லரசென்ற அந்தஸ்தும் மையத்தை நோக்கிய அதிகாரக் குவிப்பிற்கு காரணங்களாக இருந்திருக்கின்றன.

உயர்நீதிமன்றத்தின் பல தீர்ப்புகள், பொதிந்துள்ள அதிகாரமென்ற கோட்பாட்டின் வளர்ச்சி, காரங்கிரஸினால் இயற்றப்பட்ட பல சட்டங்கள் என்பவற்றினூடாகவே அந்த அதிகாரக் குவிப்பு நடைபெற்றுள்ளது. இதனடிப்படையில் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றும் அதிகாரம், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், வங்கி முறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் போன்றன மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை வரிவிதித்தல், பொதுக் கடன் வாங்குதல், எடை, அளவு ஆகியவற்றை நிர்ணயம் செய்தல், பொதுக்காரியங்களுக்காக தனியார் சொத்தினை சுவீகரித்தல் போன்றன மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் பொதுவான அதிகாரங்களாக உள்ளன.

நீதித்துறையைப் பொறுத்தவரை மத்திய அரசின் நீதித்துறை, மாநில அரசுகளின் நீதித்துறையென பிரிக்கப்பட்டிருக்கின்றமை அதிகாரப் பங்கீட்டிற்கு வலுச்சேர்ப்பனவாக உள்ளன.

## மதிப்பீடு

### நன்மைகள்

(1) இன்றும் கூட சமஷ்டியாட்சி முறைக்கு சிறந்தவோர் நாடாக அமெரிக்காவே கொள்ளப்படுகிறது.

(2) அதிகாரப் பங்கீடு மாநில அரசுகளின் சுயாதீனத்தை வலுப்படுத்துவதாகவுள்ளது.

(3) தனியான அரசியல் யாப்பு, தனியான நீதித்துறை, இரட்டைக் குடியுரிமை போன்றன மாநில அரசுகளுக்கு அதிக வலுவினைச் சேர்க்கின்றன.

(4) மத்திய சட்டமன்றத்தினொரு பிரிவான செனட் சபையில் மாநிலங்களுக்கு சம பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமையானது மாநிலங்களுக்கிடையேயான சமத்துவத்தை வலுப்படுத்துவதாகவுள்ளது.



(5) அரசியல் யாப்பின் நெகிழாத்தன்மையும், உயர்நீதிமன்றத்திடமுள்ள வலுவான அதிகாரங்களும் மாநிலங்களின் உரிமைகளை பாதுகாப்பனவாகவுள்ளன.

### குறைபாடுகள்

(1) பிற்காலங்களில் மத்திய அரசினை நோக்கி அதிகாரங்கள் குவியும் போக்கு மாநில அரசுகளின் உரிமைகளைப் பலவீனப்படுத்துவதாகவுள்ளது.

(2) பொதிந்துள்ள அதிகாரங்களென்ற கோட்பாடும் மாநிலங்களின் மாநிலங்களுக்கெதிராகவே வளர்ந்து வருகிறது.

(3) உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களும் சட்ட அந்தஸ்துப் பெற்றவையாகக் கருதப்படுவதனால் அவையும் பல சந்தர்ப்பங்களில் மாநில அரசுகளுக்கெதிராக அமைந்து விடுகின்றன.

(4) சுவிட்சர்லாந்து போன்ற சமஷ்டி ஆட்சிகளில் படைகளை வைத்திருக்கும் உரிமையும், மாநிலங்களிலுள்ள மத்திய அரசின் பணிகளைச் செயற்படுத்தும் உரிமையும் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்கக் கூட்டாட்சியில் இவை காணப்படுவதில்லை.

(5) பல நாடுகளில் மாநில அரசுகளின் அதிகாரங்களை மேலும் மேலும் விரிவாக்கும் கலாசாரம் விரிவடைந்து வருகின்றது. ஆனால் அமெரிக்காவில் மாநில அரசுகளின் அதிகாரங்களைக் குறைக்கும் கலாசாரம்தான் வளர்ந்து வருகிறது.

(6) நாடுகளின் கூட்டாட்சியென்ற வளர்ச்சியடைந்துவரும் சமஷ்டிச் சிந்தனைகள் பற்றி அமெரிக்க அரசியல் சக்திகள் போதிய கவனத்தைக் குவிப்பதில்லை.

## 2. அமெரிக்க அரசியல்யாப்பில் அடிப்படை உரிமைகள்

அமெரிக்க அரசியல் யாப்பினை உருவாக்கியபோது அடிப்படை உரிமைகளுக்கென தனியான ஏற்பாடுகள் எதுவும் யாப்பில் சேர்க்கப்படவில்லை. இதன் பின்னர் 1791 இல் அரசியல் யாப்பிற்கு கொண்டுவரப்பட்ட முதல் 10 திருத்தங்களின் மூலமே அடிப்படை உரிமைகள் யாப்பில் சேர்க்கப்பட்டன.

யாப்பில் சேர்க்கப்பட்ட 10 திருத்தங்களும் பின்வருமாறு அமைந்திருந்தன :

### முதலாவது விதி

மத உரிமை, பேச்சுரிமை, பத்திரிகை உரிமை, அமைதியாகக் கூடும் உரிமை என்பன மக்களுக்கு உண்டு.

### இரண்டாவது விதி

ஆயுதங்களை வைத்திருக்கும் உரிமை மக்களுக்கு உண்டு.

### மூன்றாவது விதி

தனிமனிதர்களின் வீடுகளில் படைவீரர்கள் தங்கவேண்டுமாயின் அவ்வீடுகளின் உரிமையாளர்களிடம் அனுமதி பெறுதல் வேண்டும்.

### நான்காவது விதி

சோதனை ஆணைப் பத்திரம் (Searcith Warrant) இன்றி வீடுகளையோ, பொருட்களையோ, ஆவணங்களையோ, சோதனையிடவோ, கைப்பற்றவோ கூடாது. அத்துடன் ஆட்களையும் சோதனையிடவோ கைது செய்யவோ முடியாது.

### ஐந்தாவது விதி

ஆளுரிமையை பாதுகாக்கின்றது. இதன்படி தக்கசட்ட முறைப்படியன்றி யாருடைய உரிமையையும், உயிரையும், சொத்தையும் பறிக்கக்கூடாது. அத்துடன் போதுமான இழப்பீடுகளை வழங்காமல் தனிமனிதர்களது சொத்துக்களை பொதுநலன்களுக்காக அரசு எடுக்கக்கூடாது.

### ஆறாம் விதி

குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டிப்பதற்கு முன்முறையான குற்ற விசாரனை நடைபெறுதல் வேண்டும்.

### ஏழாம் விதி

யூரிமார் (Jury) (தீர்ப்புச் சான்றாளர்) துணையுடனேயே விசாரணைகள் நடைபெறுதல் வேண்டும்.

### எட்டாம் விதி

அளவுகடந்த அபராதமும், கொடிய தண்டனைகளும் விதிக்கப்படக் கூடாது.

### ஒன்பதாம் விதி

சில குறிப்பிட்ட உரிமைகளை மட்டும் அரசியல் யாப்பில் குறிப்பிடுவதனால் மக்களின் பிற உரிமைகளை மறுப்பதாகவோ, மதிக்காததாகவோ, கருதிவிடக் கூடாது.



### பத்தாம் விதி

மத்திய அரசாங்கத்துக்கு வழங்கப்படாத அதிகாரங்களும், அரசியல் அமைப்பு தடை செய்யாத அதிகாரங்களும் மாநிலங்களை அல்லது மக்களை சேர்ந்ததாக இருக்கும்.

மேலே கூறப்பட்டவற்றை தவிர அரசியல் யாப்பின் வேறு சில பகுதிகளும் மக்களுக்கு உரிமைகளை வழங்குகின்றன. அவற்றுள் பின்வருவன முக்கியமானவை ஆகும்.

### 13 ஆவது திருத்தம்

அதன்படி அமெரிக்காவில் நீண்டகாலமாக நிலவிய அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. அங்கு நீண்டகாலமாகவே கறுப்பின மக்கள் அடிமைமுறை சமூக அமைப்பின் கீழ் வாழ்ந்து வந்தனர்.

### 15 ஆவது திருத்தம்

இனம், நிறம் முன்னாள் அடிமை என்பவை காரணமாக மத்திய அரசோ, மாநில அரசோ மக்களின் வாக்குரிமையை மறுக்கவோ குறைக்கவோ கூடாது.

### 19 ஆவது திருத்தம்

இதன்படி பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. அமெரிக்காவில் நீதித்துறை செயல்படுத்தும் உரிமைகள், நீதித்துறை செயல்படுத்தா உரிமைகள் என்ற பாகுபாடு எதுவும் கிடையாது. எல்லா உரிமைகளையும் செயற்படுத்தும் அதிகாரம் நீதித்துறைக்கு உண்டு. மேலும் ஆளுரிமையைத் தவிர வேறு எந்த உரிமையையும் நீதிமன்றம் ஒத்திவைக்க முடியாது. ஆளுரிமையைக் கூட நீதிமன்றங்கள் வெளிநாடுகளுடன் போர் நடக்கின்றபோது மட்டும்தான் ஒத்திவைக்க முடியும்.

### நன்மைகள்

(1) அடிப்படை உரிமைகளின் அவசியத்தை உலகில் முதன் முறையாக யாப்பு மூலம் அமெரிக்க அரசியல் யாப்பு வெளிக்காட்டியுள்ளது.

(2) மக்களுடைய குடியியல் வாழ்க்கைக்கும், அரசியல் வாழ்க்கைக்கும் அவசியமான பல உரிமைகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

(3) எஞ்சிய அதிகாரங்கள் இதன் மூலம்மாநிலங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. (10ம் விதி) இது மாநிலங்களின் உரிமைகளை பாதுகாத்து வலிமைப்படுத்துவதோடு கூட்டாட்சியையும் பலப்படுத்துவதாக அமைகின்றது.

(4) படையினரின் அத்துமீறல்களை இதிலுள்ள ஏற்பாடுகள் தடுக்கின்றன.

## குறைபாடுகள்

(1) மனிதர்களுக்கு அவசியமாக இருக்கின்ற பல உரிமைகள் இதில் உள்ளடக்கப்படவில்லை. உ-ம் : வாழ்வதற்கான உரிமை.

(2) அண்மைக்காலமாக ஜனாதிபதியிடம் குவிந்து வருகின்ற அதிகாரங்கள், உரிமைகளின் பயன்பாடுகளை மக்கள் பெறுவதில் தடைகளை ஏற்படுத்துகின்றன.

(3) உயர்நீதிமன்றத்திடம் இருக்கும் "பொதிந்துள்ள அதிகாரங்களும்" சில வேளைகளில் உரிமை பயன்பாட்டில் தடைகளை ஏற்படுத்துகின்றன.

(4) அமெரிக்காவில் வாழும் விளிம்பு நிலை மக்கள் உரிமைகளின் பயன்பாட்டினை போதியளவு பெற்றுள்ளார்கள் எனக் கூறிவிட முடியாது

# 3. அமெரிக்காவின் வலுவேறாக்கம்

அரசின் மூன்று துறைகளான சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பன ஒன்றோடு ஒன்று கட்டுப்பாடுகளோ, தலையீடுகளோ இன்றி சுதந்திரமாக இயங்குதலையே வலுவேறாக்கம் அல்லது அதிகாரப்பிரிவினை என்ற பதம் குறிக்கின்றது. உலகிலுள்ள நாடுகளில் அதிகளவில் வலுவேறாக்க கோட்பாட்டினை அரசியல் யாப்பில் கொண்டுள்ள நாடு அமெரிக்காவே ஆகும்.

வலுவேறாக்க கோட்பாட்டின் அடிப்படையில் அரசின் 3 துறைகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டு தமது பணிகளைச் செய்து வருகின்றன. சட்டவாக்க அதிகாரத்தினை 2 சபைகளைக் கொண்ட காங்கிரஸ் மேற்கொள்கின்றது. நிர்வாக அதிகாரத்தை ஜனாதிபதி மேற்கொள்கின்றார். நீதி அதிகாரத்தினை உயர்நீதிமன்றத்தை தலைமையாகக் கொண்ட நீதித்துறை மேற்கொள்கின்றது. இங்கு ஒரு துறையில் அங்கம் வகிப்பவர் இன்னோர் துறையில் அங்கம் வகித்தல் கூடாது என்பது கடுமையாக பின்பற்றப்பட்டு வந்துள்ளது. ஆனால் ஒரு துறை இன்னோர் துறையில் தலையீடோ, கட்டுப்பாடோ செலுத்துதல் கூடாது என்கின்ற விடயத்தில் தடைகளும் சமநிலைகளும் என்ற கோட்பாடு பின்பற்றப்படுகின்றது. 3 துறைகளும் சமநிலையாக தலையீடு செய்யும் நிலை யாப்பில் காணப்படுகின்றது.

சட்டத்துறையான காங்கிரஸ் இயற்றும் சட்டங்களுக்கு கையொப்பமிடும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு. ஜனாதிபதி இது விடயத்தில் தனது மறுப்பாணை அதிகாரத்தினை பயன்படுத்தலாம். அவ்வாறு பயன்படுத்தும்போது குறிப்பிட்ட மசோதாவை காங்கிரசிற்கு திருப்பியனுப்புதல் வேண்டும். காங்கிரஸ் அம் மசோதாவினை 2/3 பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் அது சட்டமாக அமுலுக்கு வரும். இங்கு ஜனாதிபதி காங்கிரசில் தலையிடுவதனைக் காணலாம். இதேபோல காங்கிரசும் ஜனாதிபதியின் கடமைகளில் தலையிடலாம். உ-ம் : ஜனாதிபதி மேற்கொள்ளும் உயர் நியமனங்களுக்கும் வெளிநாட்டு



ஒப்பந்தங்களுக்கும் காங்கிரசின் ஒரு சபையான செனட்சபையின் சம்மதம் அவசியமாகும்.

ஜனாதிபதி நீதித்துறையின் கடமைகளில் தலையிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல், தண்டனையை குறைத்தல் போன்ற பணிகளை ஜனாதிபதி மேற்கொள்கின்றார். அதேவேளை செனட்சபையின் சம்மதத்துடன் உயர்நீதிமன்ற நீதிபதிகளை ஜனாதிபதியே நியமிக்கின்றார். இதேபோல் நீதித்துறையும் ஜனாதிபதியின் செயற்பாடுகளில் தலையிடுகின்றது. ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும் நிர்வாகச் செயற்பாடுகளை அரசியல் யாப்பிற்கு முரணானது எனக் கூறி தடுக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு.

மேலும் சட்டத்துறையும், நீதித்துறையில் தலையிடுகின்றது. உயர்நீதிமன்ற நீதிபதிகள் மீது குற்றப்பிரேரணை கொண்டு வந்து பதவிநீக்கும் அதிகாரம் சட்டத்துறையான காங்கிரசிற்கு உண்டு. இதேபோல நீதித்துறையும் சட்டத்துறையில் தலையிடுகின்றது. காங்கிரஸ் இயற்றும் சட்டங்களை நீதிப்புனராய்வு செய்து செல்லுபடியற்றது என கூறுகின்ற அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு.

இவ்வாறு பரஸ்பரம் ஒரு துறை, இன்னோர் துறையில் தலையிடக்கூடிய நிலை இருப்பது வலுவேறாக்கக் கோட்பாட்டை பாதுகாப்பதோடு துறைகள் தான்தோன்றித்தனமாக செயற்படுவதையும் தடைசெய்கின்றது.

தடைகளும், சமநிலைகளும் என்ற கோட்பாடு அரசியலமைப்பு ரீதியாக நடைமுறையில் இருந்தாலும் தற்போது அது செயற்படும் விதம் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. தடைகள், சமன்பாடுகள்முறை ஒவ்வொரு துறையும் சுயாதீனமாக செயற்படுகின்ற அதேவேளை தமது எல்லைகளைத் தாண்டிச் செயற்படுவதை தவிர்க்கக் கூடியதாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் ஜனாதிபதி அரசியல் யாப்பின் மூலம் பெற்ற அதிகாரங்களை விட தற்போது கூடுதலான அதிகாரங்களைப் பெற்றிருப்பதனால் தடைகள், சமன்பாடு முறை சிறப்பாக செயற்படுவதில்லையென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. தற்காலங்களில் காங்கிரஸ் இயற்றும் சட்டங்கள் மூலமும் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கள் மூலமும் ஜனாதிபதியின் அதிகாரம் அதிகரித்துள்ளது. அமெரிக்கா ஒரு உலக வல்லரசாக இருப்பதனால் உலக ரீதியாகவும், ஜனாதிபதியின் அதிகாரம் வளர்ச்சியடைந்துள்ளது. அதேவேளை அரசியல் யாப்பின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீது தடைகளை மேம்படுத்தும் வகையில் காங்கிரசிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் பெரும்பாலானவை பலவீனம் அடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதைவிட உயர்நீதிமன்றம் தனது அதிகாரப் பரப்பை அதிகளவில் விருத்திசெய்து கொண்டு ஒரு மூன்றாவது அதிகார நிறுவனமாக மாறியிருக்கின்றது. இதுவும் தடைகள், சமநிலை முறையினை பாதித்துள்ளதாக கூறப்படுகின்றது. மொத்தத்தில் தடைகள் சமநிலையின் முக்கியத்துவம் தற்காலத்தில் மிகவும் குறைந்துள்ளதாகவே விமர்சிக்கப்படுகின்றது.

அமெரிக்காவில் வலுவேறாக்க கோட்பாடு பின்பற்றுவது தொடர்பாக மேற்கூறியவாறு பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் இன்றும் உலக ரீதியாக வலுவேறாக்க கோட்பாட்டினை அதிகளவு பின்பற்றுகின்ற நாடு அமெரிக்காவே எனக் கூறலாம்.

## மதிப்பீடு

### நன்மைகள்

(1) வலுவேறாக்க கோட்பாடு அமெரிக்காவில் ஜனாதிபதி அரசாங்க முறையை சிறப்பாக செயற்படவைப்பதற்கு உதவியாக அமைகின்றது.

(2) தடைகள், சமநிலைகள் முறைகளின் மூலம் துறைகள் தமது எல்லைகளை தாண்டிச் செல்வதை தடுக்கின்ற ஒன்றாகவுள்ளது.

(3) அமெரிக்க அரசாங்க முறையில் வலுவேறாக்க கோட்பாடு செயற்படுவதனால் அரசின் மூன்று துறைகளும் முக்கியமான துறைகளாக கருதப்படுகின்றன. அரசியல் யாப்பின்படி ஒரு துறையினை விட இன்னோர் துறை உயர்ந்தது எனக் கூறுவது கடினமானதாகும்.

(4) இவ்வலுவேறாக்க கோட்பாடு அமெரிக்க மக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கின்றது.

### குறைபாடுகள்

(1) தடைகளும், சமநிலைகளும் முறை முழுமையான வலுவேறாக்கத்தினை பின்பற்றுவதற்கு தடையாக இருக்கின்றது.

(2) தடைகளும் சமநிலைகளும் முறைகளின் மூலம் துறைகள் தமது எல்லைகளை தாண்டிச் செயற்படுவதை தடுக்குமெனக் கூறப்பட்டபோதும் பிற்காலங்களில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரித்துள்ளதனால் அம்முறை பலவீனமடையத் தொடங்கியுள்ளது.

(3) அண்மைக்காலமாக ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் குவிந்து வருவதால் வலுவேறாக்கத்திற்கு பதிலாக வலுஒன்றாக்கம் தோற்றம் பெற்றுள்ளதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

(4) உயர்நீதிமன்றம் ஒரு 3வது அதிகாரத் தாபனமாக அல்லது நிறுவனமாக வளர்ச்சியடைந்து தடைகள், சமநிலை முறைகளை கேள்விக்குள்ளாக்குகின்றது.



# 4. அமெரிக்க ஆட்சித்துறை

## அமெரிக்க ஜனாதிபதி

அமெரிக்க ஆட்சித்துறைக்குப் பொறுப்பாக ஜனாதிபதி விளங்குகின்றார். இவர் உலகில் சக்தியும் செல்வாக்கும் மிக்க நிர்வாகத் தலைவர்களில் ஒருவராவார். அமெரிக்கா உலகில் ஒரு பலம் பொருந்திய வல்லரசாக இருப்பதனால் உள்நாட்டு அரசியலில் மட்டுமல்ல சர்வதேச அரசியலிலும் செல்வாக்குள்ளவராக விளங்குகின்றார்.

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தல் மூலம் மக்களினால் நேரடியாக இவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஒருவர் இருமுறை மட்டுமே ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட முடியும். வேறொரு ஜனாதிபதி விட்டுச்சென்ற அரைவாசிக்கு மேற்பட்ட காலத்தை ஜனாதிபதி பதவியாக வகித்த ஒருவர் மேலும் ஒருதடவை மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட முடியும்.

அமெரிக்க அரசியல் யாப்பின் இரண்டாவது பிரிவு ஜனாதிபதிப் பதவியை உருவாக்கி ஆட்சித்துறை அதிகாரங்கள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்துள்ளது. இவர் சட்டத்துறையான காங்கிரசில் இருந்து பிரிக்கப்பட்டு தனித்துச் செயற்படும் நிலையில் இருக்கின்றார். தடைகளுக்கும் சமநிலைகளுக்கும் உட்பட்ட நிலையில், ஆட்சித்துறையின் கட்டமைப்பில் மேல்நிலையில் நிற்கும் ஒருவராக விளங்குகின்றார். இவர் சட்டத்துறையான காங்கிரசிற்கு பொறுப்புடையவர் அல்லர். அமைச்சரவையின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய தேவையும் இவருக்குக் கிடையாது.

### ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகைமைகள்

1) முப்பத்தைந்து வயதினை நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

2) அமெரிக்கப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3) அமெரிக்காவில் தொடர்ந்து 14 வருடகாலம் வாழ்ந்தவராக இருத்தல் வேண்டும்.

பொதுவாக செனட்டர்கள், மாநில ஆளுநர்கள், அமைச்சரவை அங்கத்தவர்கள், முன்னைய நிர்வாகத்தில் பங்காற்றிய அலுவலர்கள் போன்றவர்களே ஜனாதிபதிப் பதவிக்கான வேட்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### ஊதியச் சலுகைகள்

ஜனாதிபதியின் ஊதியம் காங்கிரசினால் தீர்மானிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பிரயாணச் செலவு, அவருடைய அலுவலகமான, வெள்ளை மாளிகையை நிர்வகிக்கும் செலவு, பணியாளர்களுக்கான செலவு என்பனவற்றிற்கும் நிதி ஒதுக்கப்படுகின்றது. ஜனாதிபதிக்கு ஓய்வூதியமும் உண்டு.

## ஜனாதிபதி தேர்தல்

ஜனாதிபதி அமெரிக்க வாக்காளர்களினால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஒவ்வோர் மாநிலத்திலும் ஒவ்வோர் தேர்தல் கல்லூரி இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியின் உறுப்பினர்கள் மக்களினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மாநிலமும் காங்கிரஸின் இரு சபைகளிலும் எத்தனை பிரதிநிதிகளைக் கொண்டுள்ளதோ அதற்குச் சமமான பிரதிநிதிகளை தேர்தல் கல்லூரிகளிலும் கொண்டிருக்கும். கொலம்பியா மாவட்டத்திற்கு காங்கிரசில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாவிடினும் தேர்தல் கல்லூரியில் 3 இடங்கள் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 538 பேர் தேர்தல் கல்லூரியில் உறுப்பினர்களாக உள்ளனர். அறுதிப்பெரும்பான்மைக்கு 270 தேர்தல் கல்லூரி உறுப்பினர்களின் வாக்குகள் தேவையாகும். தேர்தல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கான தேர்தலில் வாக்களிப்பர். இவ்வுறுப்பினர் பெற்றுக்கொண்ட வாக்குகள் அவர்கள் எந்த ஜனாதிபதி வேட்பாளர்களிற்கு வாக்களிக்கின்றனரோ அவர்களிற்கு கிடைக்கும். வெற்றி பெறும் ஜனாதிபதி வேட்பாளர் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை. தேர்தல் கல்லூரி உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றாலே போதுமானது. தேர்தல் வாக்குகள் காங்கிரஸின் இரு சபையின் கூட்டுக் கூட்டத்தில் செனற் சபைத் தலைவரின் தலைமையில் எண்ணப்படும். எந்த வேட்பாளரும் அறுதிப்பெரும்பான்மை வாக்குகளைப் பெறாவிட்டால் முதல் 3 நிலைகளிலுள்ள ஒருவரை பிரதிநிதிகள் சபை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கும்.

அரசியற் கட்சிகள் தமது தேசிய மாநாடுகளைக் கூட்டித் தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

பொதுவாக இதன் நடைமுறை நிகழ்வு பின்வருமாறு நடைபெறுகின்றது.

ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் ஆண்டில் ஒவ்வொரு கட்சியும் தேசிய அளவில் தமது மாநாடுகளைக் கூட்டி ஜனாதிபதி பதவிக்கும், துணை ஜனாதிபதிப் பதவிக்கும் இரு வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கின்றது. நவம்பர்த் திங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் கல்லூரி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறுகின்றது. அவ்வேளை கட்சிகள் தமது வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்துகின்றன. மாநிலத்திலுள்ள மக்கள் கட்சியடிப்படையில் தாம் விரும்பும் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கின்றனர்.

எனவே ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள மக்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்கள் ஜனாதிபதி பதவிக்கும், துணை ஜனாதிபதி பதவிக்கும் எந்த வேட்பாளர்களுக்கு வாக்களிப்பார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும் இதன் விளைவாக நவம்பர் திங்களில் நிகழும் தேர்தல் கல்லூரி உறுப்பினர்களுக்கான தேர்தல் முடிவு தெரிந்த உடனேயே ஜனாதிபதி துணை ஜனாதிபதி தேர்தல் முடிவுகளும் தெரிந்து விடும். உறுப்பினர்கள் தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களின் விருப்பப்படியே வாக்களிப்பதால் தெரிந்து விடுகின்றது.



பின்னர் தேர்தல் கல்லூரி உறுப்பினர்கள் முறைப்படி கூடி வாக்களிப்பார்கள். புதிய ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் ஜனவரித் திங்களில் பதவிகளைப் பொறுப்பேற்பார்கள்.

## பதவி வெற்றிடமாதல்

ஜனாதிபதி பதவியில் இருக்கும்போது சுகவீனமடைந்தாலோ அல்லது இறந்தாலோ துணை ஜனாதிபதி ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார். பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு தான் தொடர்ந்து பதவிவகிக்க முடியாத நிலை ஏற்படின் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகருக்கும் செனற் சபையின் தற்காலிக தலைவருக்கும் தான் பணியாற்ற முடியாத நிலையினைத் தெரிவித்தல் வேண்டும். அதன் பின்னர் ஜனாதிபதி திரும்பக் கேட்டுக்கொள்ளும் வரை துணை ஜனாதிபதி ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

இதைவிட, அமைச்சரவையின் பெரும்பான்மை அங்கத்தவர்களோ அல்லது காங்கிரசின் பெரும்பான்மையான அங்கத்தவர்களோ ஜனாதிபதியின் இயலாமையைக் குறிப்பிட்டு துணை ஜனாதிபதியைப் பதவி ஏற்குமாறு கேட்டுக்கொண்டாலும் அவர் அதனை ஏற்று ஜனாதிபதியாகச் செயலாற்றுதல் வேண்டும்.

துணை ஜனாதிபதியின் பதவி வெற்றிடமாகுமிடத்து ஜனாதிபதி காங்கிரசின் இரு சபைகளின் பெரும்பான்மை ஆதரவுடன் ஒருவரைத் துணை ஜனாதிபதியாக நியமிக்கலாம். ஜனாதிபதிப் பதவியும் துணை ஜனாதிபதிப் பதவியும் ஒன்றாக வெற்றிடமாகுமானால் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் ஜனாதிபதியாக பதவிஏற்றல் வேண்டும். சபாநாயகரைத் தொடர்ந்து பதவி ஏற்கும் உரிமை செனற்சபைத் தலைவருக்கும் அதன் பின்னர், வரிசைப்படி அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் உண்டு.

## பதவி நீக்கம்

ஜனாதிபதியை அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் சாதாரண முறையில் பதவியில் இருந்து நீக்க முடியாது. குற்ற விசாரணை மூலமே பதவியில் இருந்து நீக்க முடியும். அரச துரோகம், லஞ்சம், பிற பெருங்குற்றம் என்பவற்றிற்காக ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணையைக் கொண்டுவரலாம். இதற்கான பிரேரணை முதலில் பிரதிநிதிகள் சபையில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படல் வேண்டும். பின்னர், அப்பிரேரணை செனற் சபைக்கு அனுப்பி வைக்கப்படும். செனற்சபையில் குற்றத்தின் மீதான விசாரணை நடைபெறும். செனற் சபை நீதிமன்றமாக அமர்ந்து விசாரணையை மேற்கொள்ளும். அதன்போது, உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி செனற் சபைக்கு தலைமை தாங்குவார். முடிவில் செனற் சபை 2/3 பங்கு பெரும்பான்மையுடன் குற்றப் பிரேரணையை நிறைவேற்றினால் ஜனாதிபதி பதவி நீக்கப்படுவார்.

**உதாரணம் 1 :** 1868 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜோன்சன் மீது குற்றவிசாரணை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், செனற் சபையில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்காததினால் அவர் பதவி நீக்கப்படவில்லை.

**உதாரணம் 2 :** ஜனாதிபதி நிக்சன் வாட்டர்கேட் ஊழலில் சிக்கியபோது பதவியை இராஜினாமாச் செய்து குற்றவிசாரணையில் இருந்து தப்பிக்கொண்டார்.

**உதாரணம் 3 :** ஜனாதிபதி கிளின்டன் மீது அவரது பெண் நண்பரான மொனிக்கா லிவின்ஸ்கி விவகாரம் தொடர்பாகக் குற்றவிசாரணை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பிரதிநிதிகள் சபை வாக்கெடுப்பின்போது குற்றப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

## ஜனாதிபதியின் அதிகாரங்கள்

அரசியல் யாப்பின் பிரிவு 1. (2) (3) என்பன ஜனாதிபதியின் அதிகாரங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவருடைய சில அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் கிடைக்கின்றன. வேறு சில அதிகாரங்கள் காங்கிரஸ் உருவாக்கும் சட்டங்கள் மூலம் கிடைக்கின்றன. இவற்றைவிட, அரசியல் முறை சார்ந்த பழக்கவழக்கங்களும் வழக்காறுகளும் சில அதிகாரங்களை அவருக்கு வழங்குகின்றன. உயர்நீதி மன்றமும் அரசியல் யாப்புக்குக் கொடுக்கின்ற பொருள் விளக்கங்கள் மூலமாக அதிகாரங்களை வழங்குகின்றது.

### (I) சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

அரசியல் யாப்பில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு பின்பற்றப்படுவதால் சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்குமிடையே நெருங்கிய தொடர்பில்லை. ஜனாதிபதியோ, அமைச்சரவை உறுப்பினர்களோ, காங்கிரஸின் அங்கத்தவர்கள் அல்ல. எனினும், ஜனாதிபதிக்கு பின்வரும் சட்டத்துறை தொடர்பாக சில அதிகாரங்கள் காணப்படுகின்றன:

(1) காங்கிரஸின் கூட்டங்களிற்கு செய்திகளை நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ அனுப்புதல், தான் விரும்பும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காங்கிரசிற்குப் பரிந்துரை செய்தல்.

(2) தேவையான போது காங்கிரஸில் உரையாற்றுதல்.

(3) காங்கிரஸினால் இயற்றப்படும் சட்டங்களிற்கு ஒப்புதல் அளித்தல்.

காங்கிரஸினால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் ஜனாதிபதியின் கையொப்பத்தைப் பெற்ற பின்னரே சட்டமாக அமுலுக்கு வரும். சில சட்டங்களிற்கு ஜனாதிபதி கையொப்பமிட மறுத்துத் திருப்பி அனுப்பலாம். இவ்வதிகாரம் மறுப்பாணை அதிகாரம் என அழைக்கப்படும். இத்தகைய சட்டங்களை காங்கிரஸ் 2/3 பெரும்பான்மையினால் மீண்டும் நிறைவேற்றினால் ஜனாதிபதியின் கையொப்பம் இல்லாமலேயே அது சட்டமாகி விடும்.



ஜனாதிபதி 10 நாட்களுக்குள் மசோதாவிற்கு கையொப்பமிடல் வேண்டும் அல்லது திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு 10 நாட்களிற்குள் செய்யப்படாவிட்டால், அவரது ஒப்புதல் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டு அது சட்டமாகி விடும்.

(4) அவசரகால நிலையின் போது காங்கிரஸின் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டுதல்.

(5) அவசரகால நிலையின் போது ஒப்படைக்கப்பட்ட சட்டங்களை இயற்றுதல்.

அமெரிக்க அரசியல் யாப்பு வலுவேறாக்கக் கோட்பாட்டினை அதிகளவில் பின்பற்றுகின்ற நாடாக இருப்பதனால் காங்கிரசைக் கூட்டவோ, கலைக்கவோ, ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது. அரசியல் யாப்பில் குறிக்கப்பட்ட காலப்பகுதியில் காங்கிரஸ் தானாகவே கூடும். ஆனால் நெருக்கடியான காலங்களில் ஜனாதிபதி காங்கிரசைக் கூட்டலாம்.

மேலே குறிப்பிட்டதுபோல காங்கிரசிற்கு செய்திகளை அனுப்பும் அதிகாரமுண்டு. அச்செய்திகளை அவர் நேரிலும் வழங்கலாம் அல்லது எழுத்து மூலமாகவும் அனுப்பலாம். அவர் பேச்சுவன்மை உடையவராக இருப்பின் காங்கிரசில் நேரில் பேசும்போது அவருடைய செல்வாக்கு வளர்கின்றது. வூற்றோ வில்சனும், பிராங்கிளின் ரூஸ்வெல்ற்றும் இவ்வாறே செய்தனர்.

ஜனாதிபதிக்கு காங்கிரசில் மசோதாக்களை கொண்டு வரமுடியாது. ஆனாலும், அவர் விரும்பும் மசோதாக்களை அவருடைய கட்சியினர் மூலம் காங்கிரசில் கொண்டு வரலாம். இரு சபைகளிலும் உள்ள கட்சியின் நிலைமைகளைப் பொறுத்தே ஜனாதிபதி காங்கிரசில் தமது செல்வாக்கை பயன்படுத்த முடியும். கட்சிக் கட்டுப்பாடுகள் அமெரிக்காவில் அதிகம் இல்லாததினால் ஜனாதிபதியின் கட்சியினைச் சாராத உறுப்பினர்களின் ஆதரவும் ஜனாதிபதிக்கு கிட்டக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

மறுப்பாணை அதிகாரத்தை இரத்துச் செய்யும் வாய்ப்பும் காங்கிரசிற்கு குறைவாக இருப்பதினால் அதுவும் ஜனாதிபதிக்கு வாய்ப்பாக அமைகின்றது.

பொதுவாகக் காங்கிரஸ் மசோதாக்களை மேலோட்டமாகவே வரைகின்றது. அதன் உட்பிரிவுகளை உருவாக்கும் பணியினை ஜனாதிபதியிடம் விட்டு விடுகின்றது. அவர் ஆட்சித்துறை கட்டளை வாயிலாக அதனை உருவாக்குகின்றார்.

மொத்தத்தில் "மன்றோர்" கூறுவது போல "அரசியல் யாப்பானது ஜனாதிபதியினை சட்ட ஆக்க முறையின் தொடக்கமாகவும் முடிவாகவும் அமைத்துள்ளது.

## (II) நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) நாட்டின் தலைமை நிர்வாகி.

(2) அரசின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர், ஆயுதம் தாங்கிய முப்படைகளின் தலைவர்.

(3) அமைச்சரவை உறுப்பினர்களை நியமித்தல், நீக்குதல், மாற்றுதல்.

(4) வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தல்.

(5) அமெரிக்காவிற்கான வெளிநாட்டுத் தூதுவர்களை ஏற்று அங்கீகரித்தல்.

(6) அரச உயர் அதிகாரிகளை நியமித்தல். (இந்நியமனங்கள் அனைத்தையும் செனற்சபை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். செனற் சபையின் சம்மதத்துடன்தான் உயர் அதிகாரிகளை பதவிநீக்கவும் முடியும்.)

(7) வெளிநாட்டுக் கொள்கைகளை முடிவுசெய்தல்.

(8) வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் (இதற்கும் செனற்சபையின் சம்மதம் அவசியம்.)

(9) காங்கிரஸின் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(10) வரவு செலவுத் திட்டங்களை தனது மேற்பார்வையில் தயார் செய்தல். (இதன் மீதான திருத்தங்களைச் செய்வதற்கு காங்கிரசிற்கு உரிமை இருந்தபோதும் பொதுவாக அதே வடிவத்திலேயே அதனை நிறைவேற்றி விடுகின்றது.

(11) கூட்டாட்சியின் நிலை பற்றி காலத்துக்குக்காலம் தகவல்களை வழங்குதல்.

ஜனாதிபதி தனது கடமைகளை மேற்கொள்வதற்கு பின்வரும் ஐந்து ஸ்தாபனங்கள் அவருக்கு துணையாக செயற்படுகின்றன :

i. வெள்ளை மாளிகை அலுவலகம் -
இங்குள்ள செயலாளர்கள், நிர்வாக அலுவலர்கள், எழுதுவினைஞர்கள் என்போர் தகவல்களைச் சேகரிப்பதற்கும், ஜனாதிபதிக்கும் காங்கிரசிற்கும் இடையே நல்உறவுகளை ஏற்படுத்துவதற்கும் உதவியாக இருப்பர்.

ii. வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் குழு-
இக்குழு அரசாங்கத்தின் வரவு செலவுகளை கணிப்பீடு செய்து ஜனாதிபதிக்கு வழங்கும். ஜனாதிபதி அதனை காங்கிரசிற்கு சமர்ப்பிப்பார்.



iii. தேசிய பாதுகாப்பு, யுத்தம் சம்பந்தமாக தீர்மானிக்கும் குழுக்கள்

iv. மந்திரிசபை

v. தனிப்பட்ட குழுக்களும்,ஆலோசனைச் சபைகளும்
ஜனாதிபதியால் நியமிக்கப்படும் உயர் அதிகாரிகள் புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் பதவிகளை இழப்பர். 4500 டொலர்கள் அல்லது அதற்கு அதிகமான ஊதியங்களைப் பெறும் உத்தியோகத்தர்களின் நியமனங்களுக்கு செனற்சபையின் சம்மதத்தினை ஜனாதிபதி பெறுதல் வேண்டும்.
ஜனாதிபதி மேற்கொண்ட நியமனங்களுக்கு செனற்சபை அங்கீகாரம் வழங்க மறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

உ-ம் : ஜனாதிபதி ஜோன் கல்வின் கூலிடிக் (John Calvin Cooli Dge) நியமித்த சட்டமா அதிபரை செனற்சபை நிராகரித்தது.

உ-ம் 2 : 1943 இல் ஜனாதிபதி ரூஸ்வெல்ற் ஜனநாயகக் கட்சியின் அங்கத்தவரான எட்வேர்ட் பிராங்லிங் என்பவரை அவுஸ்திரேலியாவின் தூதுவராக நியமித்தார். இவர் நியூயோர்க் நகரில் மிகவும் செல்வாக்குப் பெற்ற ஜனநாயகக் கட்சியின் தொண்டராக இருந்தமையினால் செனற்சபை அதனை எதிர்த்தது. இதனால் ஜனாதிபதி அந்த நியமனத்தை வாபஸ் பெற்றார்.

பொதுவாக ஜனாதிபதியின் கட்சிக்கு செனற்சபையில் பெரும்பான்மை இல்லாதபோதும் ஜனாதிபதி மேற்கொள்ளும் நியமனங்களை அங்கீகரிப்பதே வழக்கமாக உள்ளது.

சமஸ்டி அரசின் பதவிக்கு ஆட்களை நியமிக்கும்போது ஜனாதிபதியின் கட்சியினைச் சேர்ந்த செனற் சபை உறுப்பினர்கள் அவ்வரசுகளில் இருந்தால் அவர்களிடம் நியமன அதிகாரங்களை ஜனாதிபதி ஒப்படைத்து விடுவார். தனது கட்சியினைச் சேர்ந்த செனற்சபை அங்கத்தவர்கள் அங்கு இல்லாதபோது ஜனாதிபதி தன் விருப்பம் போல நியமனங்களை மேற்கொள்வார்.
ஆனால் இச்சந்தர்ப்பங்களிலும் அப்பிரதேசங்களில் உள்ள கட்சித் தலைவர்களை கலந்தாலோசித்தே நியமனங்களை அவர் மேற்கொள்கின்றார்.

காங்கிரசின் சட்டப்படி தான் நியமித்த அதிகாரங்களை பதவிநீக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு.

### (iii)போர் தொடர்பான அதிகாரங்கள்

நாட்டின் முப்படைகளுக்கும் தலைமைத் தளபதியாக விளங்குவதன் மூலம் தனது விருப்பத்திற்கு ஏற்ப படைகளைப் பயன்படுத்தலாம். ஆனாலும் போர்ப் பிரகடனம் செய்யும் அதிகாரம் காங்கிரசிற்கு மட்டுமே உண்டு. போர்ப் பிரகடனம் செய்த பின்னர் படையைப் பெருக்குதல் படையைக் குவித்தல் போன்ற விடயங்களை ஜனாதிபதியே தீர்மானிக்கின்றார். போர்க்காலங்களிலும், நெருக்கடியான காலங்களிலும் காங்கிரஸ் வெறுமனே சட்டங்களை இயற்றி அதன் உட்கருத்தை ஜனாதிபதியின் சுயவிருப்பப்படி செயற்பட அனுமதிப்பதால் இது தொடர்பாக அவருடைய அதிகாரம் உயர்ந்துள்ளது.

புரோகன் (Brogan) குறிப்பிடுவதுபோல அமெரிக்க ஜனாதிபதி போர்க்காலத்தில் வல்லாட்சியாளராக இல்லையெனினும் மிகப் பரந்த வரையறுக்கப்படாத அதிகாரங்களைச் செலுத்துகின்றார்.

வெளிவிவகார அதிகாரங்கள்

வெளிநாட்டு ஒப்பந்தங்களை ஜனாதிபதி மேற்கொள்ளலாம். ஆனால், செனற்சபையின் 2/3 பங்கு ஆதரவு அதற்கு அவசியம். ஒப்பந்தம் நிதி சம்பந்தமானதாக இருந்தால்பிரதிநிதிகள் சபையின் சம்மதத்தினையும் அவர் பெறுதல் வேண்டும்.

வெளிநாட்டுக் கொள்கைகளை உருவாக்குதலும், ஒழுங்குபடுத்துதலும், நடைமுறைப்படுத்துதலும் காங்கிரசிற்கும், ஜனாதிபதிக்கும் உள்ள பணிகளாகும். ஆனாலும் ஜனாதிபதியே இதில் கூடுதலான பங்களிப்புகளை மேற்கொள்கின்றார். அமெரிக்காவிற்கான வெளிநாட்டுத் தூதுவர்களை ஏற்று அங்கீகரிக்கும் பணியினையும் இவரே மேற்கொள்கின்றார். அமெரிக்காவிற்குள் வரும் வெளிநாட்டுத் தலைவர்களையும் இவரே வரவேற்கின்றார். புதிய நாடுகளையும் அரசாங்கங்களையும் அங்கீகரிக்கின்றார். இராஜதந்திர முடையவர்களை தெரிவு செய்கின்றார். அவர்களை மேற்பார்வை செய்கின்றார். ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்க தூதுக்குழுவிற்கு அறிவுறுத்தல் விடுக்கின்றார். வெளிநாட்டு வல்லரசுகளுடன் தொடர்புகளை மேற்கொள்கின்றார். வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு செனற்சபையின் வெளிநாட்டுத் தொடர்புக்குழு தேவையான உதவிகளை செய்து வருகின்றது.

### (iv)நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல் (இதற்கும் செனற் சபையின் சம்மதம் அவசியம்).



(2) குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கல், தண்டனையைக் குறைத்தல். (மாநிலங்களின் சட்டங்களை மீறியதற்காக தண்டிக்கப்பட்டவர்களின் தண்டனையைக் குறைக்கின்ற அதிகாரம் இவருக்குக் கிடையாது). ஜனாதிபதியின் அதிகாரங்கள் இன்று பல்கிப் பெருகியுள்ளன. அவருக்கு அரசியல் யாப்பு வழங்கியுள்ள அதிகாரங்களுடன் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கள், காங்கிரஸ் இயற்றிய சட்டங்கள், வழக்காறுகள் ஆகியவை வழங்கிய அதிகாரங்களும் சேர்ந்து அவரது ஆட்சித்துறை அதிகாரத்தினை பெருகச் செய்துவிட்டன.

இவற்றினை விட அரசியற் கட்சிமுறையின் வளர்ச்சி, அவசரகால நிலைகள் பொருளாதார நெருக்கடிகள், உள்நாட்டு வெளிநாட்டுப் போர்கள், மத்திய அரசாங்கத்தின் அதிகார வளர்ச்சி என்பனவும் ஜனாதிபதியின் அதிகாரங்களை பெருகச் செய்துள்ளன.

ஜனாதிபதியின் அதிகாரங்களை காங்கிரஸ் நேரடியாக கட்டுப்படுத்த முடியாது. ஆனால், மறைமுகமாக மசோதாக்களுக்கும் சிபார்சுகளுக்கும் அனுமதி வழங்க மறுத்தல், வரவு செலவுத் திட்ட ஆலோசனைகளை அங்கீகரிக்காமல் விடுதல், ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் நியமனங்களுக்கும், வெளிநாட்டு ஒப்பந்தங்களுக்கும், போர் மற்றும் சமாதானம்பற்றிய தீர்மானங்களுக்கும் அனுமதி வழங்க மறுத்தல், அரசியல் யாப்பிற்கு முரணாகச் செயற்படும் ஒரு ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் குற்றப் பிரேரணையை நிறைவேற்றுதல், ஜனாதிபதியின் இரத்து அதிகாரப் பிரயோகத்தினை 2/3 பெரும்பான்மையினால் நிராகரித்தல் போன்றவற்றின் மூலம் கட்டுப்படுத்தலாம்.

ஆனாலும் ஜனாதிபதி கட்சி அரசியல் மூலமும், மக்கள் மத்தியிலான செல்வாக்கு மூலமும் இக்கட்டுப்பாடுகளையும் தாண்டி செயற்பட முடியும். ஜனாதிபதியின் இரத்து அதிகாரப்பிரயோகத்தினை நிராகரிக்க 2/3 பெரும்பான்மை காங்கிரசிற்குத் தேவை. இதனைப் பெறுவது கடினமாகையால் ஜனாதிபதி இரத்து அதிகாரத்திற்கு பொதுவாக ஆபத்து வருவதில்லை.

## துணை ஜனாதிபதி

ஜனாதிபதி தெரிவுக்குள்ள தேர்தல் முறையே துணை ஜனாதிபதித் தெரிவுக்கும் பின்பற்றப்படுகின்றது. ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகைமைகள் அனைத்தும் துணை ஜனாதிபதி வேட்பாளருக்கும் உண்டு. ஆரம்ப காலங்களில் ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது அதிக வாக்குகளைப் பெற்றவர் துணை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் சமமான வாக்குகளைப் பெற்று 2வதாக வந்தால் அவர்களில் ஒருவரை செனற்சபை

துணைஜனாதிபதியாகத் தெரிவுசெய்கின்றது. ஆனால், 1804ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 12 வது அரசியல் யாப்புத் திருத்தத்தின்படி இம்முறை மாற்றப்பட்டுள்ளது. தற்போது, ஜனாதிபதி தேர்தலுடன் துணை ஜனாதிபதிக்கும் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப்பெற்றவர் துணை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். எவரும் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாவிடில் அதிக வாக்குகளைப்பெற்ற இருவரில் ஒருவரை செனற்சபை துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கின்றது.

## துணை ஜனாதிபதியின் அதிகாரங்கள்

(1) செனற் சபையின் தலைவராக துணை ஜனாதிபதியே விளங்குகின்றார். செனற் சபையின் கூட்டங்களிற்கும் இவரே தலைமை தாங்குகின்றார். சபையின் விவாதங்களில் அவர் கலந்து கொள்வதில்லை. வாக்களிக்கும் உரிமையும் அவருக்கு இல்லை. வாக்களிப்பில் சமநிலை காணப்படும் போது முடிவு செய்யும் வாக்கினை அளிக்கும் உரிமை இவருக்குண்டு. இதை விட எவ்வதிகாரங்களும் செனற்சபையில் இவருக்குக் கிடையாது.

(2) ஜனாதிபதி இறந்தால், அல்லது இராஜினாமா அல்லது குற்றவிசாரணை மூலம் அவரது பதவிக்காலத்திற்கு முன்னர் பதவி நீக்கப்பட்டால் எஞ்சிய காலத்திற்கான ஜனாதிபதியாக துணை ஜனாதிபதி பதவியேற்பார். இவ்வாறு துணை ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கும் போது ஜனாதிபதிக்கான எல்லா அதிகாரங்களையும் அவர் பெற்றுக் கொள்வார்.

(3) தற்காலங்களில் பதவி வகிக்கும் ஜனாதிபதிகள் தங்களுக்குள்ள பொறுப்புக்களில் சிலவற்றை துணை ஜனாதிபதிக்கு பகிர்ந்தளிக்கின்றனர்.

உ-ம் : ஜனாதிபதி ரூஸ்வெல்ற் துணை ஜனாதிபதியான ட்ருமனை காங்கிரஸ் சம்பந்தமான பணிகளில் ஈடுபடுத்தினார்.

உ-ம் : ஜனாதிபதி ஐசனேவர் துணை ஜனாதிபதி நிக்ஸனை மத்திய கிழக்கு ஆசிய நாடுகளின் பிரச்சினைகள் சம்பந்தமான பணிகளில் ஈடுபடுத்தினார்

உ-ம் : ஜனாதிபதி கெனடி துணை ஜனாதிபதி ஜான்சனுக்கு தன்னிடமிருந்த பல பொறுப்புக்களை ஒப்படைத்திருந்தார்.



## ஜனாதிபதி பதவி பற்றிய மதிப்பீடு

### நன்மைகள்

(1) ஜனாதிபதி தேர்தல் முறை மக்களின் ஜனநாயகம் என்பதை விட மாநிலங்களின் ஜனநாயகத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றது.

மக்களின் வாக்குகளை விட தேர்தல் கல்லூரி உறுப்பினர்களின் வாக்குகள் தான் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இது கூட்டாட்சித் தன்மைக்கு முக்கியம் கொடுப்பதைக் காட்டுகின்றது.

(2) ஜனாதிபதியிடம் உள்ள வலுவான அதிகாரங்கள், அமெரிக்காவின் அபிவிருத்திக்கும் பாதுகாப்பிற்கும் உதவியாக அமைகின்றன. இவருடைய அதிகாரங்களுக்கு உள்ள தடைகளைக் கூட நடைமுறையில் இவரால் தாண்ட முடியும்.

(3) அமெரிக்கா உலகவல்லரசாக திகழ்வதால் சர்வதேச ரீதியாகவும் இவரது செல்வாக்கு அதிகரித்த அளவில் உள்ளது. இதனைப் பயன்படுத்தி உலகப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இவரால் முடிகின்றது.

(4) ஜனாதிபதியின் செயற்பாடுகளில் ஒரு ஜனநாயகத் தன்மையும் காணப்படுகின்றது. முக்கியமான விடயங்களில் செனற்சபையின் சம்மதத்தினைப் பெற வேண்டியிருப்பது ஜனநாயகத்தன்மையை வெளிப்படுத்துகின்றது.

(5) போர்க்காலத்தில் இவரிடம் பரந்த அதிகாரம் இருப்பது நாட்டின் பாதுகாப்பிற்கு உதவியாக அமைகின்றது.

(6) சட்டஆக்க விடயத்தினைப் பொறுத்தவரை ஜனாதிபதியே தொடக்கமாகவும் முடிவாகவும் விளங்குகின்றார்.

(7) ஜனாதிபதி அரசாங்க முறையாக இருப்பதனால் கட்சி உணர்வுகளின் மாற்றங்களோ, இடைத்தேர்தலில் ஏற்படும் மாற்றங்களோ ஜனாதிபதிப் பதவியைப் பாதிப்பதில்லை.

(8) சட்டமன்றத்தின் ஆதரவினை இழந்துவிடக் கூடும் என்ற அச்சமின்றி ஆட்சித்துறைக் கொள்கையினை துணிந்து செயல்படுத்த முடியும்.

### குறைபாடுகள்

(1) தேர்தல் முறை மக்கள் ஜனநாயகத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

(2) சட்டஆக்கத் துறையில் ஜனாதிபதிக்குள்ள நேரடி மறைமுக அதிகாரங்களானவை, சட்டமன்றத்தின் இறைமையைப் பலவீனப்படுத்தியுள்ளது.

(3) ஜனாதிபதியின் மறுப்பாணை அதிகாரத்தை காங்கிரஸ் 2/3 பெரும்பான்மையால் மீறலாம் எனக் கூறப்பட்ட போதும் அது நடைமுறையில் சாத்தியமாக இருப்பதில்லை.

(4) அதிகாரப் பிரிவினை அதிகளவில் இருப்பதனால் ஜனாதிபதிக்கும் காங்கிரசிற்கும் பிணக்குகள் வரக்கூடும். குறிப்பாக ஜனாதிபதியின் கட்சிக்கு காங்கிரசில் பெரும்பான்மை இல்லாவிட்டால் பிணக்குகள் வரலாம்.

(5) போர்க்காலத்தில் ஜனாதிபதிக்கு இருக்கும் வரையறுக்கப்படாத அதிகாரங்கள் தன்னிச்சையான போக்கிற்கு வழிவகுக்கலாம்.

## அமைச்சரவை

அமெரிக்க அரசியல் யாப்பில் அமைச்சரவை ஒன்று இருக்க வேண்டும் என கூறப்படவில்லை. ஆனால் வழக்காற்றின் அடிப்படையில் ஓர் அமைச்சரவை வளர்ந்து நடைமுறையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையை ஏற்படுத்துவது பற்றி யாப்பில் எதுவும் கூறப்படாவிட்டாலும் நிர்வாகத்துறையில் உள்ள பல துறைகளுக்கும் தலைவர்களை நியமித்துக் கொள்ள யாப்பு இடமளிக்கிறது. ஜனாதிபதி நியமிக்கின்ற இத்தலைவர்களே அமைச்சர்களாகச் செயற்படுகின்றனர். இவர்கள், செயலாளர்கள் என்றே பொதுவாக அழைக்கப்படுகின்றனர். அமைச்சர்களை ஜனாதிபதி அதிகளவில் தனது கட்சியில் இருந்து தேர்ந்தெடுக்கின்றார்.

ஜனாதிபதி அமைச்சர்களை நியமிக்கும்போது செனட்சபையின் சம்மதத்தை பெறல் வேண்டும். ஆனால், சாதாரணமாக செனட்சபை சம்மதம் அளிப்பதே மரபாக உள்ளது. அமைச்சர்களை பதவி நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

நிர்வாகத்துறை தொடர்பான பணிகளில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதும் அமைச்சர்களின் கடமையாக உள்ளது. ஆனால் இவ்வாலோசனைகளை ஜனாதிபதி ஏற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

அமைச்சர்கள் காங்கிரஸின் கூட்டத்தொடர்களில் பங்குபற்றாவிட்டாலும் காங்கிரஸின் குழுக்களுக்கு முன்னால் தோன்றி சில மசோதாக்கள் தொடர்பாக ஜனாதிபதியின் கருத்துக்களை விளக்கவும் நிர்வாகத் துறையின் செயல்களை விளக்கவும் அதிகாரம் பெற்றுள்ளனர். அமெரிக்காவில் முக்கியமாக 12 அமைச்சுக்கள் காணப்படுகின்றன.

### 1. அரசுத்துறை

இதன் செயலாளர் அமைச்சரவை அங்கத்தவர் வரிசையில் முதலிடம் பெறுகின்றார். அமைச்சரவைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதிக்கு வலது பக்கத்தில் இருக்கின்றார். இத்துறை அமெரிக்காவின் வெளியுறவுத் துறையாகும்.



### 2. கருவூலத்துறை/நீதித்துறை

மத்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட வரிகளை வசூலிப்பதும் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருப்பதும் இவ்வமைச்சின் முக்கிய கடமை ஆகும். ஒப்பந்தம், கடன்பத்திரங்கள், நாணயம் வெளியிடுதல் போன்றவற்றைச் செய்தலும் இதன் பணியாகும்.

### 3. நீதித்துறை

சட்டமா அதிபர் இதன் தலைவராக விளங்குகிறார். ஜனாதிபதி, காங்கிரஸ் ஏனைய அமைச்சர்கள் என்போர்க்குச் சட்ட ஆலோசகராகவும் செயற்படுகிறார். மத்திய அரசின் சட்டங்களை மீறிய குற்றங்கள் தொடர்பில் வழக்குகளை நடாத்துவதும் இவரின் பணியாகும்.

### 4. தபால் அலுவலகத் துறை

தபால் மா அதிபர் இதற்குப் பொறுப்பாக விளங்குவார். தபால்-துறை தொடர்பான பணிகளை இவர் மேற்கொள்கிறார்.

### 5. உள்நாட்டு விவகாரத் துறை

போட்டோரிக்கோ போன்ற பகுதிகளின் நிர்வாகம், சுகாதாரம், கல்வி, பொது நிலங்கள் விற்பனை போன்றவற்றை இத்துறை கவனிக்கும்.

### 6. விவசாயத்துறை

விவசாயிகளுக்கு உதவுவதற்கென ஆராய்ச்சிகளை மேற்கொள்வது இதன் முக்கிய பணியாகும். அத்துடன் உணவு, மருந்து போன்றவை சம்பந்தப்பட்ட கூட்டாட்சிச் சட்டங்களை அமுல்படுத்துவதும் இத்துறையின் கடமையாகும்.

### 7. வர்த்தகத்துறை

புள்ளி விபரம், வெளிநாட்டு வர்த்தகம், அரசாங்கம் வாங்கும் பொருட்களுக்கான தரத்தை நிர்ணயிக்கும் சோதனைச்சாவடிகளை நிர்வகித்தல், தரமான அளவுகளைத் தீர்மானித்தல் என்பன இதன் பணியாகும்.

### 8. தொழிலாளர் துறை

தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்தி பாதுகாக்கும் பணியினை மேற்கொள்கின்றது.

**9. பாதுகாப்புத் துறை**

தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகிய 3 துறைகளும் இதன் கட்டுப்பாட்டில் உள்ளது.

**10. சுகாதாரம் கல்வி மற்றும் தன்னலத் துறை**

மக்களுடைய பொதுநலன், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை முன்னேற்றும் பணியை மேற்கொள்கின்றது.

**11. வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை**

மக்களின் வீட்டு வசதிப் பிரச்சினைகளையும் நகர்ப்புற வளர்ச்சிப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கின்றது.

**12. நாட்டின் போக்குவரத்து வளர்ச்சியை இத்துறை பேணுகின்றது**

# 4 அமெரிக்காவின் சட்டவாக்கத்துறை

அமெரிக்காவின் சட்ட ஆக்கத்துறையாக காங்கிரஸ் காணப்படுகிறது. இது பிரதிநிதிகள் சபை செனற்சபை என்கின்ற 2 சபைகளைக் கொண்டதாக விளங்குகிறது. இரு சபைகளுக்கும் சமமான அதிகாரம் உண்டு. எனினும், செனற் சபைக்குச் சில சிறப்பு அதிகாரங்கள் உள்ளன. சாதாரண மசோதாக்களை இரு சபைகளிலும் கொண்டு வரலாம். ஆனால், நிதிமசோதாக்களைப் பிரதிநிதிகள் சபையில் மட்டும் கொண்டுவர முடியும். எனினும், இதில் திருத்தங்களைச் செய்யும் உரிமை செனற் சபைக்குண்டு. அரசியல் யாப்புத் திருத்தங்களைப் பொறுத்தவரை அவை இரண்டு சபைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

இயற்றப்படும் சட்டங்கள் அனைத்தும் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட பின்னரே, காங்கிரஸினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டு ஜனாதிபதியின் கையொப்பத்திற்கு அனுப்பப்படுகின்றன. ஜனாதிபதி மறுப்பாணை அதிகாரத்தின் மூலம் தான் விரும்பாத சட்டங்களைத் தடுக்கலாம். ஆனால், அதனை 2/3 பெரும்பான்மையுடன் காங்கிரஸ் மீண்டும் நிறைவேற்றினால் தடுக்கப்பட்ட மசோதா சட்டமாகிவிடும். சட்டவாக்கம் தொடர்பாக இரு சபைகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்படுமிடத்து இரு சபைகளின் இணைப்புக்குழுவின் மூலம் அது தீர்த்து வைக்கப்படுகின்றது.



## பிரதிநிதிகள் சபை

இது முதலாம் மன்றம், கீழ்சபை எனவும் அழைக்கப்படும். இதில் 437 அங்கத்தவர் அங்கம்வகிக்கின்றனர். இதன் உறுப்பினர்கள் ஒரு அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளில் இருந்து மக்களினால் இரு வருடத்திற்கு ஒருமுறை நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு ஆண்டுகால பதவிக்காலம் முடிவடையும் முன் இச்சபையைக் கலைக்க முடியாது.

உறுப்பினர்களின் எண்ணிக்கை மக்கள் தொகையின் அடிப்படையில் காங்கிரஸினால் நிர்ணயிக்கப்படுகிறது. அரசியல் யாப்பின்படி ஒரு உறுப்பினர் 30,000 மக்களுக்குக் குறையாமல் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் ஒரு மாநிலத்தில் இருந்து ஒரு உறுப்பினராவது தேர்ந்தெடுக்கப்படும் வகையிலும் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றது.

இச்சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்:

1) 25 வயதினை நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
2) குறைந்தது 7 ஆண்டுகள் அமெரிக்கக் குடியுரிமையினைப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
3) எந்த மாநிலத்தில் போட்டியிடுகின்றாரோ அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

சபையின் கூட்டத்தொடர் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 3ம் திகதி ஆரம்பமாகி சபை ஒத்திவைக்கும்வரை தொடர்ந்து நடைபெறுகின்றது. சபையின் சிறப்புக் கூட்டங்கள் ஜனாதிபதியால் கூட்டப்படலாம். சபாநாயகர் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். இவரை சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

## அதிகாரமும் கடமைகளும்

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

மத்திய அரசிற்கான சட்டம் இயற்றும் அதிகாரத்தை இச்சபை செனற் சபையுடன் சமமாக பங்கிட்டுக் கொள்கின்றது. முன்னர் கூறியது போல் சாதாரண மசோதாக்களை இரு சபைகளிலும் அறிமுகப்படுத்தலாம். நிதி மசோதாக்களை இச்சபையில் மட்டும் அறிமுகப்படுத்த முடியும். எனினும், அவற்றில் திருத்தங்களை செய்யும் அதிகாரம் செனற்சபைக்குண்டு.

சட்ட ஆக்கம் தொடர்பாக இருசபைகளிற்குமிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது இரு சபைகளும் இணைந்து உருவாக்குகின்ற ஆலோசனைச் சபை மூலம் அது தீர்க்கப்படுகிறது. இவ்வாலோசனைச் சபையில் ஒவ்வொரு

சபையிலும் இருந்து 3 தொடக்கம் 9 வரையான உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். அரசியல் யாப்புத் திருத்தம் இரு சபைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

### நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்களும் கடமைகளும்

அமெரிக்க அரசியல் யாப்பின்படி சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையே நேரடித் தொடர்பு கிடையாது. இதனால், பிரதிநிதிகள் சபை ஒரு குறிப்பிட்ட அளவே நிர்வாகத்துறையை கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளது. நிர்வாகத்துறை பிரதிநிதிகள் சபைக்குப் பொறுப்பானது அல்ல. எனவே, பிரதிநிதிகள் சபை சாதாரணமான வகையில் ஜனாதிபதியைப் பதவிநீக்க முடியாது.

பிரதிநிதிகள் சபை நிர்வாகத்துறையைக் கட்டுப்படுத்துவது, வரவு செலவுத் திட்ட செயற்பாட்டின்போதே அதிகமாக உள்ளது. இதைவிட போர், அமைதி என்பவற்றுக்கான தீர்மானமும் இச்சபையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஜனாதிபதி தேர்வின்போது, எந்த ஒரு வேட்பாளரும் அறுதிப்பெரும்பான்மையைப் பெறாவிடில் முதல் மூன்று நிலையில் உள்ள ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் அதிகாரம் இச்சபைக்கு உண்டு.

புதிய மாநிலங்களை அங்கீகரித்தல் தொடர்பில் செனட் சபையுடன் அதிகாரத்தைப் பங்கிடுகின்றது. இதைவிட மத்திய அரசின் அதிகாரிகளைப் பதவியில் இருந்து நீக்கும் தீர்மானத்தை இச்சபையிலும் கொண்டு வரலாம்.

### நீதித்துறை தொடர்பான அதிகாரங்களும் கடமைகளும்

ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணை இங்கேயே ஆரம்பிக்கப்படுகின்றது. உயர்நீதி மன்றத்தின் கீழுள்ள எல்லா மத்திய அரசின் நீதி மன்றங்களும் இதனாலேயே உருவாக்கப்படுகின்றது. நீதிபதிகளின் சம்பளம், பிற சலுகைகள் என்பனவற்றைத் தீர்மானிப்பதிலும் இச்சபைக்குப் பங்குண்டு. இதைவிட தலைமை நீதிபதிகளை விசாரணை மூலம் பதவியில் இருந்து நீக்குவதற்கான தீர்மானத்தை இச்சபையிலும் கொண்டு வரலாம்.

## செனற்சபை

இது மேற்சபை 2ம் மன்றம் என அழைக்கப்படுகிறது. உலகில் உள்ள எல்லா 2ம் மன்றங்களையும் விட அதிகூடிய அதிகாரத்தைக் கொண்டதாக விளங்குகின்றது. சட்டத்துறையான காங்கிரஸில் மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது இச்சபையே ஆகும். இச்சபையில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் தலா 2 உறுப்பினர்கள் வீதம் 100 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். ஆரம்ப காலங்களில் இதன் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள். பின்னர், அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட 17வது திருத்தத்தின்படி, நேரடியாக மக்களினால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர்.



உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 வருடங்களாகும். இரு வருடத்திற்கு ஒரு தடவை 1/3 பங்கினர் பதவி விலக புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ் வகையில், இது ஒரு நிலையான சபையாகும். பதவிவிலகும் அங்கத்தவர்கள் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட உரிமை உண்டு.

சபையின் தலைவராகத் துணை ஜனாதிபதி விளங்குகின்றார். அதேவேளை செனட் சபை தற்காலிக தலைவர் ஒருவரையும் தேர்ந்தெடுக்கின்றது. இவர் துணை ஜனாதிபதி சமூகமளிக்காத சந்தர்ப்பங்களில் சபைக்குத் தலைமை தாங்குவார்.

### உறுப்பினருக்குரிய தகைமைகள்

1) 30 வயதினை நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
2) குறைந்தது 9 வருடங்கள் அமெரிக்கக் குடியுரிமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.
3) எந்த மாநிலத்தில் செனட் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரோ அம்மாநிலத்தின் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

## அதிகாரங்களும் கடமைகளும்

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்களும் கடமைகளும்

சாதாரண மசோதாக்களை எந்த சபையிலும் அறிமுகம் செய்யலாம். ஆனால் பெரும்பாலான மசோதாக்கள் செனட் சபையில் தான் அறிமுகம் செய்யப்படுகின்றன. நிதி மசோதாக்களை பிரதிநிதிகள் சபையில் மட்டும் அறிமுகப்படுத்த முடியும். ஆயினும், மசோதாவின் தலைப்பை தவிர்த்து ஏனைய எல்லாவற்றிலும் திருத்தங்களினைக் கொண்டுவரும் உரிமை செனட்டுக்கு உண்டு.

அரச-யாப்பு திருத்தத்தைப் பொறுத்தவரை பிரதிநிதிகள் சபையுடன் சமமாக அதிகாரத்தைப் பங்கிட்டு கொள்கிறது.

சட்டவாக்கம் தொடர்பாக முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் இணைப்புக் குழுவின் மூலம் முரண்பாடுகள் தீர்த்து வைக்கப்படுகின்றன. அரசியல் யாப்புத் திருத்த மசோதாவைப் பொறுத்தவரை தொடக்கும் உரிமை இதற்கு உண்டு.

### நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்களும் கடமைகளும்

உலகில் வேறு எந்த 2ம் சபைகளையும் விட, கூடுதலான நிர்வாக அதிகாரத்தினை கொண்டதாக இச்சபை திகழ்கின்றது. ஜனாதிபதியின் நியமனங்கள், வெளிநாட்டு, ஒப்பந்தங்கள் அனைத்தும் செனற்சபையின் சம்மதத்துடனேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியின் சில நியமனங்களையும், வெளிநாட்டு ஒப்பந்தங்களையும் செனற் சபை நிராகரித்துள்ளது.

வெளிநாட்டு ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, இதுவரை 1 % மான ஒப்பந்தங்களை நிராகரித்துள்ளது. 15 % மான ஒப்பந்தங்களைத் திருத்தங்களுடன் அங்கீகரித்துள்ளது.

உதாரணமாக, 1ம் உலகமகா யுத்தத்தின் பின்னர் ஜனாதிபதி 'வில்சன்' மேற்கொண்ட சமாதான உடன்படிக்கையை செனற்சபை நிராகரித்தது. இதனால், அவ் உடன்படிக்கையை நடைமுறையில் அவரால் மேற்கொள்ள முடியவில்லை. 2ம் உலக மகாயுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் போது அப்போதைய ஜனாதிபதி "ரூஸ்வெல்ட்" செனற்சபையின் வெளிவிவகார அங்கத்தவர்களையும் பேச்சு வார்த்தைகளில் இணைத்துக் கொண்டார். இதன் காரணமாக அவரினால் ஒப்பந்தத்தை மேற்கொள்ள முடிந்தது. இவருக்குப்பின் வந்த ஜனாதிபதிகள் இதே நடைமுறையை பின்பற்றுவதால் தற்போது செனட்சபையின் செல்வாக்கு குறைந்து வருகிறது.

## நீதித்துறை தொடர்பான அதிகாரங்களும் கடமைகளும்

ஜனாதிபதி, துணை ஜனாதிபதி மற்றும் மத்திய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் போன்றோரைக் குற்ற விசாரணை மூலம் பதவியில் இருந்து விலக்கும் அதிகாரம் செனற்டுக்கு உண்டு. செனட்சபை குற்ற விசாரணை மன்றமாக செயற்படும்போது உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி இச்சபைக்கு தலைமை தாங்குகின்றார். இதைவிட, செனற்சபையின் சம்மதத்துடன்தான் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்படுகின்றனர்.

## வேறு அதிகாரங்கள்

துணை ஜனாதிபதி தேர்தலில் எந்த ஒரு வேட்பாளருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் செனற்சபை அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற முதல் இரு வேட்பாளர்களில் ஒருவரை துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கின்றது. நிர்வாகத்திறமையின்மை, லஞ்ச ஊழல் போன்றவற்றை கண்டுபிடிக்கும் புலனாய்வுக் குழுக்களை அடையாளம் காணும் உரிமையும் உண்டு.



# 5 அமெரிக்காவின் நீதித்துறை

நீதித்துறை

| மத்திய அரசின் நீதித்துறை | மாநில அரசின் நீதித்துறை |
|---|---|
| 1. மாவட்ட நீதிமன்றம் | 1. மாவட்ட நீதிமன்றம் |
| 2. மேன்முறையீட்டு நீதிமன்றம் | 2. இடைநிலைமேல் விசாரணை நீதிமன்றம் |
| 3. சிறப்பு நீதிமன்றம் | 3. மாநில உயர்நீதிமன்றம் |
| 4. உயர் நீதிமன்றம் | |

அமெரிக்காவில் இரு வகையான நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. மாநில அரசியலமைப்பாகவும் சட்டங்களையும் சார்ந்த வழக்குகளை மாநில நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன. மத்திய அரசின் அரசியலமைப்பையும், சட்டங்களையும் சார்ந்த வழக்குகளை மத்திய அரசின் நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன.

அமெரிக்கா ஒரு கூட்டாட்சி நாடாக இருப்பதனால் நீதித்துறை அதுவும் குறிப்பாக உயர்நீதிமன்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மத்திய அரசிற்கும் மாநில அரசிற்குமிடையில் ஏற்படும் முரண்பாடுகளையும் உயர்நீதிமன்றமே தீர்த்து வைக்கிறது. அதேவேளை அரசியல் யாப்பிற்குப் பொருள் விளக்கம் வழங்கும் பணியையும் மேற்கொள்கிறது. அமெரிக்காவில் மத்திய அரசின் நீதி மன்றங்கள், மாநில அரசின் நீதிமன்றங்கள் என இருவகையான நீதிமன்றங்கள் உள்ளன. மத்திய அரசின் நீதிமன்றங்களில் உயர்நீதிமன்றம் அதியுயர்ந்த நீதிமன்றமாகத் தொழிற்படுகின்றது.

## மத்திய அரசின் நீதித்துறை

மத்திய அரசின் நீதித்துறையில் பலவகையான நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. இவற்றில், உயர்நீதிமன்றம் மட்டுமே அரசியல் யாப்பினால் உருவாக்கப்பட்ட நீதிமன்றம் ஆகும். ஏனைய நீதிமன்றங்கள் காங்கிரசினால் இயற்றப்பட்ட நீதிமன்றங்கள் ஆகும்.

## உயர்நீதிமன்றம்

இதுவே அமெரிக்க கூட்டாட்சியின் மிக உயர்ந்த நீதிமன்றமாகும். இது ஒரு தலைமை நீதிபதியையும் 8 ஏனைய நீதிபதிகளையும் கொண்டது. இவர்கள்

அனைவரும் செனற் சபையின் சம்மதத்துடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ஆயுட்காலப் பதவிக்காலத்தினை உடையவர்கள். அதாவது நன்நடத்தைக் காலம் வரை இவர்கள் பதவி வகிக்கலாம். எனினும், 10 வருட பதவிக் காலத்தின் பின்னர் ஓய்வு பெறும் உரிமை இவர்களுக்கு உண்டு.

குற்றவிசாரணை மூலம்தான் நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்ய முடியும். (இதுவரை ஒருவர் மட்டும் குற்றவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டார்). நீதிபதிகளின் சம்பளம் காங்கிரசினால் தீர்மானிக்கப்படுகிறது. பதவிக்காலத்தின் போது சம்பளத்தினைக் குறைக்க முடியாது.

உயர்நீதிமன்ற நீதிபதிகளின் தகைமைகள் யாவை என்பது பற்றி அரசியல்யாப்பு எதுவும் குறிப்பிடவில்லை. செனற்சபையின் சம்மதம் பெறக்கூடிய எவரையும் ஜனாதிபதி நீதிபதிகளாக நியமிக்கலாம்.

## அதிகாரங்களும் கடமைகளும்

### 1. நீதிப்புனராய்வு அதிகாரம்

நீதிப்புனராய்வு அதிகாரத்தின் மூலம் உயர்நீதிமன்றம் பின்வரும் நான்கு வகையான பணிகளைப் புரிகின்றது :

#### i. அரசியல் யாப்பிற்கு பொருள் விளக்கம் தந்து அதன் மேம்பாட்டை பாதுகாத்தல்

அமெரிக்க கூட்டாட்சியில் அரசியல் யாப்பே மேன்மையான சட்டமாகும். மத்திய அரசும், மாநில அரசுகளும் அரசியல் யாப்பிலிருந்தே அதிகாரங்களைப் பெறுகின்றன. அரசியல் யாப்பின் உள்அர்த்தம் தொடர்பாக முரண்பாடுகள் வருகின்றபோது அரசியல் யாப்பிற்கு பொருள் விளக்கம் கொடுத்து யாப்பின் மேன்மையை உயர்நீதிமன்றம் பாதுகாக்கின்றது.

#### ii. மத்திய அரசின் சட்டங்களையும் மாநில அரசின் சட்டங்களையும் அரசியல் யாப்பிற்கு முரணானவை என நிராகரித்தல்

இதுவும் அரசியல் யாப்பிற்கு பொருள் விளக்கம் தந்து அதன் மேன்மையை பாதுகாக்கும் அதிகாரத்திலேயே அடங்கியுள்ளது. இதன் மூலம் மத்திய அரசின் சட்டங்களையும், மாநில அரசுகளின் சட்டங்களையும் அரசியல் யாப்பிற்கு முரணானவை என நிராகரிக்க உயர்நீதிமன்றத்தினால் முடியும். உதாரணமாக சிறுவர்களின் உழைப்பினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யக்கூடாதென தடைசெய்த சட்டத்தை எதிர்த்து மாநில அரசுகள் 1919இல் வழக்குத் தொடர உயர்நீதிமன்றம் அச்சட்டத்தினை அரசியல் யாப்பிற்கு முரணானதெனக் கூறி நிராகரித்தது. அதேபோல் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வகுத்த புதிய திட்டத்தின் ஒரு பகுதியாகிய தேசிய தொழில் மீட்புச் சட்டத்தையும் உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

மத்திய அரசின் சட்டங்களை நிராகரித்தது போலவே மாநில அரசுகளின் சட்டங்களையும் நிராகரித்துள்ளது. உதாரணமாக மேல்லாந்து மாநிலச் சட்டத்தை மக்குல்லாக் எதிர் மேல்லாந்து என்ற வழக்கில் உயர்நீதிமன்றம் நிராகரித்தது.



மக்குல்லாக் எதிர் மேல்லாந்து என்ற வழக்கில் உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

#### iii. பொதிந்துள்ள அதிகாரங்களை விளக்குதல்

மத்திய அரசிற்கு அரசியல் யாப்பு வழங்கியுள்ள முதலாவது வகையான அதிகாரங்களுக்குள் அடங்கியிருப்பதாக அல்லது பொதிந்திருப்பதாக உயர்நீதிமன்றம் கருதும் அதிகாரங்களே பொதிந்துள்ள அல்லது உள்ளடங்கியுள்ள அதிகாரங்கள் எனப்படுகின்றது. அரசியல் யாப்பிற்கு பொருள் விளக்கம் கொடுக்கின்ற போது நீதிமன்றம் அதனைக் குறிப்பிடுகின்றது. இந்தப் பொதிந்துள்ள அதிகாரங்களின் மூலம் மத்திய அரசின் அதிகாரங்கள் நாளடைவில் வலுவுடையனவாக மாறிவிட்டன. உதாரணமாக, வரிவிதித்தல், போர், மாநிலங்களுக் கிடையே வர்த்தகத்தினை ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றில் மத்திய அரசின் அதிகாரங்கள் பெருகிவிட்டன.

பொதிந்துள்ள அதிகாரத்தினை வழங்கியமைக்கு உதாரணமாக, வூட்ரோ வில்சன் கால வழக்கினைக் குறிப்பிடலாம். அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி செனற்சபையின் சம்மதத்தினைப் பெறவேண்டுமென வலியுறுத்திய காங்கிரசின் முடிவினை வில்சன் எதிர்த்து தம் விருப்பப்படியே தலைமை அஞ்சல் அதிகாரியான திரு. மையர்ஸை பதவிலியிருந்து விளக்கினார். அவ்வாறு விளக்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

#### iv. அடிப்படை உரிமைகளுக்கு எதிரான சட்டங்களை தவறானவை என நிராகரித்தல்

அரசியல் யாப்பின் 14வது விதிக்கேற்ப "தக்க சட்டமுறைப்படியன்றி" (With out due process of Law) யாருடைய உயிரும் உரிமையும் சொத்தும் பறிக்கப்படக் கூடாது.

இதில் தக்க சட்டமுறைப்படி என்பதை உயர்நீதிமன்றம் "முறையான சட்டப்படி" என வரையறுத்துள்ளது. எனவே முறையற்றது என தான் கருதும் சட்டங்களை நிராகரித்து விடுகின்றது. உதாரணமாக, கலிபோர்னிய மாநிலம் இயற்றிய சட்டமொன்றை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததனைக் குறிப்பிடலாம்.

சிறையில் வைக்கப்படுவோரின் தலைமுடியினை ஒரு அங்குலத்திற்கு மேல் வளர விடக்கூடாது என்ற கலிபோர்னியச் சட்டப்படி சீனக் கைதி ஒருவரின் நீண்ட தலைமுடி வெட்டப்பட்டது. ஆனால் அது தனது பண்பாட்டுரிமை என அவன் வாதாடினான். உயர்நீதிமன்றம் அச்சட்டம் முறையற்றது எனக் கூறி தள்ளுபடி செய்தது.

### 2. உடன்படிக்கை சம்பந்தமான வழக்குகள்

அ. வெளிநாட்டுத் தூதுவர் சம்பந்தப்பட்ட வழக்குகள்.

ஆ. பொது அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள்.

இ. கடல் சார்ந்த வழக்குகள்.

ஈ. அமெரிக்க அரசுக்கும் இன்னோர் நாட்டின் பிரஜைக்கும் இடையிலான வழக்குகள்.

**3. மாநிலங்களுக்கு இடையிலான வழக்குகள்**

**4. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான வழக்குகள்.**

**5. மேன்முறையீட்டு வழக்குகள்**

## சிறப்பு நீதிமன்றம்

பின்வருவன மத்திய அரசின் சிறப்பு நீதிமன்றங்களாக இருக்கின்றன :

1) உரிமை நீதிமன்றம்
2) சுங்க வரி நீதிமன்றம்
3) சுங்கவரி பதிவுப் பொருள் மேன்முறையீட்டு நீதிமன்றம்
4) வரி நீதிமன்றம்
5) இராணுவ நீதிமன்றம்

## மேன்முறையீட்டு நீதிமன்றங்கள்

மாவட்ட நீதிமன்றங்களில் இருந்துவரும் மேன்முறையீடுகளை விசாரணை செய்கின்றன. அமெரிக்காவில் இவ்வாறான 4 நீதிமன்றங்கள் உண்டு. ஒவ்வொரு நீதிமன்றத்திலும் 3-9 வரையான நீதிபதிகள் பதவி வகிக்கின்றனர். இவர்கள் ஜனாதிபதியினால் செனற் சபையின் சம்மதத்துடன் நியமிக்கப்படுகின்றனர்.

நீதிபதிகள் நன்நடத்தைக் காலம் வரை பதவி வகிக்கலாம்.

## மாவட்ட நீதி மன்றம்

மத்திய அரசின் நீதித்துறை (கூட்டாட்சி நீதித்துறை) அடிமட்டத்தில் காணப்படுபவை, இம்மாவட்ட நீதிமன்றங்கள் ஆகும். ஒவ்வொரு மாநிலத்திலும் குறைந்தது ஒரு மாவட்ட நீதிமன்றமாவது உள்ளது. மத்திய அரசின் சட்டங்கள் குறித்த முதல் நிலை விசாரணை உரிமையை இவை கொண்டுள்ளன. ஒவ்வொரு நீதிமன்றமும் ஒரு நீதிபதியைக் கொண்டுள்ளது. ஆனால், சில மாவட்டங்களில் பணிகள் அதிகமாக இருப்பின் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் பதவி வகிக்கின்றனர்.



## மாநில அரசுகளின் நீதித்துறை

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு தலைமை நீதிமன்றம் உண்டு. அதுவே அம் மாநிலத்தின் உயர் அந்தஸ்து கொண்ட நீதிமன்றமாகும்.

இதன் கீழ் இடை நிலை மேல்விசாரணை நீதிமன்றங்கள் உள்ளன.

மாவட்ட நீதிமன்றங்கள் மாநிலத் துறையின் அடிமட்ட நீதிமன்றங்கள் ஆகும். இதன் நீதிபதிகள் பெரும்பாலும் மக்களினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

# 6 அமெரிக்க கட்சிமுறை

## வரலாற்றுப் பின்னணி

அமெரிக்க கட்சிமுறையானது, அமெரிக்க அரசியல் யாப்பின் தோற்றத்துடன் ஆரம்பமானது எனலாம். அரசியல் யாப்பினை உருவாக்கும் முயற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஒரு பிரிவினர் மாநிலங்களின் அதிகாரம் அதிகளவில் இருத்தல் வேண்டும் என வற்புறுத்தினர். இவர்கள் மீட்டாட்சிப் பிரிவினர் என அழைக்கப்பட்டனர். இவர்களே பின்னர் குடியரசுக் கட்சி என தங்களுடைய பிரிவுக்குப் பெயரினை உருவாக்கிக் கொண்டனர். மத்திய அரசுக்கு அதிகாரம் வேண்டும் என இன்னொரு பிரிவினர் வற்புறுத்தினர். அவர்கள் எதிர்க்கூட்டாட்சிப் பிரிவினர் என அழைக்கப்பட்டனர். இவர்களே பின்னர் ஜனநாயகக் கட்சி என தங்களின் பிரிவைக் கூறிக் கொண்டனர். ஜிம்மிகாட்டர், கிளின்டன் போன்றவர்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்தவர்கள். புஷ் போன்றவர்கள் குடியரசுக் கட்சியை சேர்ந்தவர்கள்.

## கட்சிமுறையின் இயல்புகள்

அமெரிக்காவில் இருகட்சி முறை நடைமுறையில் இருந்தாலும் பொதுவான விடயங்களைப் பொறுத்தவரை குறிப்பாக வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை இரு கட்சிகளிடையேயும் ஒருமித்த கருத்து காணப்படுகின்றது. பாராளுமன்ற அரசாங்கமுறை நடைமுறையில் இல்லாததால் கட்சிகளிடையே போட்டித் தன்மை அதிகளவில் இல்லை. கட்சி விசுவாசமும் உறுப்பினர்களுக்கு இருக்கின்றது எனக் கூற முடியாது. தீர்மானங்கள் சட்டசபையில் எடுக்கின்றபோது ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் தீர்மானங்களுக்கு எதிராகவும், ஆதரவாகவும் வாக்களிப்பதுண்டு. தேர்தல் காலங்களில் மட்டும் இக்கட்சிகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. இதனால், அமெரிக்க கட்சிகள் தேர்தல் தொகுதி இயந்திரங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. பொதுவாக, குடியரசுக் கட்சி மாநிலங்களின் அதிகாரங்கள் தொடர்பாகவும் ஜனநாயகக் கட்சி மத்திய அரசின் அதிகாரங்கள் தொடர்பாகவும் அக்கறை செலுத்தி வருகின்றது.

அமெரிக்காவில் இரு வகையான நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. மாநில அரசியலமைப்புகளையும் சட்டங்களையும் சார்ந்த வழக்குகளை மாநில நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன. மத்திய அரசின் அரசியலமைப்பையும்,

சட்டங்களையும் சார்ந்த வழக்குகளை மத்திய அரசின் நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன.

## கட்சியமைப்பு

அமெரிக்கக் கட்சியமைப்பினை உருவாக்கும் ஈர்ப்புச் சக்திகள் மாநிலங்களிலும், நகரங்களிலும் உள்ளாட்சிப் பிரிவுகளிலும் காணப்படுகின்றன. தேசிய மட்டத்தை விட உள்ளூர் மட்டத்திலும், மாநில மட்டத்திலும் கட்சியமைப்புக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தேர்தல்கள் மாநிலங்களால் நடாத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதே இதற்குக் காரணமாகும். அரசியல் யாப்பின்படி செனற் சபையின் உறுப்பினர்களும், பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களும் எந்த மாநிலத்தின் பிரதிநிதிகளாகவும், எந்த மாவட்டத்தின் பிரதிநிதிகளாகவும் இருக்கிறார்களோ அந்தந்த மாநிலத்திலும் மாவட்டத்திலும் குடியிருத்தல் வேண்டும். இதனால் மாநில உள்ளூர் கட்சிகளின் கூறுகளுக்கு வேட்பாளர்களை பெயர் கொடுத்து நிறுத்துவதில் இறுதிப் பங்களிப்பு இருக்கிறது. தேசிய உயர் பதவிகளுக்கும் இந்நிலை பொருந்தும், கீழிருந்து மேலாகவோ அல்லது மேலிருந்து கீழாகவோ அங்கு அதிகாரம் செலுத்தப்படுவதில்லை.

கட்சிகளின் அமைப்பு ஒரு பிரமிட் வடிவத்திலுள்ளது. அடித்தளத்தில் கட்சியின் அமைப்பு அடித்தள அலகுத் தொகுதி, நகரம் அல்லது வட்டம் மட்டத்தில் காணப்படுகிறது. ஏறத்தாழ 1,30,000 அடித்தள அலகுகள் உள்ளன. 1000-5000 வரையிலான வாக்காளர்கள் இவ்வடித்தள அலகுகளில் அங்கம் வகிக்கின்றனர்.

அடித்தள அலகுக்கு மேல் நிலையில் தொகுதிக் குழு உள்ளது. இவை புறநகர்ப் பகுதியில் அமைக்கப்படுகின்றன. தொகுதிக் குழுவுக்கு மேல் மட்டத்தில் நகரக்குழு இருக்கின்றது. இதற்கும் உயர் மட்டத்தில் வட்டக்கட்சியமைப்பு உள்ளது. இதிலொரு தலைவர் இருக்கின்றார். அத்தோடு ஒரு மையக்குழுவும் இருக்கின்றது. வட்டத்தின் தலைவர் தனது அதிகார எல்லைக்குட்பட்ட மாநில கூட்டாட்சி அலுவல்களில் ஆதிக்கம் செலுத்துகின்றார். குறிப்பாக கூட்டாட்சி அலுவல்களில் ஆட்களை அமர்த்துவதில் பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றார். அமெரிக்காவில் இத்தகைய வட்டங்கள் 1000 வரையிலிருக்கின்றன.

மாநில மட்டத்தில் கட்சியமைப்பில் மாநில மையக்குழு பிரதானமானதாக இருக்கின்றது. இதற்கென ஒரு தலைவரும் இருக்கின்றார். மாநிலக்குழுக்கள் அளவில் வேறுபடுகின்றன. அவையமைக்கப்படும் விதமும் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றது.

மாநிலத்தின் மையக்குழு மாநிலத்திலுள்ள கட்சியின் எல்லா அமைப்புகளையும் மேற்பார்வை செய்கின்றது. கட்சிக்கான நிதியினைத் திரட்டுகின்றது. தேர்தலுக்கான நடிவடிக்கைகளை மேற்கொள்கின்றது. சில சிறிய அலுவல்களுக்கான ஆட்களின் பெயர்களை சிபார்சு செய்கின்றது. சில மாநிலங்களில் இவை ஜனாதிபதி,துணை ஜனாதிபதி ஆகிய பதவிகளுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் கல்லூரிக்கும் மாநிலப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்புகிறது.



தேசிய மட்டத்தில் கட்சியின் முக்கிய உறுப்பாக இருப்பது தேசியக் குழுவாகும். இதில் உறுப்பினர்களை இணைப்பது தொடர்பாக 2 பிரதான கட்சிகளான ஜனநாயகக் கட்சியும், குடியரசுக் கட்சியும் வெவ்வேறு வழிகளைப் பின்பற்றுகின்றன. ஜனநாயகக் கட்சியில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் ஒரு ஆண் உறுப்பினரும், ஒரு பெண் உறுப்பினரும் என இரு உறுப்பினர்கள் சேர்க்கப்படுகின்றனர். குடியரசுக் கட்சியில் மாநில மையக்குழுவின் தலைவர்கள் தேசியக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

தேசியக் குழுவின் தலைவர் கட்சியமைப்பில் மிக முக்கியமானவராகவுள்ளார். இவரே கட்சியின் மைய அலுவலகத்தையும், விளம்பரத் திணைக்களத்தையும் கட்டுப்படுத்துகின்றார். கட்சியின் செயற்பாட்டுக்கென ஒரு நிர்வாகக் குழுவை அமைக்கின்றார். இந்நிர்வாகக்குழுவே ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் பணிகளைக் கவனிக்கிறது.

தேசியக் குழுவிற்கு மேல்நிலையில் தேசிய மகாநாடு உள்ளது. இதில் 1000ற்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் அதையொத்த எண்ணிக்கையில் மாநிலங்களிலிருந்தும், பிரதேசங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்று உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

இத்தேசிய மாநாடே ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்குரிய வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கிறது. இதுவே தேசியக் குழு தயாரிக்கும் கட்சியின் பிரச்சாரத் திட்டத்துக்கு ஒப்புதலளிக்கிறது.

## அமெரிக்காவின் பிரதான அரசியற் கட்சிகள்

### குடியரசுக் கட்சி

குடியரசுக் கட்சி ஓர் அரசியற் குழுவாக 1856ல் தோற்றம் பெற்றது. தனிப்பட்டவர்களின் உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் அர்ப்பணிக்கும் ஓர் அரசியற்குழுவாகவே தோற்றம் பெற்றது. அமெரிக்காவில் பரவலாக எழுந்த அரசியலெழுச்சியின் விளைவென இக்கட்சியினைக் குறிப்பிடலாம். அமெரிக்காவில் அடிமை முறையினை ஒழிப்பதற்காக இக்கட்சி அயராது பாடுபட்டது. அதேவேளை சமஷ்டிப் பண்புகளைப் பேணிப் பாதுகாப்பதிலும் அக்கறை செலுத்தியது. மாநிலவரசுகளின் உரிமைகளை இது தொடர்ச்சியாக ஆதரித்து வந்த அதேவேளை அரசியல் யாப்பு வாதத்தையும் ஆதரித்து நின்றது.

மக்களுக்கான சுதந்திரத்தில் அரசாங்கத்தின் தலையீட்டை மிகக் குறைந்தளவே இக்கட்சி அனுமதித்திருந்தது. அதாவது குறைந்தபட்ச அரசு என்ற நவீனக் கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தது. இதனடிப்படையில் அமெரிக்க முதலீட்டாளர்களுக்கும் ஆதரவளித்து வந்தது.

உருவாக்கும் நோக்குடனேயே தம்மிடையே காணப்படும் பல வேறுபாடுகளை மறந்து இக்கட்சி தோற்றம் பெற்றது. விவசாயிகளினதும், தென் மாநிலங்களினதும், கிராமப்புறங்களினதும் தலைவரான தோமஸ் ஜெபர்சனும் தொழிலாளர்களை உள்ளடக்கிய வடபகுதியின் தலைவரான ஆர்.என். வர் என்பவரும் இணைந்தே இக்கட்சியினை உருவாக்கினர். 1830களிலிருந்து மறுபிறப்பெடுத்த இக்கட்சி அமெரிக்க வரலாற்றில் மிகவும் பலம் வாய்ந்த கட்சியாக தொடர்ந்தும் இருந்து வருகிறது.

அரசியல் யாப்பின் அடிப்படை விதிகளை இலகுவாக மக்களையேற்கச் செய்தமை, யாப்பு வழங்கும் அதிகாரங்களை மிக நல்ல முறையில் பயன்படுத்தியமை, அமெரிக்க அரசியல் வாழ்வில் பிரபல்யவாதம் என்பதை சேர்த்துக் கொண்டமை, மாநிலங்கள் பிரிந்து போவதற்கெதிராக தொடர்ச்சியாகப் போராடியமை, உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னர் வடக்கையும், தெற்கையும் திரும்பவும் ஒன்று சேர்த்தமை, அமெரிக்கத் தேசிய உணர்வினை கூர்மையடையச் செய்தமை, அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தவர்களை அமெரிக்கர்களாக்கியமை, அமெரிக்காவின் இராஜதந்திரம் என்கிற விடயத்தை உலகில் வலுவாக அடையாளப் படுத்தியமை போன்றன இக்கட்சியின் சாதனைகளாகும்.

## மதிப்பீடு

### நன்மைகள்

(1) அமெரிக்காவின் அரசியற் கட்சிகள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒரே கருத்துடையனவாக விளங்குகின்றன.

(2) கட்சியின் உள்ளூர் மட்டப் பிரிவுகள் மிகவும் செல்வாக்குடையனவாக இருப்பதோடு உள்ளூர் மட்டத் தலைவர்களும் செல்வாக்குடையவர்களாக விளங்குகின்றனர்.

(3) கட்சிக் கட்டுப்பாடு அதிகமில்லாததனால் கட்சி உறுப்பினர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடிகின்றது.

(4) பிரதான கட்சிகளின் கொள்கைகளுக்கிடையே பெரிய வேறுபாடுகள் காணப்படாததனால் கட்சிகளுக்கிடையேயான பகைமையுணர்வு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

(5) ஜனபதிபதி வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் உள்ளூர் மட்டப் பிரதிநிதிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றனர்.

(6) கட்சிக்குள் ஜனநாயகப் பரவலாக்கம் சிறப்பாகச் செயல்படுகின்றது.

### குறைபாடுகள்

(1) தேசிய ரீதியான முடிவுகளை எடுக்கும்போது உள்ளூர் மட்டப் பிரிவுகள் அதிகளவில் தலையிடப் பார்க்கின்றன.



### குறைபாடுகள்

(1) தேசிய ரீதியான முடிவுகளை எடுக்கும்போது உள்ளூர் மட்டப் பிரிவுகள் அதிகளவில் தலையிடப் பார்க்கின்றன.

(2) கட்சிக் கட்டுப்பாடு இல்லாததனால் பல முக்கியமான விடயங்களில் கட்சித் தலைமையின் தீர்மானங்களுக்கெதிராகவும் உறுப்பினர்கள் தொழிற்படுகின்றனர்.

(3) கட்சியின் மேல்மட்டத்துக்கும், கீழ்மட்டத்துக்குமிடையே உண்மையான இணைப்பு காணப்படுவதில்லை. இதனால் மேல்மட்டம் எடுக்கும் முடிவுகளை பொருட்படுத்தாமலிருக்கின்ற நிலையும் கீழ்மட்டத்திலுண்டு.

(4) கட்சிகளுக்கு உறுதியான, வலுவான கொள்கைகள் என்பது இருப்பதில்லை. கொள்கைகள் தொடர்பான அனைத்து உறுப்பினர் களுக்கிடையேயும் ஒருமைப்பாடும் இருப்பதில்லை.

(5) தேர்தல் காலங்களில் மட்டும் கட்சிகள் சுறுசுறுப்புடன் செயற்படுகின்றன. ஏனையகாலங்களில் கட்சிகளிருக்கின்றன என்பதை அடையாளங் காண்பதே கடினமாகவுள்ளது.

# 7 அமெரிக்க அழுக்கக் குழுக்கள்

அரசாங்க செயல்முறையில் மறைமுகமான செல்வாக்கு செலுத்தும் குழுக்களே அழுக்கக் குழுக்கள் என அழைக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்கள், மதநிறுவனங்கள், வெகுஜன அமைப்புக்கள், வணிகர் சங்கங்கள், சிறுபான்மையோர் குழுக்கள் போன்றன அழுக்கக் குழுக்களுக்கு உதாரணங்களாக கொள்ளப் படுகின்றன.

அமெரிக்காவில் பெரியதும், சிறியதுமாக 500க்கு மேற்பட்ட அழுக்கக் குழுக்கள் செயற்படுகின்றன. தேசிய மட்டத்திலும் மாநில, உள்ளூராட்சி மட்டங்களிலும் இவை செயற்படுகின்றன. அமெரிக்காவில் இயங்கும் அழுக்கக் குழு முறை இயற்கையான வகையில் வளர்ந்ததொன்றாகும்.

அழுக்கக் குழு முறையின் இயல்புகள்

1) பெரும்பாலான அழுக்கக் குழுக்கள் சுயசார்புத் தன்மையோடு செயற்படுகின்றன.

2) கட்டுப்பாட்டில் வைக்க முடியாத அளவிற்கு வலுவானவையாக விளங்குகின்றன.

3) அரசியற் கட்சிகளின் செயற்பாடுகள் பலவும் இக்குழுக்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

4) அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு செயற்படுவதால் இவ் அமுக்கக் குழுக்கள் ஆட்சித்துறையில் எல்லா மையங்கள் மீதும் கவனத்தை செலுத்தி வருகின்றன. எனினும் ஜனாதிபதி முறை அமுலில் இருப்பதனால் ஜனாதிபதியை கட்டுப்படுத்துவதிலேயே இவை அதிக அக்கறை செலுத்தி வருகின்றன. ஜனாதிபதியின் மீது அதிருப்தி அடையும் சந்தர்ப்பங்களில்தான் காங்கிரஸ் மீது தங்களினுடைய ஆதிக்கத்தை செலுத்த முயல்கின்றன. இதுவும் முடியாவிட்டால் நீதித்துறை அதிகாரிகளை தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயல்கின்றன.

5) தங்களினுடைய செல்வாக்கினை செலுத்துவதற்கு ஆதரவு திரட்டும் உத்தியை பயன்படுத்துகின்றன.

## அமெரிக்காவில் தொழிற்படும் அமுக்கக் குழுக்களின் வகைகள்

அமெரிக்காவில் பல அமுக்கக் குழுக்கள் தொழிற்படுவதால் அவற்றை வகைப்படுத்தி விளக்குவது கடினமானதாகும். ஆனாலும் வணிகர் குழுக்கள் பண்ணையாட்கள் மற்றும் தொழிலாளர் குழுக்கள், பணியாளர் குழுக்கள், கருத்தாளர் குழுக்கள், சிறுபான்மையோர் குழுக்கள் போன்ற 5 குழுக்கள் முக்கியமானவையாக விளங்குகின்றன.

### வணிகர் குழுக்கள்

வணிகர் குழுக்கள் அமெரிக்காவில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள குழுக்களாகும். இவற்றிடம் போதியளவு ஆட்பலமும், பணபலமும் இருக்கின்றன. அமெரிக்க வணிகர் சங்கமும் தேசியப் பொருள் உற்பத்தியாளர் கழகமும் இவற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### தொழிற் சங்கங்கள்

வணிகர் குழுக்களுக்கு அடுத்தபடியாக தொழிற்சங்கங்கள் முக்கியமான அமுக்கக் குழுக்களாக செயற்படுகின்றன. அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பும், தொழில் அமைப்புக்களின் காங்கிரஸ் மன்றமும் இவற்றுள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இவை இரண்டையும் விட சிறிதும், பெரிதுமாக தொழிற்படுகின்ற பல தொழிற்சங்கங்களும் இருக்கின்றன.



### பணியாளர் குழுக்கள்

பணியாளர் குழுக்களைப் பொறுத்தவரை வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், கட்டிடம் கட்டுபவர்கள் முக்கியமான குழுக்களாக உள்ளனர். இவர்கள் தங்களினுடைய நலன்களை பேணுவதற்காக தங்களுக்கான பணியாளர் அமைப்புக்களை உருவாக்கியுள்ளனர். அமெரிக்க மருத்துவக் கழகமும், அமெரிக்க வழக்கறிஞர் கழகமும் இவற்றிற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

### கருத்தாளர் குழுக்கள்

கருத்தாளர் குழுக்கள் என்பன கொள்கை அடிப்படையில் செயற்படுகின்ற குழுக்களாகும். இதன் உறுப்பினர்கள் தங்களினுடைய நம்பிக்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் ஏற்ப அமைப்புக்களை உருவாக்கி செயற்படுகின்றனர். குடியாட்சி நடவடிக்கைக்கான அமெரிக்க நிறுவனம், அமெரிக்க சிவில் உரிமைகளின் கழகம் போன்றவற்றினை இவற்றிற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

### சிறுபான்மையோர் குழுக்கள்

சிறுபான்மையோர் குழுக்களை அமெரிக்காவில் வாழ்கின்ற சிறுபான்மையினத்தவர்கள் அமைத்துக் கொள்கின்றனர். கறுப்பின மக்களும், யூதயின மக்களும் இவர்களில் முக்கியமானவர்களாவர். தங்கள் சமூகத்தினுடைய நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டே இவ்வாறான குழுக்களை அமைத்து இவர்கள் செயற்படுகின்றனர். இந்தச் சிறுபான்மைக் குழுக்கள் தங்கள் சமூகத்தின் நலன்களை பேணுவதற்கு பல்வேறு செயல்முறைகளைக் கையாளுகின்றனர். மத்திய சட்டமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் இவர்கள் தங்கள் சமூகத்தின் சார்பில் பிரதிநிதிகளை அனுப்புகின்றனர். தங்களினுடைய பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க முடியாத பிரதேசங்களில் தங்களுடைய ஆதரவாளர்களை தேர்ந்தெடுத்து அனுப்புகின்றனர். இதைவிட தொடர்புசாதனங்களின் மூலமாகவும், தங்கள் சமூகங்களின் அபிலாஷைகளை பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

### நன்மைகள்

(1) அமெரிக்க அரசாங்கமுறையில் அமுக்கக் குழுக்கள் பிரதான இடத்தை வகிப்பதனால் அக் குழுக்கள் சார்ந்த மக்களின் நலன்களை பேணக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

(2) அமெரிக்க அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையினையும், வெளிநாட்டுக் கொள்கையினையும் மாற்றக்கூடிய அளவிற்கு இக்குழுக்கள் செல்வாக்கு வாய்ந்தவையாக விளங்குகின்றன.

(3) சிறுபான்மையின மக்கள் தங்களுக்காக குழுக்களை அமைத்துக் கொண்டமை அவர்களின் பிரச்சினைகள் அரசியல் அரங்குகளில்

பேசப்படுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியது. உதாரணமாக, கறுப்பின மக்கள் தங்களினுடைய அமைப்பின் சார்பில் பல போராட்டங் களை நடாத்தி வெற்றியும் கண்டுள்ளனர்.

(4) அரசாங்கம் சிறப்பாக செயற்படுவதற்கு நல்ல பல ஆலோசனை-களையும் இவ் அமுக்கக் குழுக்கள் முன்வைக்கின்றன.

## குறைபாடுகள்

(1) அமுக்கக் குழுக்கள் செல்வாக்குடையனவாக விளங்குவதனால் தீர்மானங்களை எடுப்பதில் இவை தடங்கல்களை ஏற்படுத்துகின்றன.

(2) உயர்வர்க்கத்தினரின் குழுக்கள் பலமுடையனவாக இருப்பதனால் அடிநிலை மக்களின் குழுக்கள் செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றன.

(3) கறுப்பினமக்களினுடைய அபிலாசைகள் அமெரிக்க அரசாங்க முறையில் போதியளவு கவனத்தில் எடுக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றது.

(4) இவ் அமுக்கக் குழுக்கள் அமெரிக்காவின் நலன்களில் அக்கறை செலுத்தியதே தவிர அமெரிக்காவினால் பாதிக்கப்படுகின்ற ஏனைய நாடுகளின் நலன்களில் அக்கறை செலுத்துவதாக இருக்க வில்லை.



# அமெரிக்க அரசியலமைப்புத் திருத்தங்கள்

I முதல் X வரையிலான திருத்தங்கள் அடிப்படை உரிமைகள் பற்றியது இவை செப்டம்பர்-25, 1789-ல் காங்கிரஸ் நிறைவேற்றியது. அவற்றை டிசம்பர்-15, 1791- ல் நான்கில் மூன்று பங்கு மாநிலங்கள் ஏற்றன. பிற திருத்தங்கள்:

| அரசியல்ச /தி எண் | ஏற்பு நாள் | விபரம் |
|---|---|---|
| 11 | ஜனவரி-8,1798 | மாநிலங்களின் சட்டங்கள், நாட்டின் சட்டங்கள் அல்ல |
| 12 | செப்-25,1804 | குடியரசுத்தலைவர் மற்றும் குடியரசு துணைத்தலை வரைத் தேர்ந்தெடுக்க தனித்தனி வாக்கு. |
| 13 | டிசம்பர்-18,1865 | அடிமை முறை, கொத்தடிமை நீக்கம். |
| 14 | ஜூலை-23, 1868 | நாட்டில் பிறந்த எல்லோரும் குடிமக்களே,அவர்களது உரிமைகளை யாரும் தடுக்க முடியாது. |
| 15 | மார்ச்-30, 1870 | இனம், நிறம், அடிமை முறை ஆகியவற்றால் குடிமக்களின் வாக்குரிமை மறுக்கப்படாது. |
| 16 | பிப்ரவரி-25,1913 | வரி நிர்ணயம் மற்றும் வசூல் செய்ய காங்கிரசுக்கு உரிமை |
| 17 | மே-31, 1913 | செனட் உறுப்பினர்கள் தேர்தல் மற்றும் பதவிக்காலம் பற்றியது. |
| 18 | ஜனவரி-29, 1919 | போதைப் பொருள் உற்பத்தி, விற்பனை மறறும் கொண்டு செல்லல் தடை. |
| 19 | ஆகஸ்ட்-26,1920 | பால் (sex) அடிப்படையில் வாக்குரிமை மறுக்கப்படாது (பெண்களுக்கு வாக்குரிமை) |
| 20 | ஜனவரி-23, 1933 | குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், செனற்றர்கள் பதவிக் காலம் பற்றியது. |
| 21 | டிசம்பர்-5, 1933 | மதுவிலக்கு பற்றிய சட்டத்திருத்தம் XVIII ரத்து |
| 22 | பிப்ரவரி-26, 1951 | ஒருவர் குடியரசுத்தலைவராக இரு பதவிக் காலங்கள் மட்டுமே இருக்கலாம். |

| | | |
|---|---|---|
| 23 | மார்ச்-29, 1961 | மாநிலங்களின் செனட்டர்கள், பரதிநிதிகள் அவை உறுப்பினர் எண்ணிக்கை நிர்ணயம் |
| 24 | ஜனவரி-23, 1964 | குடியரசுத்தலைவர் இறந்தால் துணைத்தலைவர், முழு அதிகாரம் பெற்ற குடியரசுத்தலைவர் ஆவார். |
| 25 | பிப்ரவரி-10, 1967 | குடியரசுத்தலைவர் இறந்தால் துணைத்தலைவர், முழு அதிகாரம் பெற்ற குடியரசுத்தலைவர் ஆவார். |
| 26 | ஜுலை-7, 1971 | பதினெட்டு வயது நிறைந்த அனைவருக்கும் வாக்குரிமை |
| 27 | மே-7, 1992 | செனட்டர்கள் மற்றும் பிரதிநிதிகள் அவை உறுப்பினர்கு ஊதிய உயர்வு |

# 3

# இங்கிலாந்தின் அரசாங்க முறை

2,44 108, சதுர கி.மீ. நிலப்பரப்பினையும் 56, 643,000 மக்கள் தொகையையும் கொண்ட இங்கிலாந்து லண்டன், ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து எனும் நான்கு முக்கிய பிரதேசங்களைக் கொண்டுள்ளது. இங்கு வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கில மொழியினைப் பேசுபவர்களாகவே விளங்குகின்றனர்.

இங்கிலாந்து அரசாங்க முறையானது மரபுரீதியாக வளர்ச்சியடைந்து வந்த ஓர் அரசாங்க முறையாகும். ஒவ்வொரு காலகட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் வாயிலாக தற்போதுள்ள அரசாங்கமுறை உருவாகி உள்ளது. எழுதப்படாத அரசியல் யாப்பு நடைமுறையில் இருக்கின்ற அதேவேளை, அரசியல் யாப்பில் காணப்படுகின்ற பல விடயங்கள் மரபு ரீதியாக வளர்ச்சியடைந்து வந்தவையாகும்.

## இங்கிலாந்து அரசியல் யாப்பின் சிறப்பியல்புகள்

### 1. எழுதப்படாத அரசியல் யாப்பு

உலகிலேயே எழுதப்படாத அரசியல் யாப்பு இங்கிலாந்தின் அரசியல் யாப்பாகும். இவ் யாப்பின் பெரும்பகுதி எழுதப்படாத மரபுகளால் ஆனது. பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சில சட்டங்களும் பல்வேறு காலகட்டங்களில் கைச்சாத்திடப்பட்ட சில உடன்படிக்கைகளும் மட்டுமே எழுத்து வடிவில் காணப்படுகின்றன.

## 2. ஒற்றையாட்சி அரசு

நாடு முழுவதற்கும் ஒரே ஒரு அரசாங்கம் காணப்படுமாயின், அதாவது அதிகாரங்கள் அனைத்தும் ஒரே ஒரு அரசாங்கத்திடம் மாத்திரம் வழங்கப் பட்டிருப்பின் அது ஒற்றை ஆட்சி அரசு எனப்படும். இங்கிலாந்து ஓர் ஒற்றையாட்சி அரசாகும். அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்கின்ற பிராந்திய அரசாங்கங்கள் அங்கு கிடையாது. மாநகராட்சி, நகராட்சி போன்ற உள்ளூராட்சி மன்றங்கள் மட்டுமே அங்குள்ளன. அதுவும் மத்தியரசிற்குக் கட்டுப்பட்டதாகும்.

## 3. பாராளுமன்ற முறை அரசாங்கம்

நிர்வாகத்துறையானது சட்டத்துறையில் இருந்து உருவானதாகவும், சட்டத்துறைக்குப் பொறுப்புச் சொல்லக் கூடியதாகவும் இருப்பின் அவ் அரசாங்க முறை பாராளுமன்ற அரசாங்க முறை எனப்படும். இங்கிலாந்தின் அரசாங்க முறை ஒரு பாராளுமன்ற அரசாங்கமுறை ஆகும். பாராளுமன்ற அரசாங்கமுறையை உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடும் இதுவேயாகும். நிர்வாகத் துறையின் அதிகாரங்கள் மந்திரிசபையிடம் ஒப்படைக்கப்பட்டாலும் மந்திரிசபை பாராளுமன்றத்தில் இருந்து உருவாவதாகவும் அதற்குப் பொறுப்பு சொல்ல வேண்டியதாகவும் இருக்கின்றது. நிர்வாகத்துறையான மந்திரிசபையும், சட்டத்துறை யான பாராளுமன்றமும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படுகின்றன.

## 4. நெகிழும் அரசியல் யாப்பு


இலகுவாக மாற்றக்கூடிய அல்லது திருத்தக்கூடியஅரசியல் யாப்புகளே நெகிழும் அரசியல் யாப்புகள் என அழைக்கப்படுகின்றன. அதாவது, சாதாரண சட்டத்தை இயற்றுவது போல் அரசியல் யாப்புச் சட்டத்தினையும் இயற்றக்கூடியதாக இருக்குமாயின் அது நெகிழும் அரசியல் யாப்பு எனப்படும். இங்கிலாந்தின் அரசியல் யாப்பு ஒரு நெகிழும் யாப்பாகும். அங்கு சாதாரண சட்டத்தை திருத்துவது மாற்றுவது போன்று அரசியல் யாப்பினையும் திருத்தவும் மாற்றவும் முடியும்.

## 5. அரசியல் சட்டபூர்வ முடியாட்சி அல்லது வரையறுக்கப்பட்ட முடியாட்சி

ஆரம்ப காலங்களில் முழுமையான முடியாட்சி காணப்பட்டது. அரசின் தலைவரான அரசன் அல்லது அரசி சகல அதிகாரங்களையும் கொண்டிருந்தனர். பின்னர் மக்கள் நடாத்திய போராட்டங்கள் வாயிலாக முடியினது அதிகாரங்கள் குறைக்கப்பட்டு தற்போது அது பெயரளவு நிர்வாகியாக உள்ளது. அரசன் அல்லது அரசி பெயரளவு தலைவராகத் திகழ்கின்றார்.



**United Kingdom of Great Britan and Northern Ireland**




| | | |
|---|---|---|
| மக்கள் தொகை | : | 6,04,41,457 |
| தலைநகர் | : | இலண்டன் |
| மொழி | : | ஆங்கிலம், வேல்ஸ், ஸ்கொட்ஸ், கேலிக் |
| சமயம் | : | கிறிஸ்தவம், |
| ஜனாதிபதி | : | மகராணி இரண்டாம் எலிசபத் |
| பிரதமர் | : | டொனி பிளேயர் |
| அரசு | : | இரு சட்ட சபைகளைக் கொண்ட வரம்புடை முடியாட்சி |
| நாணயம் | : | ஸ்ரேலிங் பவுன் |
| பொருளாதாரம் | : | விவசாயம், கைத்தொழில், மின்னுப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி |

## 6. இறைமை படைத்த பாராளுமன்றம்

நாட்டுக்குத் தேவையான எத்தகைய சட்டத்தையும் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாமல் இயற்றக்கூடிய அதிகாரம் சட்டத்துறைக்கு இருக்குமாயின் அது இறைமை படைத்த சட்டசபை எனப்படும். இங்கிலாந்தின் பாராளுமன்றம் ஓர் இறைமை படைத்த சட்ட சபையாகும். அதன் அதிகாரங்கள் வரம்பற்றவை. சட்டசபை இயற்றும் சட்டங்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்யும் நீதிப்புனராய்வு அதிகாரமும் அங்குள்ள நீதிமன்றங்களுக்கு கிடையாது. எனினும் பொதுசன அபிப்பிராயத்திற்கு கட்டுப்பட்டது.

சட்டங்களுக்கு கையொப்பமிடும் உரிமை முடிக்கு இருந்தபோதும் ஒருபோதும் சட்டங்களுக்கு கையொப்பமிட மறுப்பதில்லை.

## 7. சட்டத்தின் ஆட்சி

இங்கிலாந்தின் நீதித்துறை சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. சட்ட ஆட்சியின் பிரதான பண்புகளான : சட்டம் மேலானதும் முதன்மையானதும் ஆக இருத்தல், சட்டத்தின் முன் யாவரும் சமன், சட்டத்தின் மூலம் மக்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுதல் எனும் மூன்று பண்புகளும் இங்கிலாந்தில் ஒழுங்காகப் பின்பற்றப்படுகின்றன. இதன் மூலம் மக்களின் உரிமைகளும், சுதந்திரங்களும் பாதுகாக்கப்படுகிறன.

## 8. மரபுகள்

இங்கிலாந்தின் அரசியல் யாப்பில் மரபுகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இங்கு மரபுகள் என்பது காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த அரசியல் வழக்கங்களாகும். இங்கிலாந்து யாப்பின் மரபுகள் முடிபற்றிய மரபுகள், அமைச்சரவை பற்றிய மரபுகள் பாராளுமன்றம் பற்றிய மரபுகள் எனப் பலவாறாகக் காணப்படுகினறன.

## 9. இருகட்சி முறைமை

இங்கிலாந்தில் இருகட்சி முறை பின்பற்றப்படுகின்றது. அதாவது பல கட்சிகள் நடைமுறையிலிருந்த போதும் இரு கட்சிகள் மட்டும் மாறி மாறி அரசாங்கத்தை அமைக்கக் கூடிய நிலை இருப்பின் அது இருகட்சி முறை அரசாங்கம் எனப்படுகின்றது. இங்கிலாந்தில் கன்சவேர்டிவ் கட்சி பழைமை பேணும் கட்சி Conservative party) தொழிற் கட்சி (labour party), தாராண்மைக் கட்சி (Liberal party) சோசலிச கட்சி எனப் பல கட்சிகள் நடைமுறையில் செயற்படுகின்ற போதும் கன்சவேர்டிவ் கட்சியும், தொழிற் கட்சியும் மாத்திரமே ஆட்சி அமைக்கக்கூடிய செல்வாக்குடைய கட்சிகளாக விளங்குகின்றன.



# அரசியல் யாப்பின் மூலங்கள்

இங்கிலாந்தின் அரசியல் யாப்பில் பின்வருவன மூலங்களாக விளங்குகின்றன.

## 1. சாசனங்கள்/ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகள்

இங்கிலாந்தின் ஆரம்ப காலங்களில் ஆட்சி தொடர்பாக முடியே முழுமையான அதிகாரங்களைக் கொண்டிருந்தது. நாட்டின் சட்ட, நிர்வாக, நீதி அதிகாரங்கள் அனைத்தும் முடியிடமே இருந்தன. பின்னர் அதிகாரங்கள் மக்களுக்கும் பங்கிடப்படவேண்டும் எனக் கோரி மக்கள் பல அதிகாரங்களை சாசனங்கள் /ஒப்பந்தங்கள்/உடன்படிக்கைகள் மூலமாகப் பெற்றனர். இவை அரசியல் யாப்பின் மூலங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றுள் / மகாசாசனம் (1215) உரிமை மனு (1628) அரசுரிமை நிர்ணயச் சட்டம் (1701) ஸ்கொட்லாந்து ஐக்கியச் சட்டம் (1707) அயர்லாந்து ஐக்கியச் சட்டம் (1800) உரிமை மசோதா (1689) என்பன முக்கியமானவையாகும்.

## 2. பாராளுமன்றச் சட்டங்கள்

பாராளுமன்றச் சீர்த்திருத்தச் சட்டங்கள் (1832, 1867,1884,1918,1928) 1911,1949 ஆண்டு பாராளுமன்றச் சட்டங்கள் போன்று அவ்வப் போது இயற்றப்பட்ட சட்டங்கள் அரசியல் யாப்பின் பகுதிகளாக கொள்ளப்படுகின்றன.

## 3. நீதிமன்றத் தீர்ப்புக்கள்

இங்கிலாந்து நீதிபதிகள் பல வழக்குகளில் சாசனங்களுக்கும், சட்டங்களுக்கும் பொது சட்டத்திற்கும் விளக்கங்களை கொடுத்துள்ளனர். பின்னர் இவ் விளக்கங்களுக்கும் இவை தொடர்பான தீர்ப்புகளும் அரசியல் யாப்பின் பகுதிகளாக மாறின. இதனால் இங்கிலாந்தின் அரசியல் யாப்பு நீதிபதிகளினால் உருவாக்கப்பட்டது எனக் கூறப்படுவதும் உண்டு.

## 4. பொதுச்சட்டம்

இங்கிலாந்தின் பொதுச்சட்டமும் அரசியல் யாப்பின் மூலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இப் பொதுச் சட்டம் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஒன்றல்ல; காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த பழக்க வழக்கங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

பாராளுமன்றத்தினால் இயற்றப்படாத சட்டமாக இருந்தாலும் அவற்றுக்கு சமனாகவே இவையும் கருதப்படுகின்றன.

இப்பொதுச் சட்டத்தின் ஊடாகவே / மன்னரின் சிறப்புரிமைகள். மக்களின் பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை / போன்றன உருவாக்கப்பட்டன.

## 5. மரபுகள் (conventions)

உலகில் எல்லா அரசியல் யாப்புகளிலும் மரபுகள் மூலங்களாக உள்ளன. ஆனால் இங்கிலாந்தில் மரபுகளே அரசியல் யாப்பின் முக்கிய பகுதிகளாக உள்ளன. அரசியல் யாப்பின் எழுதப்படாத நீதிமொழிகளாக இவை வர்ணிக்கப்படுகின்றன. மரபுகளின் வாயிலாகவே இங்கிலாந்தின் அரசியல் யாப்பும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

## இங்கிலாந்தில் மரபுகள்

இங்கிலாந்தில் பின்பற்றப்படும் மரபுகள் பின்வரும் 3 வகையாக காணப்படுகின்றன.

(1) அமைச்சரவையுடன் தொடர்புடைய மரபுகள்

(2) முடியுடன் தொடர்புடைய மரபுகள்

(3) பாராளுமன்றத்துடன் தொடர்புடைய மரபுகள்

### அமைச்சர் குழுவுடன் தொடர்புடைய மரபுகள்

(1) பொதுமக்கள் சபையில் அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படின் அமைச்சரவை பதவி விலக வேண்டும்.

(2) அரசாங்க மசோதாக்கள் பொதுமக்கள் சபையில் தோற்கடிக்கப்பட்டால் அமைச்சரவை பதவி விலகுதல் வேண்டும்.

(3) பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சியின் தலைவரையே பிரதமராக முடி நியமித்தல் வேண்டும்.

(4) அமைச்சரவையின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் இரு சபைகளால் ஏதாவது ஒன்றில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

(5) முக்கியமான கொள்கை முடிவுகளை அமைச்சரவையே முடிவு செய்யும்.

### முடியுடன் தொடர்புடைய மரபுகள்

(1) பாராளுமன்றம் இயற்றுகின்ற மசோதாக்கள் அரசரின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே சட்டமாக அமுலுக்கு வரும்.

(2) பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எந்த மசோதாவிற்கும் அரசர் ஒப்புதல் வழங்க மறுப்பதில்லை.



(3) அமைச்சரவையின் ஆலோசனைப்படி பொதுமக்கள் சபையை அரசர் கலைக்கின்றார்.

(4) அமைச்சரவை தயாரிக்கும் சிம்மாசன பிரசங்கத்தை ஆண்டுதோறும் lவது பாராளுமன்ற கூட்டத்தில் அரசர் வாசிக்கின்றார்.

### பாராளுமன்றத்துடன் தொடர்புடைய மரபுகள்

(1) நிதி மசோதாக்கள் முதலில் பொதுமக்கள் சபையிலேயே அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

(2) ஆளுங்கட்சி வரிசையில் ஒருவர் பேசியதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர் பேசுதல் வேண்டும்.

(3) சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் தனது கட்சி உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்தல் வேண்டும்.

(4) பதவிக்காலம் முடிவடையும்போது, சபாநாயகருக்கு மீண்டும் அப்பதவிக்கு வரும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

(5) பிரபுக்கள் சபை உயர்நீதிமன்றமாக தொழிற்படும்போது சட்டப்பிரபுக்கள் மட்டுமே அங்கு வருகை தருதல் வேண்டும்.

## இங்கிலாந்து அரசாங்க முறையின் முக்கிய அம்சங்கள்

(1) முடி அல்லது அரசர்

(2) பாராளுமன்றம்

(3) அமைச்சசரவை

(4) இங்கிலாந்தின் நீதித்துறை

(5) இங்கிலாந்தின் அரசியற் கட்சிமுறை

## 1. முடி அல்லது அரசர்

இங்கிலாந்து அரசியல் யாப்பின் அரசின் தலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும் விளங்குபவர் முடி ஆவார். இவர் பரம்பரையாக நியமிக்கப் படுகின்றார். மன்னர் குடும்பத்தின் மூத்த வாரிசே இவ்வாறு முடியாக நியமிக்கப் படுகின்றார். முடியின் பதவிக்காலம் என்பது வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. வாழ் நாள் முழுவதும் பதவி வகிக்கக் கூடியவராக அவர் விளங்குகின்றார்.

## முடியின் சிறப்புரிமைகள்

(1) முடி சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் ஆவார். எக்குற்றத்திற்காகவும் அவர் மீது வழக்குத் தொடர முடியாது.

(2) அவருடைய சொத்துக்களில் எவற்றையும் எக்காரணத்தைக் கொண்டும் அரசாங்கம் பறிமுதல் செய்ய முடியாது.

(3) அதிகமான சொத்துக்களை அவர் கொண்டிருந்தாலும் அரசாங்கம் வருடாவருடம் அவருக்கு மானியம் வழங்குகின்றது.

(4) அரசாங்கம் அதன் நிறுவனங்கள் அனைத்தும் முடியின் பெயரினாலேயே அழைக்கப்படுகின்றன.

(5) நாட்டில் வழங்கப்படும் அனைத்து கௌரவப்பட்டங்களும், விருதுகளும் முடியின் பெயரினாலேயே வழங்கப்படும்.

(6) இங்கிலாந்து திருச்சபையின் தலைவராகவும் முடியே விளங்குகின்றார்.

## முடியின் அதிகாரங்கள்

### அ) சட்டத்துறை தொடர்பானவை

(1) பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்தி வைத்தல்,

(2) பாராளுமன்றத்தின் இரு சபைகளினதும் கூட்டுக் கூட்டத்தில் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தல்.

(3) பிரபுக்கள் சபையின் உறுப்பினர்களை நியமித்தல்.

(4) பாராளுமன்றத்தினால் உருவாக்கப்படும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்.

(5) நிர்வாகத்துறைச் செயற்பாடுகளில் சபை வாயிலான ஆணைகளைப் பிறப்பித்தல்.

### ஆ) நிர்வாகத்துறை தொடர்பானவை

(1) நிர்வாகத்துறையான அமைச்சரவையில் பிரதமரை (தலைவர்) நியமித்தல்.

(2) பிரதமரின் ஆலோசனையின் பெயரில் ஏனைய அமைச்சர்களை நியமித்தல்.

(3) அமைச்சர்களுக்கான அமைச்சுக்களை ஒதுக்குதல், மாற்றுதல்.



(4) அமைச்சர்களை மாற்றுதல், நீக்குதல்.

(5) முப்படைத் தளபதிகளை நியமித்தல்.

(6) வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தல்.

(7) அரச உயர் அதிகாரிகளை நியமித்தல்.

(8) நாட்டின் பொது இலச்சினையை வைத்திருத்தல்.

(9) அரசாங்கத்தின் சடங்கு முறையான இருக்கைகளுக்குத் தலைமை தாங்குதல்.

(10) போர்ப் பிரகடனங்கள் செய்தல்.

(11) சமாதானம் செய்தல்.

### இ) நீதித்துறை தொடர்பானவை

(1) உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்.

(2) குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கல், தண்டனையைக் குறைத்தல் போன்றன முடியின் நீதித்துறை தொடர்பான அதிகாரங்களாகும்.

(3). நீதியின் உறைவிடமாக இருத்தல்

இவ்வதிகாரங்களைத் தவிர, இங்கிலாந்து திருச்சபையின் தலைவராக முடியே விளங்குகின்றார். அதன் அடிப்படையில் பேராயர் (Archbishop) ஆயர்கள் ஆகியோரை முடியே நியமிக்கின்றார். திருச்சபை நிறைவேற்றும் தீர்மானங்கள் எல்லாவற்றிற்கும் முடியின் சம்மதம் அவசியமானதாகும்.

மேற்கூறியவாறு சட்ட, நிர்வாக, நீதித் துறைகளினால் முடி அதிகளவிலான அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும், இவ்வதிகாரங்கள் எவற்றையும் அவர் தன்னிச்சையாக செயற்படுத்த முடியாது. பிரதமரின் ஆலோசனையின் பெயரிலேயே செயற்படுத்த வேண்டும். அதனாலேயே இவர் பெயரளவு நிர்வாகி அல்லது நாம நிர்வாகி என அழைக்கப்படுகின்றார்.

முடிநாம நிர்வாகியாக தொழிற்பட்டாலும் சில சந்தர்ப்பங்களில் உண்மை நிர்வாகியாகவும் தொழிற்படுகின்றார். அரசாங்க கட்சிகள் பெரும்பான்மையிழந்து பதவிநீங்கும் போது தன்னிச்சையாக முடிவெடுக்கும் அதிகாரம் முடிக்குண்டு. இச்சந்தர்ப்ப முடிவுகள் அரசியல் சார்பில்லாதவாறு எடுக்க வேண்டியது முடியின் கடமையாகும்.

அமைச்சர்களின் ஆலோசனைக்கமைய முடிவுசெய்யப்பட வேண்டியிருப் பினும் கலந்தாலோசிக் கப்படுதல், ஊக்கமளித்தல் எச்சரித்தல் போன்ற உரிமைகள் முடிக்கு உண்டு .

முடி அரசியலிலிருந்து விலகி நடு நாயகமாக மக்களின் நலனின் அடிப்படையில் செயற்படுவார். அதனால் இவரின் கருத்திற்கு எப்போதும் ஒரு மரியாதை உண்டு.

### முடி அல்லது அரசர் பதவியின் நன்மைகள்

(1) நாட்டின் பொதுக் குறியீடாக முடி விளங்குகின்றார்.

(2) முடி நீண்டகால அனுபவமுள்ளவராக விளங்குவது சிறந்த அரசியல் தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவுகின்றது.

(3) முடி அரசியலுக்கு அப்பாற்பட்டு இருப்பதனால் அரசியல் சிக்கல்களை பொது நோக்குடன் விரிந்தளவில் பார்க்க முடிகின்றது.

(4) முடி அரசியலில் மட்டுமல்லாது மதம், கலை, பண்பாடு, இலக்கியம் அறிவியல் ஆகிய பல பணிகளிலும், ஈடுபடுகின்றமை இவ்விடயங்களையும் பொதுக் கண்ணோட்டத்தில் பார்க்க உதவுகின்றது.

(5) அரசாங்கம் நடைமுறையில் இல்லாத போது ஆட்சியினை நடாத்த முடி உதவுகின்றது.

(6) பாராளுமன்ற அரசாங்க முறையின் பெயரளவுத் தலைவர் பதவியின் தேவையை நிறைவு செய்கின்றது.

### முடி அல்லது அரசர் பதவியின் குறைபாடுகள்

(1) பழைமை வாய்ந்த சிந்தனைகளுக்கு தொடர்ந்தும் முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது.

(2) அரசர் குடும்பத்தின் ஆடம்பரங்களுக்கென நாட்டு மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுகின்றது.

(3) அரசர் மக்களினால் தெரிவு செய்யப்படாமை மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு முரணாக உள்ளது.

(4) அரசர் சட்டத்திற்கு அப்பாற்பட்டவராக கருதப்படுவது சட்டவாட்சிக் கோட்பாட்டிற்கு முரணாக உள்ளது.

## 2. பாராளுமன்றம்

இங்கிலாந்து அரசியல் யாப்பில் சட்டவாக்கத்திற்குப் பொறுப்பான சபையாக பாராளுமன்றம் விளங்குகின்றது. இப்பாராளுமன்றம் பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபை என்கிற இரு சபைகளைக் கொண்டது. உருவாக்கப்படுகின்ற சட்டங்கள் அனைத்தும் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட பின்னரே பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டு முடியின் கையொப்பத்திற்கு அனுப்பப்படும். சபைக்கு மசோதாக்களைக் கொண்டு வரும் உரிமை இரு சபைகளுக்கும் இருந்த போதும், நிதி மசோதாவை பொதுமக்கள் சபையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். மேலும் நிதி மசோதாக்களை ஒரு மாதத்திற்கு மேலும், சாதாரண மசோதாக்களை ஒரு வருடத்திற்கு மேலும் பிரபுக்கள் சபை தாமதப்படுத்தி வைத்திருக்க முடியாது. இவ்வாறு தாமதப்படுத்தி வைத்திருப்பின் பிரபுக்கள் சபையின் சம்மதமில்லாமலே மீண்டும் ஒரு தடவை அம்மசோதாவை பொதுமக்கள் சபையில் நிறைவேற்றுவதன் மூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டு முடியின் கையொப்பத்திற்கு அனுப்பப்படும்.



### பொதுமக்கள் சபை

இது முதலாம் மன்றம், கீழ்ச்சபை எனவும் அழைக்கப்படுகின்றது. 659 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்கள் 5 வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் பொதுத்தேர்தல் மூலம் மக்களினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பொதுமக்கள் சபைக்கான தேர்தலில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வாக்களிக்கலாம். இதேவேளை 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேர்தலில் வேட்பாளர்களாக நிற்கலாம்.

பொதுமக்கள் சபையின் பதவிக்காலம் 5 வருடங்களாகும் இடைக்காலத்தில் பிரதமரின் ஆலோசனையின் பேரில் முடி பொது மக்கள் சபையைக் கலைக்கலாம். நெருக்கடி நிலைக் காலங்களில் பொதுமக்கள் சபையின் ஆயுட்காலத்தை முடி நீடிக்கலாம்.

### பொதுமக்கள் சபைக்குள்ள சிறப்புரிமைகள்

#### 1 கைது செய்யப்படாமலிருக்கக் கூடிய உரிமை

குற்றவியல் சம்பந்தமான வழக்குகளில் இவ்வுரிமை கிடையாது. சபையின் முன்னும் சபையின் குழுக்களின் முன்னும் சாட்சியமளிப்பவர்களுக்கு இவ்வுரிமை பயன்படுகின்றது.

#### 2 பேச்சுரிமை

ஆரம்பத்தில் மன்னரிடமிருந்து அங்கத்தவர்களை பாதுகாப்பதற்கு இது பயன்பட்டது. தற்போது சபையில் பேசும் விடயங்கள் தொடர்பாகவும், சபையினரால் விடுவிக்கப்படும் அறிக்கைகள் தொடர்பாகவும் இவ்வுரிமை பயன்படுகின்றது.

### 3 அரசரை அணுகும் முறை

அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் உரிமை இச்சபைக்கு உண்டு.

### 4 சபையை ஒழுங்கமைக்கும் உரிமை

சபை உறுப்பினர்களின் ஒழுக்கவிதிகளைத் தீர்மானிப்பதற்கும், சபைக்கு இழிவுண்டாக்கும் உறுப்பினர்களை தற்காலிகமாக நீக்கவும், வெளியகற்றவும் இச்சபைக்கு உரிமையுண்டு. சபையின் உரிமைகளை மீறுவோரை தண்டிக்கும் அதிகாரமும் உண்டு.

## அதிகாரங்கள்

### அ) சட்டத்துறை தொடர்பானவை

(1) பொதுமக்கள் சபையின் மிக முக்கியமான பணி சட்டங்களை உருவாக்குவதாகும். இது விடயத்தில் பொதுமக்கள் சபை முழுமையான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது எனலாம்.

(2) நிதி மசோதாக்களை இச்சபையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். நிதி விடயத்தில் முழுக் கட்டுப்பாட்டையும் இச்சபை கொண்டுள்ள-தெனலாம்.

(3) மசோதாக்களை அறிமுகப்படுத்தும் உரிமை இருசபைகளுக்கும் உள்ளபோதும், முக்கியமான மசோதாக்கள் அனைத்தும் இச்சபையிலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றன.

(4) பாராளுமன்ற அரசாங்க முறையில் முக்கிய பங்கு வகிக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் இச்சபையிலேயே இருக்கின்றார்.

### ஆ) நிர்வாகத்துறை தொடர்பானவை

(1) பாராளுமன்ற அரசாங்க முறையாக உள்ளமையினால் நிர்வாகத் துறையான அமைச்சரவை பொதுமக்கள் சபைக்குக் கட்டுப்பட்டதாகவும் பொறுப்புக் கூற வேண்டியதாகவும் உள்ளது. அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றையும் பொதுமக்கள் சபையில் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் அமைச்சரவையைப் பதவி நீக்கும் அதிகாரம் பொதுமக்கள் சபைக்கு உண்டு .

(2) பிரதமர் உட்பட பெரும்பான்மையான அமைச்சர்கள் இச்சபையிலிருந்தே நியமிக்கப்படுகின்றனர். அமைச்சரவையின் உறுப்பினர்களை



அவர்களது கருமம் தொடர்பாக கேள்வி கேட்டும் உரிமை இச்சபையின் உறுப்பினர்க்கு உண்டு.

(3) அவ்வாறு கேள்வி கேட்கும் போது அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமையும் அமைச்சர்களுக்கு உண்டு.

(4) நிர்வாகத்துறைக்குத் தேவையான நிதிகளை அங்கீகரிப்பதில் இச்சபை கூடுதலான அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றது.

### இ) நீதித்துறை தொடர்பானவை

1. நீதித்துறையைப் பொறுத்தவரை பிரபுக்கள் சபையை விடக் குறைவான அதிகாரங்களையே இச்சபை பெற்றுள்ளது. நீதிபதிகளைக் குற்ற விசாரணை மூலம் பதவிநீக்கும் விடயத்தில் இச்சபைக்கும் அதிகாரமுண்டு. அதற்கான தீர்மானம் இச்சபையிலும் நிறைவேற்றப்படல் வேண்டும்.

## பொது மக்கள் சபையின் குழுக்கள்

பொது மக்கள் சபைக்கு வருகின்ற மசோதாக்களை நுணுகி ஆராய்வதற்காக உருவாக்கப்பட்டவையே பொது மக்கள் சபையின் குழுக்கள் என அழைக்கப்படுகின்றன. இக்குழுக்கள் தான் இங்கிலாந்துப் பாராளுமன்றக் குழுக்களாகவும் கருதப்படுகின்றன.

பொதுமக்கள் சபையில் முக்கியமாக பின்வரும் ஐந்து வகையான குழுக்கள் காணப்படுகின்றன

(1) முழுச்சபைக்குழு (Commitee of the whole house )

(2) நிலைக்குழு (Standing Commitees)

(3) தேர்தெடுக்கப்பட்ட குழுக்கள் ( Select Commitees)

(4) இணைக்குழுக்கள் ( Joint Commitees)

(5) தனியார் சட்ட முன் வரைபுக் குழுக்கள் ( Private Bills Commitees)

### 1 முழுச்சபைக்குழு (Commitee of the whole house )

பொதுமக்கள் சபை முழுவதும் ஒரே குழுவாக அமரும் போது அது முழுச் சபைக்குழு என அழைக்கப்படுகின்றது. எந்த விடயத்தையும் இக்குழுவின் முன் கொண்டு வரலாம். ஆனால் பொதுவாக முக்கியத்துவம் வாய்ந்த மசோதாக்களை மட்டுமே இக்குழு பரிசீலிக்கின்றது. ஒரு மசோதா முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ இக்குழுவின் பரிசீலனைக்கு கொண்டு வரலாம். பொது மக்கள் சபையில் அரசாங்கத்துக்கு சீரான பெரும்பான்மை இல்லாவிடில் கருத்து

மாறுபாடுள்ள மசோதாக்கள் இக்குழுவின் பரிசீலனைக்கு கொண்டு வரப்படுகின்றன

**2 நிலைக்குழு** (Standing Commitees)

மசோதாக்களைப் பரிசீலித்து திருத்தியமைக்கும் குழுக்களே நிலைக் குழுக்கள் எனப்படும். நிதி மசோதா தவிர்ந்த ஏனைய மசோதாக்களை பரிசீலனைக் காக இக்குழு கொண்டு வரலாம்.

எவ்வளவு நிலைக்குழுக்கள் தேவையோ அவ்வளவு நிலைக்குழுக்களை பொதுமக்கள் சபை உருவாக்கலாம். இக்குழுக்கள் A,B,C,D என்ற ஒழுங்கில் உருவாக்கப்படும். ஒவ்வொரு நிலைக்குழுவிலும் 20- 30 வரையான அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் தேர்வுக் குழுக்களினால் தெரிவு செய்யப் படுகின்றனர். பொது மக்கள் சபையில் கட்சிகளின் விகிதாசாரம் இக்குழுக்களில் பிரதிபலிக்கின்றது. தகுதி, பிரதேசம் என்பனவும் குழுக்களைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் எடுக்கப்படுகின்றது.

ஒவ்வொரு நிலைக்குழுவுக்கும் ஒரு தலைவர் இருப்பார். ஒவ்வொரு மசோதா பரிசீலிக்கப்படும் போது ஒவ்வொரு தலைவரையும் புரிவதற்கும் உருவாக்கப்படுகின்ற குழுக்களே தேர்தெடுக்கப்பட்ட குழுக்கள் என அழைக்கப் படுகின்றன. இக்குழுக்கள் பொது மக்கள் சபையால் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு குழுவிலும் ஏறத்தாழ 15 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். குழுக்களுக்கான தலைவர்களை குழுக்கள் தாமே தெரிவு செய்கின்றன. சில சந்தர்ப்பங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவுக்கு பொது மக்கள் சபை விசேட அதிகாரங்களையும் வழங்குகிறது.

தேர்தெடுக்கப்பட்ட குழுக்களில் பின்வரும் 3 வகை குழுக்கள் உள்ளன

(1) கூட்டத்தொடர் குழுக்கள்

(2) தற்காலிக குழுக்கள்

(3) சிறப்பறிஞர் குழுக்கள்

**1 கூட்டத் தொடர் குழுக்கள்** (Sessional Commitees)

பின்வருவன பொதுமக்கள் சபையின் கூட்டத் தொடரின் ஆரம்ப நிலை ஆணையின் படியோ அல்லது சபையின் உத்தரவுக்கேற்பவோ உருவாக்கப் படுகின்றன. இதன்படி மேற்பார்வை செய்வதாகும்.

(1) அரசுக்கணக்குக் குழு - Public Accounts Commitee

(2) தேர்வுக் குழு - Committe of Selection

(3) நிலை ஆணைக்குழு - Standing Order Coimmittee

(4) மதிப்பீட்டுக் குழு - Estimate Committee

(5) சிறப்புரிமைக்குழு - Committee of Privilegees



(6) பொது விண்ணப்பக் குழு - Public Petition Committee

(7) வெளியீடுகள் மற்றும் விவாத அறிக்கைக் குழு - Publication and Debates Reports Committee

(8) பொதுமக்கள் சபைப் பணிக்குழு - House of Common Service Commitee

(9) சட்ட விதிகள் குழு - Satutory Instruments Committee

(10) அரச உடமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கான தேர்தெடுக்கப்பட்ட குழு- Select Committees on Nationalised Industries

(11) பாராளுமன்ற ஆணையாளருக்கான குழு - Committeee for the Parliamentary Commissioner

**2 தற்காலிக குழுக்கள்** - ADHOC Committees

மசோதாக்களைப் பரிசீலனை செய்வதற்காகவும் விசாரணைகளை மேற்கொள்ளுவதற்காகவும் உருவாக்கப்படுகின்றன.

**3 சிறப்பறிஞர் குழுக்கள்** - Specialist Committees

குறிப்பிட்ட துறைகளின் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக இவை உருவாக்கப்படுகின்றன. இது போன்ற குழுக்கள் இதுவரை இரண்டு மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று 1969 இல் கலைக்கப்பட்டது.

**4. இணைக்குழுக்கள்** :- ( Joint Commitees)

பாராளுமன்றத்தின் இரு சபைகளான பொதுமக்கள் சபையையும் பிரபுக்கள் சபையையும் இணைத்து உருவாக்கப்பட்டவையே இணைக்குழுக்கள் என அழைக்கப்படுகின்றன.

இரு சபைகளும் சம்பந்தப்படுகின்ற அரசியல் சம்பந்தப்படாத விடயங்களை பரிசீலிக்கவும் முக்கியமான கோட்பாடு சம்பந்தப்பட்ட தனியான மசோதாக்களை பரிசீலிக்கவும் இக்குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இரு சபைகளிலுமுள்ள இரு சிறிய தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் இணைந்த இவ்விணைக்குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. பொதுவாக இக்குழுவிற்கு ஒரு பிரபு தான் தலைமை வகிப்பார். இக் குழுவின் இரு பிரிவுகளும் தத்தமது சபைகளுக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றன.

## 5. தனியார் சட்ட முன் வரைபுக் குழுக்கள் - ( Private Bills Commitees)

இக்குழுக்கள் இரு வகைகளாக உள்ளன

1. எதிர்க்கப்பட்ட மசோதாக்களுக்கான குழுக்கள்
2. எதிர்க்கப்படாத மசோதாக்களுக்கான குழுக்கள்

### 1. எதிர்க்கப்படாத மசோதாக்களுக்கான குழுக்கள்

இக்குழுவில் வழிவகைகள் குழுவின் தலைவரும் துணைத் தலைவரும் தேர்வுக் குழுவின் பெயர்பட்டியலிலிருந்து தேர்தெடுக்கப்படும் 4 உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர்.

### 2. எதிர்க்கப்பட்ட மசோதாக்களுக்கான குழுக்கள்

இக்குழுக்கள் ஒவ்வொன்றிலும் தேர்வுக்குழுவால் நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவரும் 3 அங்கத்தவர்களும் அங்கம் வகிப்பர்.

தனியார் மசோதாக்களைப் பரிசீலிப்பதே இவ்விரு குழுக்களினதும் பணியாகும்.

இங்கிலாந்து பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் பணிகளில் பொது மக்கள் சபையின் குழுக்களுக்கு முக்கிய பங்கு உண்டெனினும் அமெரிக்க குழுக்களுக் குள்ள அதிகாரம் இவர்களுக்கு கிடையாது.

## பொது மக்கள் சபையின் நன்மைகள்

(1) முழு இறைமை படைத்த சபையாக காணப்படுகின்றது. இதன் இறைமைக்கு தடையாக ஏற்பாடுகளோ, நிறுவனங்களோ கிடை-யாது. அரசருக்கு சட்டங்களுக்கு கையொப்பமிடும் அதிகாரம் வழங்கப்பட்ட போது அவர் ஒரு போதும் கையொப்பமிட மறுப்-பதில்லை.

(2) மக்களால் தேர்தெடுக்கப்பட்ட சபையாக இருப்பதனால் மக்களின் கருத்தினைப் பிரதிபலிக்கும் மன்றமாக விளங்குகின்றது.

(3) பொது மக்கள் சபைக்கு இருக்கின்ற வலிமையான நிருவாக அதிகாரம், நிருவாகத்துறையினை மக்கள் பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவுகின்றது.



## பொது மக்கள் சபையின் குறைபாடுகள்

(1) பொது மக்கள் சபை அதிகாரமுடையது எனக் கூறப்பட்டாலும் நடைமுறையில் அது ஆளும் கட்சியின் அமைச்சரவையினால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

(2) இங்கிலாந்தின் கட்சி முறை வலிமையாக இருப்பதனால் உறுப்பினர்கள் கட்சிக் கட்டுப்பாட்டினை மீறி சுயமாக முடிவெடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

(3) ஒப்படைக்கப்பட்ட சட்டம் இயற்றுதல் எனும் கோட்பாடு வளர்ச்சி யடைந்து வருவதனால் நடைமுறையில் பொது மக்கள் சபையின் அதிகாரம் குறைந்து வருகின்றது.

## பிரபுக்கள் சபை

இரண்டாம் மன்றம், மேல்சபை என்றும் இது அழைக்கப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் இச்சபை மிக வலிமை வாய்ந்த சபையாக, பொதுமக்கள் சபையுடன் சம அதிகாரங்களைக் கொண்டு விளங்கியது. மக்களாட்சிக் கோட்பாடு வலிமை பெறத் தொடங்கியதன் பின்னரே இச்சபையின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. பல்வேறு காலகட்டங்களில் இயற்றப்பட்ட சட்டங்களின் ஊடாகவே, இச்சபையின் செல்வாக்கு குறைக்கப்பட்டது.

இச்சபையில் 1000ற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் 750 வரையிலான உறுப்பினர்கள் சபையின் கூட்டங்களுக்கு வருகை தருகின்றனர். அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்கள் அனைவரும் பிறப்புச் சிறப்பால் இச்சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

பிரபுக்களைப் பொறுத்த வரையில் பின்வரும் 4 வகையான பிரபுக்கள் இங்கு அங்கம் வகிக்கின்றனர்.

(1) பரம்பரைப் பிரபுக்கள்.

(2) சட்டப் பிரபுக்கள்.

(3) சமயப் பிரபுக்கள்.

(4) ஸ்கொட்லாந்து பிரபுக்கள்.

பரம்பரைப் பிரபுக்களைத் தவிர ஏனையோர் பிரதமரின் சிபார்சின் பெயரில் முடியினால் நியமிக்கப்படுகின்றனர். ஆரம்ப காலங்களில் ஆண்களுக்கு மட்டுமே பிரதிநிதித்துவம் இருந்த போதும் 1953 தொடக்கம் பெண்களும் உறுப்புரிமை பெறுகின்றனர்.

1999 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பிரபுக்கள் சபை சட்டத்தின் படி பரம்பரைப் பிரபுக்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி பரம்பரைப்

பிரபுக்களின் எண்ணிக்கை அரசியல் கட்சிகளினால் பெயர் குறிக்கப்படும் 92 பிரபுக்கள் மட்டுமே என வரையறுக்கப்பட்டுள்ளது.

சமயப் பிரபுக்கள் இங்கிலாந்து திருச்சபையின் பிரதிநிதிகளாக உள்ளனர். 24 ஆயர்களும், 2 பேராயர் உட்பட 26 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

சட்ட பிரபுக்களாக 9 பிரபுக்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களை முடி நியமிக்கின்றார்.

ஸ்கொட்லாந்துப் பிரபுக்களாக 16 பேர் அங்கம் வகிக்கின்றமை தேர்தல் முடிவடைந்து புதிய பாராளுமன்றம் கூடும் போது ஸ்கொட்லாந்து பிரபுக்கள் எல்லோரும் ஒன்று கூடி தங்களில் 16 பேரை பிரபுக்கள் சபைக்கு தேர்ந்தெடுப்பர்.

பிரபுக்கள் சபையை கூட்டுவதற்கான குறைந்த பட்ச உறுப்பினர்கள் தொகை 30 ஆகும்.

## அதிகாரங்கள்

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

சட்ட ஆக்கம் தொடர்பாக பிரபுக்கள் சபை பொது மக்கள் சபையுடன் இணைந்து செயற்படுகின்றது. இயற்றப்படுகின்ற சட்டங்கள் அனைத்தும் இச்சபையிலும் நிறைவேற்றப்பட்ட பின்னரே, பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப் பட்டதாகக் கருதப்பட்டு முடியின் கையொப்பத்திற்கு அனுப்பப்படும்.

1911 ம் ஆண்டுக்கு முன்னர் சட்டவாக்கம் பிரபுக்கள் சபையே அதிகாரத்தினைக் கொண்டிருந்தது. 1910 ம் ஆண்டு பதவிக்கு வந்த லிபரல் கட்சி அரசாங்கம் 1911 ல் ஒரு சட்டத்தின் மூலம் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தினைக் குறைத்தது. இதன் பின்னர் பொதுமக்கள் சபையை விடக் குறைந்த அளவிலான அதிகாரத்தினைக் கொண்டதாக பிரபுக்கள் சபை விளங்குகின்றது.

நிதி மசோதா தவிர்ந்த ஏனைய மசோதாக்களை இச்சபையில் கொண்டு வர முடியுமாக இருந்தபோதும் பெரும்பாலான மசோதாக்கள் பொதுமக்கள் சபையிலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றது.

பிரபுக்கள் சபை நிதி மசோதாக்களை ஒரு மாதத்திற்கு மேலும் சாதாரண மசோதாக்களை ஒரு வருடத்திற்கு மேலும் தாமதப்படுத்தி வைத்திருக்க முடியாது. பொதுமக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டு வருகின்ற மசோதாக்களை பிரபுக்கள் சபை நிறைவேற்றலாம் அல்லது திருப்பி அனுப்பலாம். திருப்பி அனுப்பப்பட்டவை பொதுமக்கள் சபையில் மீண்டும் நிறைவேற்றப்பட்டால் பிரபுக்கள் சபையின் ஒப்புதல் இன்றி,பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டு, முடியின் சம்மதத்திற்கு அனுப்பப்படும்.

மேற்கூறிய வகையில் பார்க்கும் போது, சட்டவாக்கம் தொடர்பாக பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபையை விடக் குறைந்தளவிலான அதிகாரங்களைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். சட்ட வாக்கத்தினைப் பொறுத்தவரை இச்சபை வெறுமனே காலதாமதப்படுத்தும் மன்றமாகவே தொழிற்படுகின்றது.



### நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

நீதியமைச்சர் உட்பட இரண்டிற்குக் குறையாத அமைச்சர்கள் இச்சபையிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அமைச்சர்கள் இச்சபையின் கூட்டங்களுக்கும் வருகை தருகின்றனர். அவ்வாறு வருகை தரும் அமைச்சர்களை, அவர்களது கருமங்கள் தொடர்பாக கேள்வி கேட்கும் உரிமை இச்சபையின் உறுப்பினர்களுக்கும் உண்டு. அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமை அமைச்சர் களுக்கு உண்டு. பொதுமக்கள் சபையைப் போல, அமைச்சரவை மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இச்சபையில் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாது.

நிர்வாகத் துறையைப் பொறுத்தவரை கூட, மக்கள் சபையை விட, குறைந்த அளவிலான அதிகாரங்களையே பிரபுக்கள் சபை கொண்டுள்ளது.

### நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

நீதித்துறை சார்பான உயர்ந்த நீதிமன்றமாக தொழிற்படும் போது சட்ட பிரபுக்கள் மட்டுமே சபையில் சமூகமளிப்பார்கள். இந்த அதிகாரம் பொதுமக்கள் சபைக்கு இல்லை. இதைவிட நீதிபதிகளைப் பதவி நீக்கும் தீர்மானம் இச்சபையிலும் நிறைவேற்றப்படல் வேண்டும்.

மேற்கூறிய வகையில் பார்க்கும்போது நீதித்துறை அதிகாரங்களைப் பொறுத்தவரை, பொதுமக்கள் சபையை விட பிரபுக்கள் சபை சற்று உயர்வான அதிகாரங்களைக் கொண்டுள்ளதெனலாம்.

### பிரபுக்களின் சபையின் நன்மைகள்

(1) பொது மக்கள் சபை விடுகின்ற தவறுகளை இச்சபை திருத்தக் கூடியதாக இருக்கின்றது.

(2) பொது மக்கள் சபையின் வேலைச் சுமையினை இச்சபை குறைக்கின்றது.

(3) பல்வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்ற ஆனால் தேர்தல் அரசியலில் ஈடுபட விரும்பாதவர்களுக்கு பிரதிநிதித்துவம் பெற உதவுகின்றது.

(4) சட்டங்கள் தொடர்பாக பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க உதவுகின்றது.

(5) முதிர்ந்த அரசியல் வாதிகளும், பல்வேறு துறைகளில் பாண்டியத்தியம் பெற்றவர்களும் இதில் அங்கம் வகிப்பதாலும் போதியளவு நேரம் கிடைப்பதனாலும் மசோதாக்களை ஆழமாக ஆராய இச்சபையினால் முடிகின்றது.

**பிரபுக்களின் சபையின் குறைபாடுகள்**

(1) பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் மக்களினால் தெரிவு செய்யப்படாமை மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு முரணாக உள்ளது.

(2) சட்டங்களை இயற்றுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

(3) பிரபுக்கள் சபையில் அங்கம் வகிப்போரில் பெரும்பான்மையினர் பழமைவாதிகளாக இருப்பதனால் முற்போக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில் தடங்கல் ஏற்படுகின்றது.

(4) பிரபுக்கள் சபைக்கு அதிகாரங்கள் குறைவாக இருப்பதனால் தீர்மானம் எடுக்கும் செய்முறையில் பெரிய மாற்றங்களை அதனால் ஏற்படுத்த முடியவில்லை. பிரபுக்கள் சபை மசோதாக்களை நிராகரித்தாலும் அதனைச் சட்டமாக்கும் அதிகாரம் பொதுமக்கள் சபைக்கு உண்டு.

## 3. அமைச்சரவை

இங்கிலாந்தின் அரசாங்கமுறை பாராளுமன்ற முறையாக இருப்பதனால் நிர்வாகத்துறையான அமைச்சரவை பாராளுமன்றத்திலிருந்தே தெரிவு செய்யப்படுகின்றது. பொதுத்தேர்தல் முடிந்தவுடன் பொதுமக்கள் சபையில் எந்தக் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்கின்றதோ அந்தக் கட்சியினுடைய தலைவர் பிரதமராக முடியினால் நியமிக்கப்படுவார். பின்னர் பிரதமரின் ஆலோசனையின் பேரில் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலுமிருந்து ஏனைய அமைச்சர்கள் முடியினால் நியமிக்கப்படுவார்கள்.

அமைச்சரவையின் தலைவராக பிரதமரே விளங்குவார். இவரே நாட்டின் உண்மை நிர்வாகத் தலைவராவார். அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல், மாற்றுதல், போன்றவற்றில் பிரதமர் பூரண அதிகாரம் வாய்ந்தவராக விளங்குகின்றார். பாராளுமன்றத்தின் உறுப்பினர் அல்லாத ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டால். நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் அவர் பாராளுமன்ற உறுப்பினராக வருதல் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமிக்கின்ற போது இரண்டிற்குக் குறையாத அமைச்சர்கள் பிரபுக்கள் சபையிலிருந்து நியமிக்கப்படல் வேண்டும். அவர்களில் ஒருவர் நீதிமந்திரியாக இருத்தல் வேண்டும்.

அமைச்சரவை பாராளுமன்றத்தின் ஒரு சபையான பொதுமக்கள் சபைக்குக் கூட்டாகப்பொறுப்புடையதாகும். பொதுமக்கள் சபையில் அமைச்சரவைக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் அமைச்சரவையைப் பதவிநீக்கும் அதிகாரம் பொதுமக்கள் சபைக்குண்டு.



இங்கிலாந்து அமைச்சரவையின் அமைப்பு, தொழிற்பாடு, அதிகாரங்களெல்லாம் வழக்காறுகளின் பயனாகத் தோன்றியவையாகும். பெயரளவில் நிர்வாகத்துறை அதிகாரத்தை அரசர் பிரயோகித்து வந்த போதும் நடைமுறையில் அமைச்சரவையே உண்மை நிர்வாகத்துறையாகச் செயற்படுகின்றது.

### அமைச்சரவையின் பணிகளும் அதிகாரங்களும்

**சட்டத்துறை தொடர்பானவை**

(1) பாராளுமன்ற கூட்டத் தொடர்களைத் தீர்மானித்தல்.

(2) கூட்டத்தொடரில் கலந்துரையாடப்படவேண்டிய நிகழ்ச்சி நிரல்களைத் தீர்மானித்தல்.

(3) அரசாங்க மசோதாக்களை உருவாக்குதல்.

(4) உருவாக்கப்பட்ட மசோதாக்களை அமைச்சரவையின் உறுப்பினர்களுக்கூடாக பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தல்.

(5) பாராளுமன்றத்தில் மசோதாக்கள் தொடர்பான விவாதங்கள் நடைபெறும்போது அதனை ஆதரித்து உறுப்பினர்களின் விமர்சனங்களுக்கு விடையளித்து, அதை நிறைவேற்ற உதவுதல்.

(6) பாராளுமன்றம் கூட்டுத்தொடரில் இல்லாத சந்தர்ப்பங்களில் அவசர சட்டங்களை ஆணைகள் மூலம் உருவாக்குதல்.

(7) பாராளுமன்றம் கூடும்போது அவ்வாணைகளை முறைப்படி சட்டமாக்கல்,

(8) ஒப்படைக்கப்பட்ட சட்டங்களை இயற்றுதல்.

(9) பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் கருமங்கள் தொடர்பாக கேள்விகள் கேட்கின்றபோது அதற்கான பதில்களை வழங்கல்

**நிர்வாகத்துறை தொடர்பானவை**

இங்கிலாந்து அரசியல் யாப்பு கோட்பாட்டின்படி முடியே தலைமை நிர்வாகியாகத் திகழ்கின்றார். எல்லா நிர்வாகச் செயற்பாடுகளும் முடியின் பெயரினாலேயே நடைபெறுகின்றன. ஆனால், நடைமுறையில் அச்செயற்பாடுகள் அனைத்தையும் அமைச்சரவையே மேற்கொள்கின்றது.

(1) நாட்டின் முக்கிய கொள்கை முடிவுகளைத் தீர்மானித்தல்

(2) தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்தல்.

(3) திணைக்களங்களையும் அமைச்சுக்களையும் மேற்பார்வை செய்தல்,

(4) வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல்.

(5) வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானித்தல்

## நீதித்துறை தொடர்பானவை

அமைச்சரவைக்கு சில நீதித்துறை அதிகாரங்களும் உள்ளன. குற்றவாளி-களுக்கு மன்னிப்பு வழங்கல், தண்டனையைக் குறைத்தல் தொடர்பாக முடிக்கு ஆலோசனை வழங்குவது அமைச்சரவையாகும். மேலும், பிரபுக்கள் சபையின் தலைவரான சான்சலர் பிரபு நீதியமைச்சராகச் செயற்படுவதோடு நீதிபதிகளை நியமிக்கின்ற விடயத்திலும் அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

இங்கிலாந்தின் அரசாங்கமுறை பாராளுமன்ற அரசாங்க முறையாக இருப்பதனால் அமைச்சரவையின் சர்வாதிகார ஆட்சி தொழிற்படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. அமைச்சரவை பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டது என கொள்கை ரீதியாகக் கூறப்பட்ட போதும்.

(1) ஆளுங்கட்சிக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் வரை பாராளுமன்றத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க அமைச்சரவையால் முடிகின்றது.

(2) பாராளுமன்றத்திலுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கட்சிக் கட்டுப்பாட்டிற்குப் பணிந்து நடக்கவேண்டி இருப்பதனால் அமைச்சரவையின் தீர்மானங்களை எதிர்த்து செயற்பட முடியாது.

(3) ஆளுங் கட்சியின் தலைவராக இருக்கின்றவரே பிரதமராகவும் இருக்கின்றமையால், பாராளுமன்றத்திலுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்களை அவரால் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடிகின்றது.

(4) பாரளுமன்றக் கூட்டத்தொடர் கூடுவது குறைவாக உள்ளமையினால் ஒப்படைக்கப்பட்ட சட்டங்கள் அமைச்சரவையை வலுவுள்ள ஒன்றாக மாற்றுகின்றது.

(5) பொதுமக்கள் சபையைக் கலைக்கும் அதிகாரம் பிரதமரிடம் இருப்பதும் அமைச்சரவையின் மேலாதிக்கத்தை வலிமையாக்குகின்றது.

இத்தகைய தன்மைகளினாலேயே பாராளுமன்ற அரசாங்க முறையில் அமைச்சரவையின் சர்வாதிகாரம் நிலவுகின்றது எனக் கூறப்படுகின்றது.

## நிழல் அமைச்சரவை

இங்கிலாந்தில் அதிகாரபூர்வமற்ற வகையில் எதிர்க்கட்சியினால் அமைக்கப்படும், அமைச்சரவை நிழல் அமைச்சரவை எனப்படும். எதிர்க்கட்சித் தலைவர் நிழல் அமைச்சரவையின் பிரதமராக விளங்குவார். இவர் பிரதமமந்திரியின்



முடிவுகளையும் செயல்களையும் கண்காணித்து, பாராளுமன்றத்தில் அவற்றை விமர்சனம் செய்து விவாதிப்பார் அதே போன்று ஒவ்வொரு அமைச்சரின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கும் ஒவ்வொரு நிழல் அமைச்சர்கள் நியமிக்கப் படுவர். இவர்கள் தத்தம் பொறுப்புகளுக்கு உட்பட்ட அமைச்சர்களின் முடிவு-களையும் செயல்களையும் கண்காணித்து பாராளுமன்றத்தில் விமர்சனம் செய்து விவாதிப்பர்.

அடுத்த தேர்தலில் எதிர்க்கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றுமாயின் இந்நிழல் அமைச்சரவை, உண்மையான அமைச்-சரவையாக மாறுகின்றது. நிழல் அமைச்சரவையின் பிரதமராக இருந்தவர் உண்மையான பிரதமராக மாறுகின்றார். அதேபோன்று ஏனைய நிழல் அமைச்சர்களும் தத்தம் பொறுப்புகளுக்குரிய உண்மையான அமைச்சர்களாக மாறுகின்றனர்.

இந்நிழல் அமைச்சரவையானது ஆட்சியாளர்கள் விடும் தவறுகளைத் திருத்தி சிறந்த ஆட்சியை நடைபெறச் செய்வதற்கு உதவியாக அமைகின்றது.

## அமைச்சரவையின் நன்மைகள்

(1) மக்களின் பிரதிநிதிகள் அமைச்சரவையில் உறுப்பினர்களாக இருப்பது மக்களாட்சிக் கோட்பாட்டினை வலுப்படுத்துவதாக வுள்ளது.

(2) நீதியமைச்சராக பிரபுக்கள் சபையின் தலைவர் நியமிக்கப் படுகின்றமை அரசியல் அழுத்தங்களிலிருந்து விலகி நீதித்துறை தொழிற்படுவதற்கு வாய்ப்புக்களைக் கொடுக்கின்றது.

(3) எதிர்கட்சியினால் அமைக்கப்படும் நிழல் அமைச்சரவை, அமைச்சரவையைக் கண்காணிப்பிற்கு உட்படுத்துவதற்கு உதவுகின்றது.

## அமைச்சரவையின் குறைபாடுகள்

(1) ஆளுங்கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் வரை அமைச்சரவை சர்வாதிகாரத்துடன் தொழிற்படுவதற்கான வாய்ப்புக்களுண்டு.

(2) அரசாங்கம் கூட்டரசாங்கமாக அமைந்தால் கூட்டுச் சேர்ந்த கட்சிகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது அரசாங்கமும் பலவீனமடைய வேண்டிய நிலையேற்படலாம்.

(3) பிரதமரிடம் அதிகஅதிகாரம் இருக்கின்ற நிலைமையானது அவரையொரு சர்வாதிகாரியாக மாற்றிவிடுகின்றது.

(4) ஒப்படைக்கப்பட்ட சட்டங்களை இயற்றும் கோட்பாடு வலுவடைந்து வருகின்றமையால் பராளுமன்றத்தின் இறைமை கேள்விக் குறியா-கின்றது.

(5) அமைச்சரவையின் வளர்ச்சி பாராளுமன்றத்தின் முக்கியத்து வத்தைக் குறைத்துள்ளது.

## பிரதமர்

பாராளுமன்ற அரசாங்க முறையில் பிரதமர் பதவி முக்கியமான ஒன்றாகும். அவர் நாட்டின் உண்மைத் தலைவராக விளங்குகின்றார். இங்கிலாந்து அரசியல் யாப்பு ஒரு பாராளுமன்ற முறைக்குரிய அரசியல் யாப்பாக இருப்பதனால் பிரதமர் முக்கியமானவராக விளங்குகின்றார்.

### பிரதமர் நியமனம்

பொதுமக்கள் சபைக்கான தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து, அச்சபையில் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற கட்சியின் தலைவரை முடி பிரதமராக நியமிக்கின்றார். எந்தக் கட்சியும் பெரும்பான்மைப் பலத்தினைப் பெறாத போது பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு பெற்ற ஒருவரை முடி பிரதமராக நியமிக்கின்றார்.

### பிரதமர் பதவியின் முக்கியத்துவம்

#### 1. அமைச்சரவையின் தலைவராக விளங்குதல்

பிரதமர் அமைச்சரவையின் தலைவராக விளங்குகின்றார். அமைச்சரவை தொடர்பாக இவர் முழுமையான அதிகாரங்களைப் பெற்றுள்ளார். அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல், மாற்றுதல், அமைச்சர்களின் அமைச்சுக்களை ஒதுக்குதல், மாற்றுதல், அமைச்சுக்களின் திணைக்களங்களை ஒதுக்குதல், மாற்றுதல் போன்றவற்றில் பிரதமர் பூரண அதிகாரமுடையவராக விளங்குகின்றார்.

மேலும், அமைச்சர்களின் கடமைகளைக் கண்காணித்தல், அமைச்சர் களுக்கிடையே நிர்வாகம் சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் காணப் பட்டால் அவற்றை நீக்கி அவர்களைக் குழு உணர்வுடன் செயற்படும் பணிகளையும் பிரதமர் மேற்கொள்கின்றார்.

#### 2. தலைமை நிர்வாகியாக செயற்படுதல்

இங்கிலாந்து அரசியல் யாப்புக் கோட்பாட்டின் படி முடியே தலைமை நிர்வாகியாகத் திகழ்கின்றார். ஆனால் நடைமுறையில் உண்மையான தலைமை நிர்வாகி பிரதமரே ஆவார். முடியினால் மேற்கொள்ளப்படும் எல்லா நியமனங்களும் பிரதமமந்திரியின் ஆலோசனைப் படியே மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் நிர்வாக விடயங்கள் தொடர்பாக கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், வெளிநாட்டு



விவகாரங்கள் சம்பந்தமாக முக்கிய முடிவுகளை எடுப்பதில் பிரதமரே முதன்மை யான பங்கினை வகிக்கின்றார்.

#### 3.பொதுமக்கள் சபையின் முதல்வராக விளங்குதல்

பொதுமக்கள் சபையின் முதல்வராகவும் பிரதம மந்திரி விளங்குகின்றார். பாராளுமன்றக் கூட்டத் தொடர்கள் சம்பந்தமாக திகதிகளை இவரே முடிவு செய்கின்றார். முக்கியமான எல்லா விடயங்களும்சபையில் அறிவிக்கப்படு கின்றனவா என்பதைக் கண்காணிக்கின்றார். இவருடைய ஆலோசனையின் பேரில் முடி பொதுமக்கள் சபையைக் கலைக்கலாம்.

#### 4. முடியின் ஆலோசகராக விளங்குதல்

நாட்டின் நிர்வாகம் சம்பந்தமான எல்லா விடயங்களிலும் முடியின் ஆலோசகராக இவரே விளங்குகின்றார். முடிக்கும் அமைச்சரவைக்கும் இடையே பாலமாகவும் திகழ்கின்றார். இவருடைய ஆலோசனைகளை மரபின் அடிப்படையில் முடி உதாசீனம் செய்ய முடியாது.

## 4. இங்கிலாந்தின் நீதித்துறை

இங்கிலாந்தின் நீதித்துறை நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியாக அமைக்கப் படவில்லை. இங்கிலாந்திற்கும் வேல்ஸ் இற்கும் ஒரு வகையான நீதிமன்ற முறையும் ஸ்கொட்லாந்திற்கு இன்னொரு முறையும் பின்பற்றப்படுகின்றது. பொதுவாக இங்கிலாந்தில் குடியியல் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள், என இருவகை நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. குற்றவியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட வர் அரசருக்கு எதிராக குற்றம் செய்தார் என குற்றம் சாட்டி விசாரிக்கப் படுகிறார். குடியியல் வழக்குகளில் ஒரு நபரோ நிறுவனமோ ஒன்றிற்கொன்று எதிராக தொடுக்கும் வழக்குகள் விசாரணை செய்யப்படுகிறது.

### குடியியல் நீதிமன்றங்கள் (Civli Courts):

எல்லா குடியியல் வழக்குகளும் மாவட்ட நீதிமன்றங்களின் முன்போ உயர்நீதிமன்றங்களின் முன்போ கொண்டு வரப்படுகின்றன. விசாரணை இன்றி தீர்ப்பு வழங்கும் நீதிமன்றங்கள், (Courts Summery Juridiattion) பேரூர் மற்றும் உள்ளூர் நீதிமன்றங்கள் (Borrough and Local Courts) முன்பு கொண்டு வரும் வழக்குகள் மட்டும் இவற்றிற்கு விதிவிலக்கானவையாக உள்ளன.

#### 1. மாவட்ட நீதிமன்றம் (County Court) :

இவை 1846ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. தற்போது ஏறத்தாழ 500 நீதிமன்றங்கள் செயற்படுகின்றன. இந் நீதிமன்றங்களின் நீதிபதிகளை சான்சலர்

பிரபு நியமிக்கின்றார். நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு ஒருவர் 7 ஆண்டுகாலமாவது வழக்கறிஞராக பணிபுரிந்திருத்தல் வேண்டும். நீதிபதியின் ஓய்வு பெறும் வயது 72 ஆகும். ஒவ்வொரு நீதிமன்றத்திலும் 1 அல்லது 2 நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். 400 பவுன்களுக்கு மேற்படாத சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை இந்நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன.

ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்திற்கும் பதிவாளர் ஒருவர் சான்சலர் பிரபுவால் நியமிக்கப்படுவார். இவர் நீதிமன்றத்தின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ளுவார்.

400 பவுன்களுக்கு மேற்படாத சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை இது விசாரணை செய்கின்றது.

**2. உயர் நீதிமன்றம்** (High Court) :

மாவட்ட நீதிமன்றங்களில் மட்டும் கொண்டு வரப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட குடியியல் வழக்குகளைத் தவிர ஏனைய எல்லா குடியியல் வழக்குகளும் மாவட்ட நீதிமன்றத்திற்கோ அல்லது உயர் நீதிமன்றத்துக்கோ கொண்டுவரப்படலாம். பொதுவாக பெரிய வழக்குகள் உயர் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படுவதே வழக்கமாகும். இந்நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்படும் வழக்குகள் அதன் 3 பிரிவுகளில் ஏதாவது ஒன்றுக்கு அனுப்பப்படுகின்றன.

**1. அரசியின் நீதிமன்றப் பிரிவு** (Queens Bench Division) :

நாட்டு மரபு நீதிமன்றங்களின் வழிவந்த இந் நீதிமன்றம் குடியியல் வழக்குகளை விசாரணை செய்கிறது. பிரதம நீதியரசரே இதன் தலைவராவார். ஆயுட்காப்புறுதி, ஒப்பந்தம், வருமானவரி போன்ற வழக்குகளை இப்பிரிவு விசாரணை செய்கின்றது. இதைவிட தனது சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி தனக்குக் கீழ் உள்ள நீதிமன்றங்களையும் தீர்ப்பாயங்களையும் மேற்பார்வை செய்வதும் ஆட்கொணர் ஆணையைப் பயன்படுத்தி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது போன்ற பணிகளையும் இந்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

**2. நீதித்துறை முதல்வர் மன்றப் பிரிவு** (Chancery Division)

இறந்தோரின் சொத்துக்கள், அடைமானங்கள், போன்ற விடயங்களை இந்நீதிமன்றம் விசாரணை செய்கிறது.சான்சலர் பிரபு பெயரளவில் இதன் தலைவராக விளங்குவார். அவர் தன் சார்பில் வேறு நபர்களை தலைவராக நியமிக்கலாம். சில வழக்குகள் தொடர்பாக இந்நீதிமன்றம் விசேட உரிமையினை பெற்றுள்ளது. வேறு சில வழக்குகளைப் பொறுத்தவரை அரசின் நீதிமன்றப் பிரிவுடன் ஒருங்கிணைந்த அதிகாரத்தைக் கொண்டுள்ளது.



**3. விருப்புறுதி,மெய்ப்பிதம், விவாகரத்து, கடற்படைத்துறைப் பிரிவு** (Probate,Divorce and Admiralty Division)

இந்நீதிமன்றம் விவாகரத்து, உயில் (இறுதி விருப்பாவணம்) கடல் சம்பந்தப்பட்ட வழக்குகள் போன்றவற்றை விசாரணை செய்கிறது. விவாகரத்து வழக்குகளை திருமணம் சார் சட்டத்தினடிப்படையிலும்; கடல் சம்பந்தப்பட்ட வழக்குகளை கடலாண்மைச் சட்டத்தினடிப்படையிலும் விசாரணை செய்கிறது.

**4. வர்த்தக ஒப்பந்த நீதிமன்றம்** (Restrictive Practices Court):

வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் தனிநீதிமன்றம் இதுவாகும். இது 1956ம் ஆண்டு இயற்றப்பட்ட வர்த்தக வழமைகள் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இது உயர் நீதிமன்றத்துக்கு இணையானதாகும். 5 நீதிபதிகளையும் 10க்குட்பட்ட சாதாரண அங்கத்த வர்களையும் இந்நீதிமன்றம் கொண்டது. குறைந்தது ஒரு நீபதியும் இரண்டு அங்கத்தவர்களும் வழக்கினை விசாரணை செய்யலாம்.

**5. மேன்முறையீட்டு நீதிமன்றம்** (The Court of Appeal):

மாவட்ட நீதிமன்றங்களிலிருந்தும் உயர் நீதிமன்றங்களிலிருந்தும் இந்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீட்டு மன்ற நடுவர் ஒருவரும் 11 நீதிபதிகளும் இந்நீதிமன்றத்தின் பணிகளைக் கவனிக்கின்றனர். இப்பதினொரு நீதிபதிகளும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவோ அல்லது 15 வருடங்கள் வழக்கறிஞர்களாகவோ பணிபுரிந்து இருத்தல் வேண்டும். சான்சலர் பிரபுக்கள், பிரதம நீதியரசர் போன்றோர்; இந்நீதிமன்றத்தின் பதவிவழி அங்கத்தவர்களாக உள்ளனர். மேல்முறையீடுகள் குறைந்த பட்சம் 3 நீதிபதிகளால் விசாரிக்கப்பட வேண்டும். முடிவுகள் பெரும்பான்மையோரின் கருத்துப்படி தீர்மானிக்கப்படுகிறது.

**6. பிரபுக்கள் சபை**

இங்கிலாந்து, வேல்ஸ் ஆகிய பகுதிகளுக்கு இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றம் இதுவேயாகும். ஸ்கொட்லாந்திலிருந்து வரும் குடியியல் மேன்முறையீடுகளுக்கு இதுவே இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாகும். பிரபுக்கள் சபை மேன்முறையீடுகளை விசாரணை செய்யும் போது சாதாரண பிரபுக்கள் சபையில் அமர்வதில்லை. சட்டப்பிரபுக்கள் மட்டுமே அமர்கின்றனர். இச்சபையில் நீதிவழங்குவது சம்பந்தப்பட்ட பணிகளை சான்சலர் பிரபுவும் 9 சட்டப் பிரபுக்களும் முன்னாள் சான்சலர் பிரபுக்களும் முன்னர் உயர் நீதித்துறை பதவிகளை வகித்த பிரபுக்களும் கவனிப்பது மரபாகவுள்ளது. ஒரு வழக்கினை குறைந்தது 3 பேர் விசாரணை செய்கின்றனர். இவ்வாறு 3 பேர் விசாரணை செய்தாலும் தமது தீர்ப்புக்களை முழுச்சபையிலேயே அளிக்கின்றனர்.

## குற்றவியல் நீதிமன்றங்கள்

குடியியல் வழக்குகளைப் போலவே குற்றவியல் வழக்குகளும் அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்ப பிரிக்கப்பட்டுள்ளன. சாதாரண வழக்குகள் முறை விசாரணையின்றி தீர்ப்புக் கூறும் நீதிமன்றங்கள் முன்பும் முக்கியமான வழக்குகள் மணிமுடி நீதிமன்றத்தின் முன்பும் கொண்டு வரப்படுகின்றன.

### 1. குற்றவியல் நீதிமன்றம் (Magistrate Court)

குற்றவியல் நீதிமன்றங்கள் உடனடித்தீர்ப்பு நீதிமன்றங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. (Petty Sessions) சிறிய வழக்குகள் இவற்றால் விசாரணை செய்யப்படுகின்றன.
இந்நீதிமன்றங்கள் நான்கு வகைகளாக உள்ளன:

#### 1. அமைதி காண் நீதிமன்றங்கள்

இரண்டிலிருந்து ஏழு வரையான அமைதிகாப்பு நீதிபதிகளைக் கொண்டதாக இந்நீதிமன்றம் விளங்குகிறது.

#### 2. உதவி பெறும் குற்றவியல் நீதிமன்றம் (Stipendary Magistrates Court)

இதில் நடுவராகவுள்ளவர் குறைந்தது 7 வருடகாலம் வழக்கறிஞராக பதவி வகித்திருத்தல் வேண்டும். சான்சலர் பிரபுவின் ஆலோசனைக்கேற்ப அரசரால் நியமிக்கப்படுகின்றார்.

#### 3. உதவிப் பணம் பெறும் தலைநகர நீதிமன்றம் (Metropolitan Stipendany Court)

சான்சலர் பிரபுவின் ஆலோசனைக்கேற்ப அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு உதவிப் பணம் பெறும் நடுவரைக் கொண்டதாகும். இந்த நடுவர்கள் 70 வயதை அடைந்தவுடன் பதவியிலிருந்து ஓய்வு பெறுவர். தலைநகரத்தில் நடைபெறும் சிறிய குற்றவியல் வழக்குகளை இந் நீதிமன்றம் விசாரணை செய்யும்.

#### 4. இளம் குற்றவாளிகள் நீதிமன்றமும் திருமணம் சார்ந்த நீதிமன்றமும் (Juvenile and Matrimonial Courts)

இளம் குற்றவாளிகள் நீதிமன்றமும் திருமணம் சார்ந்த நீதிமன்றமும் இவை தனித்தனியே விசாரணை நடாத்துகின்றன. இந்நீதிமன்றங்களில் 3 நடுவர்கள் உள்ளனர்- அவர்களில் ஒருவர் பெண்ணாக இருத்தல் வேண்டும்.

இவ் நீதிபதிகள் நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருப்பர். இளம் குற்றவாளிகள் நீதிமன்றங்கள் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கெதிரான



வழக்குகளையும் 17 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கெதிரான வழக்குகளையும் விசாரணை செய்கின்றன. விசாரணைகள் தனிப்பட்ட அறைகளிலேயே நடைபெறுகின்றன. குற்றம் செய்யும் இளம்பராயத்தினரை திருத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். சூழ்நிலை காரணமாகவே இளம்பராயத்தவர்கள் குற்றமிழைப்பதால் அவர்களுக்கு நல்ல சூழ்நிலையும் சில சமயங்களில் கல்வியும் தொழிற் பயிற்சியும் தரப்படுகின்றன. இளைஞர்களை திருத்தி வழிக்கு கொண்டு வருவதற்கு பல உளவியல் முறைகளும் கையாளப்படுகின்றன.

திருமணம் சார்ந்த நீதிமன்றங்களின் வழக்குகளும் தேவையான போது தனி அறைகளிலேயே விசாரணை செய்யப்படுகின்றன. தம்பதியர் ஒற்றுமையாக பிணக்குகளை தீர்க்க வேண்டும் என்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. உளவியல் வழிமுறைகள் இங்கும் கையாளப்படுகின்றன

மேற்கண்ட குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேன்முறையீடுகள் பின்வரும் நீதிமன்ற படிவரிசைப்படி முறையீடு செய்யலாம்:

### 1. மணி முடி நீதிமன்றம் (The Crown Court)

1971ம் ஆண்டு நீதிமன்றச் சட்டத்தின்படி இந்நீதிமன்றம் உருவாக்கப் பட்டது. முன்னாள் காலாண்டுப் பருவ, மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்குப் பதிலாக இது செயற்படுகின்றது. குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேன்முறையீடு களையும் இந்நீதிமன்றத்துக்கு நேரடியாக வரும் குற்றவியல் வழக்குகளையும் இது விசாரணை செய்கிறது. இந்நீதிமன்றம் ஏறத்தாழ 93 மையங்களில் கூடுகின்றது.

### 2. மேன்முறையீட்டு நீதிமன்றம்

இந்நீதிமன்றம் பழைய குற்றவியல் மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பிரதம நீதியரசர் அல்லது மேல் முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதியால் தலைமை தாங்கப்படுகின்றது. இந் நீதிமன்றம் மணிமுடி நீதிமன்றத்திலிருந்து வரும் மேல் முறையீடுகளைக் கவனிக்கிறது.

### 3. பிரபுக்கள் சபை

குற்றவியல் நீதித்துறையிலும் இறுதி நீதிமன்றமாக செயற்படுவது பிரபுக்கள் சபையாகும். மேல் முறையீட்டு நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல் முறையீடுகளை இது விசாரணை செய்கின்றது. இந்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய வேண்டு மானால் சட்டமா அதிபர் அதற்கான ஒப்புதலை அளித்தல் வேண்டும். பொதுவாக குற்றவியல் வழக்குகளில் பிரபுக்கள் சபைக்கு மேல் முறையீடு செய்யும் வாய்ப்பு எப்போதாவது தான் அளிக்கப்படுகின்றது. அதுவும் அத்தகைய வழக்குகளில் சில சட்டக் கருத்துக்கள் அடங்கியுள்ளன என சட்டமா அதிபர் சிபார்சு செய்தால் தான் மேல்முறையீடு செய்யலாம்.

தண்டனை பெற்ற குற்றவாளி அரசரின் மன்னிப்பைப் பெறுவது கடைசி முயற்சியாகும். மக்களுக்கிடையிலான தகராறுகளில் நீதி மன்றத்தின் தீர்ப்புக் களைக் குறைக்கவோ நாட்டுக்கு வெளியே தண்டனை பெறுபவர்களை மன்னிக்கவோ அரசருக்கு அதிகாரமில்லை. வழக்கமாக உள்துறைச் செயலாளரின் ஆலோசனையை அரசர் ஏற்கின்றார்.

# 5. இங்கிலாந்தின் அரசியல் கட்சிமுறை

உலகில் பல்வேறு அரசியல் நிறுவனங்களை அறிமுகப்படுத்திய நாடு இங்கிலாந்தாகும். பாராளுமன்றம், அமைச்சரவை போன்ற நிறுவனங்களை இங்கிலாந்தே முதன்முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தியிருந்தது. இதேபோல் அரசியல் கட்சிகளையும் முதன் முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு இங்கிலாந்தேயாகும். இதனால் அரசியல் கட்சிகளின் தாயாகவும் இங்கிலாந்து வர்ணிக்கப்படுகின்றது.

இங்கிலாந்திலுள்ள அரசியல் கட்சிகள் வரலாற்று ரீதியாக வளர்ச்சி யடைந்த கட்சிகளாகும். நவீன தொழில் அபிவிருத்திகளை இங்கிலாந்து அடைந்த போது அரசியல் யாப்பு தொடர்பாக இரு பிரிவினர் அரசியல் வாதிகளிடையே காணப்பட்டனர். ஒரு பிரிவினர் பழமையைப் பேணுபவர்களாகவும், மற்றைய பிரிவினர் பழமையை மறுப்பவர்களாகவும் காணப்பட்டனர். பழமையைப் பேணுகின்றபிரிவினர் பிற்காலத்தில் கன்சவேடிவ் கட்சியாகத் தம்மை மாற்றிக்கொண்டனர்.

பழமையை மறுத்து நவீனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் "விக்கு"கள் (whigs) என அழைக்கப்பட்டனர். இவர்கள் பிற்காலத்தில் தம்மை லிபரல் கட்சியாக மாற்றிக் கொண்டனர்.

கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து தொழிலாளர்களின் தொகை இங்கிலாந்தில் பெருகத் தொடங்கியது. இதன்படி, தொழிலாளர்களின் பிரச்சினை களும் பெருகத் தொடங்கின இதனால் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழிற்கட்சி என்ற பெயரில் ஒரு கட்சி உருவாக்கப்பட்டது.

இங்கிலாந்துக் கட்சி முறையின் புராதன சிறப்பியல்பு அங்கு இருகட்சி முறை நிலவுகின்றமையாகும். அதாவது பல கட்சிகள் நடைமுறையில் செயற்படுகின்ற போதும் இருகட்சிகள் மாத்திரமே அதிகாரத்தினைக் கைப்பற்றக்கூடிய அளவுக்கு செல்வாக்குடைய கட்சிகளாக விளங்குகின்றன. இங்கிலாந்தில் பாராளுமன்ற அரசாங்க முறை சிறப்பாகச் செயற்படுவதற்கும் இவ் இரு கட்சி முறையே துணை புரிகின்றது.

ஆரம்பகாலங்களில் கன்சவேர்டிவ் கட்சியும் லிபரல் கட்சியும் மாறி மாறி அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடிய அளவுக்கு செல்வாக்குடைய கட்சிகளாக விளங்கின. தற்போது கன்சவேர்டிவ் கட்சியும் தொழிற்கட்சியுமே மாறி மாறி ஆட்சியை அமைக்கக்கூடிய அளவுக்கு செல்வாக்குடையனவாக விளங்குகின்றன. தற்போது ஆட்சியிலிருக்கும் கட்சி தொழிற்கட்சியாகும். இதன் தலைவரான ரொனி பிளேயரே நாட்டின் பிரதமராகவும் விளங்குகின்றார்.



இம்மூன்று கட்சிகளையும் விட பொதுவுடைமைக் கட்சி, விவசாயிகள் கட்சி போன்ற கட்சிகளும் நடைமுறையில் செயற்படுகின்றன. ஆனால் இக்கட்சிகள் மிகவும் செல்வாக்குக் குறைந்த கட்சிகளாகும்.

## கன்சர்வேடிவ் கட்சி

### வரலாற்றுப் பின்னணி

இங்கிலாந்தில் அரசர்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே நடைபெற்ற போராட்டங்களின் முடிவில் பாராளுமன்றம் வெற்றியடைந்தது இதன் பின்னர் பாராளுமன்றத்தை சீர்த்திருத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. இக்காலத்தில் தான் டோரிகள் கன்சர்வேடிவ் கட்சியாகவும், விக்குகள் லிபரல் கட்சியாகவும் மாறினர். அரசரை ஆதரித்தவர்கள் டோரிகள் என்றும் பாராளுமன்றத்தினை ஆதரித்தவர்கள் விக்குகள் எனவும் அழைக்கப்பட்டனர்.

1714ம் ஆண்டிலிருந்து விக்கு கட்சியினர் நாட்டினை ஆட்சி செய்த போது டோரிக்கட்சியினர் எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு அரசாங்கத்தின் ஊழல் நடவடிக்கைகளைக் கண்டித்து வந்தனர். 1770ம் ஆண்டில் டோரிகள் ஆட்சியினைக் கைப்பற்றி 1803ம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர். அதன் பின்னர் விக்குகள் ஆட்சியைக்கைப்பற்றினர்.

1830ம் ஆண்டில் விக்குகள் ஆட்சியைக் கைப்பற்றிய போதுதான் சேர் றோபேட் பீல் (Sir Robert Peel) விக் கட்சியை கன்சர் வேடிவ் கட்சியாக மாற்றினார். 1834 றோபேட்பீல் தேர்தல் அறிக்கையினை வெளியிட்டார். அவ் அறிக்கையில் கட்சியின் கொள்கை களை அறிவித்தார் பழைய நிறுவனங்களை அப்படியே தொழுவது என்பது கட்சியின் கொள்கையல்ல. பழையனவற்றில் உள்ள குறைகளை நீக்கி நல்லவற்றைப் பாதுகாப்பதே கட்சியின் நோக்கம் என்றும் குறிப்பிட்டார். மக்கள் எதிர்த்த தானியச் சட்டங்களை பீல் நீக்கினார்.

பீலின் பின்னர் டிசரேலி (Disarali) காலத்தில் கட்சி நன்கு வளர்ச்சியடைந்து வலுப்பெற்றது 1867 இல் இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தினை கன்சர்வேடிவ் கட்சி அரசாங்கம் கொண்டு வந்தது இச் சீர்த்திருத்தச் சட்டத்தினால் வாக்காளர் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்தது. இது கட்சியையும் வலுப்படுத்தியது.

1867ம் ஆண்டில் நாட்டின் பல பகுதிகளில் தனித்தனியாக இயங்கி வந்த தேர்தல் தொகுதி கழகங்கள் யாவும் ஒரு தேசிய கன்சர்வேடிவ் கட்சியாக அமைக்கப்பட்டது. 1870ம் ஆண்டு கட்சிக்கென ஒரு தலைமையலுவலகமும் இலண்டன் நகரில் உருவாக்கப்பட்டது.

ஆங்கிலப் பேரரசு கலையாமல் இருக்க வேண்டுமென்பதும் அரசர், பிரபுக்கள் சபை, திருச்சபை ஆகியன மாறாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதும் கட்சியின் முக்கிய கொள்கையாகும். அதேவேளை முதலாளித்துவ பொருளாதாரமுறை யினையும், தனியார் துறையையும் பாதுகாக்க வேண்டுமென்பதும் கட்சியின் பிரதான கொள்கையாக இருந்தது. இதனால் முதலாளிகளும், பிரபுக்களும் கட்சியில் பெரும்பான்மையான உறுப்பினர்களாக இருந்தனர். அதேவேளை இராணுவ

அதிகாரிகளும் உயர் நடுநிலை வகுப்பார் பலரும் பெண்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்களும் கட்சியின் ஆதரவாளர்களாக விளங்கினர்.

1945இல் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கட்சியின் இளம் உறுப்பினர்களின் வேண்டுகோளுக் கிணங்க 1947இல் கட்சியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. குறிப்பாக பொதுநலக்கொள்கை ஏற்கப்பட்டது. இளம் உறுப்பினர்கள் பொருளாதாரத் துறையில் கட்டுப்பாடற்ற முதலாளித்துவம் கூடாதென்றும் திட்டமிட்ட பொருளாதாரமே வேண்டுமென்றும் கோரிக்கைகளை விடுத்தனர். இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொருளாதாரத்தின் முக்கிய விடயங்களில் அரசு தலையிட்டு ஒழுங்கமைக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது. 1951ம் ஆண்டில் தேசிய பாதுகாப்பிற்கு அடுத்த படியாக வீட்டு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற கொள்கையையும் கட்சி ஏற்றுக் கொண்டது.

## 2ᵇ உலக யுத்தத்திற்குப் பின்னர் கட்சியின் நிலை

இரண்டாம் உலகயுத்தத்தைத் தொடர்ந்து 1945இல் நடைபெற்ற தேர்தலில் கட்சி தோல்வியைச் சந்தித்தது. இத்தேர்தலில் 39.8வீத வாக்குகளையும் 212 ஆசனங்களையும் பெற்றது. இரண்டாம் உலகயுத்தத்தின் போது, பிரதமராகவும் கட்சியின் தலைவராகவுமிருந்த சேர்ச்சிலின் தவறான அணுகுமுறைகளே தோல்விக்குக் காரணம் என கூறப்பட்டது. 1950 இலும் கட்சி தோல்வியைச் சந்தித்தது. எனினும் 1951இல் நடைபெற்ற தேர்தலில் 48வீத வாக்குகளையும் 321 ஆசனங்களையும் பெற்று கட்சி வெற்றியீட்டியிருந்தது. தொடர்ந்து 1955 இல் நடைபெற்ற தேர்தல், 1959 தேர்தல் என்பவற்றில் மிக்மில்லன் தலைமையில் போட்டியிட்டு வெற்றியீட்டியது.

1964 தேர்தல், 1966 தேர்தல் என்பவற்றில் கட்சி தோல்வியைச் சந்தித்தது. அதேவேளை 1970இல் வெற்றியீட்டியது. இதன் பின் 1974 தேர்தலில் தோல்வியைச் சந்தித்து 1983,1987 தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றியினை ஈட்டியிருந்தது. இத்தொடர் வெற்றிக்கு மார்கிரட் தட்சரின் சிறந்த தலைமையே காரணமெனக் கூறப்படுகிறது. மார்க்கிரெட் தட்சரைத் தொடர்ந்து ஜோன் மேஜர் கட்சித் தலைமையை ஏற்றார். அவரது தலைமையில் 1992 தேர்தலில் மட்டுமே கட்சி வெற்றியீட்டியது.

1992 தேர்தலுக்குப் பின்னர் 1997, 2001,2005 தேர்தல்களில் கட்சி தொடர்ச்சியாக தோல்வியையே சந்தித்து வந்துள்ளது. கட்சியின் வாக்கு வீதம், ஆசன எண்ணிக்கை என்பவற்றிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. ஜோன் மேஜரைத் தொடர்ந்து வில்லியம் ஹக், (William Hague) மைக்கல் ஹோவாட் (Michall Howard) ஆகியோர் தலைமையில் கட்சி போட்டியிட்ட போதும் தொடர்ச்சியாக தோல்வி களையே சந்தித்து வருகிறது. கட்சியின் ஆதரவாளர்கள் பலர் லிபரல் கட்சியின் கூட்டணியில் இணைந்தமையினால் தோல்வியேற்பட்டதாக கூறப்படுகிறது.


தற்போது, தொழிற்கட்சியின் செல்வாக்கும் வீழ்ச்சியடைந்து வருவதால் எதிர்காலத்தில் கட்சியின் செல்வாக்கில் மாற்றம் ஏற்படலாம். 2005 தேர்தலில் கட்சி 32.3 வீதமான வாக்குகளையும் 198 ஆசனங்களையும் மட்டுமே பெற்றிருந்தது.

## கட்சி அமைப்பு

### 1. தேர்தல் தொகுதி கழகங்கள் (Constituency Associations)

கன்சர்வேடிக் கட்சிக்கு நாடெங்கும் கிளைகள் உள்ளன குறிப்பாக ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் கிளைகள் அமைக்கப்படுகின்றன. கட்சியின் தலைமை அலுவலகம் இடும் கட்டளைகளின் படி அவை செயற்படுகின்றன. இத்தொகுதிக் கிளைகள் தேர்தல் தொகுதிக் கழகங்கள் என அழைக்கப் படுகின்றன.

இத்தேர்தல் தொகுதிக் கழகங்கள் தத்தம் தேர்தல் தொகுதிகளில் தேர்தல் பிரசாரங்களை மேற் கொள்ளுதல், தேர்தலுக்கு ஆட்களைத் தெரிவு செய்தல், நிதிதிரட்டுதல், தமக்கான நிர்வாகக் குழுவினை தெரிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றன.

ஒவ்வொரு தொகுதிக் கழகமும் தனக்கென ஒரு நிருவாகக் குழுவினைக் கொண்டிருக்கும். தேசிய ஒன்றியத்தின் சம்மதத்தோடு தொகுதிக்கழகம் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்.

தொகுதிக் கழக நிர்வாகக் குழுக்களில் கழக அலுவலர்கள், வட்டார பிரதிநிதிகள், வாக்களிப்பு வட்டக்கிளைகளின் பிரதிநிதிகள் கன்சர்வேடிவ் இளைஞர்கள், சந்தா செலுத்தும் கன்சர் வேடிவ் மன்றங்கள் போன்றன அங்கம் வகிக்கின்றன.

பெண்கள் இளம் கன்சர்வேடிவ்கள், கல்விக்கழகங்கள், தொழிற்சங்கங்கள் உள்ளூராட்சி அரசாங்கங்கள் எனப் பல்வேறு உட்குழுக்களை ஒவ்வொரு நிர்வாகக் குழுவும் கொண்டிருக்கும்.

### 2. தேசிய யூனியனின் மத்திய கழகம்

கட்சியின் தலைவரும், அலுவலகர்களும் கட்சியின் பராளுமன்ற வேட்பாளராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும் தொகுதிக் கழகம் ஒவ்வொன்றிலு மிருந்து நான்கு பிரதிநிதிகளும் இதில் அங்கம் வகிக்கின்றனர். ஏறத்தாழ 3500பேர் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

இதுவே கட்சியின் தலைமை அமைப்பாக இருக்கின்றது. இதன் தொகை அதிகமாக இருப்பதனால் கட்சியின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய நிர்வாகக் குழு ஒன்று தெரிவு செய்யப்படுகின்றது.

## மத்திய நிர்வாகக் குழு

150 பேர் இதில் அங்கத்தவர்களாக உள்ளனர். இதில் தலைவர்களும் முதன்மையான அலுவலகர்களும் அடங்குவர். தேசியயூனியன் மத்திய கழகத்தின் தீர்மானங்களை இதுவே நடைமுறையில் நிறைவேற்றுகின்றது.

## தலைவர்

கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்களும், வேட்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களும், பிரபுக்களும் தொகுதி கழக உறுப்பினர்களும் இதை உறுதிப்படுத்த வேண்டும். தலைவரின் பதவிக்காலம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. பதவியிலிருந்து விலகும் வரை தலைவர் பதவி வகிக்கக் கூடியவராக உள்ளார். கட்சித் தலைவர் மத்திய அலுவலகத்தின் தலைவராக இருக்கின்றார். கட்சி தேர்தலில் வெற்றி பெற்றால் இவரே பிரதமராவார். கட்சித் தலைவர் மிகவும் செல்வாக்குப் பெற்றவராக இருப்பார். கட்சிக்காக நிதியைத் திரட்டுவதும் இவரது பொறுப்பாகும். கட்சியின் கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் இவரே வரையறை செய்கின்றார்.

## தலைமை அலுவலகம்

1870ம் ஆண்டு கட்சியின் தலைவராக இருந்த டிசரேலியால் இது நிறுவப்பட்டது. கட்சித் தலைவரின் நெருக்கமான கட்டுப்பாட்டின் கீழ் இது செயல்படுகின்றது. தேர்தல் செயற்பாட்டிற்கான எல்லா ஏற்பாடுகளையும், வளங்களையும், பணியாட்களையும் இது ஒருங்கிணைக்கின்றது. கட்சியின் பொதுக் கூட்டங்களுக்கும், தொகுதிக் கழகங்களுக்கும் இது பேச்சாளர்களை ஒழுங்கு செய்கின்றது. பொதுப் பிரச்சினைகளை ஆய்வு செய்து தகவல்களை வழங்குகின்றது. தேசிய மட்டத்தில் கட்சியின் நிதிப் பொறுப்பினை இது ஏற்றுச் செயற்படுகின்றது. தேர்தல் செலவுகளுக்காக தொகுதிகளுக்கு பண உதவி வழங்குகின்றது. அமைப்பாளர் களையும் ஊதியம் பெறும் முகவர்களையும் இது தெரிவு செய்கின்றது.

## தொகுதி முகவர்கள்

தொகுதியில் முழுநேரம் பணி புரிவதற்காக கட்சியின் அலுவலர்களாக அமர்த்தப்பட்டவர்களே இவர்களாவர். இவர்கள் மத்திய அலுவலகத்தால் பயிற்சி வழங்கப் பெற்றவர்கள் ஆவர். இவர்களின் செயல் திறமைகளை மத்திய அலுவலகம் காலத்திற்கு காலம் ஆய்வு செய்கின்றது. பெண் முகவர்களும் பணி புரிகின்றனர்.

தொகுதியின் அரசியல் பணியினை ஒழுங்கமைத்தல், ஊதியம் பெற்றுச் செயலாற்றும் கட்சித் தொண்டர்களுக்கு வழிகாட்டுதல், வேட்பாளர்களின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல் போன்றன இவர்களின் பணிகளாகும்.



## கட்சியின் ஆண்டு மாநாடு

தேசிய யூனியனின் மத்திய கழகத்தின் எல்லா உறுப்பினர்களும் தொகுதி முகவர்களும், ஒவ்வொரு தொகுதிக் கழகங்களிலிருந்து அனுப்பப்பட்ட மூன்று பிரதிநிதிகளும் கட்சியின் ஆண்டு மகாநாட்டில் கலந்து கொள்கின்றனர். சுமார் 5600 பேர் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். பல்வேறு குழுக்களின் பிரதிநிதிகளாக வருவோர் தீர்மானங்களைக் கொண்டு வருகின்றனர். மாநாடு இவற்றினை விவாதிக்கின்றது. கட்சித் தலைவர்கள் இவற்றினைப் பற்றிய தமது கருத்துக்களை எடுத்துரைக்கின்றனர்.

1965இன் பின்னர் தலைவரை தெரிவு செய்வதில் புதிய முறை பின்பற்றப் படுகின்றது. முதல் வாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதோடு இரண்டாவதாக வருகின்ற 15% வாக்குகள் கூடுதலாக பெறுதல் வேண்டும்.

அவ்வாறு பெறாவிடின் இரண்டாம் வாக்கெடுப்பிற்கு விடப்படுதல் வேண்டும் அதன் போது 51% வாக்குகள் பெறுதல் வேண்டும். வெற்றி பெறாவிடின் மூன்றாவது வாக்கெடுப்பில் விருப்புவாக்கெடுப்பு முறை பின்பற்றப்படும்.

தலைவர் தெரிவில் அதிகளவு ஜனநாயகத்தன்மையை பேணுவதற்காகவே இம்முறை பின்பற்றப் படுகின்றது.

## கன்சர்வேடிவ் கட்சியின் கொள்கைகள்

(1) நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணுதல்

(2) நீண்டகாலமாக உள்ள முடியாட்சி, பிரபுக்கள் சபை, திருச்சபை என்பவற்றைப் பேணுதல்

(3) காலனித்துவ ஆட்சியைப் பலப்படுத்துதல், பிற்காலத்தில் காலனித்துவ நாடுகள் சுதந்திரமடைந்துள்ளதால் அதன் அடையாளமாகவுள்ள பொதுநலவாய நாடுகளின் அமைப்பினைப் பேணுதல்.

(4) பொருளாதாரத்தில் அரச தலையீட்டினைத் தவிர்த்தல், பிற்காலத்தில் குறைந்தளவிலான தலையீட்டினை ஏற்றுக் கொள்ளுதல்.

(5) தேசியமயமாக்கத்தை எதிர்த்தல், தொழிற்கட்சி தேசியமயமாக்கிய தனியார் நிறுவனங்களை மீண்டும் உதவியாளர்களிடமே ஒப்படைத்திருந்தது.

(6) புரட்சி வழிமுறையில்லாத மாறுதல்களையும் முன்னேற்றங்களையும் ஆதரித்தல்

(7) வெளிநாட்டுக் கொள்கையில் முதலாளித்துவ நாடுகளோடு நல்லுறவுகளைப் பேணுதல்.

(8) ஆசிய நாட்டவர்கள் இங்கிலாந்தில் குடியேறுவதை எதிர்த்தல்.

(9) தென் ஆபிரிக்க பொருளாதாரத் தடையினை எதிர்த்தல்.

(10) ஜோன்மேயர் காலத்தில்ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதலுக்கு ஆதரவு வழங்குதல்.

(11) சொத்துடைமையுள்ள மக்களாட்சியை ஆதரித்தல்

(12) முதலாளிகள் தொழிலாளர்கள் இடையே கூட்டுறவினை வளர்ப்பதினூடாக நாட்டினை அபிவிருத்தி செய்தல்.

(13) சுதந்திரமான தொழிலுரிமையை ஆதரித்தல்

(14) பொருளாதாரத்தில் அரசு-வரையறுக்கப்பட்ட பங்கு வகிப்பதனை ஆதரித்தல்.

(15) உயர்ந்தோர் குழாம் ஆட்சியை ஆதரித்தல்

## தொழிற்கட்சி

### வரலாற்றுப்பின்னணி

இங்கிலாந்தில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியில் தொழிற்கட்சி தோன்றியதெனலாம். கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து தொழிலாளர்கள் பெருகவே அவர்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சங்கங்கள் உருவாகின. இத்தொழிற்சங்கங்களே பின்னர் தொழிற்கட்சி உருவாவதற்கு காரணமாக அமைந்தன.

1900 வரை பல்வேறு தொழிற்சங்கங்கள் வளர்ந்திருந்த போதும் தொழிற்கட்சி உருவாகியிருக்க வில்லை. இந்நிலையில் சமதர்மஜன நாயக கூட்டமைப்பு (Social Democratic Federation )(1881), பேபியன் சங்கம் (The Fabbiam Society ), (1883) சுதந்திர தொழிற்கட்சி (Independanyt Labour Party 1893) ஆகிய 3 சோசலிச அமைப்புகளும் 64 தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு தமது பிரதிநிதி களையும் இணைத்து தொழிலாளர் பிரதிநிதித்துவக் குழுவை அமைத்தனர். (Labour Representative Committee) இக்குழுவே 1906இல் தொழிற்கட்சி எனப் பெயரிடப்பட்டது. தொழிற்கட்சி அமைப்பதில் ஜோர்ஜ் பேர்னாட்சோ, Keirhaide, ராம்ஸே மக்டொனால்ட் ஆகியோர் முன்னணியில் நின்றனர். ஆரம்பத்தில் தொழிற்சங்கங்களும் சுதந்திர தொழிற்கட்சியும் பேபியன் கழகமும் மட்டும் அங்கத்துவம் பெற்றநிலை மாறி தொழிற்சங்கங்கள், சமதர்ம கழகங்கள்,கூட்டுறவுக் கழகங்கள், தேர்தல் தொகுதி கிளைக் கழகங்கள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டதாக பிற்காலத்தில் வளரத் தொடங்கியது.

1906ம் ஆண்டு தேர்தலில் முதன் முதலாக 50 பேர் தேர்தலில் போட்டியிட்டு 29 பேர் வெற்றி பெற்றனர்.

1922ம் ஆண்டிலிருந்து தொழிற்கட்சி, லிபரல் கட்சியின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. 1924ம் ஆண்டு ஜனவரியில் ராம்ஸே மக்டொனால்ட் தலைமையில் தொழிற்கட்சி முதன்முதலாக அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டது. 1923 தேர்தலில் கட்சி 191இடங்களில் வெற்றி பெற்றது எனினும் ஆட்சியமைக்ககூடிய



பெரும்பான்மை கிடைக்கவில்லை. கன்சர் வேடிவ் கட்சி ஆட்சி அமைத்திருந்தது. எனினும் 1924 இல் தொழிற் கட்சியினதும். லிபரல் கட்சியினதும் கூட்டான நடவடிக்கையினால் கன்சர் வேடிவ் கட்சி அரசாங்கம் கவிழ்ந்தது. இங்கிலாந்து மரபுக்கேற்ப பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியினை அரசாங்கத்தை அமைக்கும் படி அரசர் கேட்டுக் கொண்டதால் கட்சி ராம்சே மக்டொனால்ட் தலைமையில் முதலாவது அரசாங்கத்தினை அமைத்தது. எனினும் தொடர்ந்து ஆட்சி புரியும் நிலை இல்லாததினால் அரசாங்கம் கவிழ்ந்தது. இக்காலத்தில் இரும்பு, நிலக்கரி, ரயில்வே போன்ற முக்கிய தொழில்களை அரசு அரசுடமையாக்கி இருந்தது. இங்கிலாந்தில் வாழ்ந்த சாதாரண, நடுத்தர வர்க்கத்தினரும் தொழிலாள வர்க்கத்தினரும் கட்சியில் பெரும் எண்ணிக்கையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்தனர். எனினும் உயர்நிலை வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்தனர். புதிதாக வாக்குரிமை பெற்ற பெண்களும் அதிகளவில் அங்கத்தவர்களாகச் சேர்ந்தனர். கூட்டுறவு அமைப்புக்களிலிருந்தும் உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையில் இணைந்தனர்.

1931ம் ஆண்டு கட்சியில் பிளவு ஏற்பட்டது. இதன் பின்னர் சோசலிசச் செயற்பாட்டில் கட்சி அதிக அக்கறை காட்டியது. ஆரம்பத்தில் ஸ்கொட்லாந்திலும் வேல்ஸ் இலும் லிபரல் கட்சி ஆதரவு பெற்றிருந்தது. பிற்காலத்தில் இவ்விரு பிரதேசங்களிலும் தொழிற்கட்சி செல்வாக்குப் பெற்றது. முழு இங்கிலாந்திலும் வலிமையான கன்சர்வேடிக் கட்சிப் பிரதேசங்கள் இருப்பது போல தொழிற்கட்சியை வலிமையாக ஆதரிக்கும் பிரதேசங்களும் உருவாகின. இங்கிலாந்தின் வடக்கு, நடுப்பகுதிகள் தொழிற் கட்சிக்கு பெரும் ஆதரவுத் தளங்களாக விளங்கின. தெற்குப் பகுதியிலும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள இடங்களில் தொழிற்கட்சி செல்வாக்குப் பெற்றது.

### 2ம் உலக யுத்தத்தின் பின்னர் கட்சியின் நிலை

2ம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து மீண்டும் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. இவ்வாண்டு நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியின் முக்கிய தலைவரான சேர்ச்சிலைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்தது. இத்தேர்தலில் தொழிற்கட்சி சி.அட்லி (C.Aattlee) தலைமையில் போட்டியிட்டு 47.8% வாக்கு-களையும் 393 ஆசனங்களையும் பெற்று பெருவெற்றியீட்டியது.. கன்சர் வேடிவ் கட்சியினை விட 147 ஆசனங்களை அதிகமாகப் பெற்றிருந்தது. 2ம் உலக யுத்த காலத்தில் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக இருந்த சேர்ச்சிலின் தவறான அணுகுமுறைகளே அக்கட்சியின் தோல்விக்கு காரணம் எனக் கூறப்பட்டது.

1950ம் ஆண்டு தேர்தலில் கட்சி 46.1% வாக்குகளையும் 315 ஆசனங் களையும் மட்டுமே பெற்றிருந்தது எனினும் ஆறு ஆசனங்களை மட்டும் அதிகளவில் பெற்றிருந்ததினால் ஆட்சியினை அமைத்தது. அவ் ஆட்சி நீடிக்கவில்லை. கட்சி சோசலிச செயற்பாட்டில் தீவிரமாக இறங்கவில்லை எனக்கூறி ஒரு பிரிவினர் கட்சியை விட்டு 1949 இல் வெளியேறியமையினாலேயே கட்சியின் செல்வாக்கு குறைந்திருந்தது.

1951 தேர்தலில் கட்சி தோல்வியைச் சந்தித்தது. ஆனாலும் வாக்கு வீதத்தில் கன்சர்வேடிவ் கட்சியினை விட கூடுதலான வாக்கு வீதத்தினைப் பெற்றிருந்தது. அதாவது 48.8% வாக்குகளையும் 295 ஆசனங்களையும் பெற்றிருந்தது. அதேவேளை கன்சர்வேடிவ் கட்சி 48% வாக்குகளையும் 321 ஆசனங்களையும் பெற்றிருந்தது.

தொடர்ந்து 1955, 1959, தேர்தல்களிலும் கட்சி தோல்வியினையே சந்தித்தது இவ்விரு தேர்தல்களிலும் கட்சி H.ஹெயிட்ஸ்கில் (H.Gaitskell) தலைமையில் போட்டியிட்டிருந்தது. 1955 தேர்தலில் 46.4% வாக்குகளையும் 277 ஆசனங்களையும் பெற்றிருந்தது. 1959 தேர்தலில் 43.8 வீதவாக்குகளையும் 258 ஆசனங்களையும் பெற்றிருந்தது.

1964 தேர்தலின் போது H.வில்சன் தலைமையில் போட்டியிட்டு மீண்டும் வெற்றி பெற்றது. இத்தேர்தலில் 44.1வீத வாக்குகளையும் 317 ஆசனங்களையும் பெற்றிருந்தது. ஐந்து ஆசனங்களை மட்டுமே பெரும்பான்மை யாகப் பெற்றிருந்தது. இதனால் ஆட்சி நீடிக்கவில்லை. உட்கட்சிப் பிரச்சினையால் பலர் வெளியேறினர். 1966ம் ஆண்டு மீண்டும் தேர்தல் நடைபெற்றது.

1966ம் ஆண்டு தேர்தலில் தெளிவான வெற்றியையும் தெளிவான பெரும்பான்மையையும் பெற்று கட்சி ஆட்சி அமைத்தது. தேர்தலில் 47..9 வீதவாக்குகளையும் 363 ஆசனங்களையும் பெற்றிருந்தது. எனினும் 1970ம் ஆண்டு தேர்தலில் 43 வீதவாக்குகளையும் 287 ஆசனங்களையும் பெற்று தோல்வி யடைந்தது.

1970 தேர்தலைத் தொடர்ந்து கட்சி மீண்டும் பிளவுபட்டதனால் 1974 தேர்தலில் வீழ்ச்சியைச் சந்திக்க நேரிட்டது. எனினும் ஆகக் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற வகையில் சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்த போதும் அது நீடிக்கவில்லை. அதே வருடம் ஒக்டோபரில் திரும்பவும் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் 4 பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சியைக் கைப்பற்றியது.

1979 தேர்தலின் போது கட்சி (J.Callaghan) J.கோலாகன் தலைமையில் போட்டியிட்டு தோல்வியைச் சந்தித்தது. கட்சியின் பொருளாதாரத் திட்டங்கள் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்தமையும் பல்வேறு அமுக்கக் குழுக்களின் வளர்ச்சியும் மத்தியதரவர்க்கத்தின் வளர்ச்சியும் தோல்விக்குக் காரணமாகக் கூறப்பட்டது. தொடர்ந்து 1983 தேர்தல், 1987 தேர்தல், 1992 தேர்தல் என பலதேர்தல்களில் கட்சி தொடர்ச்சியாக தோல்வியைச் சந்தித்தது. இதன் பின்னர் கட்சி தீவிர இடதுசாரித் தன்மையிலிருந்து மத்திய இடது தன்மையை எடுக்கத் தொடங்கியது.

1997ம் ஆண்டுத் தேர்தலின் போது கட்சி டொனி பிளேயர் தலைமையில் போட்டியிட்டு மிகப்பெரிய வெற்றியை ஈட்டியது. இத்தேர்தலில் 43.2 வீதவாக்கு களையும் 418 ஆசனங்களையும் கட்சி பெற்றது. தொடர்ந்து 2001,2005 தேர்தல் களிலும் கட்சி டொனி பிளேயர் தலைமையில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளது. ஆனாலும் கட்சியின் வாக்கு வீதமும் ஆசனங்களும் இரு தேர்தல்களிலும் குறைவடைந்தே வந்துள்ளன. 2001ம் ஆண்டுத் தேர்தலில் 40.7% வாக்குகளையும்



412 ஆசனங்களையும் பெற்ற கட்சி, 2005ம் ஆண்டுத் தேர்தலில் 35.2% வாக்கு களையும் 355 ஆசனங்களையுமே பெற்றது. தொழிற்கட்சி ஆதரவாளராக இருந்த பலர் லிபரல் கட்சியின் கூட்டணியில் இணைந்தமையாலேயே கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்ததாகக் கூறப்படுகின்றது. அதேவேளை கன்சர்வேட்டிவ் கட்சியின் செல்வாக்கும் பெரியளவுக்கு வளராததால் கட்சி அரசாங்கத்தை அமைக்கக் கூடியதாக இருந்தது.

தற்போது கட்சியின் செல்வாக்கு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதாகவே கூறப்படுகிறது. தொழிற்கட்சி 3 தடவை தொடர்ந்து ஆட்சியிலிருக் கின்ற நிலையும் ஈராக் யுத்தத்திற்கு அரசாங்கம் ஆதரவு கொடுத்தமையால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியும் வீழ்ச்சிக்கு காரணமாக கூறப்படுகின்றது.

## தொழிற்கட்சியின் அமைப்பு

நாடு முழுவதிலும் தொழிற்கட்சிக்கு கிளை அமைப்புகள் உள்ளன. தேர்தல் தொகுதிகளில் அமைக்கப்படுகின்ற கிளைகள் கட்சியின் முக்கிய அமைப்பாக உள்ளன. 1918 இற்குப் பின்னர் ஒவ்வொரு தொகுதியிலும் தொழிற்கட்சியின் கிளைகள் பல அமைப்புக்களின் கூட்டாக விளங்கியது. தொகுதியிலுள்ள தொழிற்கட்சியின் தனிப்பட்ட உறுப்பினர்கள், இளம் சோசலிஸ்டுக்கள், தொழிற்சங்கங்களின் தொகுதிக் கிளைகள், சோசலிஸச் சங்கங்களின் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பன ஒவ்வொரு தொகுதிக் கிளையிலும் அங்கம் வகித்தன. இவ்வாறு இணைக்கப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் தொகுதிக் கிளையின் பொதுக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இப்பொதுக் குழுவே தொகுதிக் கிளையின் செயற்குழுவையும் அலுவலர்களையும் தெரிவு செய்கின்றது.

ஒவ்வொரு தொகுதிக் கிளையும் மாதமொரு தடவை கூட்டங்களைக் கூட்டுகின்றது. இத்தொகுதிக் கிளைகளே பாராளுமன்றத்துக்கும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. இவர்கள் தேர்ந்தெடுத்த வேட்பாளர்களை தேசியச் செயற்குழு அங்கீகரித்த பின்பே அவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும். நிதிதிரட்டும் பணிகளையும் தொகுதிக் கிளைகள் மேற்கொள்ளுகின்றன. தொகுதிக் கிளைகள் எப்போதும் தலைமை அலுவலகத்தோடு தொடர்புபட்டதாக இருக்கின்றன. தொகுதிக் கிளையின் முக்கிய அலுவலராக தொகுதிக் கிளையின் செயலாளர் விளங்குவார்.

### கட்சியின் மகாநாடு :

கட்சியின் மகாநாடு தான் கட்சியின் தலைமை பெற்ற நிறுவனமாகும். ஆண்டு தோறும் கட்சி மாநாடு கூடுகின்றது. கட்சி மாநாட்டுக்கு தொகுதிக் கிளைக் கழகங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அனுப்புகின்றன. ஏறத்தாழ 1100 பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்து கொள்கின்றனர். கட்சியின் பொதுவான கொள்கையை மகாநாடே முடிவு செய்கின்றது. கட்சியின் தேசிய செயற் குழுவினையும் மாநாடே தெரிவு செய்கின்றது.

## தேசிய செயற்குழு :

தேசிய செயற்குழுவில் 28 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் 12 பேரை தொழிற் சங்கங்களும் 7 பேரை தொகுதிக் கிளைக் கழகங்களும் 1 உறுப்பினரை கூட்டுறவுச் சங்கங்களும் தேர்தெடுக்கின்றன. மகாநாட்டின் எல்லா உறுப்பினர்களும் 8 பெண் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். கட்சியின் தலைவரும் துணைத் தலைவரும் பதவிவழி உறுப்பினராக உள்ளனர். அதே வேளை கட்சியின் பொருளாளராகிய மற்றொரு உறுப்பினரை கட்சியின் மகாநாடு தேர்ந்தெடுக்கின்றது.

தேசிய செயற்குழு மாதம் ஒரு தடவை கூடுகின்றது. கூட்டம் 2 அல்லது 3 நாட்கள்வரை நீடிப்பதும் உண்டு. கட்சிக் கொள்கைகளை உருவாக்குவதில் இதுவே அதிக செல்வாக்குச் செலுத்துகிறது. கட்சியின் ஆண்டு மகாநாட்டு முடிவுகளுக்கு விளக்கம் கொடுத்தல், செயற்படுத்தல், கட்சிக்கான நிதிதிரட்டுதல், பாராளுமன்றக் கட்சியோடு தொடர்பு கொள்ளுதல், கிளைச் சங்கங்களை மேற்பார்வை செய்தல், கட்சியின் ஒழுங்கு முறையைச் செயற்படுத்தல் போன்றன இதன் பிரதான பணிகள் ஆகும்.

## தலைவர் :

கட்சியின் பாராளுமன்றக் குழுவால் தலைவர் ஓராண்டு பதவிக் காலத்துக்கென தேர்ந்தெடுக்கப்படுவார். ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கமாகும். இங்கிலாந்து அரசியலில் கட்சித் தலைவர் பெரும் செல்வாக்குடையவராக விளங்குகின்றார். எனினும் கன்சர் வேடிவ் கட்சியின் தலைவரைப் போல இவர் முதன்மையான இடத்தில் இருக்கின்றாரெனக் கூறமுடியாது. கட்சியின் முக்கியமான கொள்கைகளைத் தீர்மானிப்பதில் இவரே பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றார்.

## கட்சியின் தலைமை அலுவலகம் :

கட்சிப் பொதுச் செயலாளரின் மேற்பார்வையில் தலைமை அலுவலகம் செயற்படுகின்றது. பொதுச்செயலாளரை தேசிய செயற்குழுவே தெரிவு செய்கின்றது. கட்சியின் நிதி ஆராய்ச்சி, சர்வதேச விவகாரங்கள்,பெண்களின் அமைப்புக்கள், செய்தித்தாள்கள், விளம்பரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பணிகளில் செயலகம், தலைமை அலுவலகம் அதிக தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது. அமைப்பு பேச்சாளர்களை ஒழுங்கு செய்தல், தேர்தல் முகவர்களுக்குப் பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்களில் தலைமை அலுவலகம், தொகுதிக் கிளைக் கழகங்களுக்கு உதவி அளிக்கின்றது.



## கட்சியின் கொள்கைகள் :

(1) இங்கிலாந்தில் ஒரு தொழிலாளர் ஆட்சியைக் கொண்டு வருதல்.

(2) முக்கியமான தொழில் நிறுவனங்களை தேசியமயமாக்குதல் இதனடிப்படையில் 1945,1951 காலப்பகுதியில் இளமன்ட் அட்லி பிரதமராக இருந்த போது நிலக்கரிச் சுரங்கங்கள், போக்குவரத்து, சக்திவளம், வங்கிகள், கப்பல் கட்டுதல் போன்றன தேசியமயமாக்கப்பட்டன.

(3) சமூக சேவைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.இதனூடாக குறிப்பாக தொழிலாளர் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்தல்

(4) உலகின் அணு ஆயுத குறைப்பினை மேற்கொள்ளுதல்

(5) விளிம்பு நிலை மக்களாக வாழ்கின்ற கறுப்பர்கள், பெண்கள், ஆசிய நாட்டவர், தொழிலாளர் என்போரின் நலன் பேணல்.

(6) காலனித்துவ நாடுகளின் கோரிக்கைகள் தொடர்பாக நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்தல்

(7) ஜனநாயக சோசலிசத்தை இலக்காகக் கொண்டிருத்தல்

(8) குடியாட்சித் தத்துவத்தை அரசியலிலிருந்து பொருளாதாரத்துக்கு விரிவாக்குதல்.

(9) கூட்டுறவு முறையை அபிவிருத்தி செய்தல்.

(10) தனியார் நிறுவனங்களையும் பொருளாதார நிறுவனங்களையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல்.

(11) முக்கிய தொழிற்துறைகள் தவிர்ந்த ஏனையவற்றை மக்களிடம் விட்டுவிடுதல்

(12) பிரபுக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைக் குறைத்தல்

(13) உலக நாடுகளிடையே கூட்டுறவை வளர்த்தல்.

(14) உலக நாடுகளிடையே அமைதி பேணப்படுவதுடன் அதற்கேற்ற வகையில் ஐ.நா.சபையை வலுப்படுத்தல்

(15) முன்னேறிய நாடுகள் வறிய நாடுகளின் வளர்ச்சிக்கு உதவுதல்.

(16) அணுவாயுதக் கருவிகளை செய்வதற்கு அரசாங்கப்பணம் செலவிடப் படுவதைத் தடுத்தல்.

(17) பொதுப்பள்ளி முறைக்கு ஆதரவளித்தல்

(18) சேரிகளை ஒழித்தல், தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளை அளித்தல்.

(19) அரசுடைமையாகாத தொழிற்சாலைகள், சேவைத்துறைகளின் முகாமைத்துவத்தில் தொழிலாளர்களும் பங்கு பெறுதல்

(20) கட்டாயக் கல்வியை இலவசமாக வழங்குதல்

ஒவ்வொரு தொகுதியும் வட்டாரங்கள் எனப்படும் சிறு சிறு பிரிவுகளாக பாகுபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வட்டாரக்குழுவுள்ளது. தனி உறுப்பினர்கள் தொகுதி மட்டத்தில் ஒன்று கூடாமல் வட்டாரக் குழுக்களில் அங்கம் வகிப்பதனூடாகவே கட்சி நடவடிக்கைகளில் பங்கு பெறுகின்றனர்.

## லிபரல் கட்சி

200 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தின் தனிப்பெரும் கட்சியாகத் திகழ்ந்த "விக்" கட்சியே நாளடைவில் லிபரல் கட்சியாக மாற்றம் பெற்றது. லிபரல் கட்சியாக மாற்றம் பெற்ற பின்னரும் நீண்டகாலம் வலிமையான கட்சியாக விளங்கியிருந்தது. 1714ஆம் ஆண்டிலிருந்து 1762ஆம் ஆண்டு வரையும், 1830ஆம் ஆண்டிலிருந்து 1874ஆம் ஆண்டுவரையிலும் ஆளும் கட்சியாகத் தொழிற்பட்டது. நாட்டில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடாது எனக் கூறி வந்த டோறிக் கட்சியினருக்கெதிராக அரசியலமைப்பும் அரசபதவியும் ஏனைய நிறுவனங்களும் மாற்றப்படத்தக்கவையே என்றும் மக்களின் எண்ணங்களுக்கேற்றவாறும் மக்களின் நன்மை கருதியும் அவற்றை மாற்றுவதே முறை என்றும் இக்கட்சியினர் கூறிவந்தனர். பாராளுமன்றத்தின் இறைமை, தடையற்ற வாணிபக் கொள்கை, அடிநிலை மக்களின் உயர்வு போன்ற தாராளக் கொள்கைகளை இக்கட்சியினர் ஆதரித்தனர்.

ஆரம்பகாலங்களில் பின்பற்றிய பல கட்சிக் கொள்கைகளை இக் கட்சியினர் தற்போது கைவிட்டு விட்டனர். தாராள வர்த்தகக் கொள்கையை தற்போதும் பின்பற்றினாலும் தலையிடாக் கொள்கையினை இவர்கள் கைவிட்டு விட்டனர். வர்த்தகத்தினை தனியே விட்டு விட விரும்பினாலும் தொழிற்சாலைகளை தனியே விட இவர்கள் தற்போது விரும்புவதில்லை. குறைந்த பட்ச ஊதியத்தினாலும், சமூகக் காப்புறுதியினாலும் தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என இவர்கள் கூறுகின்றனர். செல்வந்தர்களின் தனியுரிமையிலும் வறியவர்களின் கூட்டாண்மையிலும் இவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக விளங்குகின்றனர். கன்சர்வேடிவ் கட்சியின் கொள்கைக்கும் இடைப்பட்டதான ஒரு கொள்கையினைப், பின்பற்றவே இவர்கள் விரும்பினர்.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னர் சமூகத்தின் பரவலான பிரிவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதில் அங்கம் வகித்தனர். தொழில், வர்த்தக பிரிவினரில் ஒரு கணிசமான பகுதியினரும். நகரங்களிலுள்ள, சிறிய வர்த்தகர்களும். விவசாயிகளில், கணிசமான பகுதியினரும் நகரத் தொழிலாளர்களில் பெரும் பகுதியினரும் இக் கட்சியில் உறுப்பினராகினர். போருக்கு பின்னரான இருபத்தைந் தாண்டுகளில், இவர்களில் பெரும்பான்மையினர் மற்றைய இரு கட்சிகளிலும் சேர்ந்து கொண்டுள்ளனர். ஆங்கிலத் திருச்சபையோடு சேராத மதப்பிரிவினர் அதிகளவில் இக்கட்சியை ஆதரித்தனர்.



## இரண்டாம் உலக யுத்தத்தின் பின் கட்சியின் நிலை

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 1945 இலிருந்து 1974 வரை கட்சியின் செல்வாக்கு அதிகமான காலங்களில் சரிந்து கொண்டே சென்றது. 1945, 1950, 1955, 1959, 1964,1966,1970 தேர்தல்களில் கட்சி முறையே 12,9,6,6,9,12,6 என்ற வகையில் ஆசனங்களையும் 1.9%, 1.4%, 1%, 1%, 1.4%, 1.9%, 1% என்ற வகையில் வாக்கு வீதங்களையும் பெற்றிருந்தது.

1974, இல் சிறிது வளர்ச்சி கண்டிருந்தாலும் 1979, 1983, 1987 தேர்தல்களில் சரிவையே கண்டிருந்தது. 1974 தேர்தலில் 14 ஆசனங்களையும் 2.2% வாக்கு வீதத்தையும் பெற்றிருந்த கட்சி பின்னர் முன்னைய நிலையினை விட வீழ்ச்சிய டைந்தது.

1992 தேர்தலில் லிபரல் கூட்டணி அமைத்து போட்டியிட்டதைத் தொடர்ந்து முன்னேற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1992, 1997, 2001, 2005 தேர்தல்களில் 20, 46, 52,62 என்கின்ற வகையில் ஆசனங்களையும் 3.1%, 7%,7.9%, 9.6%, என்கின்ற வகைகளில் வாக்கு வீதத்தினையும் பெற்றிருந்தது. அதாவது தனது ஆசனங் களையும், வாக்கு வீதங்களையும் பல மடங்கு அதிகரித்துக் கொண்டது.

1945 இலிருந்து 1974வரை சின்கிளேயர் (Sinc Lair), டாவீஸ் (Daviees) கிறிமொண்ட (grimond), ஜே. தொரப் (J. Thorpe), ஆகியோர் கட்சிக்கு தலைமை வகித்திருந்தனர். 1988இல் லிபரல் கூட்டணி அமைக்கப்பட்ட பின் P. ஆஸ்டவுன் (Ashdown), சாள்ஸ் கென்னடி (Charles Kenneedy) ஆகியோரும் தலைமை தாங்கினர். தற்போது சாள்ஸ் கென்னடி கட்சிக்கு தலைமை தாங்குகின்றார்.

இங்கிலாந்தில் இரு கட்சி முறை நிலவினாலும் மூன்றாவது பெரிய கட்சியாக லிபரல் கூட்டணியே தற்போதும் விளங்குகின்றது.

### கட்சியின் அமைப்பு

மற்றைய இரு கட்சிகளைப் போலவே லிபரல் கட்சிக்கும் தொகுதிக் கிளைக் கழகங்கள் உள்ளன. கட்சியின் ஆரம்ப அமைப்புக்கள் இத்தொகுதிக் கிளையில் அங்கம் வகிக்கின்றன. தொகுதிக் கிளைக் கழகங்கள் மத்திய கழகத்தினை தெரிவு செய்கின்றன. இது தேசிய லிபரல் கூட்டுக் கழகம் (National Liberal Federtion) எனவும் அழைக்கப்படுகின்றது.ஆண்டுக்கொரு தடவை கட்சியின் மாநாடு நடைபெறு கின்றது. கட்சியினை நிர்வகிப்பதற்கு செயற்குழு ஒன்றும் கட்சியின் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. நடுத்தர வகுப்பினரே கட்சியின் செயற்பாட்டில் அதிக பங்கெடுத்துக் கொள்ளுகின்றன.

### கட்சியின் கொள்கைகள்

(1) ஆரம்பத்தில் பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை பின்பற்றப் பட்டது. ஆனால் பிற்காலங்களில் வர்த்தகத் துறையில் மட்டும் தலையிடாக் கொள்கை பின்பற்றப்பட்டது. தொழிற்சாலை களைப்

பொறுத்தவரை தலையிடும் கொள்கை பின்பற்றப்பட்டது.

(2) குறைந்த பட்ச ஊதியம், சமூகக் காப்புறுதி என்பவற்றின் மூலம் தொழிலாளர்களைப் பாதுகாத்தல்

(3) செல்வந்தரின் தனியுரிமைக்கும் வறியவர்களின் கூட்டாண்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்தல்.

(4) காலனித்துவ நாடுகளின் கோரிக்கைகளை நெகிழ்வுடன் அணுகுதல்.

(5) ஆங்கிலத் திருச்சபையின் ஆதிக்கத்தினை எதிர்த்தல்

(6) சீர்த்திருத்தங்கள் மூலம் மாற்றங்களை கொண்டு வருதல்

(7) கலப்புப் பொருளாதாரத்திற்கு முன்னுரிமை கொடுத்தல்

(8) தனிமனித சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தல்

## வேறு கட்சிகள்

### 1. பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party of Britian)

இது 1920ம் ஆண்டு யூலை மாதம் சோவியத் தலைவரான லெனின் ஆதரவில் உருவாக்கப்பட்டது. முதலில் தொழிற்கட்சியுடன் இணைவதற்கு அது முயற்சி செய்தது. அம் முயற்சி வெற்றியளிக்காததினால் தனிக் கட்சியாக இயங்குகின்றது.

### 2. பிரித்தானிய யூனியனின் பாஸிஸ்டுகள் (British Union of Facists)

முதலாம் உலகப் போருக்கு பின்னர் சேர் ஒஸ்வாலட் மோஸ்லி (Sir Os wald Moosleiy) என்பவரினால் உருவாக்கப்பட்டது. 1931 தேர்தலில் 24 இடங்களில் போட்டியிட்டு இக் கட்சி அனைத்திலும் தோல்வியடைந்தது. 1940இல் இக்கட்சியை அரசாங்கம் தடைசெய்தது 1948இல் சேர் ஒஸ்வால்ட் மோஸ்லி யூனியன் இயக்கம் (Union Movement) என்ற ஒர் இயக்கத்தினை ஆரம்பித்தார். 1966 தேர்தலில் இவ் இயக்கம் படுதோல்வி யடைந்தது

### 3. வேல்ஸ் தேசியக் கட்சி (Wales National Party)

1965 இல் இக்கட்சி உருவாக்கப்பட்டது. தேர்தல்களில் போட்டியிட்டாலும் ஒரு போதும் இக் கட்சி வெற்றி பெறவில்லை. ஈஸ்டர் கலகத்தின் போது கட்சி பிளவுபட்டது.

### 4. ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி (Scotish National Party)

இது 1934 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஸ்கொட்லாந்து மக்களின் அபிலாசைகளை முன்னெடுக்கும் கட்சியாக விளங்குகின்றது. 2005 ஆம் ஆண்டுத் தேர்தலில் 6 ஆசனங்களையும் 1.5% வாக்குகளையும் பெற்றிருந்தது.



### 5. அர்ஸ்டர் யூனியனிஸ்ட் கட்சி (Unister Unionist Party )

20 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வட அயர்லாந்தில் தோன்றிய கட்சியே இதுவாகும். ஜனநாயக யூனியனிஸ்ட் கட்சி தோன்றும் வரை வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க கட்சியாக இருந்தது. தற்போது இதன் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. 2005ம் தேர்தலில் 0.5 வீத வாக்குகளையும் 1 ஆசனத்தையும் மட்டுமே கட்சி பெற்றிருந்தது.

### 6. ஜனநாயக யூனியனிஸ்கட்சி (Democratic Unionist Party)

வட அயர்லாந்து புரட்டஸ்தாந்து மக்கள் மத்தியில் தற்போது செல்வாக்குள்ள கட்சி இதுவேயாகும். 1971ஆம் ஆண்டு அல்ஸ்டர் யூனியனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களே இக்கட்சியை உருவாக்கியிருந்தனர். 2005 தேர்தலில் 0.9 வீத வாக்குகளையும் 9 ஆசனங்களையும் கட்சி பெற்றிருந்தது.

### 7. சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி (Social Democratic and Labour Party)

இதுவும் வட அயர்லாந்திலுள்ள கட்சியாகும். 1970ம் ஆண்டு தேர்தலில் 0.5வீத வாக்குகளையும் மூன்று ஆசனங்களையும் பெற்றுள்ளது.

### 8. சின்பெயின் கட்சி (Simm Feim)

அயர்லாந்து தேசிய இராணுவத்தின் அரசியல் பிரிவே சின்பெயின் ஆகும். வட அயர்லாந்தில் வாழும் கத்தோலிக்க மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றது. 2005 தேர்தலில் 0.6 வீதவாக்குகளையும் 5 ஆசனங்களையும் பெற்றுள்ளது. இக்கட்சி 1905ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

## இங்கிலாந்து கட்சிமுறையின் நன்மைகள்

(1) இரு கட்சி முறை நிலவுவதால் ஒரு கட்சி அரசாங்கத்தினை நடாத்தவும் மற்றய கட்சி அரசாங்கத்தினை கண்காணிக்கவும் முடிகின்றது.

(2) வெளிநாட்டு விவகாரங்களில் இரு கட்சிகளும் ஒரே கொள்கையினைப் பின்பற்றுகின்றன.

(3) தேசிய விவகாரங்களில் பொதுக் கருத்தினை உருவாக்க முடிகின்றது.

(4) பொதுக்கருத்துக்களை பேணி வளர்க்க முடிகின்றது.

(5) பாராளுமன்றத்திற்கும், மக்களுக்குமிடையே இணைப்பினை கட்சிகள் உருவாக்குகின்றன.

(6) கொள்கைகளை செயற்படுத்த கட்சி முறை உதவுகின்றது.

## இங்கிலாந்து கட்சிமுறையின் கட்சியின் குறைபாடுகள்

(1) சுயேட்சை உறுப்பினர்கள் அரசியலில் ஈடுபடுவதை கட்சி முறை தடுக்கின்றது.

(2) உறுப்பினர்களின் தனித்தன்மையை கட்சிமுறை அழித்து விடுகின்றது.

(3) மூன்றாவது கட்சி செல்வாக்கில்லாததால் நாட்டின் பன்மைத்தன்மை பலவீனப்படுகின்றது.

(4) இரு கட்சிகளுமே மோசமாகி விட்டால் மக்களுக்கு வேறு மாற்று இல்லை.

(5) அரசாங்கத்தின் அனைத்து முயற்சிகளையும் எதிர்க்கட்சி எதிர்த்து செயற்படும் நிலையிருத்தல்

(6) காலனித்துவ நாடுகள் தொடர்பாக இரு பிரதான கட்சிகளுமே பிற்போக்கான கொள்கையினைப் பின்பற்றுதல்.

(7) அமெரிக்காவின் செயல்களுக்கு இருகட்சிகளுமே துணைபோதல் உதாரணம் ஈராக் யுத்தம்.

## இங்கிலாந்து அழுத்தக்குழுக்கள்

இங்கிலாந்தில் ஏனைய அரசியல் நிறுவனங்ககளைப் போலவே அழுத்தக் குழுக்களும் மரபுரீதியாக வளர்ச்சியடைந்தவையாகும். நீண்டகாலமாகவே இவை அமுலில் இருக்கின்றன. ஸ்கொட்லாந்தில் 14ம் நூற்றாண்டில் உருவான 'பரோக்கா' என்ற அழுத்தக்குழு மிகவும் பழைமையானதாகும். 18ம் நூற்றாண்டில் அடிமை ஒழிப்புக் குழுக்கள், தானியச் சட்ட எதிர்ப்புக் கழகம் என்பன வெற்றிகரமாக செயற்பட்ட அழுத்தக் குழுக்களாகும்.

தொழிற்கட்சி கூட தொழிற்சங்கங்களும் சோசலிய இயக்கமும் சேர்ந்த அழுத்தக் குழுக்களின் இணைப்பிலிருந்தே தோன்றியிருக்கின்றது.

இன்று வர்த்தக சங்கங்கள், தொழிற்சங்கங்கள், அமைதி, ஆயுதக்குறைப்பு, விலங்குகள் பாதுகாப்பு போன்றவற்றிற்கான அழுக்கக்குழுக்களும், மருத்துவர் கழகம், ஆசிரியர் சங்கம் என்பனவும் நடைமுறையில் இருக்கின்றன.

இவ் அழுத்தக் குழுக்கள் இங்கிலாந்து அரசியலில் ஆட்சித்துறை, பாராளுமன்றம், பொது மக்கள் ஆகிய மூன்று நிலைகளில் ஆதிக்கம் செலுத்து கின்றன. கொள்கைகளை உருவாக்கும் பணியும், கொள்கைகளை நிறைவேற்றும் பணியும், ஆட்சித்துறையிடம் இருப்பதனால் ஆட்சித்துறையிலேயே அதிக ஆதிக்கம் இருக்கின்றது.



இவ் அழுத்தக்குழுக்களுக்கும் பிரதிநித்துவம் அளிக்கும் வகையில் அரசாங்கம் பல்வேறு ஆலோசனைக்குழுக்களை உருவாக்கின்றது. இவ் ஆலோசனைக் குழுக்களின் கருத்துக்களை அமைச்சரவை கவனத்துடன் பரிசீலிக்கின்றது. கல்வி, போக்குவரத்து, விவசாயம், மீன்பிடித்துறை, உணவு போன்ற அமைச்சுக்களில் நிலையான ஆலோசனைக்குழுக்கள் உள்ளன.

பாராளுமன்றத்தினை பொறுத்தவரையில் கூட இவை சிறந்த பணிகளை ஆற்றுகின்றன. தமது கோரிக்கைகளை இவை பராளுமன்றத்திற்கு கொண்டு செல்கின்றன. இதற்காகவே அழுத்தக்குழுக்கள் பாராளுமன்றதுக்கான செயலாளர் ஒருவரை நியமிப்பதுண்டு. அவரினூடாக பாராளுமன்றத்திற்கு கோரிக்கைகளை அனுப்புகின்றன. நாட்டின் பிரதான கட்சிகளுக்கும், அழுத்தக்குழுக்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு உண்டு. தேர்தல் காலங்களில் இவை குறிப்பிட்ட கட்சிகளுக்காக பணியாற்றுவதுண்டு. சில சந்தர்ப்பங்களில் அழுத்தக்குழுக்களே பிரதான கட்சிகளினூடாக நேரடியாக பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவதுண்டு.

வருடாந்த நிதி மசோதா சமர்ப்பிக்கப்படும் காலங்களில் இவை தீவிரமாக செயற்படுவது வழக்கமானதாகும். தமது அணிக்கு சார்ந்தவகையில் நிதி நடவடிக்கைகள் மேற்கொள்வதில் இவை மிகுந்த கவனம் செலுத்துகின்றன

# 4

# இந்திய அரசாங்க முறை

## அறிமுகம்

இந்தியா 32,87,263 நிலப்பரப்பையும் 102,70,15,247 (2001) மக்கள் தொகையையும் கொண்ட மிகப் பெரிய நாடாகும். 500 க்கு மேற்பட்ட அரசுகளாக இருந்த இந்தியாவை ஆங்கிலேயர்களோ ஒரு நாடாக இணைத்தனர். இந்திய சுதந்திரப் போராட்டம் இந்தியர் என்ற சிந்தனையை வளர்ப்பதற்கு உதவியது.

இந்தியாவிலிருந்து 1930ஆம் ஆண்டு பர்மாவும், 1947ம் ஆண்டு பாகிஸ்தானும் பிரிந்து தனிநாடுகளாக மாறியுள்ளன. சுதந்திரத்தின் பின்னர் குறுநில அரசுகள் பலவற்றையும் இந்தியா தனது ஆட்சிப் பரப்பிற்குள் கொண்டு வந்தது.

பல நாடுகள் இந்தியாவின் எல்லைகளாக உள்ளன. வடக்கே சீனா பூட்டான், நேபாளம், என்பனவும் கிழக்கே பங்களாதேஷ், பர்மா, என்பனவும் மேற்கே பாகிஸ்தானும் வடமேற்கே, ஆப்கானிஸ்தானும் தெற்கே பாக்கு நீரிணையும் எல்லைகளாக உள்ளன.


மன்னார் வளைகுடாவும், பாக்குநீரிணையும் இந்தியாவை இலங்கையிடமிருந்து பிரிக்கின்றது. அந்தமான் நிக்கோபார் தீவுகள் வங்காள விரிகுடாவிலும் இலட்சத்தீவுகள் அரபிக் கடலிலும் அமைந்துள்ளன.

தென்மேற்குப் பகுதி அரபிக் கடலாலும் தென் கிழக்குப் பகுதி வங்காள விரிகுடாவினாலும் சூழப்பட்டுள்ளது. வடக்கு, வடமேற்கு வடகிழக்கு, பகுதிகளில் இமயமலைத் தொடர்கள் அமைந்துள்ளன.

பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழும் இந்தியாவில் வங்காளி, உருது, குஜராத்தி, ஹிந்தி, உட்பட 18 மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஹிந்திமொழி அரச கரும மொழியாக உள்ளது. மாநிலங்களில் மாநில மொழியினை நிர்வாக மொழியாக வைத்திருப்பதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.



### இந்தியக் குடியரசு ( Re public of India)




| | | |
|---|---|---|
| பரப்பளவு | : | 32, 87, 263 ச.கி.மீ |
| மக்கள் தொகை | : | 102, 70, 15, 247 |
| தலைநகர் | : | புது டில்லி |
| மொழி | : | ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட 18 மொழிகள் |
| சமயம் | : | இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் |
| தற்போதைய ஜனாதிபதி | : | அப்துல்கலாம் |
| தற்போதைய பிரதமர் | : | மன்மோகன் சிங் |
| அரசு | : | இரு சட்ட சபைகளைக் கொண்ட கூட்டாட்சி அரசு, பாராளுமன்ற அரசாங்க முறை |
| நாணயம் | : | ரூபாய் |
| பொருளாதாரம் | : | விவசாயம், கைத்தொழில், மீன்பிடி |

அதேவேளை இந்துக்கள் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள்உட்பட பல்வேறுபட்ட மதப்பிரிவினர்களும் வாழ்கின்றனர். 23 மாநிலங்கள், 5 யூனியன் பிரதேசங்கள் தில்லி தலைநகரப்பகுதி என்பனவற்றில் இந்துக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். ஜம்முகஸ்மீர், இலட்சத் தீவு என்பவற்றில் இஸ்லாமியர்களும், நாகலாந்து, மீசோராம், மேகலாயா என்பவற்றில் கிறிஸ்தவர்களும் பஞ்சாபில் சீக்கியர்களும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

உலக நிலப்பரப்பில் 2.4 வீதத்தினை உள்ளடக்கிய இந்திய உலக மக்கள் தொகையில் 16 வீதத்தினை உள்ளடக்கியுள்ளது.

மகாத்மா காந்தி, சுபாஸ்சந்திரபோஸ், ஜுவகர்லால் நேரு, இந்திராகாந்தி, போன்றவர்கள் நாட்டின் முக்கிய தலைவர்களாக இருந்திருக்கின்றனர்.

இந்தியாவின் முக்கியமான பொருளாதாரமாக விவசாயம் இருக்கின்றது. கடற்றொழில், கைத்தொழில், என்பனவும் தற்போது நன்கு வளர்ச்சி கண்டிருக்கின்றது. 1947ஆம் ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி இந்திய சுதந்திரமடைந்தது.

### அரசியல் யாப்பின் வரலாற்றுப் பின்னணி

1946ம் ஆண்டு ஜுலை மாதம் புதிய அரசியல் யாப்பொன்றினை உருவாக்குவதற்காக அரசியல் நிர்ணய சபை ஒன்று தோற்றுவிக்கப்பட்டு அதன் உறுப்பினர்களுக்கான தேர்தலும் நடைபெற்றது. தேர்தலின் பின்னர் இதன் முதலாவது கூட்டம் 1946ம் ஆண்டு டிசம்பர் 13ம் திகதி நடைபெற்றது. Dr. ராஜேந்திர பிரசாத் அரசியல் நிர்ணயசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்கூட்டத்தில் இந்தியாவின் பிரதமராக இருந்த நேரு அரசியல் யாப்பின் நோக்கங்கள்பற்றிய தீமானத்தை அறிமுகப்படுத்தினார். அத்தீமானத்தில் இந்திய அரசின் அரசியல் கொள்கை எவை எவையென வரையறுக்கப்படிருந்தது. 1947ம் ஆண்டு ஜனவரி 22ம் திகதி அத்தீமானம் நிறைவேற்றப்பட்டு அரசியல் நிர்ணய சபை ஒரு வடிக்கும் குழுவையும், பலதுணைக் குழுக்களையும் நியமித்தது. Dr. அம்பேத்கார் வடிக்கும் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரைத்தவிர, 7 உறுப்பினர்கள் அதில் அங்கம் வகித்தனர்.

வடிக்கப்பட்ட நிலையிலான அரசியல் அமைப்பு 1948ம் ஆண்டு நவம்பர் 4ம் திகதி அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபையில் விவாதத்தின் போது 7635 திருத்தப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில், 2473 பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 1949ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி விவாதம் முடிவுற்று அரசியல் அமைப்பு வடிவம் நிறைவேற்றப்பட்டது. அரசியல் நிர்ணய சபையின் கடைசிக்கூட்டம் 1950ம் ஆண்டு ஜனவரி 14ம் திகதி கூட்டப்பட்டது. இதில் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ராஜேந்திர பிரசாத் இந்தியக் குடியரசின் 1வது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1950ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி தொடக்கம் புதிய அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்தது. இன்றுவரை பல திருத்தங்களுடன் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்து வருகிறது.



## அரசியல் யாப்பின் மூலங்கள்

1) 1935 இன் இந்திய அரசாங்கச் சட்டம்.
2) இங்கிலாந்து பாராளுமன்றத்தின் சில கூறுகள்.
   (அ) அரசி - ஜனாதிபதி.
   (ஆ) பாராளுமன்றம் பொ.ம.ச - பாராளுமன்றம் ம.அ.
   பாராளுமன்றம் பிர. ச - பாராளுமன்றம் மா.நி.அ.
   (இ) பாராளுமன்ற சிறப்புரிமைகள்.
   (ஈ) ரிட் உரிமைகள்.
3) அமெரிக்க அரசியல் யாப்பின் உரிமைகள் மசோதாவில் உள்ளது போன்ற அடிப்படை உரிமைகள்.
4) அமெரிக்க அரசியல் யாப்பில் உள்ளது போன்ற முகவுரை, உச்சநீதிமன்றம்.
5) கனடாவின் அரசியல் யாப்பில் உள்ளது போன்ற வலுவான மத்திய அரசாங்கத்தைக் கொண்ட கூட்டாட்சி.
6) அயர்லாந்து அரசியல் யாப்பில் உள்ளது போன்ற வழிகாட்டி நெறிகள்.
7) சோவியத் யூனியன் அரசியல் யாப்பில் உள்ளது போன்ற அடிப்படைக் கடமைகள்.
8) D.S. பாசு, ஜென்னிங்ஸ் என்பவர்களின் நூல்கள்.
9) இந்திய மரபுகள்.
10) உச்சநீதிமன்றத்தின் பல தீர்ப்புகள்.

## இந்திய அரசியல் யாப்பின் சிறப்பியல்புகள்

பின்வருவன இந்திய அரசியல் யாப்பின் சிறப்பியல்புகளாகக் கொள்ளப்படுகின்றன:

(1) எழுதப்பட்ட குடியரசு அரசியல் யாப்பு.
(2) கூட்டாட்சி அரசியல் யாப்பு.
(3) முகவுரை.
(4) பாராளுமன்ற முறை அரசாங்கம்.
(5) அடிப்படை உரிமைகளும் கடமைகளும்.

(6) வழிகாட்டி நெறிகள்

(7) சுதந்திரமான, வலுவான நீதித்துறை

## 1. எழுதப்பட்ட குடியரசு அரசியல் யாப்பு

இந்திய அரசியல் யாப்பு எழுதப்பட்ட அரசியல் யாப்பாகும். அரசியல் நிர்ணய சபையில் நீண்ட விவாதங்களின் பின்னரே இவ்வரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. 395 உறுப்புக்களும் 10 பின்னிணைப்புகளும் இதில் உள்ளன. உலகிலேயே மிக நீளமான அரசியல் யாப்பும் இதுவே ஆகும்.

## 2. கூட்டாட்சி அரசியல் அமைப்பு

இந்திய அரசியல் யாப்பு ஒரு கூட்டாட்சி அரசியல் யாப்பாகும். 28 மாநிலங்களும் 7 யூனியன் பிரதேசங்களும் இக்கூட்டாட்சியில் உள்ளன. உலகின் சிறந்த கூட்டாட்சி என க் கூறப்படுகின்ற அமெரிக்கா, சுவிஸ்சர்லாந்து போன்றவற்றின் சில பண்புகளும் இந்திய அரசியலமைப்பில் காணப்படுகின்றன. ஆனால், அதிகாரப் பங்கீட்டைப் பொறுத்த வரையிலும் வேறு சில விடயங்களிலும் கூட்டாட்சிக்கு எதிரான பண்புகளும் காணப்படுகின்றன. வலுவான மத்திய அரசாங்கம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும் என்ற அடிப்படையிலேயே கூட்டாட்சிக்கு எதிரான பண்புகள் அதிகளவில் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால், இந்திய கூட்டாட்சி ஒரு அரைகுறை கூட்டாட்சி எனவும் அழைக்கப்படுகின்றது.

## 3. முகவுரை

இந்திய அரசியல் யாப்பில் முகவுரை முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. இந்தியாவின் முதற்பிரதமராக விளங்கிய ஜவகர்லால் நேருவின் சிந்தனைகள் அதில் காணப்பட்டன. குறிப்பாக மக்கள் இறைமை அதிகாரம், சமூக--பொருளாதார சமத்துவம் என்கின்ற இரு கருத்துக்கள் இம் முகவுரையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டன.

## 4. பாராளுமன்ற முறை அரசாங்கம்

இந்திய அரசியல் யாப்பு இங்கிலாந்தில் உள்ளது போல பாராளுமன்ற அரசாங்க முறைக்கு வழி செய்கின்றது. நிர்வாகத்துறையான அமைச்சரவை பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாகவுள்ளது. இப்பாராளுமன்றம் மக்களவை, மாநிலங்களவை என இருசபைகளைக் கொண்டதாகவும் விளங்குகிறது. எனினும், இங்கிலாந்தின் பாராளுமன்றமுறை அமைப்பில் உள்ள சில சாதகமான அம்சங்கள் இந்திய முறையில் பின்பற்றப்படுவதில்லை.



## 5. அடிப்படை உரிமைகளும், கடமைகளும்

அமெரிக்க அரசியல் யாப்பின் உரிமைகள் மசோதாவில் உள்ளது போன்ற சில அடிப்படை உரிமைகள் இந்திய அரசியல் யாப்பிலும் காணப்படுகின்றது. அடிப்படை உரிமை மீறல்களுக்கு உள்ளானவர்கள் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் காணும் வழிமுறைகளும் கூறப்பட்டுள்ளது. அரசியல் யாப்பின் 42ஆவது திருத்தம் சோவியத்யூனியன் அரசியல் யாப்பில் இருந்தது போன்ற 10 அடிப்படைக் கடமைகளை அரசியல் யாப்பில் சேர்த்துள்ளது.

## 6. வழிகாட்டி நெறிகள்

அரசு எவ்வாறு செயற்பட வேண்டும் எனக் கூறுகின்ற கொள்கைகளே வழிகாட்டி நெறிகள் என அழைக்கப்படுகின்றன. மக்கள் நல அரசு என்ற இலக்கினை அடைய, செல்ல வேண்டிய வழிகளை இவை வெளிப்படுத்துகின்றன. மக்களின் சமுதாய, பொருளாதார மேம்பாட்டிற்கான கொள்கைகளும் இதில் அடங்கியுள்ளன. சில, காந்தியக் கொள்கைகளும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. எனினும், இவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நிலையை அரசியல் யாப்பு உருவாக்கவில்லை.

## 7. சுதந்திரமான வலுவான நீதித்துறை

இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாக இருப்பதனால் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்களுக்குமிடையே வருகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், மாநில அரசுகளுக்கிடையேயான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அரசியல் யாப்பிற்குப் பொருள் விளக்கம் கொடுப்பதற்கும், மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கவும் சுதந்திரமான வலுவான நீதிப்புனராய்வு பெற்ற நீதித்துறை அவசியமாகிறது. இந்திய உச்ச நீதிமன்றம் (தலைமை நீதிமன்றம்) இவ்பண்புகளைக் கொண்டதாக விளங்குகின்றது. எனினும், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கு மிடையே முரண்பாடுகள் ஏற்படும் போது உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்குச் சார்பாகவே தீர்ப்புக்களை வழங்குகின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப் படுகின்றது.

## 8. இரு அணிக்கட்சி முறை

இந்தியா தற்போது இரு அணி கட்சிமுறையினைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. காங்கிரஸ் கட்சிக்கு பின்னாலும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு பின்னாலும் ஏனைய கட்சிகள் அணிதிரண்டுள்ளன. அதேவேளை மாநிலக் கட்சிகள் மாநிலங்களில் மட்டுமல்ல மத்தியிலும் செல்வாக்குள்ள கட்சிகளாக விளங்கு கின்றன.

# இந்திய அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்கள்

இந்திய அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்களாகப் பின்வருவனவற்றை நாம் குறிப்பிடலாம்:

(1) முகவுரை

(2) இந்திய கூட்டாட்சி முறை

(3) இந்தியாவில் அடிப்படை உரிமைகள்

(4) இந்திய அடிப்படை கடமைகள்

(5) இந்திய ஜனாதிபதி

(6) இந்திய பாராளுமன்றம்

(7) இந்திய அமைச்சரவை

(8) இந்திய நீதித்துறை

(9) இந்தியாவின் அரசியல் கட்சி முறை

10) இந்தியாவில் அமுக்கக்குழுக்கள்

## 1 முகவுரை

இந்திய அரசியல் யாப்பில் முகவுரை முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. இந்தியாவின் முதற் பிரதமராக விளங்கிய ஜவகர்லால் நேருவின் சிந்தனைகள் அதில் காணப்பட்டன. குறிப்பாக மக்கள் இறைமை அதிகாரம், சமூக, பொருளாதார சமத்துவம் என்கின்ற இரு கருத்துக்கள் இம் முகவுரையின் மூலம் வெளிப் படுத்தப்பட்டன.

முகவுரையின் வாசகங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன :

1) பாரததேசத்தை மத சார்பற்ற சமதர்ம குடியரசாக அமைப்பதற்கு இந்திய மக்களாகிய நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

2) நாட்டின் குடிமக்கள் அனைவருக்கும் சமூக பொருளாதார அரசியல் நீதியையும், எண்ணம், பேச்சு, நம்பிக்கை, மதப்பற்று வழிபாடு என்பவற்றில் முழுச் சுதந்திரத்தை வழங்க உறுதி பூண்டுள்ளோம்.

3) வாழ்க்கை நிலையிலும், வாய்ப்புக்களிலும் இந்திய மக்களுக்கு சமத்துவத்தை பெற்றுத்தர விழைகின்றோம்.



4) இந்திய மக்களிடையே சகோதரப் பண்பை வளர்த்து தனி மனிதரது உயர் தகுதியையும், நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலை நாட்டுவதற்கு உறுதி கூறுகின்றோம்.

5) எங்களது அரசியல் நிர்ணய சபையில் 1949 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள் இந்த அரசியல் யாப்பினை உருவாக்கி ஏற்றுக் கொண்டு எங்களுக்கு வழங்கிக் கொள்ளுகின்றோம்.

இந்த முகவுரையில் "இந்திய மக்களாகிய நாம்" என்னும் சொற்றொடர் அரசியல் யாப்பின் உண்மையான ஆற்றலும், அதிகாரமும் மக்களிடம் இருக்கின்றது என்பதை விவரிக்கின்றது. மக்களின் இறைமை அதிகாரம் இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

"நாட்டு மக்களுக்கெல்லாம் சமூக பொருளாதார அரசியல் நீதியையும்....... வாழ்க்கை நிலையிலும் வாய்ப்புக்களிலும் சமத்துவத்தையும் பெற்றுத்தர" என்ற வாசகமானது சமூக பொருளாதார நீதியை வலியுறுத்துகின்றது.

1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 42ஆவது அரசியல் திருத்தத்தின் படியே சமதர்ம, மதசார்பற்ற என்ற சொற்கள் சேர்க்கப்பட்டன. அதேவேளை வாசகத்தின் பிற்பகுதியில் நில ஒருமைப்பாடு என்ற சொற்றொடரும் சேர்க்கப்பட்டது. இந்த 3 சொற்களும் இந்திய நாட்டின் ஐக்கிய உணர்வை மையமாக வைத்தே சேர்க்கப்பட்டிருந்தன.

### நன்மைகள்

(1) இந்தியா ஓர் சமதர்ம குடியரசு என கூறப்பட்டிருக்கின்றமையானது அரசியல் யாப்பு அடிநிலை மக்களின் நலன்களில் அக்கறையாக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

(2) சமயச்சார்பு அற்ற ஆட்சியெனக் கூறுவதன் மூலம் அனைத்து மதங்களுக்கும் சமத்துவத்தை வழங்குகின்றது.

(3) இறைமை அதிகாரம் மக்களிடம் உள்ளது என வலியுறுத்துவதன் மூலம் மக்களாட்சிக் கோட்பாட்டினை வலிமைப்படுத்துகின்றது.

(4) சமூக பொருளாதார நீதியை வலியுறுத்துவதாகவும் முகவுரை வாசகங்கள் அமைகின்றன.

### குறைபாடுகள்

(1) இந்திய சுதந்திர போராட்டத்தில் மகாத்மாகாந்தி முக்கிய இடத்தை வகித்திருந்தார். அவருடைய கொள்கைகள் பற்றி வாசகங்களில் எதுவும் காணப்படவில்லை.

(2) முகவுரையில் சமதர்ம, மத சார்பற்ற என்கின்ற சொற்றொடர்கள் இருந்தாலும் நடைமுறையில் இவை முன்னெடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகின்றது.

(3) முகவுரையில் கூறப்பட்டுள்ள வாசகங்களின் நீதிமன்ற பெறுமதி பற்றி யாப்பு தெளிவாக எதனையும் கூறவில்லை.

## 2 இந்திய கூட்டாட்சி முறை

இந்திய கூட்டாட்சி 28 மாநிலங்களையும், 6 யூனியன் பிரதேசங்களையும் கொண்டதாக விளங்குகின்றது. எனினும் மாநிலங்களுக்கு குறைந்த அளவிலான ஒரு தலைநகர் பகுதியையும் அதிகாரங்களே கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டாட்சித் தன்மைகளையும், கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகளையும் கொண்டதாகவே கூட்டாட்சி முறை உள்ளது. கூட்டாட்சி தன்மைகளிலும் பார்க்க கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகள் அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் இந்திய கூட்டாட்சி ஓர் அரைகுறை கூட்டாட்சி என வர்ணிக்கப்படுகின்றது.

### கூட்டாட்சித் தன்மைகள்

1) எழுதப்பட்ட மேன்மைமிக்க அரசியல் யாப்பு

2) ஓரளவு நெகிழாத் தன்மை கொண்ட அரசியல் யாப்பு
இந்திய அரசியல் யாப்பு ஓரளவு நெகிழாத்தன்மை கொண்ட அரசியல் யாப்பாகும். இங்கு சிலவகையான திருத்தங்களை பாராளுமன்றத்தின் இருசபைகளினதும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம். வேறு சில திருத்தங்களை 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம். மேலும், சில திருத்தங்களைப் பொறுத்தவரை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன், அரைவாசிக்கு மேற்பட்ட மாநில சட்டசபைகளின் சம்மதமும் அவசியமானது.

3) வலுவான நீதிப்புனராய்வு பெற்ற நீதித்துறை.

4) மத்திய பாராளுமன்றத்தின் 2வது சபை.
மத்திய பாராளுமன்றத்தில் மாநிலங்களின் நலன்களை பிரநிதித்துவப்படுத்துவதற்காக கூட்டாட்சி நாடுகளில் 2வது சபை ஒன்று இருப்பது மரபாக உள்ளது. இந்தியாவிலும் 2வது சபையான மாநிலங்கள் சபை (ராஜ்ய சபை) மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபையாக உள்ளது. மாநிலங்களில் சனத்தொகை விகிதாசாரங்களுக்கு ஏற்ப இச்சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.



5) அதிகாரப் பங்கீடு
கூட்டாட்சி முறையில் அதிகாரப் பங்கீடு மிக முக்கியமான விடயமாகும். இங்கு அதிகாரங்கள் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே யாப்புரீதியாகப் பங்கிடப்படுகின்றன. இந்திய அரசியல் யாப்பிலும் இவ்வதிகாரப் பங்கீடு காணப்படுகிறது. இந்திய அரசியல் யாப்பில் அதிகாரப் பட்டியல், மத்திய அரசின் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று வகைகளாக காணப்படுகின்றன.

### கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகள்

1) கூட்டாட்சி என்ற சொல் அரசியல் யாப்பில் இல்லை. மாறாக "மாநிலங்களின் ஒன்றியம் "என்றே உள்ளது.

2) பொதுவாக, கூட்டாட்சி நாடுகளில் இரட்டைக் குடியுரிமை காணப்படுகிறது. (உ+ம்: அமெரிக்கா) ஆனால், இந்திய கூட்டாட்சியில் ஒற்றைக் குடியுரிமையே காணப்படுகிறது.

3) மாநிலங்களுக்குகிடையே சமமான நிலை இல்லை . ஜம்மு-காஷ்மீர மாநிலத்துக்குச் சிறப்பு அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு அதற்கென தனியான அரசியல் யாப்பு உண்டு. அத்துடன், மத்திய அரசு தான் விரும்பியது போல மாநில சட்ட மன்றத்தைக் கலைப்பதும் கடினமானதாகும்.

4) குறைந்தளவு நெகிழாதன்மையுடைய அரசியல் யாப்பு நடைமுறையில் உள்ளது.

5) பாராளுமன்றத்தின் 2வது சபையில் மாநிலங்களுக்குச் சம பிரதிநிதித்துவம் இல்லை.

6) அதிகாரப் பங்கீட்டில் மத்தியரசு அதிகளவிலான அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அத்தோடு, மாநிலங்களின் அவையில் 2/3 பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் மாநிலப்பட்டியலில் உள்ள ஒரு விடயத்தை மத்திய பட்டியலுக்கு மாற்றலாம்.

7) மாநிலங்களின் எல்லைகளை மாற்ற மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

8) மாநில அரசுப் பணிகளில் முக்கிய பொறுப்புக்களை வகிக்கின்ற IAS, IPS அதிகாரிகளை மத்திய அரசே நியமிக்கின்றது.

9) அவசரகால நிலை பிரகடனம் உள்ள காலங்களில் மாநிலப்பட்டியலில் உள்ள சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசு பெற்றுக் கொள்கிறது.

10) மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

11) நாடு முழுவதற்கும் ஒற்றை நீதித்துறை அமைப்பு காணப்படுகிறது.

12) ஒரே தேர்தல் ஆணைக்குழு நாடு முழுவதற்கும் உண்டு.

13) மாநிலத்தின் பெயரளவு நிர்வாகத்துறைத் தலைவரான ஆளுனர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு பொறுப்புள்ள அதிகாரம் மிக்கவராக விளங்குகிறார்.

14) மாநிலங்கள் நிதிவசதிகளுக்காக மத்திய அரசைச் சார்ந்து உள்ளன.

15) சோவியத் யூனியனில் இருந்தது போன்று மாநிலங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமை வழங்கப்படவில்லை.

16) மத்திய அரசாங்கம் தான் விரும்பிய நேரத்தில் ஜனாதிபதி ஆட்சியை மாநிலத்தில் உருவாக்கலாம் (மத்திய அரசின் ஆட்சி)

17) ஜனாதிபதி நிதி நிலை பிரகடனம் ஒன்றை விடுத்து மாநிலத்தின் நிதி பிரயோகத்தில் கட்டுப்பாடுகளைச் செலுத்தலாம்.

## 3 இந்தியாவில் அடிப்படை உரிமைகள்

இந்திய அரசியல் யாப்பு அடிப்படை உரிமைகளை பின்வரும் 6 வகைகளாகப் பிரித்து விளக்குகின்றது :

1) சமத்துவ உரிமை (விதிகள் 14 முதல் 18 வரை)

2) சுதந்திரமாக இருக்கும் உரிமை (விதிகள் 19 முதல் 22 வரை)

3) சுரண்டலுக்கெதிரான உரிமை (விதிகள் 23 & 24)

4) சமயச் சுதந்திரம் (விதிகள் 25 முதல் 28 வரை)

5) பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் (விதிகள் 29 & 30)

6) அரசியலமைப்புத் தீர்முறை உரிமை (விதிகள் 32 முதல் 35)

### 1. சமத்துவ உரிமை

அரசியல் யாப்பின் 14 தொடக்கம் 18 வரையிலான விதிகள் இதுபற்றி குறிப்பிடுகின்றன.

**விதி 14**

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக கருதப்படவும், பாதுகாக்கப்படவும் வேண்டும்.



**விதி 15**

மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் காரணமாக அல்லது வேறு எக் காரணத்துக்காகவும் அரசு மக்களுக்கிடையே வேறுபாடு காட்டக்கூடாது. ஆனால் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், தனி வசதிகள் வழங்குவதும் பிற்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் தனிச்சலுகைகள் வழங்குவதும் இவ்விதிக்கு முரணாக இருக்க மாட்டாது.

**விதி 16**

அரசாங்க சேவைகளில் சேருவதற்கு அரசாங்கம் எல்லா மக்களுக்கும் சமவாய்ப்புக்களை வழங்குதல் வேண்டும். ஆனால் பிற்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் அரசாங்கம் தனியான சலுகைகளை வழங்கலாம்.

**விதி 17**

தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளதுடன் அது நடைமுறையில் செயற்படுத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. தீண்டாமையின் விளைவாக எழும் எத்தகைய குறைபாடுகளும் சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

**விதி 18**

படைத்துறை, கல்வித்துறை பட்டங்களைத் தவிர பிற பட்டங்கள் எவற்றையும் அரசு வழங்கக்கூடாது. அதேவேளை இந்திய மக்கள் எவரும் பிறநாடுகள் வழங்கும் பட்டத்தினை பெற்றுக்கொள்ளக்கூடாது. இந்திய குடிமகனாக இல்லாவிட்டாலும் அரசின் கீழ் பயன்பெறுகின்ற அல்லது அரசின் நம்பிக்கைக்குரிய பணியை ஏற்றுக்கொண்டுள்ள எவ் நபரும் இந்திய ஜனாதிபதியின் சம்மதம் இன்றி வெளிநாடுகளில் இருந்து எத்தகைய பட்டங்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

### 2. சுதந்திரமாக இருக்கும் உரிமை

அரசியல் யாப்பின் 19 ஆவது விதியில் இருந்து 22 ஆவது விதி வரை சுதந்திரமாக இருக்கும் உரிமை பற்றி குறிப்பிடுகின்றது.

**விதி 19**

இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரமாக சிந்திப்பதற்கும், அதனை எடுத்துச் சொல்வதற்கும் ஆயுதங்கள் இன்றி அமைதியாக கூடுவதற்கும் சங்கங்களையும், அமைப்புக்களையும் ஏற்படுத்துவதற்கும் இந்திய எல்லைக்குள் எத்தகைய தடையுமின்றி நடமாடுவதற்கும், இந்திய எல்லைக்குள் தாம் விரும்பிய இடங்களில் வசிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும் உரிமை உண்டு. அத்துடன் சொத்துக்களை வாங்குவதற்கும், விற்பனை செய்வதற்கும், வைத்திருப்பதற்கும், எந்தத் தொழிலையும் செய்வதற்கும், நடாத்துவதற்கும், எந்தப் பணியிலும் ஈடுபடுவதற்கும், எத்தகைய வியாபாரத்தை செய்வதற்கும் உரிமை உண்டு.

**விதி 20**

குற்றம் செய்யும் காலத்தில் நடைமுறையில் இருக்கும் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை மீறுபவர்களுக்கே தண்டனை வழங்கல் வேண்டும். ஒரு நபரை ஒரு குற்றத்திற்காக ஒரு தடவைக்கு மேல் குற்றஞ்சாட்டி தண்டிக்கக்கூடாது. அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்ட எந்த நபரையும் தமக்கு எதிராக தாமே சாட்சியளிக்க வேண்டுமென வற்புறுத்தக் கூடாது.

**விதி 21**

சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ள விசாரணை முறைப்படியன்றி (Procedure established by law) வேறு எந்த விதமாகவும் ஒரு நபரின் தனிப்பட்ட சுதந்திரத்தையும், உயிரையும் பறிக்கக்கூடாது.

**விதி 22**

கைது செய்து ஒரு நபரை சிறையில் வைப்பதற்கு முன்னர் அவர் எதற்காக கைது செய்யப்பட்டுள்ளார் என்பதற்கான காரணத்தை அவருக்கு தெரிவித்தல் வேண்டும். அத்தோடு அவர் தான் விரும்பி தேர்ந்தெடுக்கும் சட்டத்தரணியுடன் கலந்தாலோசிக்கவும், அவரது துணையுடன் வாதாடவும் உரிமை அளித்தல் வேண்டும். மேலும் கைது செய்யப்பட்டவரை 24 மணிநேரத்திற்குள் நீதிபதி முன் கொண்டு வந்து அவரது ஆணையின் பேரிலேயே அவரைத் தொடர்ந்து சிறையில் வைத்திருத்தல் வேண்டும். நீதிபதியின் உத்தரவில்லாமல் 24 மணிநேரத்துக்கு மேல் காவலில் வைத்திருக்க முடியாது.

மேற்கூறப்பட்ட விதி வெளிநாட்டைச் சேர்ந்த எதிரிக்கும், தடுப்புக் காவலில் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள நபருக்கும் பொருந்தமாட்டாது.

ஆனால் எந்த நபரையும் 3 மாதங்களுக்கு மேல் சிறையில் வைத்திருப்பதற்கான அதிகாரத்தை எந்தத் தடுப்புக் காவல் சட்டமும் வழங்கக்கூடாது.

சிறையில் நீடித்து வைத்திருக்க வேண்டிய தவிர்க்க முடியாத அவசியம் இருப்பின் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாக இருந்தவர்கள் அதற்கான காரணங்கள் அடங்கிய அறிக்கையினை வழங்குதல் வேண்டும் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கத்தக்கவர்கள் அடங்கிய ஓர் ஆலோசனைக் குழு அவ்வாறான அறிக்கையினை வழங்குதல் வேண்டும்.

## 3. சுரண்டலுக்கெதிரான உரிமை

அரசியல் யாப்பின் விதி 23ஆம், 24ஆம் சுரண்டலுக்கெதிரான உரிமைபற்றி குறிப்பிடுகின்றன.

**விதி 23**

மனிதர்களை விற்பதோ, வாங்குவதோ வற்புறுத்தி வேலை செய்வதோ பிச்சையெடுக்க வைப்பதோ கூடாது. அத்துடன் பொதுக்காரியங்களுக்காக



கட்டாயப்படுத்தி வேலை வாங்கவும் கூடாது. அவசியமாக வாங்க வேண்டி ஏற்படின் சாதி, சமயம், இனம், வர்க்கம் என்கின்ற வேறுபாடுகள் இன்றி அனைவரிடமும் வாங்கப்படல் வேண்டும்.

**விதி 24**

14 வயதுக்கு குறைந்த சிறுவர்களை எந்த தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் வேறு அபாயகரமான வேலைகளிலும் அமர்த்தக் கூடாது.

## 4. சமயச் சுதந்திரம் அல்லது வழிபாட்டுச் சுதந்திரம்

அரசியல் யாப்பின் 25ஆம், 26ஆம், 27ஆம், 28ஆம் விதிகள் சமயச்சுதந்திரம் பற்றி குறிப்பிடுகின்றன.

**விதி 25**

பொது ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுக்கும் இப்பகுதியில் கூறப்பட்ட ஏனையவற்றிற்கும் உட்பட்டு மக்கள் எல்லோரும் தம் மனச்சாட்சிப்படி செயற்படுவதற்கு சுதந்திரம் உடையவர்களாவர். இதன் அடிப்படையில் தாம் விரும்பும் மதத்தைத் தழுவி, அதன் கொள்கைகளுக்கு ஏற்ப நடந்து, அதைப் பரப்ப அனைவருக்கும் உரிமையுண்டு. ஆனால் மதத்துடன் தொடர்புடைய பொருளாதார, அரசியல், நீதி சார்ந்த உலகில் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் அரசுக்கு அதிகாரம் உண்டு. இதன் அடிப்படையில் இந்துக்களுடைய கோவில்கள் மற்றும் மதச்சார்பற்ற இடங்களை இந்து மதத்தைச் சார்ந்த எல்லா வகுப்பினருக்கும், பாகுபாடு இன்றி திறந்து வைக்கப்படுவதற்கு தேவைப்படும் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் அல்லது அது தொடர்பாக புதிய சட்டத்தை உருவாக்குவதற்கும் அரசுக்கு உரிமை உண்டு.

இங்கு இந்து என்ற சொல் சீக்கிய, சமண, புத்த மதங்களை சார்ந்தவர்களை குறிப்பிடுவதோடு இம் மதங்கள் தொடர்பான கோவில்களையும், மதச்சார்பற்ற இடங்களையும் குறிப்பிடுகின்றது.

**விதி 26**

பொது அமைதிக்கும் ஒழுக்கத்திற்கும், மக்கள் நல்வாழ்விற்கும் உட்பட்ட வகையில் எந்த மதப்பிரிவினரும் மத வழிபாட்டு செயல்களுக்காக நிறுவனங்களை அமைத்துப் பேண உரிமையுண்டு. இதன்படி தமது மதம் சம்பந்தப்பட்ட விவகாரங்களை தாமே நிர்வகிப்பதற்கும், சொத்துக்களை பெறுவதற்கும் அதனை உரிமையுடன் வைத்திருப்பதற்கும் அத்தகைய சொத்துக்களை சட்டப்படி நிர்வகிப்பதற்கும் உரிமையுண்டு.

**விதி 27**

ஒரு குறிப்பிட்ட மதத்தின் அல்லது மதப்பிரிவின் செலவுகளுக்காக வேறு எவரையும் வரி செலுத்தும்படி கட்டாயப்படுத்தக் கூடாது.

**விதி 28**

அரசு நிதியில் இருந்து நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனங்களில் எத்தகைய மதவேதனையையும் மேற்கொள்ளக்கூடாது.

ஆனால் மதபோதனைக்கென ஓர் அறக்கட்டளை அல்லது கொடைகள் மூலம் உருவாக்கப்பட்டுள்ள கல்வி நிலையங்களைப் பொறுத்தவரை அவை அரசாங்க நிதி உதவியின் மூலம் தொழிற்பட்டாலும் இவ்விதி பொருந்தாது.

அரசால் அங்கீகிக்கப்பட்டுள்ள அல்லது அரசாங்க உதவித் தொகையினை பெற்று நடாத்துகின்ற கல்வி நிலையங்களில் அல்லது அவற்றுடன் இணைந்த கட்டடிங்களில் நடைபெறும் மதபோதனைகளிலும், வழிபாடுகளிலும் சம்பந்தப்பட்ட-வர்களின் சம்மதம் இன்றிசம்பந்தப்பட்டவர்கள் பாலகர்களாக இருந்தால் அவர்களுடைய பாதுகாவலர்களின் சம்மதம் இன்றி பங்கேற்க வேண்டும் என கேட்கக்கூடாது.

## 5. பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்

அரசியல் யாப்பின் 29ஆம், 30ஆம், விதிகள் இதைப் பற்றி குறிப்பிடுகின்றன.

**விதி 29**

தனிமொழி, மதம், பண்பாடு ஆகியவற்றைச் சேர்ந்த பிரிவினர் அதனை பேணி பாதுகாப்பதற்கு உரிமை உடையவர்களாவர்.

சமயம், சாதி, இனம், மொழி அல்லது பிற வேறுபாடுகள் காரணமாக எந்த பிரஜைக்கும் அரசால் அல்லது அரசின் உதவித் தொகையால் நடாத்தப்படும் கல்வி நிலையங்களில் அனுமதி அளிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கக் கூடாது.

**விதி 30**

மதம் அல்லது மொழி அடிப்படையில் அமைந்துள்ள சிறுபான்மையினர் தமது விருப்பம் போல கல்வி நிலையங்களை நிறுவி நிர்வகிப்பதற்கு உரிமையுண்டு.

மொழி அல்லது மதத்தின் காரணமாக சிறுபான்மையினராக உள்ளவர்களின் நிர்வாகத்தின் கீழ் ஒரு கல்வி நிறுவனம் இருக்கின்றது என்பதற்காக அதற்கு உதவித் தொகை அளிப்பதில் எத்தகைய பாகுபாட்டையும் அரசு காட்டக்கூடாது.

## 6. அரசியல் அமைப்பு தீர்முறை உரிமை

அரசியல் யாப்பின் 32 தொடக்கம் 35 வரையுள்ள விதிகள் இதுபற்றி குறிப்பிடுகிறது. உரிமை மீறல்களுக்கு உள்ளானவர்கள் பரிகாரம் பெறுவதற்கான வழிகள் இவ்விதிகளில் கூறப்பட்டுள்ளன.

அடிப்படை உரிமைகளை அகற்றும் அல்லது குறைக்கும் சட்டங்களையும் அடிப்படை உரிமைகளை பாதிக்கும் ஆட்சித்துறை நடவடிக்கைகளையும் செல்லாது என தீர்ப்பளிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு.



**விதி 32**

அடிப்படை உரிமைகளை செயல்படுத்துவதற்காக உச்ச நீதிமன்றத்தினை அணுகும் உரிமை இந்திய பிரஜைகள் அனைவருக்கும் உண்டு. இதற்காக பிரஜைகள் நேரடியாகவும் உச்சநீதிமன்றம் செல்லலாம் அல்லது மாநில உயர்நீதிமன்றம் சென்று பின்னர் உச்ச நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

அடிப்படை உரிமைகளை வலியுறுத்துவதற்காக உச்ச நீதிமன்றமும், மாநில உயர்நீதிமன்றங்களும் ஆட்கொணர்ந்திப் பேராணை (Writ of habeus Corpus), செயலுறுத்தும் நீதிப் பேராணை (Writ of Mandamus), தடை நீதிப் பேராணை (Writ of Prohibition), ஆவணக் கேட்பு நீதிப்பேராணை (Writ of Cerflorari), உரிமையேதுவினா (Writ of Que arrnto) போன்ற நீதிப்பேராணைகளை வழங்க அதிகாரம் பெற்றுள்ளன.

**விதி 33**

படைப்பிரிவினரும் மற்றும் பொது ஒழுங்கை நிலை நாட்டும் பணியில் ஈடுபட்டுள்ள படையினரும் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றவும் கட்டுப்பாட்டை காத்து பராமரிக்கவும் ஏற்ற வகையில் உரிமைகளை எந்தளவிற்கு கட்டுப்படுத்த வேண்டும் அல்லது நீக்கவேண்டும் என்பது பற்றி பாராளுமன்றம் ஒரு சட்டத்தின் மூலம் வரையறை செய்யலாம்.

**விதி 34**

இந்திய எல்லைக்குள் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள ஒரு பிரதேசத்தில் ஒழுங்கை நிலை நாட்டவும், பாதுகாக்கவும் மத்திய அல்லது மாநில அரசு பணியில் இருப்போர் அல்லது அத்தகைய வேறு நபர்கள் எத்தகைய செயலில் ஈடுபட்டிருந்தாலும் அதற்குரிய பாதுகாப்பை அவர்களுக்கு அளிப்பதற்கும் அல்லது அதற்கென விதிக்கப்பட்டுள்ள தண்டனையை பறிமுதல் செய்யப்படும் உத்தரவு அல்லது வேறு செயலைச் சட்டபூர்வமாக்குவதற்கும் பாராளுமன்றம் சட்டங்களை இயற்றலாம்.

**விதி 35**

19(3), 32(3), 33, 34 விதிகளின் வரக்கூடிய விடயங்களில் பாராளுமன்றமே சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும். இவற்றின் கீழ்வரும் குற்றவிடயங்-களில் கூட தண்டனை விதிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மட்டுமே உண்டு. அரசியல் யாப்பு தொடங்குவதற்கு முன்னர் இருந்த சட்டவிடயத்திலும் இவ்விதி பொருந்துவதாக இருக்கும்.

## அடிப்படை உரிமைகள் தொடர்பான கட்டுப்பாடுகள்

அடிப்படை உரிமைகளை செயல்படுத்துவதற்கு சில கட்டுப்பாடுகளையும் அரசியல் யாப்பு விதித்துள்ளது. படைவீரர்களுக்கென அடிப்படை உரிமைகளை மாற்றியமைக்க அரசியல் யாப்பின் 32 ஆவது விதி பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தினை வழங்கியுள்ளது.

இராணுவ சட்டத்தின் (Martial Law) கீழுள்ள பகுதிகளில் அடிப்படை உரிமைகளை வரையறைப்படுத்த பாராளுமன்றத்துக்கு 34 ஆவது விதியின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பின் 352 ஆவது விதியின் படி ஜனாதிபதி நெருக்கடி நிலைப்பிரகடனத்தை மேற்கொள்ளும்போது அடிப்படை உரிமைகளும், தீர்முறை உரிமைகளும் இரத்து செய்யப்படலாம்.

தடுப்புக் காவல் சட்டத்தின் படி (Preventive Detention Act) உரிமைகள் வரையறுக்கப்படலாம்.

அரசியல் யாப்புக்கு கொண்டுவரப்பட்ட 44 ஆவது திருத்தத்தின்படி நெருக்கடி காலங்களிலும் வாழ்க்கை உரிமை, சுதந்திரமாக இருக்கும் உரிமை ஆகிய இரண்டையும் இரத்து செய்ய முடியாது.

அரசியல் யாப்புக்கு கொண்டுவரப்பட்ட 24ஆவது திருத்தத்தின்படி அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் வகையில் அரசியல் யாப்பினை திருத்தும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உண்டு.

### அடிப்படை உரிமைகளின் நன்மைகள்

(1) மக்களது வாழ்க்கைக்கு தேவையான இன்றியமையாத உரிமைகள் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

(2) தீண்டாமை ஒழிப்பும் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளமையானது சாதியால் ஒடுக்கப்பட்ட மக்கள் ஏனைய பிரஜைகளுடன்ஒன்றிணையக்கூடிய வாய்ப்புக் களை உருவாக்கியுள்ளது.

(3) உச்ச நீதிமன்றத்தின் மூலமும் உயர் நீதிமன்றத்தின் மூலமும் உரிமை மீறலுக்கு பரிகாரம் காணலாம் எனக் கூறப்பட்டுள்ளமையானது உரிமை களின் பிரயோகத்தினை வலுப்படுத்துவதாக உள்ளது.

(4) மனித உரிமை ஆணைக்குழுக்கள் உரிமைகளைப் பாதுகாக்க உதவு கின்றன.

### அடிப்படை உரிமைகளின் குறைபாடுகள்

(1) அடிப்படை உரிமைகளை அவசரகால நிலைமையின் போது அரசாங்கம் கட்டுப்படுத்தலாம் எனக் கூறப்பட்டுள்ளமையானது அதிகார துஷ்பிரயோ கத்திற்கு வழிவகுக்கலாம்.

(2) சில அடிப்படை உரிமைகள் எல்லா மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. வேறு சில அடிப்டை உரிமைகள் குடிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

(3) படைத்துறையினருடைய அடிப்படை உரிமைகளை அவர்களது பணி காரண மாக பாராளுமன்றம் குறைக்கலாம்.



(4) நெருக்கடி காலங்களில் அடிப்படை உரிமைகளின் பிரயோகத்தினை ஒத்தி வைக்கலாம்.

## 4 இந்தியாவில் அடிப்படை கடமை

இந்திய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டபோது யாப்பில் அடிப்படைக் கடமைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. பின்னர் அரசியல் யாப்பிற்குக் கொண்டுவரப்பட்ட 42 ஆவது திருத்தப்படி யாப்பில் 51 - A என்ற புதிய பாகம் இணைக்கப்பட்டு அடிப்படைக் கடமைகள் என்னும் பகுதி சேர்க்கப்பட்டது. இவ்வடிப்படைக் கடமைகள் சோவியத் யூனியன் யாப்பில் காணப்பட்ட அடிப்படைக் கடமைகள் என்னும் பகுதியை ஒத்ததாகக் காணப்பட்டன.

யாப்பில் கூறப்பட்ட அடிப்படைக் கடமைகள் பின்வருமாறு அமைந்திருந்தன:

(1) அரசியல் யாப்பிற்குக் கீழ்ப்படிதலும், அரசியல் யாப்பின் உயர்ந்த நோக்கங்கள். அதன் நிறுவனங்கள், தேசியக் கொடி, தேசிய கீதம் போன்றவற்றுக்கு மரியாதை செய்தலும்.

(2) சுதந்திரப் போராட்ட உணர்வுக்கு தூண்டுகோலாகவமைந்த உயர்ந்த கொள்கைகளைப் போற்றுதலும், பின்பற்றுதலும்.

(3) இந்தியாவின் இறைமை, ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகியவற்றை நிலைநாட்டலும் பாதுகாத்தலும்.

(4) நாட்டைப்பாதுகாத்தலும், அழைக்கின்ற போது நாட்டுக்கு சேவை செய்ய முன்வருதலும்

(5) மதம், மொழி, பிராந்தியம் மற்றும் குழு வேறுபாடுகள் என்பவற்றைத் தாண்டி இந்திய மக்களிடையே சகோதரத்துவத்தையும், ஒன்றுபட்ட உணர்வையும் உருவாக்குதலும், பெண்களின் கண்ணியத்தைக் களங்கப்படுத்தும் பழக்கவழக்கங்களைத் தவிர்த்தலும்.

(6) விலைமதிப்பற்றதும் பல்வகைப்பட்டதும் தொன்றுதொட்டு வருவதுமான இந்தியப் பண்பாடுகளை மதித்தலும், பாதுகாத்தலும்.

(7) காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டு விலங்குகள் மற்றும் உயிரினங்கள் உள்ளிட்ட இயற்கைச் சுற்றுச்சூழலை பாதுகாத்தலும், மேம்படுத்தலும் மற்றும் உயிரினங்களிடத்தில் பரிவு காட்டுதலும்.

(8) விஞ்ஞான ரீதியான அணுகுமுறை, மனிதாபிமானம், ஆய்வு மனப்பான்மை மற்றும் சீர்திருத்த எண்ணங்கள் ஆகியவற்றை வளர்த்தலும் பாதுகாத்தலும்.

(9) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தலும். வன்முறையைக் கைவிடுதலும்.

(10) அனைத்துத் துறைகளிலும் தனியாகவும் கூட்டாகவும் செய்யக்கூடிய செயல்களில் மேம்பாடடைவதற்கு முயற்சித்தலும் இதன்மூலம் நாட்டை நிரந்தரமானதொரு உன்னத நிலைக்கு உயர்த்துதலும்.

### நன்மைகள்

(1) அடிப்படைக் கடமைகள் அரசியல் யாப்பிற்கும், அதிலுள்ள விடயங்களுக்கும் முன்னுரிமை கொடுத்துள்ளன.

(2) சுதந்திரப் போராட்ட இலட்சியங்களைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாப்பதற்கு முயல்கின்றன.

(3) நாட்டின் இறைமை, ஐக்கியம், ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை இவை வற்புறுத்துகின்றன.

(4) இயற்கைச் சூழலென்பது இயற்கை தந்த கொடையாகும் அதனையும் பாதுகாக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கவொன்றாகும்.

### குறைபாடுகள்

(1) அடிப்படைக் கடமைகளின் சட்டத்தன்மை பற்றி யாப்பில் எதுவும் கூறப்படவில்லை. இதனால் இவை சட்டப்பெறுமதியற்றதாக மாறி விடுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம்.

(2) கல்வியறிவற்றவர்கள் அதிகமாக வாழ்கின்ற இந்தியாவில் மக்கள் இதனை உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்வார்களெனக் கூறமுடியாது.

(3) அடிப்படைக் கடமைகள் தொடர்பான கண்காணிப்புப் பொறிமுறை சீரானதாகவிருத்தல் வேண்டும். இல்லையேல் இவ்வேற்பாடுகளின் நோக்கம் நிறைவேறாது போகலாம்.

(4) இந்தியாவில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகளவில் இருப்பதனால் அனைத்து மக்களும் இவ்வேற்பாடுகளுக்கு விசுவாசமாக இருப்பார்களெனக் கூறமுடியாது.

## 5 இந்திய ஜனாதிபதி (குடியரசு தலைவர்)

இவர் பெயரளவு நிர்வாகத் தலைவராக விளங்குகிறார். அமைச்சரவையின் ஆலோசனைப்படி இவர் செயற்படுகிறார். இவரது நிலை இங்கிலாந்தின் அரசியின் நிலையை ஒத்ததாகும். பதவி நீக்கம், ராஜினாமா, மரணம் காரணமாக ஜனாதிபதி பதவி வெற்றிடமானால் துணை ஜனாதிபதி ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார்.



### ஜனாதிபதி பற்றிய திருத்தம்

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்தாண்டுகளாகும். இடைக்காலத்தில் குற்ற விசாரணை மூலம் அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம். ஒரு ஜனாதிபதி எத்தனை தடவையும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

### ஜனாதிபதி தேர்தல்

மறைமுகமான தேர்தல் ஒன்றின் மூலம் 5 ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஒருமுறை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். பாராளுமன்றத்தின் இரு சபைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் மாநில சட்டமன்றங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் கொண்ட தேர்வாளர் குழு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறது.

ஜனாதிபதி தேர்தல் ஒற்றை மாற்று வாக்கின் படி (Singletran sterable Vote) விகிதசம பிரதிநிதித்துவ முறையில் (Proportional Representation ) நடைபெறுகின்றது. எல்லா மாநிலங்களுக்கும் ஒரு சீரான பிரதிநிதித்துவம் வழங்குவதற்கென தனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை இதன் மூலம் மாநிலங்களும் மத்திய அரசாங்கத்திற்கும் சமநிலை அளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்வாளர்களுக்கு கீழ்க்காணும் முறையில் வாக்குகள் அளிக்கப் படுகின்றன.

**மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு**

$$\text{மாநில சட்டமன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குள்ள வாக்குகளின்} = \frac{\text{மாநிலத்தின் மக்கள் தொகை} \div 1000}{\text{மாநிலச் சட்டமன்ற தேர்ந்தெடுக்கப் பட்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை}}$$

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு**

$$\text{பாராளுமன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருக்குள்ள வாக்குகளின் எண்ணிக்கை} = \frac{\text{எல்லா மாநிலச் சட்டமன்ற தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் வாக்குகளின் எண்ணிக்கை}}{\text{பாராளுமன்ற இருஅவைகளின் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை}}$$

## ஜனாதிபதி வேட்பாளருக்கு உரிய தகைமைகள்

(1) இந்தியப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(2) 35 வயதுநிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

(3) மக்கள்அவைத் தேர்தலில் போட்டியிடக் கூடிய தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) மத்திய, மாநில அரசாங்கத்தில் பணியாற்றுபவராக இருத்தல் கூடாது.

(5) பாராளுமன்றத்தின் எந்தச் சபையிலோ அல்லது எந்தமாநில சட்டமன்றங்களிலோ உறுப்பினராக இருத்தல் கூடாது.

## பதவி நீக்கம்

ஜனாதிபதி குற்றவிசாரணை மூலம் பதவி நீக்கப்படுகின்றார். ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணையை பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு சபையில் கொண்டு வரலாம். அக்குற்றப் பிரேரணையில் சபை உறுப்பினர்கள் 1/4 பங்கினர் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். பின்னர், அப்பிரேரணை சபையில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். பிரேரணை நிறைவேற்றிய சபை தவிர மற்றைய சபை புலன் விசாரணையை நடாத்தும். புலன்விசாரணையின் போது ஜனாதிபதி தன் சார்பில் வாதாட யாரையாவது அனுப்பலாம். முடிவில் புலன் விசாரணை செய்யும் சபை 2/3 பெரும்பான்மையுடன் குற்றப் பிரேரணையை நிறைவேற்றினால் ஜனாதிபதி பதவி நீக்கப்படுவார்.

ஜனாதிபதி பதவிநீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதகாலத்திற்குள் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். அதுவரை துணை ஜனாதிபதி ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

## அதிகாரங்கள்

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) பாராளுமன்றத்தின் இருசபைகளையும் கூட்டுதல் கூட்டத் தொடரை ஒத்திவைத்தல் உரையாற்றுதல் குறைந்தது 6 மாதங்களுக்கு ஒரு தடவையாவது பாராளுமன்றத்தினை கூட்டுதல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தின் கீழ் சபையான மக்களவையைக் கலைத்தல்.

(3) மாநிலங்களின் அவைக்கு 12 உறுப்பினர்களை நியமித்தல்.

(4) பாராளுமன்றத்தின் சிம்மாசனப் பிரசங்கத்தை இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் நிகழ்த்துதல்.



(5) பாராளுமன்றத்திற்குச் செய்திகள் அனுப்புதல். மக்களவை ஜனாதிபதியையும் துணை ஜனாதிபதியையும் தேர்ந்தெடுப்பதிலும் மாநிலங்களவையுடன் இணை அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

(6) இருசபைகளிடையே ஏற்படும் சட்டப் பிணக்குகளைத் தீர்க்க இசபைகளின் கூட்டுக் கூட்டத்தினை கூட்டுதல்

(7) இருசபைகளினாலும் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு கையொப்பமிடுதல். சிலவகையான மசோதாக்களை எந்தச் சபை அந்த மசோதாவை தொடக்கியதோ அந்தச் சபைக்கே தனது பரிந்துரைக் கேற்ப மறுபரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பலாம். தனது பரிந்துரைக் கேற்ப ஆனால் அத்தகைய மசோதாக்கள் பாராளுமன்றத்தில் மீண்டும் ஆராய்ந்து நிறைவேற்றப்பட்டால் அவர் தன்னு டைய ஒப்புதலை அளித்தே ஆக பரிந்துரையை ஏற்றோ, மறுத்தோ வேண்டும்.

(8) பண மசோதாக்கள் ஜனாதிபதியின் முன் அனுமதியைப் பெற்ற பின்னரே சபையில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

(9) மாநிலங்களின் எல்லை மாற்றம், பெயர் மாற்றம், புதிய மாநிலத்தை உருவாக்குதல் போன்றவை சம்பந்தப்பட்ட மசோதாக்களும் அவரது அனுமதியை பெற்ற பின்னரே அறிமுகப்படுத்தப்படுகின்றன. மாநிலச் சட்டமன்றங்கள் கூட சில மசோதாக்களை அறிமுகப்படுத்த ஜனாதிபதியின் அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

(10) நெருக்கடி நிலைக் காலங்களில் சட்டங்களை இயற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.ஆனால் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தி 1 மாத காலத்திற்குள் அப்பிரகடனம் பாராளுமன்றத்தின் 2/3 பங்கு ஆதரவினை பெறுதல் வேண்டும். இப்பிரகடனம் 6 மாத காலத்திற்கே செல்லுபடி ஆகும். மேலும், அந்த நிலையைத் தொடர வேண்டுமானால் பாராளுமன்றத்தில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(11) உள்நாட்டுக் காரணங்களுக்காக அவசரநிலையை, பிரகடனப் படுத்தும் போது அமைச்சரவையின் ஆலோசனையை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். (புரட்சி நிலை தொடர்பாக).

நெருக்கடி கால அதிகாரங்கள் தொடர்பாக அரசியல் யாப்பு மூன்று வகையான நெருக்கடிகளைக் குறிப்பிடுகின்றது;

### 1. வெளிநாட்டுத் தாக்குதலும் உள்நாட்டில் ஆயுத கிளர்ச்சியும்

போர். வெளிநாட்டுத் தாக்குதல், உள்நாட்டு ஆயுத கிளர்ச்சி என்பவற்றினால் முழுநாட்டிற்கோ அல்லது நாட்டின் ஒரு பகுதிக்கோ ஆபத்து ஏற்படும் எனத் தோன்றினால் ஜனாதிபதி நெருக்கடி நிலைப்பிரகடனத்தை விடுக்கலாம். பிரகடனம் விடுக்கப்பட்டு ஒரு மாதம் முடிவதற்குள் பாராளுமன்றத்தின் அனுமதியை ஜனாதிபதி

பெறுதல் வேண்டும். பாராளுமன்றம் அனுமதி வழங்கினால் ஆறு மாத காலத்திற்கு நெருக்கடி நிலைப் பிரகடனம் செல்லுப்படியானதாகும். இதற்கு மேல் நீடிக்க வேண்டுமானால் திரும்ப பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறுதல் வேண்டும். இவ்வாறு 6 மாதங்களுக்கொரு தடவை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நெருக்கடி நிலைப்பிரகடனத்தை தொடரலாம்.

நெருக்கடி நிலைக் காலத்தில் பாராளுமன்றம் மாநிலப் பட்டியலில் உள்ள விடயங்களிலும் சட்டங்களை இயற்றலாம். மாநில நிர்வாகத்துறை எவ்வாறு செயற்படவேண்டும் என மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு கட்டளைகளை இடலாம். மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்குமிடையேயான வருவாய்பகிர்வு விதிகளையும் ஜனாதிபதி மாற்றலாம். அடிப்படை உரிமைகளையும் தள்ளிவைக்கலாம். பாராளுமன்றமும் நிர்வாகத்துறையும் உரிமை மீறினால் கூட உச்ச நீதிமன்றத்தினால் அதனைத் தடுக்க முடியாது.

## 2. மாநிலங்களில் அரசியல் சீர்குலைவு

மாநிலத்தில் அரசியல் யாப்பிற்கேற்ப அரசாங்கத்தை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட மாநிலத்தின் ஆளுநர் அறிவிப்பாராயின் ஜனாதிபதி அம்மாநிலத்திற்கென நெருக்கடி நிலைப்பிரகடனத்தை விடுக்கலாம். இக்காலத்தில் ஜனாதிபதி மாநில நிர்வாகத்துறையின் அதிகாரங்களை ஏற்று மாநில சட்டமன்றங்களின் அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு மாற்றலாம்.

இவ் நெருக்கடிகாலப் பிரகடனத்தை இரு மாதத்திற்குள் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதியைப் பெறுதல் வேண்டும். பாராளுமன்றம் அனுமதி வழங்கினால் நெருக்கடி நிலைப்பிரகடனம் 6 மாதத்திற்கு செல்லுபடியாகும். தொடர்ந்து அதனை நீடிக்க வேண்டுமானால் மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு ஒரு ஆண்டுவரை நெருக்கடி நிலைப்பிரகடனத்தை நீடிக்கலாம்.

இவ்நெருக்கடி காலத்தில் அடிப்படை உரிமைகளை மட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு உண்டு.

## 3. நிதி நெருக்கடி

முழு நாட்டிலும் அல்லது நாட்டின் ஒரு பகுதியில் நிதி நிலை சீர்குலையுமானால் ஜனாதிபதி நெருக்கடி நிலைப்பிரகடனத்தை விடுக்கலாம். இப்பிரகடனம் தொடர்பாக இருமாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

நிதிநெருக்கடிக் காலத்தில் ஜனாதிபதி குறிப்பிட்ட நிதிநிலை விதிகளைப் பின்பற்றுமாறு மாநிலங்களுக்கு கட்டளையிடலாம். மாநிலச் சட்டமன்றங்கள் நிறைவேற்றும் பண மசோதாக்களைத் தமக்கு அனுப்புமாறும் கட்டளையிடலாம்.



## நிர்வாகத் துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் நியமித்தல்.

(2) மாநிலஆளுநர்கள், யூனியன் பிரதேசங்களின் லெப்டினன் கவர்னர்கள் போன்றவர்களை நியமித்தல்.

(3) தேர்தல் அதிகாரிகளை நியமித்தல்.

(4) தலைமை தணிக்கையாளர், தலைமை, வழக்கறிஞர், பதிவாளர், என்போரை நியமித்தல்.

(5) மத்திய பொதுப்பணிக் கழக உறுப்பினர்களையும் அதன் தலைவரையும் நியமித்தல்.

(6) முப்படைகளின் தளபதிகளை நியமித்தல்

(7) போர்ப்பிரகடனம், அமைதிப் பிரகடனம் என்பதை விடுத்தல் இதற்கு பாராளுமன்ற சம்மதம் தேவை.

(8) வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்

(9) பிரதமரின் ஆலோசனையின் பெயரில் முக்கிய அதிகாரிகளையும், அலுவலர்களையும் நியமித்தல்

(10) நிதிக்குழு உறுப்பினர்களை நியமித்தல்

(11) வெளிநாட்டு தூதுவர்களை நியமித்தல்

## நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) கலந்தாலோசிக்கத் தகுதியானவர்கள் எனக் கருதும் உச்சநீதிமன்ற நீதிபதிகளுடன் கலந்தாலோசித்து பிரதம நீதியரசரை நியமித்தல்.

(2) பிரதம நீதியரசருடன் கலந்தாலோசித்து ஏனைய உச்ச நீதிபதிகளையும், மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் நியமித்தல்.

(3) உச்சநீதிமன்றத்தின் செயல்-முறை பற்றி விதிகளை வரைவதற்கு ஆலோசனை அளித்தல்.

(4) குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல், தண்டனை அளித்தல், தண்டனையை ஒத்திவைத்தல்.

மேற்கூறியவாறு ஜனாதிபதி சட்ட நிருவாக, நீதி, அதிகாரங்களை பிரயோகிக்கக் கூடியவாராக இருந்த போதும் அவ்வதிகாரங்களை அமைச்சரவையின் ஆலோசனைப் படியே செயற்படுத்த வேண்டியவராக இருக்கின்றார். இதனால் பிரித்தானிய முடியைப் போல இவரும் பெயரளவு நிர்வாகியாகவே கருதப்படுகின்றார்.

எனினும் ஜனாதிபதி சில சந்தர்ப்பங்களில் உண்மையான அதிகாரம் படைத்த வராகவும் விளங்குகின்றார். குறிப்பாக பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாவிடில் ஜனாதிபதி தனது விருப்புரிமையைப் பயன்படுத்தி யார் நிலையான அரசாங்கத்தினை அமைப்பார் எனக் கருதுகின்றாரோ அவரை பிரதமராக நியமிக்கலாம். அதேவேளை கட்சிப் பிளவுகள் காரணமாக பாராளுமன்றத்தில் உறுதி நிலை குலைந்து அரசாங்கம் சீர்குலையும் போது ஜனாதிபதி உறுதிநிலையினை ஏற்படுத்தும் பொறுப்பினை ஏற்கலாம்.

### ஜனாதிபதியின் பதவியின் நன்மைகள்

(1) நாட்டின் பொதுக் குறியீடாக ஜனாதிபதி விளங்குகின்றார்.

(2) ஜனாதிபதி தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாநில சட்ட மன்ற உறுப்பினர்களும் பங்கு பற்றுகின்றமையானது ஓரளவிற்காவது மக்களாட்சியை வலுப்படுத்துவதாக உள்ளது.

(3) ஜனாதிபதி தெரிவில் மாநிலங்களும் பங்குபற்றுகின்றமையானது. மாநிலங்களின் உரிமைகளை மதிப்பதாக உள்ளது.

(4) அரசாங்கத்தின் உறுதி நிலைகுலையும் போது அதனை தடுக்கும் தடுப்புச் சுவராக ஜனாதிபதி விளங்குகின்றார்.

(5) அரசாங்கம் நடைமுறையில் செயற்படாத போது ஆட்சிப் பொறுப்பினை ஏற்பவராக ஜனாதிபதி விளங்குகின்றார்.

(6) நாட்டின் முக்கியமான விடயங்களில் அரசியல் அபிப்பிராயத்தினை உருவாக்க கூடியவராக் ஜனாதிபதி விளங்குகின்றார்.

### ஜனாதிபதி பதவியின் குறைபாடுகள்

(1) ஜனாதிபதி நேரடியாக மக்களினால் தெரிவு செய்யப்படாமையானது மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு விரோதமானதாக உள்ளது.

(2) ஜனாதிபதி தெரிவில் ஆளும் கட்சியின் செல்வாக்கு அதிகமாக இருப்பதனால் அவர் ஆளும் கட்சியின் பிரதிநிதியாக தொழிற்படக்கூடிய நிலையும் ஏற்படுகின்றது.

(3) ஜனாதிபதி பெயரளவு நிர்வாகியாக இருக்கின்றமை அவரிடமிருந்து பயனுடைய விளைவுகள் பெறுவதைத் தடுக்கின்றது.

(4) அரசாங்கம் உறுதி குலையும் போது அல்லது நடைமுறையில் செயற்பட முடியாத போது ஜனாதிபதி சர்வாதிகாரியாக தொழிற்படவும் வாய்ப்புக்கள் உண்டு.



## துணை ஜனாதிபதி

துணை ஜனாதிபதி பாராளுமன்றத்தினால் ஒற்றை மாற்று வாக்கின்படி விகிதாசாரப் பிரநிதித்துவ முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவரின் பதவிக்காலம் 5 வருடங்கள் ஆகும். பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் சாதாரண பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இவரைப் பதவியில் இருந்து நீக்கலாம்.

### அதிகாரங்கள்

1) மாநிலங்கள் அவையின் தலைவர். மாநிலங்கள் அவையில் வாக்களிக்கும் உரிமை துணைஜனாதிபதிக்கு இல்லை. ஆனால் வாக்கெடுப்பில் சமநிலை காணப்படின் முடிவு செய் வாக்கினை அளிக்க உரிமை உண்டு.

2) ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டால் இவர் நிகழ்-நிலை ஜனாதிபதியாகப் பணியாற்றுவார். இதன்-போது ஜனாதிபதிக்குள்ள அனைத்து அதிகாரங்களும் இவருக்கு உண்டு. புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் வரை இவர் பதவி வகிப்பார்.

## 6. பாராளுமன்றம்

இந்திய பாராளுமன்றம் மக்களவை, மாநிலங்கள் அவை என்கின்ற இரண்டு சபைகளைக் கொண்டதாக விளங்குகின்றது. மசோதாக்கள் அனைத்தும் இருசபைகளினாலும் நிறைவேற்றப்பட்ட பின்னரே, பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாக கருதப்பட்டு ஜனாதிபதியின் கையொப்பத்திற்கு அனுப்பப் படுகின்றன. சட்டங்கள் தொடர்பாக இரு சபைகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படின் இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் அவை தீர்த்து வைக்கப்படுகின்றன. அரசியல் யாப்புத் திருத்தங்கள் இருசபைகளிலும் தனித்தனியாக நிறைவேற்றப் படுதல் வேண்டும்.

பொதுத் தேர்தல் முடிந்தவுடன் வரும் முதலாவது கூட்டத்தில் மக்களவையின் சபாநாயகர் துணைச் சபாநாயகர் ஆகியோர் சபையினரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சபாநாயகரை பதவி நீக்குவதாயின் 14 நாட்கள் தவணைக்கு பின்னர் சபைக்கு சமுகமளித்தோரில் பெரும்பான்மை ஆதரவுடன் நீக்கலாம்.

சபாநாயகருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை ஆனால் சமநிலை ஏற்படும் போது முடிவு செய்வாக்கினை அளிக்கலாம்.

சபையின் விதிகளுக்கேற்ப சபை கூட்டங்களை நாடத்துதல் பணமசோ தாவை அடையாளம் காணல். கட்சித் தலைவர் கூட்டங்களைக் கூட்டி பிரச்சினை களைத் தீர்த்து வைத்தல் போன்றன சபாநாயகரின் கடமைகளாக உள்ளன.

சபையில் கட்சி சார்பற்றவராக இருந்தாலும் சபைக்கு வெளியில் கட்சியின் நடவடிக்கைககளில் கலந்து கொள்கின்றார்.

மக்களவை ஜனாபதிபதியையும் துணை ஜனாதிபதியையும் தேர்ந்தெடுப் பதிலும் மாநிலங் களவையுடன் இணை அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

## மக்களவை

இது லோக சபா, 1ம் மன்றம், கீழ்சபை எனவும் அழைக்கப்படுகின்றது. இதில் 545 பேர் இந்தியா முழுவதிலும் உள்ள தேர்தல் தொகுதிகளில் இருந்து தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். தாழ்த்தப்பட்ட சாதியினர், பிற்படுத்தப்பட்ட சாதியினர், பழங்குடி மக்கள் என்போருக்கு சில தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் வாழும் ஆங்கில இந்தியர்களுக்கான 2 பிரதிநிதிகளை ஜனாதிபதி நியமிப்பார். இதன் பதவிக்காலம் 5 வருடங்கள் ஆகும். ஆனால், இடைக்காலத்தில் பிரதமரின் ஆலோசனையின் அடிப்படையில் ஜனாதிபதி மக்களவையைக் கலைக்கலாம்.

நெருக்கடி காலத்தில் ஒவ்வோர் ஆண்டாக கால எல்லையை நீடிக்கலாம். நெருக்கடி நிலை நீங்கிய பின் ஆறுமாதத்திற்குள் சபையினைக் கலைக்க வேண்டும்.

## அதிகாரங்கள்

### 1. சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

மத்திய பட்டியலிலும், பொதுப்பட்டியலிலும் உள்ள விடயங்கள் தொடர்பாக சட்டமியற்றும் அதிகாரம் இதற்கு உண்டு. நிதி மசோதாக்களை இங்கு மட்டுமே அறிமுகப்படுத்தலாம். இருசபைகளுக்கும் இடையே சட்டப் பிணக்குகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாநிலங்களின் அவையின் கருத்தை மீறிச் செயற்படக்கூடிய நிலை உண்டு. வரவு செலவுத் திட்டத்தினை மாநிலங்கள் அவை ஏற்றே ஆகுதல் வேண்டும். அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாக இருசபைகளும்சமமான அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

### 2. நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

பிரதம மந்திரி உட்பட பெரும்பான்மையான அமைச்சர்கள் இச்சபையில் இருந்தே நியமிக்கப்படுகின்றனர். மேலும் அமைச்சரவை இச்சபைக்கு கூட்டாகப் பொறுப்புடையதாகும். அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் அமைச்சரவையைப் பதவி நீக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. அமைச்சுக்களை அவர்களது கருமங்களை தொடர்பாக கேள்வி கேட்கும் உரிமை இச்சபைக்கு உண்டு. அவ்வாறு கேள்வி கேட்கும்போது அதற்கு பதிலளிக்க வேண்டிய கடமையும் அமைச்சர்களுக்கு உண்டு. அமைச்சரவையினால் சமர்ப்பிக்கப் படுகின்ற வரவு செலவுத் திட்டம் இச்சபையின் அங்கீகாரத்தை பெற்ற பின்னரே



அமுலுக்கு வரமுடியும். மேலும் ஜனாதிபதியைப் பதவி நீக்குவதற்கான தீர்மானத்தை இச்சபையிலும் கொண்டு வரலாம். துணை ஜனாதிபதியைப் பதவி நீக்குவதற்கான தீர்மானம் இச்சபையிலும் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

### 3. நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

ஜனாதிபதி மீதான குற்றப்பிரேரணையை மாநிலங்கள் அவை கொண்டு வந்து நிறைவேற்றினால் அது தொடர்பான விசாரணையை மக்களவை மேற் கொள்கிறது. இதைவிட உச்ச நீதிமன்றம், மாநில உயர்நீதிமன்றங்கள் என்பவற்றின் நீதிபதிகளை பதவி நீக்கும் தீர்மானம் இச்சபையிலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

## மாநிலங்களவை

இது இந்திய பாராளுமன்றத்தின் மேல் அவை ஆகும். ராஜ சபை இரண்டாம் மன்றம் எனவும் இது அழைக்கப்படுகிறது. இதில் 250 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். கலை, இலக்கியம், அறிவியல். பொதுச்சேவை ஆகிய துறைகளில் நற்பணியாற்றியவர்களிடம் இருந்து, 12 உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப் படுகின்றனர். ஏனைய உறுப்பினர்கள், மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் என்பவற்றின் மக்கள் தொகையின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்படு கின்றனர். ஆரம்பத்தில் ஒன்றியப் பிரதேசங்களுக்கு சபையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. பின்னர், 1950ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 7வது அரசியல் யாப்பு திருத்தத்தின் படி ஒன்றியப் பிரதேசங்களும் இச்சபைக்கு உறுப்பினர்களை அனுப்புகின்றன.

## தேர்தலும் பதவிக்காலமும்

மாநிலச் சட்டமன்றங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் விகிதசம பிரதிநிதித்துவ முறையில் மாற்றத்தக்க ஒற்றை வாக்கு மூலம் இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது ஒரு நிலையான சபையாகும். இதன் உறுப்பினர் களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும். 1/3 பங்கு உறுப்பினர்கள் 2 ஆண்டுகளுக்கு ஒரு தடவை பதவி விலக புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படு கின்றார்கள்.

போட்டியிடும் வேட்பாளர்கள் 30 வயது நிரம்பியவராகவும் மாநிலத்தின் வாக்காளர் பட்டியலில் பெயரைக் கொண்டவராகவும் இந்தியக் குடிமகனாகவும் இருத்தல் வேண்டும்.

துணை ஜனாதிபதி மாநிலங்களின் அவைத் தலைவராக விளங்குவார். அதே வேளை சபை உறுப்பினர்களுள் ஒருவர் இணைத்தலைவராகச் சபையினால் தேர்ந்தெடுக்கப்படுவார். துணை ஜனாதிபதி பதவி வகிக்க முடியாத சந்தர்ப்பங்களில் துணைத்தலைவர் சபைக்கு தலைமை தாங்குவார். சபையில் துணைத்தலைவர்க்கு

எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் அவரை பதவியிலிருந்து நீக்கலாம்.

## அதிகாரங்கள்

### 1) சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

சட்டம் இயற்றுதலில் மாநிலங்களவை மக்களவையுடன் அதிகாரங்களை பங்கிட்டுக் கொள்கிறது. எல்லா மசோதாக்களும் இச்சபையினதும் ஒப்புதலுடனேயே நிறைவேற்றப்படுகின்றன. நிதி மசோதாக்களைத் தவிர ஏனைய மசோதாக்களை இச் சபையிலும் அறிமுகப்படுத்தலாம். மக்களவையினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சாதாரண மசோதாவை மாநிலங்கள் அவை நிராகரிக்கலாம் அல்லது மாற்றங்களுக்கான பரிந்துரைகளுடன் மக்களவைக்கே திருப்பி அனுப்பலாம். இத்தகைய சட்டப்பிணக்கு தோன்றும்போது ஜனாதிபதி இரு சபைகளினதும் கூட்டுக்கூட்டத்தை கூட்டுவார். அக்கூட்டத்தில் மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டு பெரும்பான்மை வாக்கின்படி முடிவு செய்யப்படுகிறது. மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அதன் விருப்பமே நிறைவேறக் கூடிய சூழல் உள்ளது.

(உ+ம்) 1961 இல் வரதட்சணை தடுப்பு மசோதாவில் மாநிலங்கள் அவை செய்த சில திருத்தங்களை மக்களவை ஏற்காததால் கூட்டுக்கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது மக்களவையின் விருப்பமே நிறைவேறியது.

நிதி மசோதாக்களை பொறுத்தவரை மக்களவையால் நிறைவேற்றப்படும் மசோதா மாநிலங்கள் அவைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாநிலங்கள் அவை அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம்; அல்லது மாற்றங்களுக்கான பரிந்துரையுடன் மக்களவைக்கு திருப்பி அனுப்பலாம். மசோதாவை பெற்ற நாளில் இருந்து 14 நாட்களுக்குள் அதனை திருப்பி அனுப்புதல் வேண்டும். இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்கள் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களுடனோ, அல்லது மாற்றங்கள் இல்லாமலோ மீண்டும் ஒருதடவை மக்களவையினால் நிறைவேற்றப் பட்டால் அது பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். 14 நாட்களுக்குள் மசோதாவை அனுப்பாவிட்டாலும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். நிதி மசோதாவைப் பொறுத்தவரை மாநிலங்களவையின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டனவாகவே உள்ளன.

### 2) நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

நிர்வாகத்துறையான அமைச்சரவை உறுப்பினர்கள் இச் சபையில் இருந்தும் தெரிவு செய்யப்படுகிறார்கள். அத்தோடு, அமைச்சர்கள் இச்சபையின் கூட்டங்களுக்கும் வருகை தருகின்றார்கள். இவ்வாறு வருகைதரும் அமைச்சர்களை அவர்களின் கருமங்கள் தொடர்பாகக் கேள்வி கேட்கும் உரிமை இச் சபையின் உறுப்பினர்களுக்கு உண்டு. அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமையும் அமைச்சர்களுக்கு உண்டு. மேலும் நாட்டின் முக்கியமான பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்க இச்சபையிலும் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வரலாம்.



அமைச்சரவை இச்சபைக்கு பொறுப்பானதல்ல; இதனால் ஓரளவிற்கே இச்சபையினால் அமைச்சரவையைக் கட்டுப்படுத்த முடியும்.

### 3) நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

ஜனாதிபதி மீதான குற்ற விசாரணையை நடாத்தவும் அதற்காக பிரேரணையை அறிமுகப்படுத்தவும் இச்சபைக்கும் அதிகாரம் உண்டு. இதைவிட, தலைமை நீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் என்போரை பதவி நீக்கும் தீர்மானம் இச்சபையிலும் நிறைவேற்றப்படல் வேண்டும்.

### 4) அரசியல் அமைப்பு தொடர்பான அதிகாரங்கள்

அரசியல் அமைப்புத் திருத்தங்களை நிறைவேற்றுவதில் மாநிலங்கள் அவை மக்களவையுடன் சமமான அதிகாரங்களைப் பெற்றுள்ளது. எல்லா அரசியல் அமைப்பு திருத்த மசோதாக்களும் இச்சபையினாலும் நிறைவேற்றப்படுதல் வேண்டும். இச்சபை விரும்பினால் அரசியல் அமைப்புத் திருத்தத்தினை தடுக்கலாம். [(உ+ம்) 1990ம் ஆண்டு மக்களவையினால் நிறைவேற்றப்பட்ட மன்னர், மானிய ஒழிப்புக்கான அரசியல் அமைப்பின் 24வது திருத்த மசோதாவை ஒருவாக்கு வித்தியாசத்தால் சபை நிராகரித்தது.]

### 5) தனி அதிகாரம்

மாநிலங்கள் அவை 2/3 பெரும்பான்மை ஆதரவுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் மாநில பட்டியலில் உள்ள ஒரு அதிகாரத்தை மத்திய பட்டியலுக்கு மாற்றலாம். ஆனால், அத்தகைய தீர்மானம் ஒருவருடத்திற்கே செல்லுபடியானதாகும்.

இதைவிட இந்திய நிர்வாக சபை I A S, இந்திய பொலிஸ் சேவை IPS போன்ற அகில இந்திய பணிகளை 2/3 பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இச்சபை உருவாக்கலாம்.

## சட்ட மன்றக் குழுக்கள்

ஏனைய நாடுகளின் சட்ட மன்றத்தைப் போலவே இந்தியப் பாராளுமன்றமும் மசோதாக்களை நுணுகி ஆராய்வதற்கு குழு முறையைப் பயன்படுத்துகின்றது.

மக்களவையில் பொதுக்குழுக்கள் ஆய்வுக் குழுக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள்,நிதிக்குழுக்கள் என நான்கு வகையான குழுக்கள் உள்ளன .

பொதுக் குழுக்களில் விதிக்குழு (Rules Commitee) பொதுக் காரியக்குழு (General Purposes Commitee) அலுவல் அறிவுரைக்குழு (Business Advisory Committee) என்பன உள்ளன. விதிக்குழு, சபையின் நடைமுறை சார்ந்த விதிகளைக் கவனிக்கின்றன. அதேவேளை விதிகளில் மாற்றங்கள் தேவைப்படும் போது அவை பற்றிய சிபார்சுகளையும் மேற்கொள்ளுகின்றது. பொதுக் காரியக்குழு, சபையின் அலுவல் சார்ந்த சீர்த்திருத்தங்களை பரிந்துரை, செய்கின்றது. அலுவல் அறிவுரைக்குழு, சபையின் நிகழ்ச்சி நிரலைக் கட்டுப்படுத்துகின்றது. இந்த வகையில் சபையின் பணிகள் சம்பந்தப்பட்ட அட்டவணைகளைத் தயாரித்தல் மசோதாக்களுக்கும் பிற நடவடிக்கைகளுக்கும் ஒதுக்க வேண்டிய காலத்தை நிர்ணயித்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றது.

ஆய்வுக் குழுக்களில் விதப்புரிமைக்குழு மிக முக்கியமானது ஆகும். இக்குழு சபையின் சிறப்புரிமைகள் சார்ந்த பிரச்சினைகளை ஆராயும். உதாரணமாக ஊடகங்களில் சபையைப் பற்றி வெளியிடப்பட்ட செய்திகள், சபை உறுப்பினர்கள் கூறும் மதிப்புக் குறைவான சொற்கள் சபைத் தலைவரின் முடிவை ஏற்காமல் எதிர்த்துக் கூறும் கடுஞ் சொற்கள், போன்ற உரிமைப் பிரச்சினைகளை ஆராயும். தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் (Select Committees) விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் மசோதாக்களை நுணுக்கமாக ஆராய்கின்றன. தேவையேற்படும் போது தனிப்பட்டவர்களை தம் முன்னால் அழைத்து அறிவுரை பெறும் உரிமை இக்குழுவிற்கு உண்டு. ஒரு மசோதாவின் தனிப்பட்ட இயல்பை ஆராய்வதற்காக இக்குழு துணைக்குழுவையும் உருவாக்கலாம். சில சந்தர்ப்பங்களில் முக்கியமான அல்லது சிக்கலான மசோதாக்களை ஆராய்வதற்காக இரு சபைகளின் கூட்டுக்குழு ஒன்றும் அமைக்கப்படலாம்.

நான்காவது வகையான குழுக்கள் நிதிக்குழுக்கள் ஆகும். இவற்றில் மதிப்பீட்டுக்குழுவும் (Estimate Committees) பொதுக் கணக்குக் குழுவும் (Pubilc Accounts Committees) முக்கியமானவை ஆகும். மதிப்பீட்டுக்குழு ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை விரிவாக ஆராய்கின்றது. பொதுக்கணக்குக்குழு அரசாங்கத்தின் கணக்குகளை ஆய்வு செய்கின்றது. ஒதுக்கீடு செய்யப்பட்ட விடயங்களுக்காக பணம் செலவிடப்படுகின்றதா? என்பதையும் ஆராய்கின்றது. இந்த இரண்டு குழுக்களும் பொது நிதியை கட்டுப்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கின்றன.

## நன்மைகள்

(1) பாராளுமன்ற உறுப்பினர் தெரிவில் ஒரு பன்மைத் தன்மைப் பேணப்படுவது வரவேற்புக்குரிய விடயமாகும். குறிப்பாக பின்தங்கிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கும் பிரதிநிதித்து வம் வழங்கப்பட்டமை வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆங்கில இந்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு நியமனப் பிரதிநிதித்து வமும் வரவேற்கத்தக் கதாகும்.



(2) பாராளுமன்றத்தில் இரண்டாவது சபையில் பல்வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களையும் நியமிக்கின்ற நிலைமை இருக்கின்ற மையானது புலமையாளர்களின் பங்களிப்பினை பெறக்கூடிய நிலை யினை உருவாக்கியுள்ளது.

(3) அரசாங்கம் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு வலுவான அதிகாரம் இருக்கின்றமையானது மக்கள் ஆட்சிக் கோட்பாட்டினை வலுப்படுத்து வதாக உள்ளது.

(4) பாராளுமன்றக் குழுக்கள் சட்டங்களை நுணுக்கமாக பரிசீலனை செய்வதற்கு உதவக்கூடியவையாக உள்ளன.

## குறைபாடுகள்

(1) மாநிலங்களவையில் மாநிலங்களுக்கு சமத்துவமான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை.

(2) பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் முழுமையாக உறுதி செய்யப்படவில்லை.

(3) கூட்டாட்சி நாடுகளில் இரண்டாவது சபை வலுவான அதிகாரத்தினைக் கொண்டிருப்பது அவசியமானதாகும். ஆனால் இந்தியாவின் இரண்டாவது சபை மாநிலங்களவை மக்களவையுடன் ஒப்பிடுகின்ற போது அதிகாரம் குறைந்த சபையாகக் காணப்படுகின்றது.

(4) மாநிலங்களுக்கிடையே பிரதிநிதித்துவ விகிதாசாரத்தில் வேறு பாடுகள் காணப்படுகின்றமையால் சில மாநிலங்கள் பாராளுமன்றத்தில் அதீத செல்வாக்கினைச் செலுத்துகின்றன.
உ+ம்: உத்திரப்பிரதேசம்

# 7 இந்திய அமைச்சரவை

பிரதம மந்திரியையும் ஏனைய அமைச்சர்களையும் கொண்ட குழுவே அமைச்சரவை ஆகும். பிரதமர் அமைச்சரவையின் தலைவராக விளங்குவார். மக்களவையின் பொதுத்தேர்தல் முடிந்தவுடன் அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட கட்சித் தலைவர் பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறாவிடின் அதிக உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்றவரை பிரதமராக நியமிப்பார். பின்னர் ஏனைய அமைச்சர்கள் பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள்.

அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு சபையில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். பாராளுமன்றத்தின் உறுப்பினர்

அல்லாத ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டால் பதவியேற்ற காலத்தில் இருந்து 6 மாத காலத்திற்குள் ஏதாவது ஒரு சபையின் உறுப்பினராக வருதல் வேண்டும்.

அமைச்சரவை அமைச்சர் குழு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் துணை அமைச்சர்கள் என பாகுபடுத்தப்பட்டுள்ளது. அமைச்சர் குழு அமைச்சர்கள் ஒரு திணைக்களத்திற்கோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட திணைக்களங்களுக்கோ தலைமை வகிக்கின்றனர். ஒவ்வொரு துறையின் செயற்பாட்டிற்கும் இராஜாங்க அமைச்சர் பொறுப்பேற்கின்றார். துணை அமைச்சர்கள், அமைச்சர் குழு அமைச்சர்களுக்கு உதவியாக இருக்கின்றனர்.

அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல், மாற்றுதல், அமைச்சர்களுக்குரிய அமைச்சுக்களை ஒதுக்குதல் மாற்றுதல் என்பவற்றில் பிரதமர் பூரண அதிகாரம் படைத்தவராக விளங்குகிறார்.

அமைச்சரவை மக்களவைக்கு கூட்டாக பொறுப்புடையது. மக்களவையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் அமைச்சரவையை பதவியிலிருந்து நீக்கலாம்.

## அமைச்சரவையின் பணிகளும் அதிகாரங்களும்

### சட்டத்துறை தொடர்பானவை

பாராளுமன்றத்துக்குத் தேவையான மசோதாக்களை உருவாக்குதல், அம்மசோதாக்களை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்தல். மசோதாக்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் வரும் விமர்சனங்களுக்குப் பதிலளித்தல், பாராளுமன்றத்தில் மசோதா நிறைவேறுவதற்கு ஒத்துழைத்தல், அவசரகாலச் சட்டங்களை உருவாக்குதல், பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றும் தொடக்கவுரையைத் தயாரித்தல், பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவுகளை ஜனாதிபதிக்கு அறிவித்தல், அமைச்சர்களது கருமங்கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளித்தல் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றும் உரைகள், செய்திகளைத் தயார் செய்தல் வரவு செலவுத் திட்ட மசோதாவினை தயார் செய்தல், நியமன உறுப்பினர்களை பரிந்துரை செய்தல். போன்றன அமைச்சரவையின் சட்டத்துறை தொடர்பான பணிகளும் அதிகாரங்களும் ஆகும்.

அமைச்சர்கள் தமது துறையின் நடவடிக்கைகளுக்கு பாராளுமன்றத்தில் தனியாகப் பொறுப்பேற்கின்றனர். அரசின் கொள்கைகளுக்கு கூட்டாக பொறுப்பேற்கின்றனர்.

மக்களவையில் அரசாங்க மசோதா தோற்கடிக்கப்பட்டால் அமைச்சரவை பதவி விலகும்.

### நிர்வாகத்துறை தொடர்பானவை

அமைச்சர்கள் தாம் பொறுப்பேற்றுள்ள துறைகளை நிர்வகித்தல், நிர்வாகம் தொடர்பான அனைத்து விடயங்களிலும் முடிவெடுத்தல். முக்கிய பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல், வரவு செலவுத் திட்டத்தினை தயாரித்தல். நெருக்கடி நிலை பிரகடனம் தொடர்பாக எழுத்து வடிவில் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல் போன்றன நிர்வாகத்துறை தொடர்பான பணிகளும், அதிகாரங்களும் ஆகும்.

முக்கிய அதிகாரிகளை பதவி நீக்கம் செய்வதற்கும் அமைச்சரவை பரிந்துரை செய்யலாம். மேலும், போர்ப்பிரகடனம் செய்தல், சமாதானம் செய்தல், வெளிநாட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளையும் அமைச்சரவை ஜனாதிபதியின் பேரில் மேற்கொள்ளுகின்றது.



### நீதித்துறை தொடர்பானவை

நீதித்துறையின் நியமனங்கள் தொடர்பாக, ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குதல், குற்ற மன்னிப்பு, பொதுமன்னிப்பு போன்ற விடயங்களில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கல், சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் அல்லது குற்றங்கள் தொடர்பாக நீதி விசாரணை ஆணையம் அல்லது குழுக்களை அமைத்தல் போன்றன அமைச்சரவையின் நீதித்துறை தொடர்பான பணிகளும், அதிகாரங்களும் ஆகும்.

## இந்திய அரசியல் யாப்பில் பிரதமர்

இந்திய அரசியல் யாப்பில் ஒரு பாராளுமன்ற அரசாங்க முறை யாப்பாக உள்ளமையினால் பிரதமர் முக்கிய இடத்தை வகிக்கின்றார். பிரதமரே நாட்டின் முக்கிய நிர்வாகத் தலைவராக விளங்குகிறார். மக்களவை தேர்தல் முடிந்ததும் மக்களவையில் பெரும்பான்மை பலத்தைப் பெற்ற கட்சியின் தலைவர் (மக்களவைக்கான தலைவர்) பிரதமராக ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றார். எந்தக் கட்சியும் தெளிவான பெரும்பான்மை இல்லாதவிடத்து மக்களவை உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவை யார் பெறுகின்றாரோ அவர் ஜனாதிபதியினால் பிரதமராக நியமிக்கப்படுகிறார்.

### அதிகாரங்களும், பணிகளும் நிர்வாகத்துறை தொடர்பானவை

அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல், மாற்றுதல் போன்ற விடயங்களில் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல், அமைச்சரவை கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல், அமைச்சுகளினுடைய கொள்கைகளையும், பணிகளையும் ஒருங்கிணைத்து மேற் பார்வை செய்தல், அமைச்சர்களை அவர்களது பணிகள் தொடர்பாக பிரதமருக்கு பொறுப்புக் கூற வைத்தல், வெளியுறவு சம்பந்தப்பட்ட விடயங்களில் கொள்கை முடிவுகளை மேற்கொள்ளுதல் வெளிநாட்டுத் தூதுவர்களை நியமிக்க பரிந்துரை செய்தல் சர்வதேச நிகழ்வுகளுக்கு நாட்டின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளுதல், வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல, போர்க் காலங்களில் நாட்டினைப் பாதுகாக்கும் பொறுப்பினை

ஏற்றுக் கொள்ளுதல். ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்குமிடையில் பாலமாக விளங்குதல், மாநில ஆளுநர்களை நியமித்தல், நீக்குதலில் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல், போன்றன பிரதமரின் நிர்வாகத் துறை தொடர்பான பணிகளாகவும், அதிகாரங்களாகவும் உள்ளன.

## சட்டத்துறை தொடர்பானவை

மக்களவையின் ஆளும் கட்சித் தலைவராக பிரதமரே விளங்குகின்றார். இதை விட முக்கியமான அரசின் கொள்கை முடிவுகளை மக்களவையில் அறிவித்தல், முக்கியமான விவாதங்களை சபையில் முன்னின்று நடாத்துதல், முக்கியமான தேசிய, சர்வதேச விடயங்களில் சபை உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சபையில் பதில் அளித்தல், போன்றன பிரதமரின் சட்டத்துறை தொடர்பான பணிகளாகவும் அதிகாரங்களாகவும் உள்ளன.

(நீதித்துறை தொடர்பில் குறிப்பிடத்தக்க நேரடியான பணிகளோ, அதிகாரங்களோ பிரதமருக்கு இல்லை. ஆனாலும் மறைமுகமாக செல்வாக்கு செலுத்தும் நிலை உண்டு).

நிர்வாக சீர்திருத்த ஆணையம் பிரதமரின் நிலையைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றது.

1. அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரத்தில் ஒரு விசேட நிலையினை அரசியல்யாப்பு பிரதமருக்கு வழங்கியுள்ளது. அவர் அமைச்சரவைக்கு தலைவராக மட்டுமல்லாமல் ஜனாதிபதியின் முக்கிய ஆலோசகராகவும் விளங்குகின்றார். இம் மேலான நிலை அவருக்கு சில பொறுப்புக்களையும் வழங்கியுள்ளது. அமைச்சரவையை ஒரு அணியாகக் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வைத்தல், நடைமுறைக்கு ஏற்ற கொள்கைகளை உருவாக்குதல், உருவாக்கப்பட்ட கொள்கைகளை தேசிய நலன் கருதி ஒழுங்காகவும், திறமையாகவும் செயல்படுத்துதல், நிர்வாகத்தை மக்களுடைய தேவைகளை அறிந்து செயற்பட வைத்தல் போன்றன அவ் விசேட பொறுப்புக்களாகும்.

"ஜென்னிங்ஸ்" இன் கருத்துப்படி பிரதமர் முதன்மையானவராக மட்டுமன்றி விண் கோள்களால் சுற்றி வரும் சூரியனாகவும் திகழ்கின்றார்.

எனினும் பிரதமரின் நிலை அவரது ஆட்சியின் திறமையைப் பொறுத்தும், பாராளுமன்றத்தில் அவருக்கு இருக்கும் பெரும் பெரும்பான்மை ஆதரவைப் பொறுத்தும், கட்சி உறுப்பினர்கள் அவருக்கு வழங்கும் ஆதரவைப் பொறுத்துமே அமைகின்றது.

## நன்மைகள்

(1) பிரதமரிடம் அதிக அதிகாரம் இருக்கின்றமையானது அரசாங்கத்தினை உறுதித் தன்மையுடன் வைத்திருப்பதற்கு உதவுகின்றது.



(2) இன்று இரு அணிக்கட்சி முறை நடைமுறையில் இருப்பதால் பல்வேறு பிரிவினரும், பல்வேறு மாநிலக்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அமைச்சரவையில் பங்கு பெற முடிகின்றது.

(3) துறைகளுக்கு அமைச்சர்களை தனியாகப் பொறுப்பாக்கியமை. தவற விடும் அமைச்சர்களை உடனடியாகவே பதவியிலிருந்து விலக்குவதற்கு உதவுகின்றது உ+ம் வெளிநாட்டமைச்சர் நட்வார் சிங் இராஜினாமாச் செய்தமை

(4) பின்தங்கிய பிரிவினர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கி அவர்களைஅரசியல் சக்தியாக மாற்றியிருப்பதனால் அமைச்சரவையுடன் பேரம் பேசியாவது அவர்கள் தங்களின் நலன்களைப் பேணக் கூடியதாக இருக்கின்றது.

(5) மத்திய அரசாங்கம் ஒரு கூட்டரசாங்கமாக இருப்பதனால் அமைச்சரவை கூடிய நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது.

## குறைபாடுகள்

(1) பிரதமரிடம் இருக்கின்ற அதிகளவிலான அதிகாரங்கள் அவரை ஒரு சர்வாதிகாரியாகவும் மாற்றி விடும் தன்மையைக் கொண்டிருக்கின்றன.

(2) அரசாங்கம் கூட்டரசாங்கமாகவே அமையக்கூடிய சூழல் இருப்பதனால் கூட்டுச் சேர்ந்த கட்சிகளிடையே முரண்பாடுகள் வருகின்ற போது அமைச்சரவை பலவீனமடையக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

(3) அமைச்சரவை தொடர்பாக பாராளுமன்ற அதிகாரம் கொண்டது என யாப்பு கூறினாலும் ஆளும் கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் வரை அமைச்சரவையின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே பாராளுமன்றம் செயற்படக்கூடிய நிலை இருக்கும்.

(4) பங்கேற்பு ஜனநாயகக் கோட்பாடு சட்டத்துறையைப் பொறுத்தவரை பரந்ததாகவும், உறுதியானதாகவும், இருந்தாலும், அமைச்சரவையைப் பொறுத்தவரை அது காணப்படவில்லை. குறிப்பாக பின்தங்கிய மக்களுக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் வழங்கக் கூடிய உத்தரவாதங்கள் எதுவும் இல்லை.

# 8 இந்திய நீதித்துறை

இந்தியாவின் நீதித்துறையில் மத்திய அரசின் நீதிமன்றங்கள், மாநில அரசின் நீதிமன்றங்கள் என இரு வகையான நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. மத்திய அரசு மட்டத்தில் அதிகாரம் படைத்த நீதிமன்றமாக உச்சநீதிமன்றம் அல்லது தலைமை நீதிமன்றம் விளங்குகிறது. மாநில மட்டத்தில் அதிகாரம் படைத்த நீதிமன்றமாக மாநில உயர் நீதிமன்றங்கள் விளங்குகின்றன.

## உச்ச நீதிமன்றம் அல்லது தலைநீதிமன்றம்

**அமைப்பு :-** பிரதம நீதியரசர் ஒருவரையும் ஏனைய நீதிபதிகள் 7 பேரையும் கொண்டதாக உச்சநீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும் என அரசியல்யாப்பின் 124 ஆவது பிரிவு கூறுகின்றது. எனினும் நாடாளுமன்றம் நீதிபதிகளின் எண்ணிக்கையை தேவையான போது கூட்டிக்கொள்ளலாம். 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்டத்தின்படி பிரதம நீதியரசரையும் ஏனைய 25 நீதிபதிகளையும் கொண்டதாக தற்போது உச்ச நீதிமன்றம் விளங்குகின்றது

ஜனாதிபதி தான் கலந்தாலோசிக்க தகுதியானவர்கள் எனக் கருதுகின்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் என்போருடன் கலந்தாலோசித்து பிரதம நீதியரசரை நியமிக்கின்றார். பின்னர் பிரதமநீதியரசருடன் கலந்தாலோசித்து ஏனைய நீதிபதிகளை நியமிக்கின்றார்.

பிரதம நீதியரசர் உட்பட உச்சநீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கும் தீர்மானம், பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சமூகமளித்துள்ளோரில் 2/3 பெரும் பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.தவறான நடத்தை, திறமையின்மை ஆகிய காரணங்களுக்காகவே நீதிபதிகளைப் பதவி நீக்க முடியும். உச்ச நீதிமன்றங்களின் நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது 65 ஆகும்.

## உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்குரிய தகைமைகள்

1) இந்தியப்பிரஜையாக இருக்க வேண்டும்.

2) உயர் நீதிமன்ற நீதிபதியாக குறைந்தது 5 வருடங்கள் பதவி வகித்திருக்க வேண்டும். அல்லது உயர் நீதிமன்ற வழக்கறிஞராக 10 ஆண்டுகள் தொழில் புரிந்திருக்க வேண்டும் அல்லது ஜனாதிபதியின் கருத்துப்படி அவர் திறமையுள்ள சட்டநிபுணராக இருந்திருக்க வேண்டும்.

## உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள்

### 1. முதல்விசாரணை அதிகாரம்

(அ) மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கு மிடையிலான பிரச்சினைகள்



(ஆ) மாநில அரசாங்கங்களுக்கிடையிலான பிரச்சினைகள்

(இ) மத்திய அரசாங்கமும் சில மாநிலங்களும் ஒரு பக்கத்திலும் வேறு மாநிலங்கள் மறுபக்கத்திலுமுள்ள பிரச்சினைகள்.

### 2. மேன்முறையீட்டு விசாரணை அதிகாரம்

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கெதிராக உச்சநீதிமன்றத்துக்கு மேன்முறையீட்டு செய்யலாம். உச்சநீதிமன்றத்தின் மேன்முறையீட்டு விசாரணை அதிகாரம் 3 வகையாக உள்ளது.

i. அரசியல் யாப்பு சம்பந்தமான வழக்குகள்
ii. குடியியல் வழக்குகள்
iii. குற்றவியல் வழக்குகள்

### (i) அரசியல் யாப்பு சம்பந்தமான வழக்குகள்

அரசியல் யாப்புக்கு பொருள் விளக்கம் கொடுக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு உண்டு. அத்துடன் குறிப்பிட்ட சட்டமூலம் அரசியல்யாப்புடன் ஒத்துப் போகின்றதா என்பதை ஆராயும் அதிகாரமும் உண்டு.

### (ii) குடியியல் வழக்குகள்

20,000 ரூபாவுக்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகளை உச்ச நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம். அரசியல் யாப்புக்கு கொண்டுவரப்பட்ட 30 ஆவது திருத்தத்தின்படி 20,000 ரூபா எனும் பணமதிப்பு நீக்கப்பட்டு பதிலாக பொது முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய சட்டப்பிரச்சினையுடன் கூடிய குடியியல் வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

### (iii) குற்றவியல் வழக்குகள்

உயர் நீதிமன்றமானது கீழ் நீதிமன்றம் விடுதலையாக்கிய ஒருவருக்கு மேன் முறையீட்டில் மரணதண்டனை வழங்கினாலும் அல்லது உயர்நீதிமன்றம் கீழ் நீதிமன்றத்திலிருந்து ஒரு வழக்கை தன்முன் கொண்டு வந்து விசாரணை நடாத்தி குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மரணதண்டனை அளித்தாலும் அல்லது ஒரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யத் தகுதியுள்ளது என உயர்நீதிமன்றம் சிபார்சு செய்தாலும் உச்சநீதிமன்றத்தில் மேல் விசாரணை வழக்கைத் தொடரலாம்.

இவற்றினை விட எந்தநீதிமன்றமோ, தீர்ப்புமன்றமோ வழங்கும் தீர்ப்பு, முடிவு, ஆணை ஆகியவற்றுக்கெதிராக மேல்விசாரணை வழக்குத் தொடர்வதற்கு உச்ச நீதிமன்றம் தனி இசைவாணையை வழங்கலாம். ஆனால் படைத்துறை சார்ந்த மன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகள் மட்டும் இதற்கு விதிவிலக்காகும்.

## 3. ஆலோசனை அதிகாரம்

பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அல்லது சட்டந் தொடர்பான விடயங்களில் ஜனாதிபதி உச்ச நீதிமன்றத்திடம் ஆலோசனை பெறலாம். ஆனால் அவ்வாலோசனையை ஜனாதிபதி விரும்பினால் ஏற்றுக்கொள்ளலாம். விருப்பமில்லா விட்டால் விடலாம். முதன்முதலாக புதுடில்லிச் சட்டங்கள் தொடர்பான ஆலோசனையை உச்ச நீதிமன்றத்திடமிருந்து ஜனாதிபதி பெற்றிருந்தார். இவற்றினை விட, அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நிறைவேற்றப் பட்டு அதன் பின்னரும் அமுலில் இருக்கின்ற ஒப்பந்தம், உடன்படிக்கை, பட்டயம் அல்லது அதுபோன்ற சாசனங்கள் பற்றியும் உச்சநீதிமன்றத்திடம் ஜனாதிபதி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## 4. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்

அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு உச்சநீதிமன்றத்திடமும் விடப்பட்டுள்ளது. அரசியல் யாப்பிலுள்ள அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்காக நேரடியாகவே உச்சநீதிமன்றத்தை அணுக, இந்தியப் பிரஜைகளுக்கு உரிமையுண்டு, இவ்வாறான வழக்குகளை உச்சநீதிமன்றம் தனது முதல் விசாரணை அதிகார எல்லைகளுக்குள்ளேயே விசாரணை செய்யலாம். அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்காக ஆட்கொணர் ஆணை, செயலுறுத்தல்ஆணை, தடை ஆணை, நெறிமுறையுறுத்தல் ஆணை, தகுதிமுறை வினவல் ஆணை ஆகிய நீதிப் பேரணைகளில் ஒன்றையோ அல்லது பிற ஆணைகளையோ பிறப்பிக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்குண்டு.

அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்துவதற்காக இவ்வாணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் மாநில உயர்நீதிமன்றங்களுக்குமுண்டு.

பொதுநல வழக்காடல் சம்பந்தமான விசாரணைகளையும் உச்சநீதிமன்றம் விசாரணை செய்யலாம். ஒரு விடயத்தில் ஒருவருக்கு நேரடியாகத் தொடர்பில்லா விட்டாலும் பொது அக்கறை காரணமாக ஒருவருக்கு பொதுநல வழக்காடும் உரிமையுண்டு. வறுமை, உதவியின்மை, இயலாமை அல்லது சமூகநீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ பிரதிகூலமான நிலைமை போன்ற காரணங்களால் அடிப்படை உரிமைகள் தொடர்பாக நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காட முடியாத நிலையில் அவர்களுக்காக அவ்விடயங்களின் மீது அக்கறை கொண்ட ஒருவர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். இம்மாதிரியான வழக்குகளுக்காக ஒரு கடிதம் எழுதுவதன் மூலமும் உச்சநீதிமன்றத்தை அணுகலாம்.

## 5. பதிவு நீதிமன்றமாகத் தொழிற்படல்

உச்சநீதிமன்றத்தின் நடவடிக்கைகளும், செயற்பாடுகளும், முடிவுகளும் எப்போதும் நிலைத்திருக்கும் வகையில் ஆவணமாகத் தொகுக்கப்படுகின்றன. தேவையேற்படும் போது சட்டத்துக்கு ஆதரவான சாட்சியமாக இவை சமர்ப்பிக்கப் படுகின்றன. இவ் ஆவணங்கள் அதன் நம்பகத்தன்மைப் பற்றி எந்தவிதக் கேள்வியுமில்லாமல் நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்பதிவு நீதிமன்றத்தின் அதிகாரத்தின்படி தன்னை அவமதிப்பவர்களுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரமும் உண்டு. எனினும், நீதிமன்றம் பற்றியும் அதன் செயற்பாடு பற்றியும் நல்லெண்ணத்துடன் முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்குத் தடை கிடையாது. உச்சநீதிமன்றத்தைப்போல மாநில உயர்நீதிமன்றங்களும் ஆவண நீதிமன்றமாகத் திகழ்கின்றன.



## 6. நீதிப் புனராய்வு அதிகாரம்

நாடாளுமன்றமும், மாநிலச் சட்டமன்றங்களும் இயற்றும் சட்டங்கள் அரசியல் யாப்புக்கு முரணானவையா, இல்லையா என ஆய்வு செய்வதே நீதிப்புனராய் வெனப்படும். இவ்வதிகாரம் உச்சநீதிமன்றத்துக்குண்டு. இவ்வதிகாரத்தினடிப் படையில் அரசியலமைப்புக்குப் பொருள்விளக்கம் கொடுக்கும் உரிமையும், அரசியல் யாப்புக்கு முரணான சட்டங்களை நிராகரிக்கும் உரிமையும் உச்ச நீதிமன்றத்துக்குண்டு.

## 7. கீழ் நிலை நீதிமன்றங்களைச் சோதனை செய்தல்

## 8. கீழ் நிலை நீதிமன்றங்களுக்கான விதிகளை உருவாக்குதல்

## உயர்நீதிமன்றம்

ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு உயர்நீதிமன்றம் இருக்க வேண்டுமென அரசியல் யாப்பு கூறுகிறது. ஆனால் பாராளுமன்ற சட்டம் மூலம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குப் பொதுவாகவும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் ஒரு நேரடியாட்சிப் பகுதிக்கும் பொதுவானதாகவும் ஒரு உயர் நீதிமன்றத்தினை உருவாக்கலாம்.

உச்ச நீதிமன்றத்தைப்போலவே ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் ஒரு பதிவு நீதிமன்றமாகத் தொழிற்படுவதுடன் முதல் விசாரணை அதிகார எல்லை, மேல் விசாரணை அதிகார எல்லை என்பவற்றைக் கொண்டுள்ளது. அத்துடன் நீதிமன்ற அவமதிப்பிற்காகத் தண்டனையளிக்கும் அதிகாரமும் இதற்குண்டு.

பிரதம நீதிரசரையும் சம்பந்தப்பட்ட மாநில ஆளுநரையும் கலந்தாலோசித்து உயர்நீதிமன்ற நீதிபதிகளை ஜனாதிபதி நியமிக்கின்றார். உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியைத் தவிர ஏனைய நீதிபதிகளை நியமிக்கும்போது உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும் ஜனாதிபதி கலந்தாலோசித்து முடிவெடுப்பார். இதுவிடயத்தில் பிரதம நீதியரசர், மாநில ஆளுநர், உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஆகிய மூன்று தரப்புக்கும் சம அளவிலான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமெனத் தீர்க்கப்பட்ட வழக்கொன்றில்

கூறப்பட்டது. உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெறும் வயது 62 ஆகும். இடைக் காலத்தில் இவர்களைப் பதவிநீக்க வேண்டுமாயின் உச்சநீதிமன்ற நீதிபதியைப் பதவிநீக்கம் செய்வதற்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். ஒருவர் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பதவி வகித்ததன் பின்னர் உச்சநீதிமன்றத்திலும், ஏனைய உயர்நீதிமன்றங்களில் மட்டும் வழக்கறிஞராகத் தொழில் புரியலாம். உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒவ்வொருவருக்கும் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தின்படி அல்லது அரசியல் யாப்பின்படி ஊதியமும், பிறபடிகளும் வழங்கப்படும். ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திலும் தலைமை நீதிபதியொருவரும், ஜனாதிபதியால் அவ்வப்போது தேவையென்று கருதப்படுகின்றளவுக்கு ஏனைய நீதிபதிகளும் பணிகளைப் புரிவர்.

## அதிகாரங்கள்

(1) முப்படைகள் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களைத் தவிர மாநிலத்திலுள்ள ஏனைய நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களனைத்தையும் மேற்பார்வை செய்தல்.

(2) கீழ்நிலை நீதிமன்றங்களில் நிலுவையிலிருக்கும் ஏதேனுமொரு வழக்கில் அரசியல் யாப்பு சம்பந்தப்பட்ட முக்கியமான சட்டம் பற்றி எழும் வினாவிற்குத் தீர்வுகாணப்படல் வேண்டுமென உயர்நீதிமன்றம் கருதினால் அவ்வழக்கைத் தானே எடுத்து விசாரணை செய்து தீர்ப்பினை வழங்கலாம். அல்லது சட்டம் பற்றி எழும் வினாவுக்குத் தீர்ப்பினை அளித்து ஏனைய விடையங்களுக்கு கீழ்நிலை நீதி மன்றங்களே தீர்ப்பினை அளிக்கட்டுமென அவற்றுக்கு வழக்கினைத் திருப்பியனுப்பலாம்.

(3) உயர்நீதிமன்றத்துக்கான நடத்தை விதிகளை உருவாக்குதல்.

(4) நீதிப்பேராணைகளை வழங்குதல்.

(5) அடிப்படை உரிமைகள் சம்பந்தமான வழக்குகளை விசாரணை செய்தல்.

உயர்நீதிமன்றங்களுக்கு முதல் நிலை விசாரணை அதிகாரங்களும், மேல்நிலை விசாரணை அதிகாரங்களுமுண்டு.

## கீழ்நிலை நீதிமன்றங்கள்

கீழ்நிலை நீதிமன்றங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் பிரதானமானவை யாகவுள்ளன. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுவான மாவட்ட நீதிமன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. மாவட்ட நீதிமன்றத்துக்கான நீதிபதிகளை உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கலந்தாலோசித்து ஆளுநர் நியமிக்கின்றார். மாவட்ட



எல்லைக்குள் வருகின்ற குற்றவியல், குடியியல் வழக்குகளில் மாவட்ட நீதிமன்றங்கள் அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

# 9. இந்திய அரசியல் கட்சி முறை

இந்தியக் கட்சிமுறை தனி ஆதிக்க கட்சி முறையிலிருந்து இரு கூட்டுக் கட்சி முறையாக தற்போது வளர்ச்சியடைந்திருக்கின்றது. 1977 வரை தனி ஆதிக்க கட்சி முறையே நடைமுறையிலிருந்தது. அதாவது காங்கிரஸ் கட்சி, பல கட்சிகள் நடைமுறையில் செயற்பட்ட போதும் தனி ஆதிக்க கட்சியாக விளங்கியிருந்தது. மத்திய அரசின் ஆட்சி அதிகாரம் சுதந்திரமடைந்த காலத்திலிருந்து 30 வருட காலமாக அதனிடமே இருந்திருந்தது.

1977 தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1990 வரை ஒரு பல கட்சி முறை நடைமுறையிலிருந்தது. பல்வேறு கட்சிகளும் செல்வாக்கு பொருந்திய நிலையிலிருப்பதையே பலகட்சிமுறையெனலாம். தேசியளவில் காங்கிரஸ் கட்சி, ஜனதாள் கட்சி, பாரதீய ஜனதாக் கட்சி, இடது சாரிக் கட்சிகள் என்பன செல்வாக்கு பொருந்திய கட்சிகளாக விளங்கின. அதேவேளை பல்வேறு மாநிலங்களிலும் மாநிலக் கட்சிகள் செல்வாக்குடன் இருக்கும் நிலையும் இக்காலத்தில் காணப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தெலுங்கு தேசம், அகாலிதள், சமாஜவாதிக் கட்சி, சமதாக்கட்சி, பகுஜன் சமாஜக் கட்சி, ராஜ்ரிய ஜனதா கட்சி, அஸாம் கண பரிஸத், ஜம்முகாஸ்மீர் மாநாட்டுக் கட்சி, போன்றவற்றை செல்வாக்குள்ள மாநிலக் கட்சிகளாகக் குறிப்பிடலாம். மாநிலக் கட்சிகள் மாநிலங்களில் மட்டுமல்ல மத்தியிலும் செல்வாக்குப் பெறும் நிலை இருந்தது. மத்திய அரசாங்கம் என்பது மாநிலக் கட்சிகளையும் இணைத்த அரசாங்கமாகவே விளங்கியது.

1990 களிலிருந்து இரு கூட்டுக் கட்சிமுறை தெளிவாக அடையாளம் காணக் கூடியளவிற்கு வளரத் தொடங்கியது. காங்கிரஸ் கட்சி, பாரதீய ஜனதாக் கட்சி என்கின்ற இரு பிரதான கட்சிகளின் பின்னால் ஏனைய கட்சிகள் அணிதிரளத் தொடங்கின.

இவ்விரு கூட்டுக்கட்சி முறை என்பது மத்தியில் மட்டுமல்ல. பல மாநிலங்களிலும் வளரத் தொடங்கியிருந்தது. மத்தியைப் போல இரு பிரதான கட்சிகளுக்குப் பின்னால் அணிதிரளும் போக்கு இல்லாமல் இரு பிரதான மாநிலக் கட்சிகளுக்குப் பின்னால் அணிதிரளும் போக்கும் காணப்பட்டது. பல மாநிலங்களில் தேசிய ரீதியான பிரதான கட்சிகள் பலவீனமடைந்திருந்ததால் அவை மாநிலக்கட்சிகளுக்கு பின்னால் அணிதிரண்டன. உதாரணமாக தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பின்னாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பின்னாலும் தேசிய ரீதியான பிரதான கட்சிகளான காங்கிரஸ் கட்சியும், பாரதீய ஜனதாக் கட்சியும், அணிதிரண்டுள்ளன. இதே நிலையினை பீகார், உத்தரப் பிரதேசம் போன்றவற்றிலும் காணலாம்.

சில மாநிலங்களில் ஒரு மாநிலக் கட்சியுடன் இன்னோர் தேசிய கட்சி மாநில அளவில் பிரதான கட்சியாக விளங்கியது. உதாரணமாக : ஆந்திராவில், தெலுங்கு தேசம் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் பிரதான கட்சிகளாக விளங்குகின இதே போக்கினைப் பஞ்சாப், ஹரியானா, அஸாம் போன்ற மாநிலங்களிலும் காணலாம்.

மாநிலக் கட்சிகளின் செல்வாக்கினால் ஏற்பட்ட மிகப்பெரிய விளைவு மத்திய அரசாங்கத்தில் தீர்மானம் எடுக்கும் சக்திகளாக மாநிலக் கட்சிகளும் மாறியமையே ஆகும். இந்தியக் கூட்டாட்சியில் மாநிலங்கள் அதிகாரம் குறைந்தவையாக காணப்படினும் மத்தியில் மாநிலக் கட்சிகள் செல்வாக்குப் பெற்றவையாக இருக்கின்ற நிலமை அரசியல் ரீதியாக மாநிலங்களின் அதிகாரங்களை உயர்த்தியுள்ளது.

இந்தியக் கட்சி முறையின் அண்மைக்காலப் போக்கில் இன்னோர் அம்சம் சாதி ரீதியான கட்சிகள் வளர்ச்சியடைந்து வருகின்றமையாகும்: தேசிய கட்சிகள் பின்தங்கிய மக்களில் போதிய கவனமெடுக்காமையும், நடைமுறையிலுள்ள இட ஒதுக்கீட்டு முறையும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

தமிழ்நாட்டின் பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் அணி, புதிய தமிழகம் போன்றவற்றையும் , உத்தரப் பிரதேசத்தின் சமாஜவாதிக் கட்சி, பகுஜன் சமாஜக்கட்சி போன்றவற்றையும், பீகாரின் ராஜ்ரிய ஜனதாள் கட்சியையும் இவற்றிற்கு உதாரணங்களாக் குறிப்பிடலாம். அதேவேளை சிவசேனை என்ற சமயக் கட்சி மகாராஷ்டிர மாநிலத்தில் வளர்ந்து வருவதையும் காணலாம். பாரதீய ஜனதாக் கட்சிக்குள் இந்து மதவாதி களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த சாதிக் கட்சிகளும், சிவசேனையும், பாரதீய ஜனதாக் கட்சிக்குள் இருக்கின்ற மதத்தீவிரவாதிகளும் வன்முறை அரசியலில் நாட்டம் கொண்டிருப்பதையும் காணலாம்.

இடது சாரிக் கட்சிகளை பொறுத்தவரை பெரிய வளர்ச்சிகளைக் காணமுடிய வில்லை. இரு பிரதான இடது சாரிக் கட்சிகளான வலது கம்யூனிஸ்ட் கட்சியும், மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் முன்னைய நிலையிலேயே இருக்கின்றன. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு வங்காளத்தினை தொடர்ந்தும் தன் ஆட்சியில் வைத்திருக்கின்றது. ஆனால் அதன் செல்வாக்கு அதிகமுள்ள ஏனைய இரு மாநிலங்களான கேரளாவும், திரிபுராவும் மாறி மாறியே அதன் அதிகாரத்திற்குள் வருகின்றன.

இவ்விரு கூட்டுக் கட்சி முறை அரசாங்க உறுதிப்பாட்டில் மத்திய மட்டத்திலும், மாநில மட்டத்திலும் பல சிக்கல்களை உருவாக்கிய போதும் இந்தியாவின் பன்மைத் தன்மையைப் பேணுவதில் பாரிய பங்கினை ஆற்றியுள்ளது என்பதை மறுக்க முடியாது.



## முக்கிய கட்சிகள்

### 1 காங்கிரஸ் கட்சி

இந்திய சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடாத்திய இந்திய தேசிய காங்கிரஸ் என்ற தேசிய இயக்கமே சுதந்திரத்தின் பின்னர் காங்கிரஸ் கட்சியாக மாற்றம் அடைந்தது. இந்தியா சுதந்திரமடைந்த 1947ம் ஆண்டு முதல் 1964 ம் ஆண்டு வரை நேரு காங்கிரஸ் கட்சியின் தலைவராக விளங்கினார். 1964 இல் நேருவின் மறைவைத் தொடர்ந்து காமராஜர் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அதேவேளை பிரதமராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த லால்பகதூர் சாஸ்திரி பொறுப்பேற்றார். 1966ம் ஆண்டு இவரின் மறைவைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும், நாட்டின் பிரதமராகவும் இந்திராகாந்தி பொறுப்பேற்றார். 1969இல் காங்கிரஸ்கட்சி இந்திரா காங்கிரஸ் எனவும், ஸ்தாபன காங்கிரஸ் எனவும் இரண்டாகப் பிளவுபட்டது. 1975ம் ஆண்டு இந்திரா காந்தி நெருக்கடி நிலைப் பிரகடனத்தை அறிமுகப்படுத்தி பல எதிர்க்கட்சித் தலைவர்களை சிறையில் அடைத்ததால் கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்தது. இதனால், 1977 தேர்தலில் காங்கிரஸ்கட்சி வரலாற்றில் முதல் முறையாக தோல்வி அடைந்தது . இந்திரா காந்தியும் அவர் மகன்சஞ்சய் காந்தியும் தம் சொந்த தொகுதிகளிலேயே தோல்வி அடைந்தனர்.

1979 இல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய காங்கிரஸ் கட்சி இந்திரா காந்தி தலைமையில் தொடர்ந்தும் செல்வாக்குள்ள கட்சியாக வளர்ந்தது. 1984 இல் இந்திராகாந்தி கொலை செய்யப்பட ராஜீவ்காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியையும், பிரதமர் பதவியையும் பொறுப்பேற்றார். 1991 இல் இவரும் கொலை செய்யப்பட நரசிம்மராவ் பொறுப்பேற்றார். 1996ம் ஆண்டு தேர்தலில் கட்சி மீண்டும் தோல்வி அடைந்தது. அதன் பின்னர் காங்கிரஸ் கட்சியினால் நீண்டகாலமாக இதுவரை ஆட்சியை கைப்பற்ற முடியவில்லை.

நரசிம்மராவுக்குப் பின்னர் சீதாராம்கேசரி 1996 இல் கட்சித் தலைமையை ஏற்றார். இவரினால் கட்சியின் செல்வாக்கை ஒழுங்காக வளர்க்க முடியாததால் 1999ம் ஆண்டு தொடக்கம் கட்சியின் தலைமைப் பொறுப்பை சோனியாகாந்தி ஏற்றார். தற்போதும் இவரே காங்கிரஸ் கட்சியின் தலைவராக விளங்குகிறார்.

சோனியா காந்தி கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றதும் காங்கிரஸ் கட்சி மீண்டும் வளர்ச்சியடையத் தொடங்கியது 2004 தேர்தலில் பல்வேறு கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டு அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கத்தையும் அமைத்துள்ளது. எனினும் கட்சியின் தலைவி சோனியா காந்தி பிரதமர் பதவியைப் பொறுப்பேற்காமல் மன்மோகன் சிங் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். சோனியா காந்தி தொடர்ந்தும் கட்சியின் தலைவராக விளங்குகின்றார். அதேவேளை ராஜீவ்காந்தியின் மகன் ராகுல் காந்தி நேருகுடும்பத்தின் பரம்பரைத் தேர்தல் தொகுதியான உத்தரப் பிரதேசத்தின் அமெதி தேர்தல் தொகுதியில் வெற்றி

பெற்றுள்ளார். அவர் முதிர்ச்சி பெற்று அரசியல் தலைவராகும் வரை கட்சியின் தலைமைப் பதவியில் சோனியா காந்தி இருப்பார். அதன் பின்னர் ராகுல் காந்தியே கட்சியின் தலைவராகவும், நாட்டின் பிரதமராகவும் வர வாய்ப்பு இருக்கின்றது.

## கட்சியின் எதிர்காலம்

பாரதீய ஜனதாக்கட்சி, பல்வேறு உட்கட்சிப் பிரச்சினைகளினால் பலவீனமுற்று இருப்பதனாலும் கூட்டணி அரசியலுக்கு காங்கிரசும் தயாராக வந்துள்ளமையினாலும், நேரு குடும்பம் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றிருப்பதனாலும் எதிர்காலத்தில் காங்கிரஸ் கட்சி வளர்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது. எனினும் உட்கட்சிப் பூசலை தவிர்ப்பதற்கு காங்கிரஸ் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் மாநிலங்களின் பிரச்சினைகள் தொடர்பாக சற்று நெகிழ்வுத் தன்மையுடன் செயற்பட வேண்டியதும் அவசியமான தாகும். பாரம்பரிய வாக்கு வங்கிகளை பாதுகாப்பதோடு புதிய தளங்களை நோக்கிச் செல்வதற்கும் கட்சி முயலுதல் வேண்டும்.

## கட்சியின் கொள்கைகள்

(1) மக்களாட்சியை வலுப்படுத்தல்.

(2) மதசார்பின்மையைப் பின்பற்றுதல்.

(3) பொருளாதாரத்தில் கலப்புப் பொருளாதாரத்தை பின்பற்றுதல் அண்மைக்காலங்களில் திறந்த பொருளாதார முறைமைக்கும் ஊக்கமளித்து வருதல்.

(4) வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை அணிசேராக் கொள்கையையும், பஞ்சசீலக் கொள்கையையும் பின்பற்றுதல்.

(5) பெண்களுக்கு பாராளுமன்றத்தில் 33% இட ஒதுக்கீடு வழங்குதல்.

(6) இந்தியாவின் பிராந்திய வல்லரசுத் தன்மையைப் பேணுதல்.

## 2 பாரதீய ஜனதாக்கட்சி

1951ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ம் திகதி இந்து அடிப்படை வாதத்தை முன்னெடுக்கும் வகையில் ஆர். எஸ். எஸ் இயக்கத்தின் பிரதான உறுப்பினரான "சியாம் பிரசாத் முகர்ஜி" தலைமையில் பாரதீய ஜன சங்கம் என்ற கட்சி உருவாக்கப்பட்டது. இதன் மறுவடிவமே பாரதீய ஜனதாக் கட்சியாகும்.

இந்து அடிப்படை வாதக்கட்சியாக ஆரம்பத்தில் பாரதீய ஜன சங்கம் உருவாக்கப்பட்டாலும் காங்கிரசின் அழைக்கும் முன்னால் அதனை மீறி இக்கட்சியால் வளர முடியவில்லை. வட இந்திய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி வலிமையான நிலையில் இருந்தது. அதற்கு அடுத்த நிலைகளில் இடது சாரிக்



கட்சிகள் இருந்தன. ஏனைய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியை விட மாநிலக் கட்சிகளும், இடது சாரிக் கட்சிகளும் வலிமையான நிலையில் இருந்தன. இக்காரணங்களினால் இந்து அடிப்படை வாதக் கட்சியான பாரதீய ஜன சங்கம் வளர முடியவில்லை. 1951 தொடக்கம் 1977 வரை 3% தொடக்கம் 9% வரையிலான வாக்குகளினையே இக்கட்சியினால் பெறமுடிந்தது.

1977 இல் ஜனதாக் கட்சி உருவானபோது பாரதீய ஜன சங்கம் தனது கட்சியினைக் கலைத்து விட்டு ஜனதாக் கட்சியுடன் சேர்ந்து கொண்டது. ஜனதாக் கட்சி காங்கிரசை தோற்கடித்து முதன் முதலாக அரசாங்கத்தை அமைத்த போது அதன் தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய் அமைச்சராகவும் பதவியேற்றார். எனினும் இரண்டு வருடங்களுடன் ஜனதாக் கட்சி அரசாங்கம் கவிழ்ந்த போது ஜனதாக் கட்சியுடனான இவர்களின் உறவிலும் விரிசல்கள் ஏற்பட்டன. இவர்களில் பலர் ஆர். எஸ். எஸ் இயக்கத்திலும் ஜனதாக்கட்சியிலுமாக இரட்டை உறுப்புரிமை யுடன் செயல்படுவதை ஜனதாக் கட்சியின் தலைமை விரும்பவில்லை. இதனால் ஜனதாக் கட்சியை விட்டு வெளியேறிய இவர்கள் 1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ம் திகதி அத்வானி தலைமையில் பாரதீய ஜனதாக்கட்சியினைத் தோற்றுவித்தனர்.

1984ம் ஆண்டு தேர்தலில் இவர்கள் முதன் முதலாக போட்டியிட்ட போது பெரிய வெற்றியினைப் பெற முடியவில்லை. இத்தேர்தலில், 7.7% வாக்குகளையும் 2 ஆசனங்களையும் மட்டுமே பெற்றிருந்தது. இக்காலத்தில் தான் மகாராஸ்டிர மாநிலத்தில் பால்தக்கரே தலைமையில் வளர்ந்திருந்த சிவசேனைக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது.

தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து கட்சியின் வியூகங்கள் மாற்றப்பட்டன. ஆர்.எஸ். எஸ் போன்ற மதவாத இயக்கங்களைக் கொண்டு இந்து மத உணர்வுகளை தட்டியெழுப்புவதற்கு பதிலாக பாரதீய ஜனதாக் கட்சியே நேரடியாக இச்செயற்பாட்டில் இறங்கியது. பாபர் மசூதி பிரச்சினை ஒரு உணர்வுபூர்வமான பிரச்சினையாக இக்கட்சியினால் கிளறி விடப்பட்டது, கலை, இலக்கியம், அறிவியல், தொடர்பு சாதனங்கள் ஆகிய அனைத்திலும் இந்துமத உணர்வுகள் விதைக்கப்பட்டன.

1989 தேர்தலில் காங்கிரசில் இருந்து வெளியேறி வி.பி.சிங் தலைமையில் உருவான ஜனதா தளம் என்ற கட்சியுடன் தொகுதி உடன்பாடுகளைச் செய்து தேர்தலில் போட்டியிட்டது இத்தேர்தலில் 11.54 % மான வாக்குகளைப் பெற்று 86 ஆசனங்களை முதன் முதலாகப் பெற்றுக் கொண்டது. வட மாநிலங்களில் இதன் செல்வாக்கு கொடி கட்டிப் பறந்தது. தொடர்ந்து வந்த சட்ட சபைத் தேர்தல்களில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஆட்சியையும் கைப்பற்றியது.

1990ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி மண்டல்கமிஷன் சிபார்சுகளை அரசாங்கம் அமுலாக்க முனைந்த போது உயர்சாதியினர் பக்கம் நின்று அதனை எதிர்த்தது. இதன் மூலம் உயர் சாதியினரின் ஆதரவினையும் தம் பக்கம் இழுப்பதில் வெற்றி கண்டது.

1990 செப்டெம்பர் 25 இல் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி பாபர்மசூதியில் இராமர் கோவில் கட்டுவதற்காக இரத யாத்திரையினை ஆரம்பித்

தார். அக்டோபர் 24இல் அவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து வி.பி.சிங் அரசாங்கத்திற்கு கொடுத்த ஆதரவினை பா.ஜ.க விலக்கியது. வி.பி.சிங் அரசாங்கம் கவிழ்ந்தது.

1991ம் ஆண்டு தேர்தலில் கட்சியின் வளர்ச்சி நிலை தெளிவாகத் தெரிந்தது. இத்தேர்தலில் 20.9% மான வாக்குகளைப் பெற்று 119 ஆசனங்களைக் கைப்பற்றி யிருந்தது. நாட்டின் எதிர்கட்சித் தலைவர் பதவி இதன் கையில் வந்தது. கட்சியின் தலைவர் அத்வானி எதிர்கட்சி தலைவராக பதவி ஏற்றார்.

1992ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6ம் திகதி தேர்தல் பிரச்சாரத்தில் குறிப்பிட்டவாறு பாரதீய ஜனதாக் கட்சி இந்து மத தீவிர வாதிகளின் ஆதரவுடன் பாபர் மசூதியினைத் தகர்த்தது .

பாபர் மசூதி தகர்ப்பின் பின்னர், உயர் சாதியினர், நடுத்தர வர்க்கத்தினர் என்ற தனது ஆதரவுத் தளத்திற்கு அப்பால் பிற்படுத்தப்பட்டவர்கள், தலித்துக்கள் என்போரின் ஆதரவினையும் பெறும் வகையில் கட்சியின் செயல்திட்டம் விரிவாக்கப்பட்டது. இந்து மத சிந்தனைகளும் இதற்கு எற்றாற் போல விரிவாக்கப்பட்டன. புராணக் கதைகளுக்குள் உத்தரப்பிரதேசத்தின் கபீர், பீகாரின் ராஜ்தாஸ், கேரளாவின் அய்யன் காளி போன்ற பெயர்களையும் சேர்த்துக் கொண்டனர்.

இவ்வாறான சில விரிவாக்களைச் செய்த போதும் 1996 தேர்தலில் அதற்கு தனித்து பெரும்பான்மை பெறக்கூடிய வெற்றி கிடைக்கவில்லை இத்தேர்தலில் 20.3% வாக்குகளையும் 161 ஆசனங்களையும் பெற்றிருந்தது. அதிகூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற வகையில் ஆட்சியினை அமைத்த போதும் ஏனைய கட்சிகள் எதிர்த்து வாக்களித்ததினால் 12 நாட்கள் ஆட்சியுடன் அரசாங்கம் கவிழ்ந்தது.

1998 தேர்தலின் போது கட்சியின் வியூகங்கள் மீண்டும் மாற்றப்பட்டன. பல்வேறு மாநிலங்களிலும் காங்கிரஸ் எதிர்ப்புச் சக்திகளுடன் கூட்டணிகள் அமைக்கப்பட்டன. தான் மிகவும் பலமாகவுள்ள வட மாநிலங்களில் தனது தலைமையின் கீழும் ஏனைய மாநிலங்களில் செல்வாக்குப் பெற்ற மாநிலக் கட்சிகளுடனும் கூட்டணிகள் உருவாக்கப்பட்டன. பிற்படுத்தப்பட்ட மக்களின் கட்சிகளுடனும் தலிக் கட்சிகளுடனும் கூட கூட்டணிகள் உருவாக்கப்பட்டன. இந்த வகையில் வட மாநிலங்களில் சமதாக் கட்சியுடனும், பஞ்சாபில் அகாலிதள் கட்சியுடனும், ஒரிசாவில் பியூ ஜனதாதள் கட்சியுடனும் மகராஸ்டிரத்தில் சிவசேனைக் கட்சியுடனும் ஹரியானாவில் ஹரியானாலோக் தள் கட்சியுடனும், கர்நாடகத்தில் லோக் சக்தியுடனும், மேற்கு வங்காளத்தில் திரீனாமூல் காங்கிரஸ் கட்சியுடனும், தமிழ்நாட்டில் அ.தி.மு.கவுடனும் கூட்டணிகள் உருவாக்கப்பட்டன. தேர்தலில் பா.ஜ.க தனித்து 25.6% வாக்குகளையும் 182 ஆசனங்களையும் பெற்றிருந்தது அதேவேளை பாரதீய ஜனதாக் கூட்டணி 37.2% வாக்குகளையும், 282 ஆசனங்களையும் பெற்றிருந்தது. பெரும்பான்மை ஆசனங்களுடன் பாரதீய ஜனதாக் கூட்டணி ஆட்சியினை அமைந்திருந்தாலும் அ.தி.மு.க ஆதரவினை வாபஸ் பெற்றதால் ஒரு ஆசன வித்தியாசத்தில் ஆட்சி கவிழ்ந்தது.



1999 தேர்தலில் பாரதீய ஜனதாக் கூட்டணி தெளிவான வெற்றியைப் பெற்றிருந்தது. பாரதீய ஜனதாக் கட்சி தனித்து 23.7% வாக்குகளையும் 182 ஆசனங்களையும் பெற்றிருந்த அதேவேளை பாரதீய ஜனதாக் கூட்டணி 40.8% வீத வாக்குகளையும் 305 ஆசனங்களையும் பெற்றிருந்தது. பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்ததால் ஆட்சியினையும் கைப்பற்றியது. வாஜ்பாய் பிரதமராக பதவியேற்றார். தெலுங்குசேதம் கட்சியைச் தவிர ஏனைய கூட்டணிக் கட்சிகள் மத்திய அமைச்சரவையிலும் பங்கேற்றுக் கொண்டன. தெலுங்கு தேசம் வெளியில் நின்று ஆதரவினை வழங்கியது. 2004ம் ஆண்டு வரை பாரதீய ஜனதாக் கூட்டணி ஆட்சியில் இருந்தது.

2004 தேர்தலில் காங்கிரசும் தனது வியூகங்களை மாற்றிக் கொண்டது. முன்னர் காங்கிரஸ் கட்சி கூட்டணியினை அமைத்தும் அது விரிவாக்கம் பெறவில்லை. இந்தத் தடவை கூட்டணியினை நன்கு விரிவாக்கிக் கொண்டது. தமிழ் நாட்டில் தி.மு.க அணியுட்பட ஆந்திராவில் தெலுங்கான சமித்திக் கட்சி உட்பட பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது.

மறுபக்கத்தில் பாரதீய ஜனதாக் கட்சி தீவிர இந்து மதவாத செயற்பாட்டினை முன்னெடுக்காததினால் இந்து தீவிர வாதிகள் மத்தியில் அதிருப்தியிருந்தது. உட்கட்சிப் பூசல்களினாலும் கட்சி பலவீனமடைந்திருந்தது. அதே நேரம் இதனுடன் கூட்டுச் சேர்ந்திருந்த மாநிலக் கட்சிகளும் பலவீனமான நிலையில் இருந்தன.

தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி அதிக ஆசனங்களைப் பெற்றது தமிழ்நாடு, பாண்டிச் சேரி பிரதேசத்தில் 40 ஆசனங்களையும் தி.மு.க காங்கிரஸ் கூட்டணி பெற்றுக் கொண்டது. ஆந்திராவிலும் தெலுங்கு தேசம் தலைமையிலான பாரதீய ஜனதாக் கூட்டணி தோல்வியடைய காங்கிரஸ் கூட்டணியே வெற்றியடைந்தது. காங்கிரஸ் கூட்டணி அறுதிப் பெரும்பான்மையைப் பெறாவிட்டாலும் இடது சாரிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியினை அமைத்துள்ளது. பாரதீய ஜனதாக் கட்சி பிரதான எதிர்க் கட்சியாகியுள்ளது.

தேர்தல் தோல்விக்கு பின்னர் பாரதீய ஜனதா பலவீனமான நிலையினை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. கட்சித் தலைமைக்கும் அதன் பிரதான ஆதரவுத் தளமான ஆர். எஸ். எஸ் இயக்கத்திற்குமிடையே முரரண்பாடுகள் வலுவடைந்துள்ளன. கட்சியின் தலைவர் அத்வானி பாகிஸ்தானில் பாகிஸ்தான் சிற்பிஜின்னாவை புகழ்ந்து பேசியதைத் தொடர்ந்து அவர் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும்.என்ற கோரிக்கைகளை இந்து மதவாத அமைப்புகள் முன்வைத்துள்ளன. அத்வானியும் தற்போது தலைமைப் பதவியிலிருந்து விலகியிருக்கின்றார்.

ராஜ்நாத்சிங் கட்சித் தலைவராக பதவியேற்றிருக்கின்றார். கட்சிக்கு ஒரு மிதவாத முகத்தினைக் கொடுத்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் வருங்காலங்களில் தான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனக் கூறியிருக்கின்றார். கட்சியின் பீரங்கிப் பேச்சாளரான உமாபாரதி தலைமைக்கு கட்டுப்பட மறுத்ததினால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றார்.

மொத்தத்தில் கட்சி பலவீமான நிலையிலேயே இருக்கின்றது. எனினும் இந்து மதவாத சிந்தனைகளுக்கு இந்தியாவில் இன்னுமும் இடமிருப்பதனால் கட்சி முழுமையாக பலவீனமடையக் கூடிய நிலை இல்லையென்றே கூற வேண்டும்.

## கட்சியின் கொள்கைகள்

(1) இந்தியாவில் இந்து மத சிந்தனைகளின் அடிப்படையிலான கிராமராச்சியத்தினை உருவாக்குதல். கிராமராச்சியம் என்பது ஊழல் களற்ற நேர்மையான அரசியல் முறை, நீதியுடனான பொருளாதார வளர்ச்சி உறுதியான சமூக ஒழுங்கு, உலக சகோதரத்துவம் என்பவற்றைக் கொண்டிருந்தது.

(2) நாடு முழுவதும் பொதுவான குடியியல் சட்டத்தினை அமுல்படுத்துதல், முஸ்லிம்களுக்கென தனியான குடியியல் சட்டம் இருப்பதை எதிர்த்தல்.

(3) ஜம்முகாஷ்மீர் மாநிலத்திற்கு விசேட அந்தஸ்தினை வழங்கும் யாப்பின் 370 ஆவது பிரிவினை இல்லாதொழித்தல்.

(4) மாநிலங்களுக்கு அதிகளவில் நிதி, நிர்வாக அதிகாரங்களைப் பரவலாக்குதல்.

(5) பெருளாதாரக் கொள்கையாக காந்தீய சோசலிஸத்தினைக் கொள்ளுதல், இதன் அடிப்படையில் சமூக பொருளாதாரத்திற்கு முன்னுரிமை கொடுப்பதுடன் பல்தேசிய ஸ்தாபனங்கள் இந்திய சந்தைக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்தல்.

(6) இந்தியா அணுஆயுத வல்லரசாக மாறுவதோடு ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ளுதல்

(7) இந்திய ஒரு பிராந்திய வல்லரசு என்பதை தொடர்ச்சியாகத் தக்கவைத்தல்.

(8) உலகநாடுகள் அனைத்துடனும் நல் உறவினைப் பேணுதல்.

## 4 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(வலது)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கம்யூனிஸ்ட் கொள்கைகளை இந்தியாவில் பரப்பும் நோக்கில் 1921ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1927ம் ஆண்டு கட்சியின் முதலாவது அகில இந்திய மாநாடு கூட்டப்பட்டது. சோவியத்திற்கு சார்பாக இயங்கியமையினால் சோவியத் யூனியன் வெளிநாட்டுக் கொள்கைக்கும் இந்தியத் தேசியப் போராட்டத்தின் அபிலாசைகளுக்குமிடையே பல முரண்பாடுகளைச் சந்தித்தது.

1934ம் ஆண்டு ஆங்கிலேயே அரசாங்கத்தினை எதிர்த்து நின்றதால் கட்சி தடை செய்யப்பட்டது. எனினும் இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் நிலமை மாறியது. சோவியத் யூனியன் நேச நாடுகளுடன் இணைந்து போரில் ஈடுபட்டமையால் இந்திய தேசிய காங்கிரஸ் போரினை எதிர்த்த போதும் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்தது. உலகின் முதலாவது சோசலிஸ நாட்டினை பாதுகாக்க வேண்டும் என இதற்கு விளக்கம் கூறியது. 1942 இல் காந்தியால் "வெள்ளையனே வெளியேறு" என்ற கோஷம் முன்வைக்கப்பட்ட போது கம்யூனிஸ்ட் கட்சி அதனை ஆதரிக்காமல் வன்மையாக எதிர்த்தது. பாகிஸ்தான் தனிநாடாக பிரிந்த போது அதனை ஆதரித்து நின்றது.



1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்றதன் பின்னர் காங்கிரஸ் ஆட்சியாளர்களை ஆதரிக்கவில்லை. அவர்களை ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் எனக்கூறி எதிர்த்து வந்தது. 1947இல் முதலாவது பொதுத் தேர்தலின் பின்னர் முக்கிய எதிர்கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சியே விளங்கியிருந்தது. 1947 தொடக்கம் 1950 வரை ஆந்திராவில் தெலுங்கான போராட்டத்தினையும் தலைமையேற்று நடாத்தியிருந்தது. எனினும் காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கொடூரமான அடக்கு முறையினால் போராட்டம் நசுக்கப்பட்டது.

நேரு அரசாங்கம் சோவியத் யூனியனுடன் நெருக்கமான உறவினை பேணத் தொடங்கிய காலத்திலிருந்து காங்கிரஸ் அரசாங்கத்தோடு நட்பும் பாராட்டி வந்தது.

கேரளம், மேற்கு வங்காளம், ஆந்திரா, பீகார், கிழக்கு உத்தரப்பிரதேசம், போன்றவற்றில் செல்வாக்குள்ள கட்சியாகவும் விளங்கியது. 1957 தொடக்கம் 1959 வரை கேரளத்தில் மாநில ஆட்சியையும் கைப்பற்றியிருந்தது. 1962 தேர்தலில் கட்சி 9.9% வாக்குகளைப் பெற்று உயர் நிலையில் இருந்தது.

சோவியத் யூனியனுக்கும், சீனாவிற்கும் ஏற்பட்ட முரண்பாட்டினாலும், 1962 இல் சீனா இந்தியா மீது படையெடுத்ததினாலும் 1962இல் கட்சி பிளவுபட்டது. கட்சியிலிருந்து வெளியேறிய நம்பூதிரிபாட், ஜோதிபாசு போன்ற தலைவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி (மாக்ஸிஸ்ட்) என்பதனை உருவாக்கினர்.

1969 இல் காங்கிரசில் ஏற்பட்ட பிளவின் போதும் பின்னர் 70களில் ஏற்பட்ட அவசரகால நிலையின் போதும் கட்சி இந்திரா காந்தியை ஆதரித்து நின்றது.

பிளவிற்கு பின்னர் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒப்பிடுகின்ற போது கம்யூனிஸ்ட் கட்சி (வலது) பலவீனமான நிலையிலேயே உள்ளது. தீவிர இடது சாரிகள் இக்கட்சியினை ஒரு சீர்த்திருத்த வாதக் கட்சியாகவே பார்க்கின்றனர்.

கட்சி பலவீனமான நிலையில் இருந்தாலும் ஒவ்வொரு தேர்தலிலும் கணிசமான ஆசனங்களை பெற்று வருகின்றது. அவ்வப்போது தேசியக் கட்சி-களுடனும் மாநிலக் கட்சிகளுடனும் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுகின்றது.

## கொள்கைகள்

(1) நில உடமையை இழப்பீடு இல்லாமல் ஒழித்தல்

(2) முக்கிய தொழில் துறைகளை தேசியமயமாக்குதல் வெளிநாட்டு வர்த்தகத்தினை தேசியமயமாக்குதல்.

(3) மொழிவழி மாநிலங்கள் உருவாவதை ஆதரித்தல் ஆனால் மாநிலங்கள் பிரிந்து போவதை எதிர்த்தல்

(4) ஹிந்தி மொழி அரச கருமமொழி என்பதை ஆரம்பத்தில் எதிர்த்தல் பின்னர் ஆதரித்தல்

(5) கம்யூனிச நாடுகளுடன் உறவு கொள்வதை ஆதரித்தல்.

## 5 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாக்சிஸ்ட்)

1962ம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து இக் கட்சி உருவாக்கப்பட்டது. கேரளத்தின் நம்பூதிரி பாட், மேற்கு வங்காளத்தின் ஜோதிபாசு போன்றவர்களே கட்சி உருவாக்கத்தில் முன்னணியில் நின்றனர். சீன சோவியத் தத்துவார்த்த முரண்பாடுகளும், 1962 இல் இந்தியாவின் மீது சீனாவின் படையெடுப்புமே பிளவிற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் சீன நிலைப்பாட்டினை இக்கட்சி எடுத்திருந்தாலும் பிற்காலங்களில் சீனா விலிருந்தும், சோவியத்யூனியனிலிருந்தும் விலகியே நின்றது. மேற்கு வங்காளம், கேரளம் திரிபுரா போன்ற மாநிலங்களில் செல்வாக்குள்ள கட்சியாக விளங்குகின்றது. கேரளம், திரிபுரா போன்ற மாநிலங்களில் மாநில ஆட்சியினை இடைக்கிடையே பறி கொடுத்திருந்தாலும் மேற்கு வங்காளத்தின் ஆட்சியினை தொடர்ச்சியாக தக்கவைத்துக் கொண்டிருக்கின்றது. காலத்தின் தேவைக்கேற்பவும், இந்தியாவின் யதார்த்த நிலைமைகளுக்கேற்பவும் கொள்கை களையும் மாற்றி வருகின்றது.

தற்போதும் மத்திய பாரளுமன்றத்தில் கணிசமான ஆசனங்களைப் பெற்றிருக்கின்ற இக்கட்சி , ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு வெளியில் நின்று ஆதரவினைக் கொடுத்தும் வருகின்றது.

1967இல் கட்சியிலிருந்து பிரிந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மாக்ஸிஸ்ட் லெனினிஸ்ட்) என்னும் அமைப்பினை உருவாக்கிய குழுவினர் வன்முறை மூலம் தமது இலக்கினை அடையும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். இவர்களே "நக்சலைட்டுக்கள்" என அழைக்கப்படுகின்றனர்.

### கொள்கைகள்

(1) மக்கள் ஜனநாயகத்தையும் சமதர்ம சமூகத்தையும் ஏற்படுத்துதல்.

(2) அயல் நாட்டு முதலீடுகளை தேசியமயமாக்குதல்.

(3) தனியார் துறையின் இலாபத்தை கட்டுப்படுத்தல்

(4) நிலப்பிரபுக்களிடமிருந்து நிலங்களைப் பறித்து நிலமற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல்

(5) சீனாவுடன் அமைதியான முறையில் பிணக்குகளைத் தீர்த்தல்

(6) மொழிவாரி மாநிலங்களை ஆதரித்தல்.

## 6 ஜனதாக் கட்சி

1975 இல் காங்கிரசின் தலைவரான இந்திரா காந்தி அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் அதனை எதிர்த்து 1977இல் ஜனதாக் கட்சி உருவாக்கப்பட்டது.



பாரதீய ஜனசங்கம், காங்கிரஸ் (0), பாரதீய லோக்தளம், சோசலிஸக் கட்சி, ஆகிய நான்கு கட்சிகள் இணைந்து 1977 ஜனவரி 23ம் திகதி ஜெயப்பிரகாஷ் நாரயணன் தலைமையில் ஜனதாக்கட்சியை உருவாக்கின.

1977ம் ஆண்டு பெப்ரவரியில் இந்திரா காந்தி அமைச்சரவையிலிருந்து பதவி விலகிய ஜெகஜீவன் ராம் ஜனநாயக காங்கிரஸ் என்னும் அமைப்பினை உருவாக் கினார். இக்கட்சியும், ஜனதாக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டி யிட்டது.

இத் தேர்தலில் ஜனதாக் கட்சி 265 ஆசனங்களையும், ஜனநாயக காங்கிரஸ் 28ஆசனங்களையும் பெற்றது. மொராஜ்ஜி தேசாய் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றி அமைச்சரவையினையும் இக் கூட்டணி அமைத்துக் கொண்டது. மொராஜ் தேசாய் பிரதமராக பதவியேற்றார். 1977 ஏப்பரல், மே மாதங்களில் ஜனதாவில் கூட்டுச் சேர்ந்த 5கட்சிகளும் தங்கள் கட்சிகளின் பெயர்களைக் கலைத்து விட்டு ஜனதா கட்சி என்ற பெயரில் செயற்பட முன்வந்தனர்.

ஆட்சியினை அமைத்ததும் தேர்தல் வாக்குறுதிகளுக்கேற்ப ஜனதாக்கட்சி அரசாங்கம் 42வது அரசியல் யாப்புத் திருத்தத்தின் குறைபாடுகளை நீக்கியது, சொத்துரிமையை சட்டமுறையான உரிமையாக மாற்றியது. மறுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீளவும் வழங்கியது. பொருளாதாரத் துறையில் சிறு கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் என்பவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கியது வெளிவிவகாரத் துறையில் அமெரிக்காவுடனும், நல்லுறவுகளை பேணுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது.

ஜனதாக்கட்சியின் ஒற்றுமை 27 மாதங்கள் தான் நிலைத்திருந்தன. 1979இல் ஜனதாக் கட்சி தலைவர்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. ஜனதாக்கட்சியை உருவாக்கிய ஐந்து தலைவர்களும் தங்களுக்கிடையே முரண்பட்டுக் கொண்டனர். முக்கிய தலைவர்களில் ஒருவரான சரண்சிங் பிரதமரான மொராய் தேசாயினை பதவியிலிருந்து விலக்கிதான் பிரதமரானார். ஆனால் அவருக்கும் பாராளுமன்றத்தில் போதியளவு பலம் இல்லாததினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது இடைத்தேர்தலில் ஜனதாக்கட்சி தோல்வியுற்றது.

சரண்சிங் ஜனதாவிலிருந்து வெளியேறி லோக்தளம் கட்சியை உருவாக் கினார். வாஜ்பாய் போன்றவர்கள் வெளியேறி பாரதீய ஜனதாக் கட்சியினை உருவாக்கினர். ஜோர்ஜ் பேர்னாட்ஸ் வெளியேறி சமதாக் கட்சியினை உருவாக்கினார்.

இவ்வாறு பல்வேறு பிளவுகள் தொடர்ச்சியாக ஏற்பட்டதனால் ஜனதாக்கட்சி பலவீனமடைந்து சிறிய கட்சியாக மாறியுள்ளது.

### கொள்கைகள்

(1) அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்

(2) ஜனநாயக் கட்டமைப்புகளை உருவாக்கி பலப்படுத்துதல்

(3) சிறு கைத்தொழிலில் கிராமீய கைத்தொழில் போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தல்

(4) அமெரிக்காவுட்பட பல்வேறு நாடுகளுடன் நல்லுறவுகளைப் பேணுதல்

(5) ஊழலை இல்லாது ஒழித்தல்

## 7 ஜனதா தளம்

1989ம் ஆண்டு ஜனதாக் கட்சி, ஜன்மோர்ச்சா, லோக்தளம் ஆகிய மூன்று கட்சிகள் இணைந்து ஜனதாதளம் என்கின்ற கட்சியை உருவாக்கின. காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்து வெளியேறிய வி.பி.சிங் இதன் தலைவராக தேர்தெடுக்கப்பட்டார். ஜனதா தளத்துடன் நின்று விடாது காங்கிரஸ் கட்சிக்கு எதிரான ஒரு கூட்டணி ஒன்றினை உருவாக்கும் முயற்சியிலும் வி.பி.சிங் ஈடுபட்டார். இதன் அடிப்படையில் 1989 நவம்பரில் ஜனதாதளம், காங்கிரஸ் (எஸ்), தெலுங்கு தேசம், அஸாம் கண பரிஸத், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய ஏழு கட்சிகள் இணைந்து தேசிய முன்னணி என்ற அமைப்பினை உருவாக்கின

1989 தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியுடன் தேர்தல் கூட்டு உடன்பாடு ஒன்றினைச் செய்து கொண்டு தேசிய முன்னணி தேர்தலில் போட்டியிட்டது. தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதிகூடிய ஆசனங்களைப் பெற்ற காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத தினால் அரசாங்கத்தை அமைக்க முன்வரவில்லை. இந்நிலையில் 141 ஆசனங்களைப் பெற்ற ஜனதாதளம் வி.பி.சிங் தலைமையில் அரசாங்கத்தை அமைக்க முன்வந்தது. தேசிய முன்னணியின் ஏனைய கட்சிகள் ஆதரவளிக்க முன்வந்தன. அதேவேளை பாரதீய ஜனதாக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் வெளியில் நின்று கொண்டு ஆதரவளிக்க முன்வந்தன. வி.பி.சிங் பிரதமரானார். ராஜீவ் காந்தியினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவத்தையும் வி.பி.சிங் வாபஸ் பெறச் செய்தார். அயல் நாடுகளுடன் நல்லுறவுகளைப் பேண முயற்சிகளைச் செய்தார். பிற்படுத்தப்பட்டோர் தொடர்பாக மண்டல் கமிஷன் சிபார்சுகளை அமுலாக்க முன்வந்தார்.

ஆனாலும் 1990 நவம்பரில் அயோத்தி பிரச்சினையை காரணமாக வைத்து பாரதீய ஜனதாக் கட்சி அரசிற்கான ஆதரவினை வாபஸ் பெற்றதால் அரசாங்கம் கவிழ்ந்தது.

பின்னர் இந்திரா காங்கிரசின் ஆதரவுடன் சந்திரசேகர் 65 ஆசனங்களை மட்டும் வைத்துக் கொண்டு ஆட்சியினை அமைத்தார். இவ் அரசும் 1991 இல் காங்கிரஸ் கட்சி ஆதரவினை வாபஸ் பெற்றதால் கவிழ்ந்தது.

ஆட்சிக் கலைப்பிற்கு பின்னர் அடுத்தடுத்த தேர்தலில் ஜனதாதளம் பெரிய வெற்றியை ஈட்டவில்லை.1991 தேர்தலில் 59 இடங்களை மட்டுமே ஜனதாதளம் பெற்றிருந்தது. தற்போது கட்சி மிகவும் பலவீனமடைந்த நிலையிலேயே



இருக்கின்றது எனினும் கர்நாடகம் பீகார் போன்ற மாநிலங்களில் கணிசமான செல்வாக்கு இன்னமும் கட்சிக்கு இருக்கின்றது

### கொள்கைகள்

(1) ஊழலற்ற ஆட்சியினை வழங்குதல்

(2) வெகுஜன ஊடகங்களுக்கு சுதந்திரம் வழங்குதல்

(3) பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தல்

(4) பஞ்சாப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணல்

(5) அயல்நாட்டு விவகாரங்களில் மேலாதிக்கத்தை பேணாதிருத்தல்.

## 8 மாநிலக் கட்சிகள்

மாநிலங்களின் நலன்களைப் பிரதானப்படுத்துவதாகவும், மாநில மட்டத்தில் மட்டும் செல்வாக்கு பெற்றனவாகவும், உள்ள கட்சிகளே மாநிலக் கட்சிகள் என அழைக்கப்படுகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை மாநிலக்கட்சிகள் தற்போது பல்கிப் பெருகியுள்ளன. இதன் காரணமாக பல மாநிலங்களில் முதலாவது, இரண்டாவது இடங்களையும் வேறு சில மாநிலங்களில் முதல் இரண்டு இடங் களையும் இக்கட்சிகள் பெற்றுள்ளன.

ஆந்திரா, பஞ்சாப், ஹரியானா, ஜம்முகாஷ்மீர், அஸாம், மீசோராம், மணிப்பூர் போன்ற மாநிலங்களில் இக்கட்சிகள் 1வது அல்லது இரண்டாவது இடத்தில் இருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் முதல் இரண்டு நிலைகளிலும் மாநிலக் கட்சிகளே உள்ளன. இன்று மத்திய அரசாங்கம் என்பது மாநிலக் கட்சிகளையும் இணைத்த அரசாங்கமாகவே இருப்பதனால் மாநிலங்களில் மட்டுமல்ல மத்திய அரசாங்கத்திலும் மாநிலக் கட்சிகள் செல்வாக்கு பெற்றவையாக விளங்குகின்றன. இதனூடாக இன்று வளர்ச்சியடைந்திருக்கின்ற இருகூட்டுக் கட்சிக் முறைக்கும் மாநிலக் கட்சிகள் பெரும் பங்கினை ஆற்றியுள்ளன.

### முக்கிய மாநிலக் கட்சிகள்

### 1. திராவிட முன்னேற்றக்கழகம் (தி.மு.க)

நீண்ட காலமாக செயற்பட்டு வந்த திராவிட இயக்கங்களின் தொடர்ச்சி-யாகவே திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கப்பட்டது.

திராவிட இயக்கத்தின் ஆரம்ப அமைப்பாக 1916ஆம் ஆண்டு விளங்கியது. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் 1917இல் இச் சங்கமே நீதிக்கட்சியாக மாற்றப்பட்டது 1920 தேர்தலில் நீதிக்கட்சி போட்டியிட்டு சென்னை மாநிலத்தின் நிர்வாக அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டது. தொடர்ந்து வந்த தேர்தல்

களிலும் வெற்றியீட்டிய நீதிக்கட்சி 1937 தேர்தலில் காங்கிரஸ் கட்சியிடம் தோல்வியுற்றது. பிராமணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்தே நீதிக் கட்சி உருவாக்கப்பட்டது.

1925 இல் ஈ.வே.ரா பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கத்தினை உருவாக்கினார். 1926இல் பெரியார் நீதிக்கட்சியில் சேர்ந்தார். 1938இல் பெரியார் நீதிக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். 1939 இல் திராவிட நாடு கோரிக்கையினை பெரியார் முன்வைத்தார்.

1944ம் ஆண்டு நீதிக்கட்சியின் சேலம் மாநாட்டில் பெரியார் தலைமையில் திராவிடர் கழகம் உருவாக்கப்பட்டது. 1948ம் ஆண்டு திராவிடர் கழகத்தின் ஈரோடு மாநாட்டில் வைத்து C.N அண்ணாதுரையினை பெரியார் தனது வாரிசாக அறிவித்தார்.

1949இல் அண்ணாதுரைக்கும், பெரியாருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. திராவிடர் கழகத்தை அரசியல் இயக்கமாக மாற்றுதல், சுதந்திர தினத்தை துக்க தினமாகக் கொண்டாடுதல், கருஞ் சட்டை விவகாரம், பெரியார் சமுதாய சீர்திருத்த கருத்துகளுக்கு எதிராக 72 வயதில் தனது சீடரான 27 வயதான மணியம்மையை திருமணம் செய்தமை, போன்றவை தொடர்பாக கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டமையினால் சி.என் அண்ணாதுரை, திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறி 1949 செப்ரெம்பர் 17 இல் திராவிட முன்னேற்றக் கழகத்தினை உருவாக்கினார் திராவிடர் கழகத்தில் இருந்த 75% உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக்கழகத்தில் இணைந்தனர்.

1952 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க போட்டியிடவில்லை. 1957 தேர்தலில் போட்டியிட்டு 15 இடங்களைக் கைப்பற்றி இருந்தது. 1962 சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் ஏக போகம் தளரத் தொடங்கியது. இத் தேர்தலில் தி.மு.க 50 ஆசனங்களைப் பெற்று தமிழ்நாட்டு அரசியல் தளத்தில் வலுவாக காலூன்றியது.

1963 இல் காமராஜர் சென்னை, அரசியலை விட்டு தேசிய அரசியலில் கட்சிப் பணியாற்றுவதற்காகச் சென்றார் இதே காலப்பகுதியில் ராஜாஜி காங்கிரஸ் கட்சிக்கு எதிராக சுதந்திராக் கட்சியை உருவாக்கினார்.

1967 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க சுதந்திராக் கட்சியுடனும், முஸ்லிம் லீக்குடனும், பார்வார்டு பிளாக் கட்சியுடனும்,கூட்டணியமைத்து தேர்தலில் போட்டியிட்டது. பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியினை அமைத்தது. அண்ணாதுரை தமிழ்நாட்டின் முதலமைச்சரானார். சுமார் 30 வருடகால காங்கிரசின் ஏகபோகம் தகர்த்தெறியப்பட்டு திராவிட இயக்கத்தின் ஏகபோகம் மீண்டும் உருவாகத் தொடங்கியது. 1967 இன் பின்னர் காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் அதிகாரத்திற்கு வரவேயில்லை. திராவிடக் கட்சிகள் தான் மாறி மாறி அதிகாரத்திற்கு வந்தன.

1969 இல் சி.என் அண்ணாதுரை புற்று நோயினால் மரணமடைந்தார் இவரது மரணத்தைத் தொடர்ந்து கலைஞர் மு.கருணாநிதி தி.மு.க.வின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.



1969ம் ஆண்டு பெங்களூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு பின்னர் காங்கிரஸ் இரண்டாக பிளவுபட்டது. ஒரு பிரிவு இந்திராகாங்கிரஸ் எனவும் மற்றைய பிரிவு ஸ்தாபன காங்கிரஸ் எனவும் அழைக்கப்பட்டது.

1971ம் ஆண்டு தேர்தலில் தி.மு.க. இந்திரா காங்கிரஸ் கட்சியுடனும் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் என்பவற்றுடனும் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. அதேவேளை மறுபக்கத்தில் ஸ்தாபன காங்கிரஸ் சுதந்திராக்கட்சி என்பன கூட்டணி அமைத்து போட்டியிட்டன. ஒரு தேசியக் கட்சியான காங்கிரஸ் மாநிலக் கட்சி தலைமையில் கூட்டணி அமைத்துக் கொண்டமை இதுவே முதல் தடவையாகும். இதன் பின்னர் ஏதாவது ஒரு திராவிடக் கட்சியுடன் தமிழ்நாடு மட்டத்தில் கூட்டணி அமைத்துக் கொள்வது காங்கிரஸ் கட்சியின் வழமையாகி விட்டது .

1971 தேர்தலில் தி.மு.க மீண்டும் வெற்றி பெற்றது. மு.கருணாநிதி தமிழ்நாட்டு முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

1972ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ம் திகதி திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து M.G இராமச்சந்திரன் தலைமையிலான குழுவினர் வெளியேறி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினை உருவாக்கிக் கொண்டனர். M.G.R அ.தி.மு.கவின் தலைவரானார் M.G.R க்கு சாதி, மத வட்டார அடிப்படைகளைத் தாண்டி செல்வாக்கு இருந்தது. தனது ரசிகர் மன்றங்களை M.G .R அரசியலுக்கு பயன்படுத்தினார்.

1977 தேர்தலில் தி.மு.க. இந்திரா காங்கிரசுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட போதும் அ.தி.மு.க. வெற்றியடைந்தது.M.G.R முதலமைச்சராக பதவியேற்றார். இதன் பின்னர் M.G .R மரணமடையும் வரை தி.மு.க.வினால் தமிழக ஆட்சியினைக் கைப்பற்ற முடியவில்லை.

1980, தேர்தலிலும் தி.மு.க இந்திரா காங்கிரசுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது.

1988 டிசெம்பர் 24ம் திகதி M.G .R மரணமடைந்தார். இதனைத் தொடர்ந்து 1989இல் நடைபெற்ற தேர்தலில் தி.மு.க வெற்றி பெற்று 12 வருடங்களின் பின்னர் தமிழ் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியது.

1991ம் ஆண்டு தி.மு.க அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கின்றது எனக் கூறி தி.மு.க ஆட்சியை மத்திய அரசு கலைத்தது. தேர்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தேர்தலுக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் 1991இல் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டார். இவரது கொலை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டு எழுந்ததால் தி.மு.க தேர்தலில் படுதோல்வியடைந்தது.

1996ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் தி.மு.க காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்த மூப்பனார் தலைமையிலான தமிழ் நாடு மாநில காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியமைத்து போட்டியிட்டு வெற்றியடைந்தது. அதேவேளை 1998இல் நடைபெற்ற பாராளுமன்றத்திற்கான தேர்தலிலும் இக்கூட்டணி அதிகளவிலான ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது எனினும் 1999 நடைபெற்ற பாராளு-

மன்றத் தேர்தலில் தி.மு.க, பா.ஜ கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததினால் தமிழ்நாடு மாநில காங்கிரஸ் அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டது. தி.மு.க கூட்டணிக்கே அதிக ஆசனங்கள் கிடைத்திருந்தன. இத்தேர்தலில் தி.மு.க கூட்டணியுடன் வை.கோ தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும், டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சியும் இணைந்திருந்தன.

2001ம் ஆண்டு சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க, பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. அதேவேளை அ.தி.மு.க தமிழ்நாடு மாநில காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி என்பவற்றுடன் இணைந்து போட்டியிட்டது வை.கோ.வின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் ஆசன ஒதுக்கீட்டுப் பிரச்சினையால் தனித்துப் போட்டியிட்டது. தி.மு.க தோல்வியடைந்தது.

2004இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க மிகப்பெரும் கூட்டணி ஒன்றினை அமைத்தது, காங்கிரஸ் கட்சி, பட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம் யூனிஸ்ட் கட்சி (வலது), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாக்சிஸ்ட்), முஸ்லிம் லீக் என்பன கூட்டணியில் இணைந்து கொண்டன. அதேவேளை அ.தி.மு.க, பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணியமைத்து போட்டியிட்டது. தேர்தலில் எவரும் எதிர்பார்க்காத வகையில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, உட்பட 40 தொகுதிகளிலும் தி.மு.க கூட்டணி வெற்றி பெற்றது. தி.மு.க கூட்டணியிலுள்ள பலர் மத்திய அமைச்சரவையில் அமைச்சர்களாகவும் உள்ளனர்.

தற்போது தமிழ்நாடு அளவில் தி.மு.க வலிமையான ஒரு எதிர்க்கட்சியாக உள்ளது. இவ் வலிமை நிலைக்கு தி.மு.க .வின் மிகப் பெரிய கூட்டணியும் ஒரு காரணம். இக் கூட்டணி தொடர்ந்து நிலைத் திருப்பின் தான் சட்ட சபைத் தேர்தலில் தி.மு.கவினால் ஆட்சியைக் கைப்பற்ற முடியும். ஆனால் சட்டசபைத் தேர்தல் என வருகின்றபோது ஆசன ஒதுக்கீடு தி.மு.க தலைமைக்கு மிகப் பெரிய பிரச்சினையாக வரலாம்.

## கொள்கைகள்

(1) மாநிலங்களின் சுயாட்சி அதிகாரங்களை அதிகரிக்கச் செய்தல்.

(2) தமிழ் அடையாளங்கட்கு முன்னுரிமை வழங்குதல் இதன் அடிப்படையில் சென்னை மாநிலம் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்படல் வள்ளுவர் கோட்டம், பூம்புகார் கலைக்கூடம் அமைக்கப் படல்.

(3) தமிழ் மொழி உபயோகத்தினை அதிகரிக்கச் செய்தல், இதன் அடிப்படையில் தமிழ் - ஆங்கிலம் இரு மொழிக் கொள்கை கொண்டு வரப்படல்.

(4) சுயமரியாதைச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்தல்.



(5) பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர்களின் நலன்களைப் பேணும் வகையில் இடஒதுக்கீட்டு முறையினைக் கொண்டு வருதல்.

(6) போக்குவரத்தினை அரசுடமையாக்குதல்

(7) வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்

(8) பெண்களின் சொத்துரிமையைப் பேணுதல்

(9) மாநில அரச ஊழியர்களுக்கு மத்திய அரச ஊழியர்களுக்கு இணையான சம்பளம்

(10) சத்துணவுத்திட்டத்தில் முட்டையையும் சேர்த்தல்

## 2. அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் (அ.இ.அ.தி.மு.க)

அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் 1972ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ம் திகதி பிரபலமான நடிகரும் தி.மு.க.வின் பொருளாளருமான M.G இராமச்சந்திரனால் உருவாக்கப்பட்டது ஆரம்பத்தில் அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகம் என்று இருந்த கட்சியின் பெயர் பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என மாற்றப்பட்டது. திரைப்படத்திலே மக்கள் நலன் பேணும் கதாநாயகன் வேடத்தில் இவர் நடித்ததினால் அரசியலிலும் மக்களை மீள்விக்க வந்த கதாநாயகனாகவே மக்கள் இவரைப் பார்த்தனர். குறிப்பாக அடித்தள மக்கள் மத்தியிலும் பெண்கள் மத்தியிலும் நிலையான செல்வாக்கு இவருக்கு இருந்தது.

இக்கட்சி 1977 தேர்தலில் முதன்முதலாக போட்டியிட்டு தி.மு.க, காங்கிரஸ் கூட்டணியை தோற்கடித்து வெற்றி பெற்றது. M.G.R முதலமைச்சராக பொறுப் பேற்றார். அன்று தொடக்கம் மரணமடையும் வரை நீண்டகாலம் சுமார் 12 வருடங்கள் முதலமைச்சராக இருந்தவர் இவர் ஒருவரேயாவார்.

1980ம் ஆண்டு தி.மு.க.வின் வேண்டுதலின் பேரில் M.G.R இன் ஆட்சி கலைக்கப்பட்டு மறு தேர்தல் நடைப்பெற்ற போதும் அ.தி.மு.க சட்ட சபைத் தேர்தலில் வெற்றி பெற்றது. இதே ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்ற போதும் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கதாக இருந்தது. கட்சியின் நிறுவனப் பலம் என்பதை விட M.G .R என்ற தனிமனித வசீகரம் தான் தேர்தல் வெற்றிக்கு காரணமாகும்.

மத்திய அரசாங்கத்துடன் நல்லுறவு இருப்பதே நல்லது எனக் கருதி M.G.R மத்திய ஆளும் கட்சியுடன் நல்லுறவுகளைப் பேண விரும்பினார். இதனால் 1980ம் ஆண்டு தேர்தலுக்கு பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியமைத்தே போட்டியிட்டார். காங்கிரஸ் கட்சியும் தமிழ்நாட்டில் M.G.R இன் செல்வாக்கினை வீழ்த்த முடியாது எனக் கருதியதால் தி.மு.க

கூட்டணியிலிருந்து விலகி அ.தி.க.முவுடன் கூட்டணியமைக்க முன்வந்தது. 1984 தேர்தல் தொடக்கம் M.G.R இறக்கும் வரை இக் கூட்டணி நிலைத்திருந்தது. 1984 தேர்தலிலும் மிகப் பெரிய வெற்றியினை அ.தி.மு.க ஈட்டியது.

1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதி M.G.R மரணமடைய இவரின் துணைவியார் ஜானகி ராமச்சந்திரன் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். தமிழக முதலமைச்சர் என்ற பதவியையும் பொறுப்பேற்றார். இவர் தான் தமிழ் நாட்டின் முதல் பெண் முதலமைச்சராக பதவி ஏற்றவர் ஆவார். கட்சியில் இவரின் தலைமையை விரும்பாதவர்கள் ஜெயலலிதாவின் தலைமையில் வெளியேறி அ.தி.மு.கவின் இன்னோர் குழுவாகச் செயற்பட்டனர். இந்நிலையில் சட்டசபையில் போதிய பெரும்பான்மை இல்லாததினால் ஜனாகி ராமச்சந்திரனின் அரசாங்கம் கவிழ்ந்தது.

1989 தேர்தலில் இரு அணிகளும் தனித்தனியாக போட்டியிட்டன. தேர்தலில் தி.மு.க வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. ஜானகி அணி படுதோல்வி அடைந்தது. இவருடைய அணியைச் சேர்ந்த பண்ருட்டி ராமச்சந்திரன் மாத்திரம் வெற்றி பெற்றார். அதேவேளை ஜெயலலிதா அணி 26 ஆசனங்களைப் பெற்று சட்ட சபையில் பிரதான எதிர்க் கட்சிகளில் ஒன்று என்ற இடத்தினைப் பிடித்தது. M.G.R உடன் இணைந்து கதாநாயகியாக ஜெயலலிதா திரைப்படங்களில் நடித்ததினாலும் இணைந்து அரசியல் பணிகளில் ஈடுபட்டதனாலும் M.G.R இன் வாரிசாக மக்கள் ஜெயலலிதாவையே பார்த்தனர். இதனாலேயே ஜானகியுடன் போட்டியிட்டு ஜெயலலிதாவினால் வெற்றி பெற முடிந்தது.

தேர்தல் முடிவடைந்து சில நாட்களில் ஜானகி ராமச்சந்திரன் அரசியலிருந்து விலக இரு அணிகளும் ஒன்றாக இணைந்தன. ஜெயலலிதா கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அவர் எதிர்க்கட்சி தலைவராகி சட்டசபையின் முதற் கூட்டத்தில் தி.மு.க அரசின் கொள்கை விளக்க உரையினை எதிர்த்துப் பேசும் போது தி.மு.க. உறுப்பினர்களினால் அவரின் சேலை உரியப்பட்டு தாக்கப்பட்டார். இதன் பின்னர் தி.மு.க ஆட்சியினை வீழ்த்துவது வரை சட்டசபைக்கு சமூகமளிப்ப தில்லை எனச் சபதம் செய்து தான் முதலமைச்சராகும் வரை சட்ட சபையினை பகிஸ்கரிப்புச் செய்தார்.

1991ம் ஆண்டு தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியமைத்து போட்டியிட்டு மிகப்பெரிய வெற்றியினை ஈட்டியது. ஜெயலலிதா முதலமைச்சரானார்.

1996 தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி இரண்டாக பிளவுபட்டு அதில் பெரும்பான்மையானவர்கள் தமிழ்நாடு மாநில காங்கிரசில் இணைந்தனர். தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தி.மு.கவுடன் இணைந்து போட்டியிட்டது அதேவேளை, காங்கிரஸ் கட்சி அ.தி.மு கவுடன் இணைந்து போட்டியிட்டது. தமிழ் நாட்டினைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சியே மூன்றாவது சக்தியாக விளங்குகின்றது. தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தோற்றம் பெற்றவுடன் அதுவே மூன்றாவது சக்தியாக வந்தது. எனவே மூன்றாவது சக்தியாருடன் இணைந்து போட்டியிடுகின்றதோ, அதுவே வெற்றி பெறும் என்பது தமிழ்நாட்டின் தேர்தல் சூத்திரமாக இருந்தது. (M.G .R காலத்தில் இந்த



விதி பொய்யானது என்பது வேறு விடயம்) இதற்கமைய தி.மு.க, வெற்றி பெற்றது.

1998 பாராளுமன்றத் தேர்தலிலும் தி.மு.க, த.மா.க கூட்டணியே தமிழ்நாட்டில் வெற்றி பெற்றது.

தி.மு.க வெற்றி பெற்றதும் ஜெயலலிதாவை ஊழல் குற்றச் சாட்டுகளின் பெயரில் கருணாநிதி சில காலம் சிறையில் அடைத்தார்.

2001ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் தமிழ் நாடு மாநில காங்கிரஸ், அதற்கு அடுத்த படியாக தமிழ்நாட்டில் செல்வாக்குடன் இருக்கும். பாட்டாளி மக்கள் கட்சி என்பன அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டதால் அ.தி-மு.க மீண்டும் வெற்றி பெற்றது. ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராகி யுள்ளார்.

ஜெயலலிதா முதலமைச்சரானதும் கருணாநிதியை பழிவாங்க வேண்டி நள்ளிரவில் அவரைக் கைது செய்து இழுத்துச் சென்று சிலகாலம் சிறையில் அடைத்தார். அதேநேரம் போடா சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்தார் எனக் குற்றம் சாட்டி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் வை. கோவையும் சிறையில் அடைத்தார்.

2004ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் நாட்டின் கூட்டணிச் சூத்திரம் மீண்டும் மாறியது. இரண்டாக பிளவுபட்ட காங்கிரஸ் கட்சியும் தமிழ்நாடு மாநில காங்கிரஸினரும் மீண்டும் ஒன்றாக இணைந்தன. தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கலைக்கப்பட்டது. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி என்பன தி.மு.க கூட்டணியுடன் இணைந்ததினால் அ.தி.முக. படுதோல்வி யடைந்தது. மொத்தம் 40 ஆசனங்களில் ஒன்றினைக் கூட பெற்றுக் கொள்ள அ.தி.மு.கவினால் முடியவில்லை.

தற்போது அ.தி.மு.க பலமான நிலையில் இருந்தாலும் அ.தி.மு.க கூட்டணி பலவீனமான நிலையில் இருக்கின்றது. அதேவேளை தி.மு.க கூட்டணி மிகப்பலமான நிலையில் இருக்கின்றது. தி.மு.க கூட்டணியை உடைத்தால் ஒழிய, இனி வரும் காலங்களில் அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெறுவது கடினமாகவே உள்ளது. தி.மு.க கூட்டணியில் நான்காவது சக்தியாக இருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியினை தன்னுடன் இணைத்துக் கொள்ளுவதற்கு அ.தி.மு.க முயன்று வருகின்றது. இதில் வெற்றி பெற்றால் அ.தி.மு.க கூட்டணி சற்று வளர்ச்சி யடையலாம். ஆனால் எவருடனும் நீண்ட காலத்திற்கு உறவினைப் பேணாத ஒருவராக ஜெயலலிதா இருப்பதனால் இது எவ்வளவு துாரம் சாத்தியம் எனக் கூற முடியாது. தி.மு.க எதிர் நோக்கும் தொகுதி ஒதுக்கீட்டுப் பிரச்சினை ஜெயலலிதாவிற்கு உதவக்கூடிய ஒன்றாக இருப்பதனால் ஜெயலலிதா முன்னேறக் கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

அண்மையில் நடைபெற்ற சட்டசபைக்கான இடைத்தேர்தல்களில் அ.தி.மு.க வெற்றி பெற்றமை வெளியார் நினைக்கின்ற அளவிற்கு கட்சி பலவீனமாக இல்லை, என்பதையே காட்டுகின்றது.

## கொள்கைகள்

(1) பிற்படுத்தப்பட்டவர்களின் இட ஒதுக்கீட்டினை அதிகரித்தல்

(2) தமிழக உயர்கல்வியை அபிவிருத்தி செய்தல்

(3) மத்திய அரசுடன் நல்லுறவுகளைப் பேணுதல்

(4) மதுவிலக்கு ஆரம்பத்தில் கடைப்பிடிக்கப்பட்டது பின்னர் தளர்த்தப் பட்டது.

(5) இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர்களை ஆதரித்தல். ஆனால் ஜெயலலிதா காலத்தில் இக் கொள்கை கைவிடப்பட்டது.

(6) அடி நிலை மக்களின் அபிவிருத்திக்கு உதவுதல்

(7) பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவுத்திட்டத்தினை உருவாக்குதல்

(8) தமிழ்க்கலாச்சாரத்தில் உள்ள நேர்மை, நன்னடத்தை என்பவற்றிக்கு முன்னுரிமை கொடுத்தல்.

(9) ஊழலை ஒழித்தல்

(10) இந்தித் திணிப்பை எதிர்த்தல்

(11) மாநில சுயாட்சியினை ஆதரித்தல்

## 3. தெலுங்கு தேசம்

தமிழகத் தலைவர் M.G.R.ஐ முன்னோடியாகக் கொண்டு ஆந்திரப் பிரதேசத்தின் திரைப்பட நடிகர் என். டி. ராமராவினால் 1982இல் உருவாக்கப்பட்ட கட்சியே தெலுங்குதேசமாகும் - ஊழலற்ற ஆட்சி, நலிந்த மக்களுக்கு நல்வாழ்வு, தெலுங்கு மொழியின் மேம்பாடு என்பவற்றை கொள்கைகளாக் கொண்டு 1983ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு மாநில ஆட்சியைக் கைப்பற்றியது. என்.டி.ராமராவ் ஆந்திராவின் முதலமைச்சராக பதவியேற்றார். 1985ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலிலும் தெலுங்கு தேசம் வெற்றியடைந்தது. மாநில ஆட்சியைக் கைப்பற்றியது.

1989ம் ஆண்டு தேசிய முன்னணி உருவாக்கப்பட்ட போது தெலுங்கு தேசமும் அதில் இணைந்து கொண்டது என்.டி.ராமராவ் தேசிய முன்னணியின் தலைவராகவும் பதவிவகித்தார்.

1990களின் ஆரம்பத்தில் கட்சி பிளவுபட்டது. கட்சியில் பெரும்பான்மையோர் என்.டி.ராமராவின் மருமகன் சந்திரபாபு நாயுடுவை ஆதரித்தமையினால் கட்சியின் தலைமைப் பொறுப்பு சந்திரபாபு நாயுடுவின் கைகளில் சென்றது. சட்டசபைத் தேர்தலிலும் சந்திர பாபுநாயுடு வெற்றி பெற்று முதலமைச்சரானார். சிறந்த நிர்வாகி எனப் பெயர் பெற்ற இவரின் காலத்தில் தான். ஆந்திரா எலக்ரோனிக் மயமாக்கப்-பட்டது.



1998 இல் மக்களவைத் தேர்தலிலும்,1999 மக்களவைத் தேர்தலிலும், தெலுங்கு தேசம் பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணியமைத்து போட்டியிட்டது. மக்கள வையில் கணிசமான ஆசனங்களைத் தெலுங்கு தேசம் பெற்ற போதும் மத்திய அமைச்சரவையில் பங்கு பெறவில்லை. வெளியில் நின்று கொண்டே ஆதரவினை அளித்து வந்தது.

2004 இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணியமைத்து போட்டியிட்ட போதும் பாரதீய ஜனதாக் கட்சி மத்தியில் வெற்றி பெறவில்லை. அதேவேளை தெலுங்கு தேசத்தின் ஆதரவும் வீழ்ச்சி கண்டிருந்தது. தொடர்ந்து வந்த ஆந்திர மாநில சட்ட சபைத் தேர்தலில் தெலுங்கு தேசம் தோல்வியடைந்தது காங்கிரஸ் கட்சி மாநில ஆட்சியைக் கைப்பற்றியது தற்போது ஆந்திராவில் பிரதான எதிர்க்கட்சியாக தெலுங்கு தேசம் விளங்குகின்றது. இதன் தலைவர் சந்திரபாபு நாயுடு அண்மைய குண்டு வெடிப்பு ஒன்றிலும் மயிரிழையில் உயிர் தப்பினார்.

தெலுங்கு தேசம் இன்று எதிர்கட்சியாக இருந்தாலும் மாநிலத்தில் காங்கிரசிற்கு மாற்றுக் கட்சியாக அதுவே விளங்குகின்றது. அதேவேளை மத்திய அரசாங்கத்திலும் செல்வாக்கு செலுத்துகின்ற பிரதான மாநிலக் கட்சிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

## கொள்கைகள்

(1) ஆந்திரா மாநிலத்தினை விரைந்த நவீனமயப்பாட்டிற்கு உட்படுத்தல்.

(2) மாநில சுயாட்சிக்கு ஆதரவளித்தல்

(3) விவசாயத்தில் தொழில் நுட்பத்தினை புகுத்துதல்

(4) அடிநிலை மக்களின் நலன்களைப் பேணுதல்

(5) தெலுங்கு மொழியின் வளர்ச்சிக்கு உதவுதல்

(6) ஊழலற்ற ஆட்சியினை வழங்குதல் .

## 4. அகாலிதள்

சீக்கிய இன மக்களின் மிகப் பழைய கட்சி இதுவாகும். 1920ம் ஆண்டு இக் கட்சி உருவாக்கப்பட்டது. சுதந்திரப் போராட்டத்திலும் கட்சி பங்கு பற்றியிருந்தது. ஆரம்பத்தில் சீக்கிய மதக் கோட்பாடுகளை காக்கவும் பரப்பவும் உருவாக்கப்பட்ட கட்சி பின்னர் சீக்கியர்களின் உரிமைகள், கோரிக்கைகளை நிறைவேற்றும் அரசியல் கட்சியாக வளர்ந்தது.

1958இல் காங்கிரஸ் கட்சியோடு இக்கட்சியினை இணைத்து செயற்பட்டது. எனினும் 1962 தேர்தலில் இக்கட்சி மீண்டும் தனியாகப் போட்டியிட்டது. பஞ்சாப் மொழி பேசும் சீக்கியர்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையினை பஞ்சாப் தனிமாநிலமாக வருவதற்கு முன்னர் முன்வைத்திருந்தது.

1967 சட்ட சபைத் தேர்தலில் பஞ்சாப் மாநிலத்தில் அதிக ஆசனங்களைப் பெற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஜனசங்கம் என்பவற்றினுடன் கூட்டணி ஆட்சியினை அமைத்துக் கொண்டது. எனினும் 1972 இல் பெரும்பான்மையை இழந்து மீண்டும் 1977 இல் கூட்டணி அரசாங்கத்தில் பங்கேற்றுக் கொண்டது. இக் கட்சி நடாத்திய தொடர் போராட்டங்களின் விளைவாகவே மொழியடிப்படையில் பஞ்சாப் மாநிலம் பஞ்சாப், ஹரியானா எனப் பிரிக்கப்பட்டது. 1966ம் ஆண்டு பஞ்சாப் தனி மாநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

நாளடைவில் அகாலிதள் மிதவாதப் பிரிவு, தீவிரவாதப் பிரிவு என இரண்டாக பிளவுபட்டது. பிந்தரன் வாலே தலைமையில் தீவிர வாதப்பிரிவு உருவாக்கப்பட்டது அது "காலிஸ்தான் குடியரசு" என்ற தனி நாட்டுக் கோரிக்கையை முன் வைத்து ஆயுதப் போராட்டத்தினை நடாத்தியது. 1981 மார்ச் 20இல் பஞ்சாபிலுள்ள ஆனந்த பூர் சாகிப்பில் முதன் முதலாக "காலிஸ்தான் குடியரசு" கொடியேற்றப்பட்டது.

ஆரம்பத்தில் மிதவாதப் பிரிவான அகாலிதள்ளினை பலவீனப்படுத்த தீவிரவாதப் பிரிவிற்கு காங்கிரஸ் ஆதரவு அளித்தது. ஆனால் நாளடைவில் காங்கிரஸ் அரசாங்கமே தீவிரவாதப் பிரிவினை அழிக்க முன்வந்தது. தீவிரவாதப் பிரிவினர் சீக்கியர்களின் புனித ஆலயமான பொற்கோவிலை தளமாகக் கொண்டே செயற்பட்டனர். இதனால் 1984யூலை மாதம் 4ம்திகதி இந்திய இராணுவம் பொற்கோவிலுக்குள் சென்று தீவிரவாதிகளை அழித்தது இதற்கு பழி தீர்க்கும் முகமாக 1984 அக்டோபர் 31இல் பிரதமர் இந்திரா காந்தி தனது சீக்கிய மெய்ப் பாதுகாவலர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் காரணமாக தில்லியில் வாழ்ந்த 5000 வரையிலான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

பஞ்சாப் வன்முறையால் நீண்டகாலம் பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சியே நடைபெற்றது. 1985 இல் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அகாலிதள் தலைவரான ஹர்சந்த்சிங் லோங்கோவலுடன் ஓர் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார். இவ் ஒப்பந்தத்தில் சண்டிகாரை பஞ்சாபிற்கு மாற்ற வேவண்டும், இந்திரா காந்தி மரணத்தின் பின்னர் நடைபெற்ற நவம்பர் கொலைகள் தொடர்பாக விசாரணைக் கமிஷன் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். பஞ்சாபில் இருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும். அனைத்து இந்திய குருத்வார சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற அகாலிதள்ளின் கோரிக்கைகளை ராஜீவ் காந்தி ஏற்றுக் கொண்டார். இவ் ஒப்பந்தத்தினை தீவிரவாதிகள் ஏற்றுக் கொள்ளாததினால் அகாலிதள் தலைவர் லோங்கோவால் தீவிர வாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் அகாலிதள் பெரும்பான்மை ஆசனங்களுடன் வெற்றி பெற்று மாநில ஆட்சியைக் கைப்பற்றியது. தர்ஜித் சிங் பர்னாலா முதலமைச்சராக பதவியேற்றார். எனினும் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதில் மத்திய அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

1986இல் தீவிரவாதப் பிரிவினர் காலிஸ்தானை சுதந்திர நாடாக அறிவித்தனர். காலிஸ்தான் கொள்கையினை முன்னெடுத்து செல்வதற்காக காலிஸ்தான் அதிரடிப்படை என்னும் அமைப்பும் உருவானது. 1987இல் பர்னாலா



தலைமையிலான அகாலிதள் அரசு கலைக்கப்பட்டது. மீண்டும் பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டது.

அதேவேளை அகாலிதள் மீண்டும் கட்சி பிளவுபட்டது. சிம்ரன்ஜித் சிஸ் மான் அகாலிதள் கட்சியிலிருந்து வெளியேறி ஐக்கிய அகாலிதள் என்னும் கட்சியை உருவாக்கினார்.

1991இல் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. காங்கிரசின் மாநிலத் தலைவரான பியாந்த சிங் முதலமைச்சராக பதவியேற்றார். 1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி வெடிகுண்டு விபத்தில் பியாந்தசிங் கொல்லப்பட்டார்.

பஞ்சாப் சட்ட சபைத் தேர்தலில் அகாலிதள் கட்சியும், பாரதீய ஜனதாக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு மாநில ஆட்சியைக் கைப்பற்றியது அகாலிதள் கட்சியைச் சேர்ந்த "பிரகாஷ் சிஸ்பாதல்" முதலமைச்சராக பதவியேற்றார்.

2002 பெப்ரவரி மாதம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் அகாலிதள் தோல்வியுற்று மீண்டும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமர்ந்தர் சிங் முதலமைச்சராக பதவியேற்றுள்ளார். தற்போதும் அவரே முதமைச்சராக உள்ளார்.

அகாலிதள் கட்சி தற்போது பஞ்சாபில் ஆட்சியில்லாவிட்டாலும் இன்றும் பிரதான மாநிலக் கட்சியாக விளங்குகின்றது.

## இந்தியக் கட்சி முறையின் நன்மைகள்

(1) இந்தியக் கட்சி முறை இந்திய சமூகத்தின் பன்மைத் தன்மைக்கு வலுவான இடத்தினைக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

(2) சிறிய கட்சிகளும், சிறிய சமூகங்களின் கட்சிகளும் செல்வாக்கு பெறும் நிலை வளர்ந்துள்ளது.

(3) அடித்தள மக்களின் நலன்கள் குறைந்த மட்டத்திலாவது பேணப்படுவதற்கு கட்சிமுறை வழி செய்கின்றது.

(4) மாநிலங்களுக்கு யாப்பு ரீதியாக அதிகாரங்கள் குறைவாக இருந்தாலும் கட்சிமுறை அரசியல் ரீதியில் மாநிலங்களின் அதிகாரங்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

(5) பல கட்சி முறையின் வளர்ச்சி மாநில மட்டத்திலும் பன்மைத்தன்மையை வளர்த்துள்ளது.

## இந்தியக் கட்சி முறையின் குறைபாடுகள்

(1) பல கட்சிகளின் வளர்ச்சியினால் மத்திய அரசாங்கம் கூட்டரசாங்கமாக அமையக் கூடிய சூழலே இன்று நிலவு கின்றது. கூட்டுச் சேர்ந்த

கட்சிகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படும் போது அரசாங்கம் பலவீன - மடையக் கூடிய சூழ்நிலை உருவாகின்றது.

(2) சமூகத்தின் ஒவ்வொரு பிரிவுகளும் கட்சிகளை உருவாக்க முனைவதால் சாதி, இன மத ரீதியான முரண்பாடுகள் வளரப்பார்க்கின்றது.

(3) பல்வேறு கட்சிகளின் வளர்ச்சியினால் தேசியக் கட்சிகள் பலவீனமடையக் கூடிய சூழல் உருவாகியிருக் கின்றது.

(4) தேசிய அபிலாசைகளுக்கும், மாநில அபிலாசைகளுக்கு மிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதானால் நாட்டின் ஒருமைப்பாடு பாதிக்கப்- படுகின்றது.

# 10 இந்திய அழுத்தக் குழுக்கள்

அரசியலில் மறைமுகமாக செல்வாக்கு செலுத்தும் குழுக்களே அழுத்தக் குழுக்கள் என அழைக்கப்படுகின்றன. பொதுவாக வணிகச் சங்கங்களும் தொழிற்சங்கங்களுமே பலம் வாய்ந்தஅழுத்தக் குழுக்களாக இருப்பது வழக்க- மாகும். விவசாய நாடுகளில் விவசாயிகள் சங்கங்களும் பிரதான அழுத்தக் குழுக்களாக இருப்பதுண்டு. இவற்றினை விட, பல்வேறு இன, மத சமூகக் குழுக்கள் வாழும் நாடுகளில் இன மத சாதிச்சங்கங்களும் அழுத்தக் குழுக்களாக வளர் வதுண்டு. இந்தியா இவை எல்லாவற்றையும் கொண்டுள்ள நாடாக இருப்பதனால் எல்லாவித அழுத்தக்குழுக்களும் அங்கு செயற்படுகின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை சில குழுக்கள் பணத்தினால் செல்வாக்குப் பெற்றவையாக உள்ளன. வேறு சில குழுக்கள் ஆட்பலத்தினால் செல்வாக்குப் பெற்றவையாக இருக்கின்றன

இந்தக் குழுக்கள் பாராளுமன்றத்தின் சட்டமாக்கும் நடவடிக்கைகளுக்கு துணை புரிபவையாக உள்ளன. சம்பந்தப்பட்ட குழுக்களுடன் தொடர்புடைய சட்டங்களை உருவாக்கும் போது தேவையான தகவல்களையும் ஆலோசனை களையும் இக்குழுக்கள் வழங்குகின்றன. ஒருவகையில் இக்குழுக்கள் மூன்றாவது சபை போல தொழிற்படுகின்றன எனக் கூறலாம்.

## முக்கிய அழுத்தக்குழுக்கள்

### 1. வணிகர் சங்கங்கள்

முதலாளித்துவ பொருளாதாரம் உள்ள நாடுகளிலும், கலப்புப் பொருளாதாரம் உள்ள நாடுகளிலும் வணிகர் சங்கங்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன.

இந்தியாவில் வணிகர் சங்கங்களை அமைப்பதில் முதலில் அக்கறை காட்டியவர்கள். பிரித்தானிய வணிகர்களால் 1801 இலும், 1830 இலும் இவர்கள் வணிகர் சங்கங்களை உருவாக்கினர். 1834 இல் மிகப் பெரிய வணிகர் சங்கமாக



பிரித்தானிய வணிகர்களால் "கல்கத்தா வணிகர் சங்கம்" உருவாக்கப் பட்டது. இந்திய வணிகர்களால் முதலாவது வணிகர் சங்கம் சென்னையில் உருவாக்கப் பட்டது. இதன் பின்னரே அதேவேளை 1887 இல் இந்திய வணிகர் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கம் வங்காளத்தில் உருவாக்கப்பட்டது. 1900 இல் மார்வாடி வணிகர் சங்கமும், தென்னிந்திய வணிகச் சங்கமும் தோற்றம் பெற்றன. 1932 இல் முஸ்லிம் வணிகர் சங்கம் உருவாக்கப்பட்டது.

சுதந்திரத்திற்கு பின்னர் ஆயிரத்திற்கு மேற்பட்ட வணிகர் சங்கங்கள் நாடு முழுவதிலும் உருவாக்கப்பட்டுள்ளன. வணிகச் சங்கங்களின் கூட்டு நிறுவனமாக "கூட்டு இந்திய வணிக மற்றும் தொழில் சங்கம் " விளங்குகின்றது. இது வணிகர்களுக்கான தேசிய அமைப்பாகும். இதன் தலைமை அலுவலகம் புது டில்லியில் இருக்கின்றது.

வணிகர் சங்கத்தினை விட உற்பத்தியாளர்களும் தங்களுக்கான அமைப்பினை உருவாக்கியிருக்கின்றார்கள். 1941 இல் உருவாக்கப்பட்ட "அகில இந்திய உற்பத்தியாளர் சங்கம்" இது தொடர்பில் முக்கியமான அமைப்பாகும். இதன் தலைமையகமும் புது டில்லியில் உள்ளது.

சுதந்திரத்திற்கு முன்னர், வணிகர் சங்கங்கள் அரசாங்கத்துடன் தொடர்பு- களை ஏற்படுத்திக் கொண்டதோடு தேசிய எழுச்சிகளையும் ஆதரித்தனர். சட்ட மன்றங்களிலும், ஆலோசனை மன்றங்களிலும் இவர்களுக்கென பிரத்தியேக பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டது. சுதந்திரம் அடைந்த பின்னர் இந்நிலை நேரடியாக இருக்கின்றது என கூற முடியாவிட்டாலும் மறைமுகமாக இருக்கின்றது. அரசாங்கத்தோடு மட்டுமல்ல எதிர்க் கட்சிகளோடும் நல்ல தொடர்புகளை வைத்திருக்கின்றார்கள். தேர்தல் செலவுகளுக்கு நிதிகளை வழங்குகின்றார்கள். இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாக இருப்பதனால் மத்திய அரசாங்கத்தோடு மட்டுமல்ல மாநில அரசாங்கங்களோடும், நல்ல தொடர்புகளைப் பேணுகின்றார்கள். தேர்தல் செலவுகளுக்கு நிதி உதவி வழங்குவதோடு மட்டுமல்லாது பாராளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரத்தை பின்பற்றுகின்ற நாடாக இருப்பதனால் அமெரிக்கா, பிரிட்டன் போன்று கொள்கை ஆக்கத்தில் இவர்களுக்கு பெரிய பங்கு இருக்கின்றது எனக் கூற முடியாது. ஆனாலும் அவர்களின் கருத்துக்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றது எனவும் கூறமுடியாது.

### 2. தொழிற்சங்கங்கள்

சுதந்திரத்திற்கு முன்னர் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் 1920 இல் உருவாக்கப்பட்டது. இதில் இந்திய தேசிய வாதிகளின் ஆதிக்கமே லோங்கியிருந்தது. 1929இல் இவ்வமைப்பு இந்திய கம்யூனிட்ஸ் கட்சியின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. 1931இல் கம்யூனிஸ்ட் கட்சி தனிகூட்டுத் தொழிற்- சங்கங்களை உருவாக்கியது 1935 இல் இவ் கூட்டுத் தொழிற்சங்கங்கள் இந்திய தொழிற்சங்கங்களை காங்கிரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன.

சுதந்திரத்தின் பின்னர் தொழிற்சங்க அமைப்புக்களிலும் பிளவுகள் ஏற்பட்டன. 1948 இந்திய தேசிய காங்கிரசின் தொழிற்சங்க பிரிவாக இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. சோசலிஷக் கட்சி தனக்கென ஒரு தொழிற்சங்க அமைப்பினை வைத்திருந்தது. இதே போல பல்வேறு கட்சிகளும் தங்களுக்கென தனியான தொழிற்சங்கங்களை உருவாக்கத் தொடங்கியிருந்தன.அரசியற் கட்சிகளுடனான தொழிற் சங்கங்களின் இவ்வாறான தொடர்பு வணிகர் சங்கங்களுக்கு இருந்தது எனக் கூற முடியாது. நாளடைவில் கட்சிகளிடமிருந்து சுதந்திரமாக செயற்படக்கூடிய நிலை தொழிற்சங்கங்களுக்கு இருக்கவில்லை. கட்சிகளின் விரிவாக்கமாகத்தான் தொழிற்சங்கங்கள் இடம் பெற்றிருந்தன.

தாம் சார்ந்த தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதே தொழிற்சங்கங்களின் நோக்கமாகும். இந்த வகையில் சம்பள உயர்வுப் பிரச்சினை பொருளாதாரம் பற்றிய கொள்கைகளைத் தீர்மானித்தல் என்பவற்றில் அதிகளவிலான செல்வாக்கினை செலுத்தி வருகின்றன.

## 3. விவசாயிகளின் சங்கம்

இந்தியாவில் விவசாயிகள் எழுச்சிகள் 1920 இலேயே ஆரம்பமாகிவிட்டது. சுதந்திரப் போராட்ட தலைவர்களான காந்தி, பட்டேல் போன்றவர்கள் பல விவசாயிகள் எழுச்சிக்கு தலைமை தாங்கியிருந்தனர். காந்தியின் கிராமராச்சியம் அதிகளவிற்கு விவசாயிகளையே மையம் கொண்டிருந்தது. இருந்த போதும் விசாயிகளுக்கான சங்கம் 1936 இலேயே உருவாக்கப்பட்டது. அச்சங்கம் "அகில இந்திய விவசாயிகள் சங்கம் என அழைக்கப்பட்டது" இச்சங்கத்தில் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கே அதிகமாக இருந்தது.

1924ம் ஆண்டின் பின்னர் அகில இந்திய விவசாயிகள் சங்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இதன் பின் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களுக்கான விவசாயிகள் சங்கங்களை அமைக்க முற்பட்டன.

விவசாயிகள் சங்கங்கள் இவ்வாறு பல தோற்றம் பெற்றிருந்தாலும் கட்சிச் செல்வாக்கு காரணமாகவும், நிதி நெருக்கடிகள் காரணமாகவும் நன்கு வளர்ச்சி பெற்ற அழுத்தக் குழுக்களாக இவற்றினால் வளர முடியவில்லை.

## 4. மாணவர் சங்கங்கள்

மாணவர் சங்கங்களுக்கும் இந்தியாவில் நீண்டகால வரலாறு உண்டு. ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களில் அவர்கள் இருப்பதால் அவர்களை அமைப்பாக்குவதும் இலகுவானது வீரியமான போராட்டங்களை நடாத்துவதும் இலகுவானது.

1929 இல் நேரு வங்காளத்தில் அகில வங்காளர் மாணவர் சங்கத்தினை உருவாக்கினர். இதே ஆண்டு பஞ்சாபிலும் ஒரு மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது 1936 இல் அகில இந்திய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது. முகம்மது அலி ஜின்னா அதன் முதல் தலைவராக விளங்கினார். 1940 இல் இச் சங்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. 1945இல் இந்திய தேசிய காங்கிரஸ் "அகில இந்திய மாணவர் காங்கிரஸ்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இதன் பின்னர் மாணவர்கள் கட்சி அரசியலில் ஈடுபடக் கூடாது என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையினால் மாணவர் காங்கிரஸ் கலைக்கப்பட்டது.பொதுவாக கட்சிகள் தங்களுக்கென மாணவர் அமைப்புக்களைக் கொண்டுள்ளன.



## 5. சமுதாயச் சங்கங்கள்

இந்தியாவைப் போன்ற நாடுகளில் சமுதாயச் சங்கங்களே செல்வாக்கு மிக்க அழுத்தக் குழுக்களாக விளங்குகின்றன. இந்தியா பல்லின, பல்மத, பல்சமூக மக்களைக் கொண்ட நாடாக இருப்பதனாலேயே இவ்வகையான அழுத்தக்குழுக்கள் அதிகளவில் தோற்றம் பெற்றுள்ளன. இந்த குழுக்கள் மத்திய அரசியலில் மட்டுமல்ல மாநில அரசுகளிலும் செல்வாக்குப் பெற்றவையாக விளங்குகின்றன.

இந்தக் குழுக்கள் இரண்டு வகையான கோரிக்கைகளை முன்வைக்கின்றன. பரந்த அடிப்படையில் உள்ள குழுக்கள் முழுச் சுதந்திரத்திலிருந்து பிராந்திய தன்னாட்சி வரை கோரிக்கைகளை முன்வைக்கின்றன. குறிப்பாக திராவிடர்கள் திராவிட நாட்டுக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.இதே போல சீக்கியர்கள் "காலிஸ்தான் " தனிநாட்டுக் கோரிக்கையினை முன்வைத் திருந்தனர். நாகர் இன மக்கள் முழு சுயாட்சியை தங்கள் மாநிலங்களுக்கு கோரியிருந்தனர். தெலுங்கானா மக்கள் தற்போது தனி மாநிலத்தை கோரி வருகின்றனர்.

இன்னோர் சாரார் தமது சமூகத்திற்கு அதிக வாய்ப்புக்களைக் கோரி வருகின்றனர். அதாவது தமது சமூகப் பிரிவினர் வாழும் பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்கவும், தமது சமூகத்தவர்களுக்கு அதிக வேலை, கல்வி வாய்ப்புக்களை வேண்டியும் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். தமிழ் நாட்டில் வன்னியர் சங்கம், பறையர் பேரவை, நாடார் சங்கம், அருந்ததியினர் சங்கம், என்பவற்றை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம். இதே போல மேற்கு வங்காளத்தில் பழங்குடி மக்களின் கோரிக்கைகள், ஆந்திராவில் கம்மா, ரெட்டி இனத்தவர்களின் கோரிக்கைகள், கர்நாடகத்தில் லிங்காயத், ஒக்கரிக இனத்தவர்களின் கோரிக்கைகள், கேரளாவில் நாயர், கிறிஸ்தவர் ஈழவர் சமூகத்தினரின் கோரிக்கைகள் , பீகாரில் ராஜ புத்திரர்கள் பூமிகார், மற்றும் காயஸ்தா இனத்தவர்களின் கோரிக்கைகள், உத்தரப்பிரதேசத்தில் தலித் மக்களான கோகிமா சங்கத்தவர்களின் கோரிக்கைகள் போன்றவற்றினை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

சமுதாயச் சங்கங்கள் தங்கள் தேவைகளை தெளிவாக அறிவித்தல், சீரான உள் அமைப்பினைக் கொண்டிருத்தல் என்கின்ற விடயங்களில் ஏனைய அழுத்தக் குழுக்களை விட வேறுபடுகின்றன.

**அழுத்தக் குழுக்களின் நன்மைகள்**

(1) குறிப்பிட்ட சமூகத்தவரின் மேல் நிலையாக்கத்திற்கு துணை புரிகின்றன.

(2) தமது சமூகப்பிரிவினரை அரசியல் சக்தியாக மாற்றுகின்றன.

(3) சமூக ஏற்றத் தாழ்வுகளை சீர செய்ய உதவுகின்றன.

(4) அரசிற்கு நல்ல ஆலோசனைகளை வழங்குகின்றன.

**அழுத்தக் குழுக்களின் குறைபாபடுகள்**

(1) நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைக்கப் பார்க்கின்றன.

(2) சமூகங்களுக்கிடையே முரண்பாடுகள் வளர்வதற்கு காரணிகளாக அமைகின்றன.



## இந்திய அரசியலமைப்புத் திருத்தங்கள்

1. (1951) : இது அரசியலமைப்பின் 9-வது பின் இணைப்பைச் சேர்ந்தது.

2. (1952) : மக்கள் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு இத்திருத்தம் வகை செய்தது.

3. (1951) : இது சில அதிகாரங்களை மாநிலப்பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றியது.

4. (1954) : சொத்துரிமை பற்றிய உறுப்புகள் 31, 31A ஆகியவற்றை இது திருத்தியது .

5. (1955) : மாநிலத்தின் பெயர் மாற்றம், எல்லை மாற்றம் போன்ற விஷயங்களில் மாநிலச் சட்ட மன்றத்தின் விருப்பத்தை அறிய ஒரு முறையை இது வகுத்தது.

6. (1956) : இத்திருத்தம் மாநிலங்களிடையே விற்பனை வரி பற்றியதாகும்.

7. (1956) : 1956ம் ஆண்டின் மாநில மறுஅமைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. மாநிலங்கள் சபையில்இட ஒதுக்கீட்டை அது மாற்றி அமைத்தது. A.B.C.D மாநிலங்கள் என்ற பாகுபாடு ஒழிக்கப்பட்டது. சில A.B. C.D மாநிலங்கள் ஒன்றியப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டன.

8. (1959) : மக்கள் சபையிலும், மாநிலச் சட்டமன்றங்களிலும் தாழ்த்தப்பட்டமக்களுக்கான இடஒதுக்கீடுகள் செய்யப்படவேண்டிய காலஅளவை அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தநாளிலிருந்து 10 ஆண்டுகள் என மாற்றியது.

9. (1960) : இத்திருத்தம் சில எல்லைப்புற பகுதிகளை பாகிஸ்தானுக்கு மாற்றியது.

10. (1961) : இத்திருத்தத்தின் மூலம் விடுவிக்கப்பட்ட தத்ரா (Dadra), நகர் ஹவேலி (Nagar Haveli) ஆகிய பகுதிகளை இந்தியாவுடன் சேர்த்தது.

11. (1962) : இத்திருத்தம் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத்தலைவர் ஆகியோரது தேர்தல் முறை பற்றியது .

12. (1962) : கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதிகள் இந்தியாவுடன் சேர்க்கப்பட்டன.

13. (1962) : நாகலாந்து இந்தியாவின் 16 -வது மாநிலமாக ஆக்கப்பட்டது.

14. (1962) : பாண்டிச்சேரி இந்தியாவுடன் சேர்க்கப்பட்டது.

15. (1963) : இத்திருத்தம் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயதை 60 இல்இருந்து 62 ஆக உயர்த்தியது.

16. (1963) : பாராளுமன்றத்திற்கோ, மாநிலச் சட்டமன்றத்திற்கோ போட்டி யிடும் வேட்பாளர்கள் இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பதாகவும், பிரிவினைக்கான பிரச்சாரம் எதையும் செய்யாமல் இருப்பதாகவும் உறுதி எடுக்க வேண்டும் என்பதை இத்திருத்தம் கூறியது.

17. (1964) : இத்திருத்தம் சொத்துரிமையில் மேலும் மாற்றங்களைக் கொண்டு வந்தது.

18. (1964) : இத்திருத்தம் புதிய மாநிலம் அல்லது ஒன்றியப் பிரதேசம் அமைக்கப் பாராளுமன்றத்தின் அதிகாரம் பற்றிக் கூறியது.

19. (1965) : இத்திருத்தம் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களில் சிலமாற்றங்களைச் செய்தது.

20. (1966) : இத்திருத்தம் மாவட்ட நீதிபதிகள், அவர்களது தீர்ப்புகள் ஆகிய வை பற்றியதாகும்.

21. (1967) : இந்தி மொழி தேசிய மொழிகள் பட்டியலில் 12 -வது மொழியாகச் சேர்க்கப்பட்டது.

22. (1969) : மேகலாய மாநிலம் உருவாக்கப்பட்டது.

23. (1969) : பாராளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டின் காலம் அரசியலமைப்புதுவக்கியதிலிருந்து 20 ஆண்டுகள் எனத் திருத்தப்பட்டு இருந்தை 30 ஆண்டுகள் என மாற்றியது.

24. (1971) : பாராளுமன்றத்திற்கு அரசியலமைப்பின் எந்தப் பகுதியையும் திருத்துவதற்கானஅதிகாரத்தை இது வழங்கியது.

25. (1971) : இத்திருத்தம் சொத்துரிமை பற்றியதாகும்.

26. (1971) : முன்னாள் மன்னர்களுக்கானமானியங்களும், சிறப்பு உரிமைகளும் அழிக்கப்பட்டன.



27. (1971) : மிசோரம் ஒன்றியப் பிரதேசமாக்கப்பட்டது.

28. (1972) : I.C.S அதிகாரிகளின் சில சிறப்புரிமைகள் அழிக்கப்பட்டன.

29. (1972) : கேரள மாநிலத்தில் சில நலச்சீர்திருத்தச் சட்டங்கள் இதனால் பாதுகாப்பளிக்கப்பட்டன.

30. (1972) : இத்திருத்தம் தலைமை நீதிமன்றத்தின் மேல் விசாரணை அதிகாரம் பற்றியதாகும்.

31. (1973) : மக்கள் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை525ஆக உயர்த்தப்பட்டது.ஒன்றியப்பிரதேசங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை25-லிருந்து 20 ஆகக் குறைக்கப்பட்டது.

32. (1973) : இத்திருத்தம் ஆந்திரப்பிரதேசம், தெலிங்கான பற்றியதாகும்.

33. (1974) : இத்திருத்தம் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தலின்காரணமாக தங்கள் பதவியை ராஜினாமாச் செய்தால் அதை மாநில சபாநாயகர்கள் ஏற்க வேண்டாம் என வலியுறுத்தியது.

34. (1974) : இத்திருத்தம் சில மாநிலங்கள் இயற்றிய நில உச்ச வரம்புச் சட்டங்களைப் பாதுகாத்தது.

35. (1974) : சிக்கிம் இந்தியாவின் துணைநிலை மாநிலமாக (Associate State) ஆக்கப்பட்டது. அரசியலமைப்பில் 10-ஆவது பின் இணைப்புச் சேர்க்கப்பட்டது.

36. (1975) : சிக்கிம் முழு அளவிலான முழு மாநிலமாக இந்தியாவுடன் சேர்க்கப்பட்டது. எனவே அரசியலமைப்பின் 10- ஆவது பின் இணைப்பு (Schedule) நீக்கப்பட்டது.

37. (1975) : அருணாசலப் பிரதேசத்திற்கு சட்டமன்றமும் அமைச்சரவையும் வழங்கப்பட்டது.

38. (1975) : ஏற்கெனவே நெருக்கடிநிலை அமலில் இருந்தாலும் மற்றொரு நெருக்கடி நிலையை அறிவிக்கின்ற அதிகாரத்தை ஜனாதிபதிக்கு இது வழங்கியது. பாராளுமன்றம் கூட்டத்தொடரில் இல்லாத நேரத்திலும் அவர் நெருக்கடி நிலைப்பிரகடனம் செய்யலாம் என்றும், அப்பிரகடனம் நீதித்துறையால் தடுக்கப்பட முடியாது என்றும் இத்திருத்தம் கூறியது.

39. (1975) : ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமமந்திரி, சபாநாயகர் ஆகியோரது தேர்தல்களை எதிர்த்து எந்த நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடர முடியாது என இத்திருத்தம் கூறியது.

மேற்கூறியோரது தேர்தல் விவகாரங்களை விசாரிக்கத் தனியான ஒருஅமைப்பைப் பாராளுமன்றம் அமைக்கவும் அது வகை செய்தது.

40. (1976) : சில சட்டங்கள் அரசியலமைப்பின் 9-வது பின் இணைப்பில் சேர்க்கப்பட்டன.

41. (1976) : மாநிலப் பொது ஊழியக்குழுவின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரது ஓய்வு வயதை 60- லிருந்து 62 ஆக மாற்றியது.

42. (1976) : இத்திருத்தம் கீழ்கண்ட சில முக்கியமான மாற்றங்களைச் செய்தது.a) அரசியலமைப்பின் முகவுரையில் "சோஸலிச, மதச் சார்பற்ற"ஆகிய சொற்கள் சேர்க்கப்பட்டன. b) அரசியலமைப்புத் திருத்தங்கள் நீதிப்புனராய்விலிருந்து விலக்களிக்கப்பட்டன. c) தலைமை நீதிமன்றத்தின் மாநில சட்டங்கள் மீதான நீதிப்புனராய்வு அதிகாரமும் உயர்நீதிமன்றங்களின் மத்திய சட்டங்களின் மீதான நீதிப்புனராய்வு அதிகாரம் அளிக்கப்பட்டன. d) சில புதிய அரசு வழிகாட்டி நெறிகள் சேர்க்கப்பட்டன. f) சில அடிப்படை கடமைகள் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டன. g)சில தேச விரோத நடவடிக்கைகள் விவரிக்கப்பட்டு, அவற்றின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு வழங்கப் பட்டது. h) குடியரசுத்தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையின்படிதான் நடக்க வேண்டும் என்பது உறுதி செய்யப் பட்டது.i) மக்கள்சபை மாநிலங்கள் சட்ட மன்றங்கள் ஆகியவற்றின் பதவிக்காலம் ஆறு ஆண்டு களாக உயர்த்தப் பட்டது. j) மிக மோசமான நிலைமை இருக்கின்ற மாநிலத்திற்கு இராணுவத்தை அனுப்புகின்ற அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டது. k) நெருக்கடி நிலையை ஜனாதிபதி நாடு முழுவதற்குமாகவோ அல்லது ஒரு பகுதிக்கு மட்டுமோ பிரகடனம் செய்யலாம் என மாற்றப்பட்டது. l)நெருக்கடி நிலைப்பிரகடனத்தின் ஆயுட் காலம் ஆறுமாதத்திலிருந்துஒருவருடமாக மாற்றப்பட்டது. m) சில அதிகாரங்கள் பொதுப்பட்டியில் சேர்க்கப்பட்டன.

43. (1977) : இத்திருத்தம் 42- **ஆவது** திருத்தம் செய்த மாற்றங்களில் சிலவற்றைமாற்றியது. தலைமை நீதிமன்றம், உயர்நீதி-மன்றங்கள் ஆகியவற்றுக்கு நீதிப்புனராய்வு அதிகாரத்தை முழு அளவில் இது மீட்டுத்தந்தது. 42-வது திருத்தம் சொல்லிய தேச விரோத நடவடிக்கைகள் பற்றிய விஷயங்கள் அகற்றப்பட்டன.



44. (1978) : இத்திருத்தம் 42 - ஆவது திருத்தம் செய்த சில மாற்றங்களை மாற்றுகின்ற மாற்றங்களைக் கொண்டிருந்தது. a) சொத்துரிமை அடிப்படை உரிமைகள் பகுதியிலிருந்து நீக்கப்பட்டது. b) ஆயுதம் தாங்கிய புரட்சி இருந்தால் தான் உள்நெருக்கடி நிலைப் பிரகட னம் செய்ய முடியும் என்னும் நிலையை ஏற்படுத்தியது. c) நெருக்கடி நிலைப்பிரகடனம் பாராளுமன்றத்தில் சிறப்புப் பெரும்பான்மைப்பலத்துடன் ஒப்புதலைப் பெற வேண்டும். d) மக்கள்சபை நெருக்கடிநிலைப் பிரகடனத்தை ரத்து செய்யலாம். e) அமைச்சர் குழுவின் எழுத்து வடிவிலான ஆலோசனையைப் பெற்ற பின்னரே ஜனாதிபதி நெருக்கடி நிலைப்பிரகடனம் செய்ய வேண்டும். f) நெருக்கடி நிலையின் ஆயுட்காலம் ஆறு மாதங்கள் மட்டுமே, பாராளுமன்றத்தால் நீடிக்கப்படலாம். g) மக்கள்சபையின் உறுப்பினர்களில் பத்து சதவிகிதம் பேர் கேட்டுக் கொண்டால், நெருக்கடி நிலையைரத்து செய்வதைப் பற்றி விவாதிக்கச் சிறப்புக்கூட்டம் கூட்டப்பட வேண்டும். h) நெருக்கடி நிலைக் காலத்திலும் மக்களின் உயிர் வாழ்வதற்கான உரிமையையும் சுதந்திர உரிமையையும் பாதுகாக்கப்பட வேண்டும்.i) நெருக்கடி நிலைக்காலத்தில் பத்திரிகைசுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். j) மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி 6 மாத கால அளவிற்கே புகுத்தப்பட வேண்டும். அக்கால அளவு சில நிபந்தனைகளின் பேரிலேயே நீடிக்கப்பட முடியும்44-வது திருத்தம், மசோதாவாக இருந்த நிலையில் மேலும் பல விஷயங்களைக் கொண்டிருந்தது.சில குறிப்பிட்ட அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு மக்கள்வாக்கெடுப்பு மூலம் மக்களின் ஒப்புதலைப் பெறவும் வகை செய்யப்பட்டிருந்தது. அதுவும்,அது போன்ற சில விடயங்களும் மாநிலங்கள் சபையால் நிராகரிக்கப்பட்டன.

45. (1980) : இத்திருத்தம் மக்கள் சபை, மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டுக் காலத்தைஅரசியலமைப்பு துவங்கிய காலத்திலிருந்து 30 ஆண்டுகள் என திருத்தப்பட்டு இருந்ததை 40 ஆண்டுகள் என மாற்றியது.

46. (1982) : விற்பனை வரிகளில் ஒரே விதமான விகிதங்களை ஏற்படுத்தவும், மாநிலங்கள் அவற்றைச் சரியாக வசூலிக்கவும் சில மாற்றங்களை இது செய்தது.

47. (1984) : சில நிலச்சீர்த்திருத்தச் சட்டங்களை அரசியலமைப்-பின் ஒன்பதாவது பின்னிணைப்பில் இது சேர்த்தது.

48. (1984) : பஞ்சாபில் இருந்த அரசியல் நிலையின் பொருட்டு இத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இத்திருத்தத்-தின்படிஅம் மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சியை ஓராண்டிற்கும் மேல் நீடிக்க வகை செய்யப்பட்டது.

49. (1984) : அரசியலமைப்பின் ஆறாவது பின்னிணைப்பு திரிபுராவில் உள்ள மலைச்சாதியினரின் பகுதிகட்கும் பொருந்தும் வண்ணம் திருத்தபட்டது.

50. (1984) : அரசின் சில குறிப்பிட்ட பணிகளில் உள்ளவர்களின் அடிப்படைஉரிமைகளைக் கட்டுப்படுத்துவது 38-வது உறுப்பு அந்தஉறுப்பின் ஆளுகைக்குள் உளவுத்துறை மற்றும்தந்தித் தொடர்புத்துறைப் பணியாளர்களையும் கொண்டு வர இத்திருத்தம் வகை செய்கிறது.

51. (1984) : வடகிழக்கு மாநிலங்களில் வாழும் சில மலைச் சாதி-யினருக்குஅவர்களது மாநிலங்களின் சட்டமன்றங்களிலும் மக்கள் சபையிலும் இட ஒடக்கீடு செய்ய இது வகை செய்கிறது.

52. (1985) : தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற,பாராளுமன்ற உறுப்பினர்-கள் கட்சித்தாவல் செய்வதைத் தடுக்க இது கொண்டு வரப்-பட்டது.

53. (1986) : மிசோரம் முழுமையான மாநிலம் ஆக்கப்பட்டது.

54. (1986) : தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மற்ற நீதிபதி-கள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரது சம்பள விகிதங்கள் மாற்றப்பட்டன.எதிர்காலத்தில் பாரளு-மன்றத்தின் சாதாரணச்சட்டங்களின் வாயிலாகவே அவர்களது சம்பள விகிதங்களை உயர்த்தும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

55. (1986) : இத்திருத்தம் அருணாசலப் பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்-தை வழங்கியது.

56. (1987) : இது கோவை மாநிலமாக்கியது. டாமன், டையூ பகுதிகள் ஒன்றியப்பகுதியாக அறிவிக்கப்பட்டன.

57. (1987) : இத்திருத்தம் நாகலாந்து, மேகாலாயா, மிசோரம், அருணாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மக்கள் சபைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு



செய்யவும், நாகாலாந்து, மற்றும் மேகாலாயா சட்ட மன்றங்-களில் அத்தகைய இடஒதுக்கீடு செய்யவும் வகை செய்கிறது.

58. (1987) : இந்திய அரசியலமைப்பை இந்தியில் வெளியிட ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கியது.

59. (1988) : இத்திருத்தம் அரசியலமைப்பின் 356-வது உறுப்பில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது.பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சியை ஒரு வருடத்திற்கு மேலாக,அவசியமானால் மூன்றாண்டுகளுக்கு நடைமுறைப்படுத்த இது வகை செய்-கிறது.

60. (1989) : இது அரசியலமைப்பின் 276- வது உறுப்பைத் திருத்-தியது.இதன்படி தொழில் வரியின் உச்சவரம்பு ரூபாய் 250 லிருந்து ஆண்டுகளுக்கு 2500 ஆக உயர்த்தப்பட்டது.

61. (1989) : இவ் அரசியலமைப்பின் 326- வது உறுப்பைத் திருத்தி வாக்-களிக்கும் வயதுத் தகுதியை 21லிருந்து 18 ஆகக் குறைந்தது.

62. (1989) : பாராளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் தாழ்த்தப்-பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டுச்சலுகையை மேலும் பத்தாண்டுகளுக்கு நீடித்தது.

63. (1989) : இது பஞ்சாபில் நெருக்கடி நிலையை நீடிக்க வகை செய்த 59- வது திருத்தத்தை ரத்துச் செய்தது.

64. (1990) : பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சியை மேலும் ஆறு மாதத்திற்கு நீடிக்க வகை செய்யும் மசோதா போதுமான பெரும்பான்மை இல்லாததால் தோற்கடிக்கப்பட்டது.

65. (1990) : 64- வது திருத்தம் மீண்டும் 65 என்ற எண்ணுடன் நிறை வேற்றப்பட்டது.

66 . (1990) : சில நிலச்சீர்த்திருத்தச் சட்டங்கள் அரசியலமைப்பின் 9 வது அட்டவணையின் கீழ் கொண்டு வரப்பட்டன.

67. (1990) : உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் தொடர் பாக தேசிய நீதிக்குழு அமைக்க வகை செய்கிறது.

68. 1990) : தாழ்த்தப்பட்டவர்கள். பழங்குடியினர் கமிஷனுக்குச் சட்ட பூர்வமான அங்கீகாரம் வழங்குகிறது.

69. (1990) : திரிபுராவில் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்குத் தேர்தலில் தொகுதி ஒதுக்கீடு செய்ய வகை செய்கிறது.

70. (1990) : தலைமைத் தேர்தல் ஆணையாளரை மக்களவைச் சபாநாய-கர், மாநிலங்களவைத் தலைவர், மக்களவை எதிர்கட்சித்

தலைவர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் நியமிக்க வகை செய் கின்றது.

71. (1990) : 1981 மக்கள் தொகைக் கணக்கீட்டின் அடிப்படையில் பாராளுமன்றத் தொகுதிகளை மாற்றி அமைத்தது.

72. : டில்லியைத் தனி மாநிலமாக மாற்ற வகை செய்கிறது.

73. (1990) : சில பொருட்கள் தயாரிப்பதைக் கைத்தொழில் பிரிவின் கீழ் கொண்டு வந்தது.

74. (1990) : ஊராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளில் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செய்கிறது.

75. (1990) : பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சியை மேலும் ஆறுமாதம் நீடிக்க அறிமுகம் செய்யப்பட்டது.

76. (1990) : 75- வது திருத்தம் நிறைவேறாததால் 76- வது திருத்தமாக நிறை வேற்றப்பட்டது.

# 5
# பிரான்ஸ் அரசாங்க முறை

## வரலாற்றுப் பின்னணி

பிரான்ஸ் 551, 662 ச.கி.மீ நிலப்பரப்பினையும் 5.5 கோடி மக்கள் தொகையினையும் (1973) கொண்ட ஒரு நாடாகும். இது கிழக்கே சுவிஸ்லாந்தையும், தென்கிழக்கே இத்தாலியையும், மேற்கே ஸ்பெயினையும் வடக்கே யூரா (Jura) மலையையும் எல்லையாகக் கொண்ட நாடாகும். இங்கு பெரும்பான்மையானவர்கள் கத்தோலிக்க மதத்தினை சார்ந்தவர்கள் (90%). இவர்களைவிட புரட்டஸ்தாந்து மதத்தை சேர்ந்தவர்களும் (2%), யூத மதத்தை சேர்ந்தவர்களும் (2%) வாழ்கின்றார்கள்.

பாரிஸை(Paris) தலைநகராகக் கொண்ட பிரான்ஸ் 1945, Oct 24 ல் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடாகியது. பிரான்சின் நவீன அரசியல் 1789ல் நடைபெற்ற பிரான்சின் புரட்சியுடன் ஆரம்பமாகியது. 1791ல் பிரான்சின் 1வது அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. வரையறுக்கப்பட்ட முடியாட்சியைக் கொண்டதாக இவ் அரசியல் யாப்பு விளங்கியது.

இந்த யாப்பினால் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியவில்லை. பிரான்சியப் புரட்சியின் போது முன் வைக்கப்படட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் கொள்கைகளின் அடிப்படையில் இவ்வரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது.

1798ம் ஆண்டு 2 வது அரசியல் யாப்பு அமுலுக்கு வந்தது. இதுவே பிரான்சை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தியது. இவ்வரசியல் யாப்பு 1வது குடியரசு அரசியல் யாப்பு எனவும் அழைக்கப்படுகின்றது.

1848 ல் 2வது குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. இந்த யாப்பு மிகவும் சொற்ப காலமே அமுலிலிருந்தது.

3 வது குடியரசு அரசியல் யாப்பு 1875 ல் உருவாக்கப்பட்டது. இவ்வரசியல் யாப்பின் மூலம் பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற அரசாங்க முறை பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஜனாதிபதி இவ்வரசியல் யாப்பில் பெயரளவு தலைவராகச் செயற்பட்டார். பாராளுமன்றமும் அதற்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையும் அதிகாரம் வாய்ந்ததாக விளங்கின. மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட செனற்சபை பாராளுமன்றத்தின் மேல்சபையாகவும், மக்களினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சபை கீழ்சபையாகவும் திகழ்ந்தன. மேல்சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் 9 ஆண்டுகளாகவும் கீழ்ச்சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் 4 ஆண்டுகளாகவும் இருந்தன. நிதி மசோதாவைத் தவிர்ந்த ஏனைய மசோதாக்கள் செனற்சபையிலும் அறிமுகப்படுத்தப் பட்டன. ஜனாதிபதி மீதான குற்றவிசாரணை போன்ற நீதித்துறை அதிகாரங்களையும் செனற்சபை பெற்றிருந்தது. ஆனால் இரு சபைகளுக்குமிடையே ஏற்படுகின்ற சட்டப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் செனற்சபை, பிரதிநிதிகள் சபையை விட அதிக அதிகாரம் பெறும் நிலையிலிருந்த பாராளுமன்ற அரசாங்க முறையாக இருந்தமையினால் நிர்வாக விடயங்களில் அமைச்சரவை அதிக அதிகாரம் பெற்றிருந்தது. ஆனால் அதன் நிலையற்ற தன்மை ஆட்சியைப் பெரிதும் பாதித்தது.


3வது குடியரசு அரசியல் யாப்பு 65 ஆண்டுகள் நடைமுறையிலிருந்தது. இக்காலத்தில் 100 அரசாங்கங்களை அது சந்தித்தது. 1ம் உலக யுத்தத்துக்கும், 2ம் உலக யுத்தத்துக்கும் இடையே 42 அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன. 1940ம் ஆண்டு 2ம் உலக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 3 வது குடியரசு வீழ்ச்சியடைந்தது. 2ம் உலக யுத்த காலத்தில் இடைக்கால அரசே ஆட்சியிலிருந்தது. 1945 ம் ஆண்டு 2ம் உலக யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடைபெற்றது. இச்சபை 1946ம் ஆண்டு புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்கிச் சமர்ப்பித்தது. இவ் அரசியல் யாப்பே 4 வது குடியரசு அரசியல் யாப்பென அழைக்கப்பட்டது. இது 1946 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. இவ் அரசியல் யாப்பும் முன்னைய யாப்பினைப் போலவே பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற அரசாங்க முறையை உருவாக்கியது.

1958ம்ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ம் திகதி 5 வது குடியரசு அரசியல், யாப்பு அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. பிரான்சின் நவீன தலைவர் என அழைக்கப்படும் டீ கோல் என்பவரினாலேயே இது அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் யாப்பே இன்று வரை நடைமுறையிலிருந்து வருகிறது.

இவ் யாப்பு பாராளுமன்ற அரசாங்க முறையையும் ஜனாதிபதி அரசாங்க முறையையும் இணைத்த ஒரு முறையினைக் கொண்டிருந்தது. ஏற்கெனவே நடைமுறையிலிருந்த பாராளுமன்ற அரசாங்க முறை மூலம் ஒரு நிலையான அரசாங்கத்தை செயற்படுத்த முடியவில்லை என்ற காரணத்தினாலேயே இவ் யாப்பு பிரதானமாக அறிமுகப்படுத்தப்பட்டது.



## பிரெஞ்சுக் குடியரசு (French Re Public)




| | | |
|---|---|---|
| பரப்பளவு | : | 5,43,965 ச.கி.மீ |
| மக்கள் தொகை | : | 6,06,56,178 |
| தலைநகர் | : | பாரிஸ் |
| மொழி | : | பிரெஞ்சு |
| சமயம் | : | கிறிஸ்தவம், யூதம், இஸ்லாம் |
| ஜனாதிபதி | : | ஜாக்குவாஸ் சிராக் |
| பிரதமர் | : | டொமினிக். டி. வில்லேபின் |
| அரசு | : | இரு சட்ட சபைகளைக் கொண்ட பல கட்சி குடியரசு, பாராளுமன்ற முறையும் ஜனாதிபதி முறையும் கலந்த அரசாங்க முறை |
| நாணயம் | : | யூரோ |
| பொருளாதாரம் | : | விவசாயம், இரும்பு மற்றும் உருக்கு மின்னும் பொருட்கள் |

# அரசியல் யாப்பின் சிறப்பியல்புகள்

## 1. எழுதப்பட்ட நெகிழா அரசியல் யாப்பு

5 வது குடியரசு அரசியல்யாப்பு ஒரு எழுதப்பட்ட நெகிழா அரசியல்யாப்பாகும். இதில் 95 உறுப்புக்கள் உள்ளன. அவை 15 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அரசியல்யாப்பினைத் திருத்துவது கடினமாக உள்ளமையால் நெகிழா யாப்பாகவும் இது காணப்படுகின்றது.

அரசியல் யாப்புத் திருத்த மசோதா ஜனாதிபதியினால் கொண்டு வரப்படு கின்றது. பிரதமர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளுக் கிணங்க ஜனாதிபதி இதனைக் கொண்டு வருகின்றார். திருத்த மசோதா பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சாதாரண பெரும்பான்மையுடன் முதலில் நிறைவேற்றப்படல் வேண்டும். பின்னர், மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்களினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

அரசியல் யாப்புத் திருத்த மசோதாவினை மக்கள் தீர்ப்புக்கு விடத் தேவையில்லை என ஜனாதிபதி கருதினால் அத்திருத்த மசோதா பாராளுமன்றத்தின் இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் 3/5 பெரும்பான்மையால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

அரசியல்யாப்பின் குடியரசுத் தன்மையை திருத்தவோ, மாற்றவோ முடியாது. அதேபோல் நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தான சூழ்நிலை நிலவுகின்றபோது அரசியல் யாப்பு திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த முடியாது.

## 2. இரு சபை பாராளுமன்றம்

சட்டத்துறையான பாராளுமன்றம் தேசிய பேரவை, செனற்சபை எனும் இரு சபைகளைக் கொண்டதாக விளங்குகின்றது. தேசிய பேரவையின் உறுப்பினர்கள் 5 ஆண்டு காலத்துக்கு பதவி வகிக்கவென மக்களினால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். செனற் சபையின் உறுப்பினர்கள் தேர்தல் குழுவொன்றினால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வெளிநாடுகளிலுள்ள பிரான்ஸ் பிரஜைகளுக்கும் செனற்சபையில் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

## 3. ஓரளவு அதிகாரம் வாய்ந்த ஜனாதிபதி

பிரான்சின் அரசியல் யாப்பு பாராளுமன்ற அரசாங்க முறையையும், ஜனாதிபதி அரசாங்க முறையையும் இணைத்துக்கொண்ட ஓர் அரசியல்யாப்பாகும். இதனால் ஜனாதிபதி இங்கு பெயரளவு நிர்வாகியாகவும் இல்லை. உண்மையான முழு அதிகாரம் படைத்த நிர்வாகியாகவும் இல்லை. ஓரளவு அதிகாரம் வாய்ந்த நிர்வாகத் தலைவராக விளங்குகின்றார். இவர் 7 வருடங்களுக்குப் பதவி வகிக்கவென மக்களினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.



## 4. ஓரளவு அதிகாரம் படைத்த அமைச்சரவை

அரசியல் யாப்பின்படி, அமைச்சரவை ஓரளவு அதிகாரம் படைத்ததாக விளங்குகின்றது. ஜனாதிபதி பிரதமரையும் பின்னர், அவரது ஆலோசனையின் பெயரில் ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கின்றார். இங்கு அமைச்சரவை உறுப்பினர்கள் எவரும் பாராளுமன்ற உறுப்பினர்களல்லர். அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து அது நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவை பதவி விலகும். ஜனாதிபதி அமைச்சரவையின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார்.

## 5. மதச்சார்பற்ற மக்களாட்சி குடியரசு

பிரான்சின் அரசியல் யாப்பு பிரான்ஸ் அரசினை ஒரு மதச்சார்பற்ற மக்களாட்சிக் குடியரசு என உறுதி செய்துள்ளது மக்களால் மக்களுக்காக நடாத்தப்படும் மக்களின் அரசாங்கம் என்பதே அரசியல் யாப்பின் கொள்கை. இவை யாப்பில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## 6. மக்கள் - தீர்ப்பு முறை

பிரான்சில் மக்கள் தீர்ப்பு முறை அமுலிலுள்ளது. இம்மக்கள் தீர்ப்பு முறையின் மூலம் அரசியல் யாப்புத் திருத்தத்தினை ஏற்கவோ மறுக்கவோ மக்களுக்கு அதிகாரமுண்டு.

## 7. ஜனாதிபதி- பாராளுமன்றம் அதிகாரப் பங்கீட்டைக் கொண்ட அரசியல் யாப்பு

இவ்வரசியல் யாப்பில் ஜனாதிபதியும் பாராளுமன்றமும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. பிரதமரை நியமித்தல். தேசிய பேரவையைக் கலைத்தல், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மசோதாவை மக்கள் தீர்ப்புக்கு விடுதல், நெருக்கடி நிலைப் பிரகடனத்தை விடுத்தல் போன்றவற்றில் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

அதேவேளை போர்ப்பிரகடனம், அமைதிப் பிரகடனம் என்பவற்றை விடுத்தல் அமைச்சரவையைக் கட்டுப்படுத்தல், பதவிநீக்கல் போன்றவற்றில் பாராளுமன்றம் அதிகாரத்தினைப் பெற்றுள்ளது.

## 8. இருவகை நீதிமன்றங்கள்

சாதாரண நீதிமன்றங்கள், ஆட்சித்துறை நீதிமன்றங்கள், என இருவகையான நீதிமன்றங்கள் நடைமுறையில் செயற்படுகின்றன.

சாதாரண நீதிமன்றங்கள் ஆட்சித்துறையோடு சம்பந்தமில்லாத சாதாரண வழக்குகளை விசாரணை செய்கின்றது. தலைமை நீதிமன்றம் இதில் உயர்ந்த நீதிமன்றமாகும்.

ஆட்சித்துறையுடன் தொடர்புபட்ட விடயங்களை ஆட்சித்துறை நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன. அரசஅவை (Council of state) இவற்றில் பெரிய நீதிமன்றமாகும்.

## 9. பல கட்சி முறை

பிரான்சில் பல கட்சிமுறை அமுலிலுள்ளது. பொதுவுடமைக் கட்சி, சோசலிஷக்கட்சி, மக்கள் குடியரசு இயக்கம், புதிய குடியரசின் ஒன்றியம் போன்ற கட்சிகள் நடைமுறையிலுள்ளன.

## 10. அரசியலமைப்புக் குழு

அரசியலமைப்புக்குழு என்கின்ற ஒரு அமைப்பையும் யாப்பு உருவாக்கியுள்ளது. பாராளுமன்றம், அரசாங்கம் ஆகியவற்றின் சட்டங்கள், திட்டங்கள் அரசியலமைப்புடன் ஒத்துப்போகின்றதா? என்பதை இக்குழு ஆராய்கின்றது. ஜனாதிபதி தேர்தலை நடாத்துதல் மக்கள் தீர்ப்பு தேர்தலை நடாத்துதல் உட்பட வேறு பல பணிகளையும் இக்குழு மேற்கொள்ளுகின்றது.

## அரசியல் யாப்பினைத் திருத்தும் முறை

அரசியலமைப்பினைத் திருத்துவதற்கு விசேட முறை பின்பற்றப்படுகின்றது. திருத்தப்பிரேரணையைக் கொண்டுவர ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு.

திருத்தமசோதாவை ஒரே வடிவத்தில் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் நிறைவேற்றிய பின்பு அது மக்களின் சம்மதத்தினைப் பெறுவதற்காக மக்கள் தீர்ப்பிற்கு விடப்படுகின்றன. மக்களின் சம்மதம் கிடைத்த பின் அது அரசியல் யாப்பின் ஒரு பாகமாகச் சேர்க்கப்படுகின்றது. ஜனாதிபதி விரும்பினால் திருத்த மசோதா மக்கள் தீர்ப்பிற்கு செல்வதைத் தடுக்கலாம். ஆனால் அவ்வாறான மசோதா பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் 3/5 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படல் வேண்டும்.

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் போது அரசியல் யாப்பிற்கு எந்தத் திருத்தமும் கொண்டு வர முடியாது.



# பிரான்ஸ் அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்கள்

பிரான்ஸ் அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்களாகப் பின்வருவனவற்றையும் குறிப்பிடலாம்.

(1) ஜனாதிபதி

(2) அமைச்சரவை

(3) பாராளுமன்றம்

(4) நீதித்துறை

(5) அரசியற்கட்சிகள்

## 1. ஜனாதிபதி

பிரான்சின் ஜனாதிபதி 7 வருடங்களுக்குப் பதவி வகிக்கவென மக்களினால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்படுகின்றார். ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்வாளர் குழுவொன்றினால் மறைமுகமாகவே தேர்தெடுக்கப்பட்டார். ஆனால் 1962 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பு திருத்தத்தின்படி மக்களினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றார்.

வாக்கெடுப்பின் போது முதலாவது வாக்கெடுப்பில் வேட்பாளர் எவரும் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளை எடுக்காது விடின் 15 நாட்களுக்குள், முதலாவது, வாக்கெடுப்பின் போது முதல் இரு நிலையில் உள்ளவர்களின் மத்தியில் மட்டும் இரண்டாவது வாக்கெடுப்பு நடைபெறுகின்றது. இவ்விருவரில் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை 100 பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்மொழிய வேண்டும். அதேவேளை 2,000 பிராங்குகள் கட்டுப் பணமாகவும் செலுத்த வேண்டும். வேட்பாளர்கள் 5% வாக்குகளைத் பெறத் தவறினால் கட்டுப் பணத்தினை இழக்க நேரிடும்.

5%வாக்குகளைப் பெற்ற எல்லா வேட்பாளர்களுக்கும் தேர்தல் செலவிற்காக 2000 பிராங்குகளை அரசாங்கம் வழங்குகின்றது. மேலும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் சமஅளவு நேரம் வானொலி தொலைக்காட்சி போன்ற தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த அரசு அனுமதி வழங்குகின்றது.

ஜனாதிபதிக்கான தேர்தல் முன்னைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைய குறைந்தது 20 அல்லது கூடியது 50 நாட்களுக்கு முன்பு நடைபெற வேண்டும். எதிர்பாராத வகையில், ஜனாதிபதிப் பதவி பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே வெற்றிடமானால், புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படும்வரை செனற் சபை தலைவர் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்றுவார். ஆனால், செனற் சபைத்

தலைவர் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்றும்போது மக்கள் தீர்ப்புக்கு உத்தரவிடல், கீழ் சபையைக் கலைத்தல், அரசியல் யாப்பைத் திருத்தல் போன்ற அதிகாரங்களைச் செயற்படுத்த முடியாது. ஒருமுறை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர். மீண்டும், மீண்டும் போட்டியிட்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம்.

## ஜனாதிபதி பதவி நீக்கம்

அரச துரோக குற்றச்சாட்டு மூலம் ஜனாதிபதியைப் பதவி நீக்க முடியும். இதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு இரு சபைகளிலும் நிறைவேற்றப்படல் வேண்டும். பின்னர், இக்குற்றச்சாட்டினை உயர் நீதிமன்றம் விசாரணை செய்யும். விசாரணையின் முடிவில் உயர் நீதிமன்றமும் குற்றச்சாட்டை நிருபித்தால் ஜனாதிபதி பதவி நீக்கப்படுவார்.

## ஜனாதிபதியின் அதிகாரங்கள்

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) பாராளுமன்றத்தின் இருசபைகளுக்கும் ஜனாதிபதி செய்திகளை அனுப்புதல்.

(2) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை 15 நாட்களுக்குள் சட்டமாகப் பிரகடனப்படுத்தல்.

(3) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மசோதா பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கருதினால் பாராளுமன்றத்திற்கு அனுப்புதல்.

(4) அரசியல் யாப்பு, திருத்த மசோதாக்கள் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட பின்னர் மக்கள் தீர்ப்புக்கு விடல்.

(5) ஜனாதிபதி விரும்பினால் குறிப்பிட்ட அரசியல் யாப்பு திருத்த மசோதாவை மக்கள் தீர்ப்புக்கு விடாமல் பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் 3/5 பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றி சட்டமாக்கல்.

(6) பாராளுமன்றத்தின் இரு சபைத் தலைவர்களுடனும் பிரதமருடனும் கலந்தாலோசித்த பின்னர் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான தேசிய சபையைக் கலைத்தல்.

(7) அரசியல் யாப்பின் காவலனாக இருத்தல். மசோதா யாப்பிற்கு முரணானதா? என பரிசீலிக்க அரசியலமைப்புக் குழுவிற்கு அனுப்புதல்.



மேற்கூறிய அதிகாரங்கள் இருந்த போதும், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவை நிராகரிக்கும் அதிகாரம் இவருக்குக் கிடையாது. இதேபோன்று பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையை தேர்தல் நிகழ்ந்த ஓராண்டிற்குள் இவரால் கலைக்க முடியாது. மேலும் நெருக்கடி நிலைக் காலங்களில் கீழ் சபையைக் கலைக்கும் அதிகாரம் இவருக்கு இல்லை.

### நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) பிரதமரையும் அவரது ஆலோசனையின் பெயரில் ஏனைய அமைச்சர்களையும் நியமித்தல்.

(2) அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்தல்.

(3) உயரதிகாரிகளை நியமித்தல்.

(4) அமைச்சரவைக் கூட்டம் தேசிய பாதுகாப்புக் குழுக் கூட்டம் என்பவற்றுக்குத் தலைமை தாங்கல்.

(5) முப்படைகளுக்கும் தலைமைத் தளபதியாக விளங்கல்.

(6) வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தல்.

(7) பிரான்சுக்கான வெளிநாட்டுத் தூதுவர்களை ஏற்று அங்கீகரித்தல்.

(8) வெளிநாட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல், வெளிநாட்டுக் கொள்கைகளை முடிவு செய்தல்.

(9) அமைச்சரவை கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதோடு தீர்மானங்களுக்கு கையொப்பமிடுதல்.

ஜனாதிபதி பிரதமரைத் தன்னிச்சையாக நியமிக்கலாம். ஆனால் அமைச்சரவை உறுப்பினர்களை நியமிக்கும் போதும், பதவி நீக்கம் செய்யும்போதும் பிரதமரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலும் நிர்வாகத்துறை தொடர்பான ஆணைகளைப் பிறப்பிக்கும்போது, அவ்வாணைகளில் அத்துறைக்குரிய அமைச்சரின் கையொப்பம் இருத்தல் வேண்டும். இதன்படி, இதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட அமைச்சரையே சேரும்.

### ஜனாதிபதியின் தனி உரிமைகள்

(1) பிரதமரை நியமிப்பதில் ஜனாதிபதி தனது விருப்ப உரிமையை பயன்படுத்துகிறார். ஏனெனில், பலகட்சி முறை உள்ள பிரான்ஸில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைப்பது அரிதானதாகும். இதனால் பிரதமர் பதவிக்கு ஒருவரை தேர்ந்தெடுத்து நியமிப்பது தொடர்பில் ஏனைய நாட்டு ஜனாதிபதிகளை விட. பிரான்ஸின் ஜனாதிபதி அதிக அதிகாரத்தை பெற்றுள்ளார்.

(2) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு மசோதாவையும் மக்கள் தீர்ப்புக்கு விடும் உரிமை ஜனாதிபதிக்கு உண்டு.

(3) நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்திவிட்டால் அதனை அமுல்படுத்துவதில் முழுமையான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இக்காலத்தில் அவர் ஓர் சர்வாதிகாரியாகத் தொழிற்படுவதற்கான அனைத்து உரிமையையும் பெற்றிருப்பார்.

### நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) நீதித்துறை உயர்மட்டக்குழு உறுப்பினர்களை நியமித்தல்.

(2) நீதித்துறை உயர்மட்டக்குழுவின் தலைவராக விளங்கல்.

(3) குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கல், தண்டனையைக் குறைத்தல்.

குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கல், தண்டனை வழங்கல், தண்டனையைக் குறைத்தல், தண்டனையை நீக்கல் போன்ற விடயங்களில் நீதித்துறை உயர்மட்டக் குழுவின் ஆலோசனைப்படியே ஜனாதிபதி செயற்படல் வேண்டும்.

பிரான்ஸ் நீதித்துறையைப் பொறுத்தவரை, நீதிமன்ற உயர்மட்டக் குழு முக்கியமான இடத்தை வகிக்கின்றது. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 9 உறுப்பினர்கள் குழுவின் உள்ளனர். ஜனாதிபதியே குழுவின் தலைவராக விளங்குகின்றார். இக்குழு நீதிபதிகளை நியமிப்பதற்கான தகுதியுடையோர் பட்டியலொன்றையும் தயாரித்து நீதியமைச்சருக்கு அனுப்புகின்றது. சாதாரண நீதிபதிகள் மீது கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் இக்குழு கொண்டுள்ளது. குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல், தண்டனையைக் குறைத்தல், நீக்கல் போன்ற விடயங்களிலும் இக்குழு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குகின்றது.

### நெருக்கடி நிலை அதிகாரங்கள்

நாட்டின் பாதுகாப்பிற்கும், ஒழுங்கமைதிக்கும் பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி நெருக்கடி நிலைப் பிரகடனத்தை மேற்கொள்ளலாம். இக்காலங்களில் ஜனாதிபதி முழுமையான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வார். அரசியல் யாப்பின் 16 வது பிரிவு இத்தகைய அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது.

ஜனாதிபதி நெருக்கடி நிலைப் பிரகடனத்தை மேற்கொள்வது பற்றி முடிவெடுப்பதற்கு முன்னர் பிரதமர் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் தலைவர்கள், அரசியலமைப்புக் குழு உறுப்பினர்கள் என்போரைக் கலந்தாலோசித்தல் வேண்டும். நெருக்கடி நிலைக்காலங்களில் முழுமையான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தாலும் கீழ்ச்சபையான தேசியப் பேரவையைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது.



### மதிப்பீடு

(1) பிரதமர் முக்கியத்துவமற்றவராக இருக்கின்ற நிலை காணப்படுகின்றது. பெருமளவு அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டமையினாலேயே இந்நிலை தோன்றுகின்றது.

(2) நெருக்கடி நிலைக் காலங்களில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அளவு கடந்த அதிகாரங்களினால் அவர் ஒரு சர்வாதிகாரியாகத் தொழில்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

(3) பிரதமரை நியமிப்பதில் ஜனாதிபதிக்கு இருக்கின்ற தன்னிச்சையான அதிகாரமானது பாராளுமன்ற மரபை மீறக்கூடிய அபாயத்தையும் உருவாக்குகிறது.

(4) அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவை பதவி விலகும் ஆனால் ஜனாதிபதி பதவி விலகமாட்டார்.

(5) ஜனாதிபதியும் பிரதமரும் முரண்படும் போது அரசின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

## 2. அமைச்சரவை

ஜனாதிபதி, பிரதமர் அமைச்சரவை உறுப்பினர்கள் என்போரைக் கொண்ட குழுவே அமைச்சரவை என அழைக்கப்படுகின்றது. ஜனாதிபதி அமைச்சரவையின் தலைவராக விளங்குவார். பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் ஜனாதிபதியே நியமிப்பார். அமைச்சர்களை நியமிக்கும் போது பிரதமரின் ஆலோசனையின் பெயரில் செயற்படுவார்.

பிரதமரை தன்னிச்சையாக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தாலும், அவரைப் பதவி நீக்கும் அதிகாரம் கிடையாது. பிரதமர்தானாக முன்வந்து பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தால் ஜனாதிபதி ஏற்றுக்கொள்வார்.

அமைச்சரவையானது, பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான தேசிய பேரவைக்குக் கூட்டாகப் பொறுப்புடையது. தேசிய பேரவையில் அமைச்சரவைக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் அமைச்சரவையைப் பதவி நீக்கும் அதிகாரம் தேசிய பேரவைக்கு உண்டு. அமைச்சரவையின் மசோதாவொன்று தேசிய பேரவையில் தோற்கடிக்கப்பட்டாலும் அமைச்சரவை பதவி விலகும்.

## அமைச்சரவையின் பணிகளும் அதிகாரங்களும்

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) பாராளுமன்றத்திற்குத் தேவையான மசோதாக்களை உருவாக்குதல்.

(2) சட்டத்திற்குட்பட்டு தேவையான காலங்களில் அவசர சட்டங்களை இயற்றுதல். (அரசியலமைப்புக் குழுவின் ஆலோசனையைப் பெறுதல் வேண்டும்).

(3) இராணுவச் சட்டத்தைப் பிரகடனஞ் செய்தல்.
இச்சட்டப் பிரகடனம் 12 நாட்களுக்கே செல்லுபடியானதாகும். அதற்கு மேல்நடைமுறையில் இருக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் ஒப்புதலை பெறுதல் அவசியம் ஆகும்.

### நிர்வாகத்துறை தொடர்பான அதகாரங்கள்

(1) வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.

(2) நாட்டின் ஆட்சிக் கொள்கையை முடிவு செய்தல்.

(3) படையினர் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தை மேற்கொள்ளல்.

(4) அமைச்சு தொடர்பான ஆணைகளில் அந்தந்த துறைக்குப் பொறுப்பான அமைச்சர்களும் கையொப்பமிட்டு அதனைப் பொறுப்பெடுத்தல்.

### குறிப்பு :

அமைச்சரவையின் உறுப்பினர்கள் எவரும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது. அவ்வாறு இருப்பின் அமைச்சரவைக்கு வந்து 1 மாதத்திற்குள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்தல் வேண்டும்.

### மதிப்பீடு

(1) பாராளுமன்ற அரசாங்கமுறை நடைமுறையிலுள்ள நாடுகளில் அரசாங்கச் செயற்பாடுகளில் அமைச்சரவை மேலாதிக்கம் செலுத்தக் கூடிய நிலை இருக்கும். ஆனால், பிரான்ஸ் அரசியல் யாப்பு பாராளுமன்ற அரசாங்க முறையையும், ஜனாதிபதி அரசாங்க முறையையும் இணைத்த ஒன்றாக உள்ளதால் அமைச்சரவையின் மேலாதிக்க நிலை அரசாங்கச் செயற்பாடுகளில் சற்றுக் குறைவாகவே காணப்படுகின்றது. அமைச்சரவையின் உறுப்பினர்கள் எவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லர். இதனால், பாராளுமன்ற முறை அரசாங்கத்தைப் போல, பாராளுமன்றத்தை அமைச்சரவை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாத நிலை உள்ளது.



(2) பிரதமருக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற அரசாங்க முறையை விட, குறைந்தளவிலான அதிகாரங்களே இங்கு வழங்கப்பட்டுள்ளன.

## பிரான்ஸ் அரசியல் யாப்பில் பிரதமர்

பிரான்சின் பிரதமர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார். பிரதமரை நியமிக்கும்போது சுயவிருப்புடன் செயற்படக்கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான தேசியப் பேரவையில் அமைச்சரவை மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவை பதவி விலகும் ; பிரதமரும் பதவி விலகுவார். இதைவிட, ஜனாதிபதிக்கு ஒரு விலகல் கடிதத்தைச் சமர்ப்பிப்பதன் மூலமும் பிதமர் பதவி விலகலாம்.

### அதிகாரங்களும் பணிகளும்

பிரான்ஸ் பாராளுமன்றத்தில் பெரும்பாலான மசோதாக்கள் அமைச்சரவை உறுப்பினர்களினால் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அத்தகைய மசோதாக்களை உருவாக்குவதில் பிரதமருக்கும் முக்கிய பங்குண்டு. மேலும், பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்குமிடையில் சட்டப் பிணக்குகள் ஏற்படும்பொழுது இரு சபைகளினதும் உறுப்பினர்கள் சிலரைக் கொண்ட கூட்டுக் குழுவொன்றைப் பிரதமர் நியமிக்கின்றார். இக்கூட்டுக்குழு இரு சபைகளும் ஒப்புக் கொள்ளும் வகையில் மசோதாக்களை மாற்றி அமைக்கின்றது.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் சார்பாக கொள்கை முடிவுகள் பற்றிய அறிவிப்புகளை பிரதமர் மேற்கொள்கின்றார். அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை நடைமுறைப்படுத்தும் நிர்வாக அதிகாரமும் பிரதமரிடமே உள்ளது. இதைவிட, அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல், மாற்றுதல் போன்ற விடயங்களிலும் பிரதமரே ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குகின்றார். அமைச்சர்களும் பிரதமரின் வழிகாட்டலின் அடிப்படையிலேயே செயற்படுகின்றனர். சிலவகையான சிவில் மற்றும் இராணுவப் பதவிகளுக்கு நியமனம் செய்யும் அதிகாரமும் பிரதமருக்குண்டு.

மேலும் ஜனாதிபதியின் விருப்பத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் பிரதமர் தலைமை தாங்குவார். ஜனாதிபதி இல்லாதபோதும், அவரால் இயலாத போதும் பிரதமர் பாதுகாப்புச்சபைக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவார். இதைவிட, ஜனாதிபதி மேற்கொள்ளும் பல நிர்வாகத்துறை செயற்பாடுகளில் ஆணைகளில் பிரதமரின் கையொப்பமும் இருத்தல் அவசியம். பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்குமிடையில் சட்டப் பிணக்குகள் ஏற்படும் பொழுது இரு சபைகளினதும் உறுப்பினர்கள் சிலரைக் கொண்ட கூட்டுக்குழு-

வொன்றைப் பிரதமர் நியமிக்கின்றார். இக்கூட்டுக்குழு இரு சபைகளும் ஒப்புக் கொள்ளும் வகையில் மசோதாக்களை மாற்றி அமைக்கின்றது.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் சார்பாக கொள்கை முடிவுகள் பற்றிய அறிவிப்புகளை பிரதமர் மேற்கொள்கின்றார். அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை நடைமுறைப்படுத்தும் நிர்வாக அதிகாரமும் பிரதமரிடமே உள்ளது. இதைவிட, அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல், மாற்றுதல் போன்ற விடயங்களிலும் பிரதமரே ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குகின்றார். அமைச்சர்களும் பிரதமரின் வழிகாட்டலின் அடிப்படையிலேயே செயற்படுகின்றனர். சிலவகையான சிவில் மற்றும் ராணுவப் பதவிகளுக்கு நியமனம் செய்யும் அதிகாரமும் பிரதமருக்குண்டு.

மேலும் ஜனாதிபதியின் விருப்பத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் பிரதமர் தலைமை தாங்குவார். ஜனாதிபதி இல்லாதபோதும், அவரால் இயலாத போதும் பிரதமர் பாதுகாப்புச்சபைக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவார். இதைவிட ஜனாதிபதி மேற்கொள்ளும் பல நிர்வாகத்துறை செயற்பாடுகளில் ஆணைகளில் பிரதமரின் கையொப்பமும் இருத்தல் அவசியம். பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையான தேசிய பேரவையைக் கலைக்கும் போதும் நெருக்கடி நிலைப் பிரகடனம் போன்ற முக்கியமான விடயங்களிலும் ஜனாதிபதி பிரதமரைக் கலந்தாலோசித்துச் செயற்படுவார்.

## மதிப்பீடு

(1) நிர்வாகத்துறையின் அதிகாரங்களில் ஜனாதிபதி அதிகளவில் பங்கு கொள்வதால் பிரதமர் இங்கு இரண்டாவது நிலையிலேயே காணப்படுகின்றார்.

(2) அமைச்சரவைக்குத் தலைமை தாங்கும் விடயத்தைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி விரும்பினால் அல்லது ஜனாதிபதிக்கு இயலாத நிலை ஏற்பட்டால் மட்டுமே பிரதமர் தலைமை வகிக்க முடியும். இதுவும் பிரதமரின் நிலைமையைச் சற்று கீழிறக்குவதாக உள்ளது.

(3) பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையைக் கலைக்கும் விடயத்திலும் ஆலோசனை வழங்கும் அதிகாரம் மட்டுமே பிரதமருக்கு உண்டு.

# 3. பாராளுமன்றம்

பிரான்சின் பாராளுமன்றம் தேசிய சபை, செனற்சபை என்கின்ற இரு சபைகளைக் கொண்டதாக விளங்குகின்றது. இயற்றப்படும் சட்டங்கள் அனைத்தும் இருசபைகளிலும் நிறைவேற்றப்பட்ட பின்னரே பாராளுமன்றத்தால் நிறைவேற்றப பட்டதாகக் கொள்ளப்படுகின்றது. நிதி மசோதாக்களைத் தவிர ஏனைய மசோதாக்களை இரு சபைகளிலும் அறிமுகப்படுத்தலாம். நிதிமசோதாக்களை தேசிய சபை மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். அமைச்சரவை மீதான


நம்பிக்கையில்லாப் பிரேரணை தேசிய சபையிலே நிறைவேற்றப்பட வேண்டும்.

சட்டம் தொடர்பாக இரு சபைகளிடையே முரண்பாடு ஏற்படின் சம எண்ணிக்கையில் இரு சபைகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை கொண்ட இணைப்புக் குழு உருவாக்கப்படுகின்றது. இணைப்புக் குழுவினாலும் பிணக்கை தீர்க்க முடியாவிடின் தேசிய சபையிடமே இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் விடப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் இருமுறை பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் நடைபெறுகின்றன. முதல் கூட்டத் தொடர் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் இரண்டாம் நாள் ஆரம்பித்து 80 நாட்கள் வரை நடைபெறும் இரண்டாவது கூட்டத் தொடர் ஒவ்வொரு ஆண்டும் ஏப்பிரல் மாதம் இரண்டாம் நாள் ஆரம்பித்து 90 நாட்கள் வரை நடைபெறும்.

பாராளுமன்ற முதற் கூட்டத் தொடர் பெரும்பாலும் பணம் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிக்கும். இரண்டாவது கூட்டத் தொடர் ஏனைய சட்டங்கள் இயற்றும் பணிகளை மேற்கொள்ளும்.

ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என ஜனாதிபதியோ, அல்லது பிரதமரோ.அல்லது தேசியப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்களோ வேண்டினால் பாராளுமன்றத்தின் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டலாம். சிறப்புக் கூட்டம் தேசியப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தின் பேரில் கூட்டப்பட்டால் அப்பொருளைப் பற்றிய விவாதம் முடிந்ததும் சிறப்புக் கூட்டத்தினை முடித்தல் வேண்டும். அச் சிறப்பு கூட்டத்தினை 12 நாட்களுக்கு மேல் நடாத்தக் கூடாது.

இவற்றினை விட பொதுத்தேர்தல் முடிந்த உடனும், நெருக்கடி நேரங்களிலும் பாராளுமன்றம் கூட்டப்படலாம்.

## பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள்

(1) பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் கடமையைச் செய்யும் போது வெளியிட்ட கருத்துக்காகக் குற்றம் சாட்டவோ, கைது செய்யவோ தடுப்புக் காவலில் வைக்கவோ விசாரிக்கவோ முடியாது.

(2) பாராளுமன்ற கூட்டத் தொடர் நடைபெறும் போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுத்தல் கூடாது.

(3) பாராளுமன்ற உறுப்பினர்கள் பொருத்தமில்லாத தொழில் புரிவதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளனர்.

(4) பாராளுமன்ற உறுப்பினர் மீது உரிமைக் கட்டளைகளை விதிக்க முடியாது.

(5) பின்வரும் காரணங்கள் தொடர்பாக பதில் உறுப்பினர் வாக்குரிமையை பயன்படுத்தலாம். ஆனால் உறுப்பினர் எழுத்து மூலம் அதனைத் தெரியப்படுத்த வேண்டும்.

1) சுகவீனமாய் இருத்தல்,

2) விபத்து அல்லது குடும்ப சூழ்நிலை

3) ஒரு அரசாங்க செயல் முறைத்திட்டத்தினை மேற்கொள்ளுதல் அல்லது இராணுவம் சம்பந்தமான வேலையில் இருத்தல்.

4) வெளிநாட்டில் இருத்தல்

5) சர்வதேசச் சபைகளில் பிரான்ஸின் பாராளுமன்ற பிரதிநிதியாக செல்லுதல்.

(6) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அடிப்படை ஊதியம் (Basic Salary) வருகை நல்ஊதியம் (Attendannce Bonus) என இருவகையான ஊதியங்கள் உண்டு. உறுப்பினர்களின் வருகை திருப்திகரமாக இருந்தால் தான் வருகை நல்லூதியம் முழுமையாக வழங்கப் படுகின்றது

## தேசியப் பேரவை / (National Assembly)

இச்சபை 490 உறுப்பினர்களைக் கொண்டது. இதன் உறுப்பினர்கள் மக்களினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இச்சபையின் பதவிக்காலம் 5 வருடங்களாகும். இடைக்காலத்தில் பிரதமரின் ஆலோசனையுடன் ஜனாதிபதி இச்சபையைக் கலைக்கலாம்.

21 வயதையடைந்த ஒவ்வொருவரும் தேசியப் பேரவைக்கான தேர்தலில் வாக்களிக்கும் உரிமை உண்டு. 23 வயதடைந்தவர்கள் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடலாம். தேசியப் பேரவைக்கான தேர்தல் இரு வாக்குச் சீட்டு பெரும்பான்மை முறையின் (Two Ballot Majority) அடிப்படையில் நடாத்தப்படுகின்றது. ஒவ்வொரு வேட்பாளரும் ஒரு பதில் ஆளையும் தெரிவு செய்கின்றனர். தேர்தல் முடிந்தவுடன் வெற்றி பெற்ற வேட்பாளர் தேசியப் பேரவை உறுப்பினராகவும் அவரது பதில் ஆள்விருப்ப உறுப்பினராகவும் பதவி ஏற்கின்றனர். தேசியப் பேரவை உறுப்பினரின் பதவி, மரணம் போன்ற காரணங்களினால் வெற்றிடமாகும் போது விருப்ப உறுப்பினர் தேசியப் பேரவையின் உறுப்பினராகின்றார்.

தேசியப் பேரவை தனது கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கவென தலைவர் ஒருவரைத் தெரிவு செய்கின்றது. இவர் ஒரு சட்டசபை சபாநாயகர் மேற்கொள்ளும் வழமையான பணிகளை மேற்கொள்கின்றார். தேசியப் பேரவை ஆண்டிற்கு இரு தடவை கூட்டப்படும். இக் கூட்டத்தொடர்கள் தவிர, பெரும்பான்மை உறுப்பினர்களின் வேண்டுகோளின்படி சிறப்புக் கூட்டங்களும் கூட்டப்படலாம்.



## அதிகாரங்கள்

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

எத்தகைய மசோதாக்களையும் அறிமுகப்படுத்தும் அதிகாரம் இச்சபைக்கு உண்டு. நிதி மசோதாக்களை இங்கு மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். போர்ப் பிரகடனங்கள், உடன்படிக்கைகள் போன்றவற்றிற்கான தீர்மானங்கள் இங்கும் நிறைவேற்றப்படல் வேண்டும். அரசியல் யாப்பு திருத்த மசோதாவும் இங்கு நிறைவேற்றப்படல் வேண்டும். சட்டவாக்கம் தொடர்பாக இரு சபைகளுக்கு-மிடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது இருசபைகளின் உறுப்பினர்களைக் கொண்ட இணைக்குழுவினால் அம்முரண்பாடு தீர்த்து வைக்கப்படுகின்றது. இணைக்குழுவினாலும் தீர்க்கப்பட முடியாத முரண்பாடுகள் சம்பந்தமான விடயங்களில் தேசியப் பேரவையின் விருப்பப்படியே தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

### நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

நிர்வாகத்துறையான அமைச்சரவை தேசியப் பேரவைக்கு கூட்டாகப் பொறுப்புடையதாகும். அமைச்சரவைக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தேசியப் பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவை பதவி விலகும். அமைச்சர்களை அவர்களது கருமங்கள் தொடர்பாகக் கேள்வி கேட்கும் உரிமை தேசியப் பேரவை உறுப்பினர்களுக்கு உண்டு. அவ்வாறு கேள்வி கேட்கும்போது அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமையும் அமைச்சர்களுக்கு உண்டு. அமைச்சர்கள் எவரும் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களல்ல. இதனால் பாராளுமன்றத்தில் வாக்களிக்கும் உரிமை அமைச்சர்களுக்குக் கிடையாது. ஜனாதிபதியைப் பதவி நீக்கும் தீர்மானம் இச்சபையிலும் நிறைவேற்றப்படல் வேண்டும்.

வரவு, செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரைத் தேசியப் பேரவையையும் உள்ளடக்கிய பாராளுமன்றம் அதனை நிறைவேற்றத் தவறினால் ஓர் அவசர ஆணையின் மூலமாக அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் அமைச்சர்களுக்கு உண்டு.

வரவு, செலவுத் திட்ட விடயங்களைப் பொறுத்தவரை மேற்கூறிய அடிப்படையில் பார்க்கும் போது குறைந்தளவிலான அதிகாரத்தையே தேசிய பேரவை கொண்டிருக்கிறது எனலாம்.

### நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் இச்சபைக்கும் உண்டு. உயர் நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கும் தீர்மானம் இச்சபையிலும் நிறைவேற்றப்படல் வேண்டும்.

## செனற்சபை

இது மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் 293 உறுப்பினர்களைக் கொண்டது. வெளிநாடுகளில் வசிக்கும் பிரான்சிய பிரஜைகளுக்கும் செனற்சபையில் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது. செனற்சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் 9 வருடங்களாகும். ஆனால், ஒவ்வொரு 3 வருடங்களுக்கு ஒரு முறை 1/3 பங்கினர் பதவி விலகி புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதனால் இச்சபை ஒரு நிலையான சபையாகும்.

## அதிகாரங்கள்

### சட்டத்துறை தொடர்பானவை

நிதி மசோதாக்கள் தவிர்ந்த ஏனைய மசோதாக்களை இச்சபையிலும் அறிமுகப்படுத்த முடியும். சட்டவாக்கம் தொடர்பாக, இரு சபைகளுக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது இரு சபைகளினதும் உறுப்பினர்களைக் கொண்ட இணைக்குழுவினால் முரண்பாடுகள் தீர்த்து வைக்கப்படுகின்றன. இணைக்குழுவால் முடியாதபோது தேசியப் பேரவையின் விருப்பமே நிறைவேற்றப்படுகின்றது.

அவசர கால நிலையை ஜனாதிபதி பிரகடனப்படுத்த முன்னர் செனற்சபையுடன் கலந்தாலோசித்தல் வேண்டும். மக்கள் தீர்ப்புக்கு ஒரு விடயத்தை சமர்ப்பிக்கும் போதும் செனற்சபையின் சம்மதம் பெறப்படல் வேண்டும்.

சட்டவாக்கம் தொடர்பாக செனற்சபை தேசியப் பேரவையை விட சற்றுக் குறைவான அதிகாரத்தையே கொண்டிருக்கிறது.

### நிர்வாகத்துறை தொடர்பானவை

அமைச்சரவை செனற்சபைக்குப் பொறுப்பானதல்ல . இதனால் அமைச்சரவையைப் பதவி நீக்கும் அதிகாரம் செனற்சபைக்குக் கிடையாது. ஆனால் அமைச்சர்களை அவர்களது கருமங்கள் தொடர்பாக கேள்வி கேட்டும் உரிமை செனற்சபை உறுப்பினர்களுக்கு உண்டு. அவ்வாறு கேள்வி கேட்கும்போது அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமையும் அமைச்சர்களுக்கு உண்டு. வரவு, செலவுத் திட்டத்தை ஓரளவு கட்டுப்படுத்தும் அதிகாரம் செனற்சபைக்கு உண்டு.

ஜனாதிபதியைப் பதவி நீக்கும் தீர்மானம் இச்சபையிலும் நிறைவேற்றப்படல் வேண்டும். ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் அதிகாரம் செனற்சபைத் தலைவருக்கு உண்டு.

### நீதித்துறை தொடர்பானவை

உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரமும் இச்சபைக்கு உண்டு. அதேவேளை பதவிநீக்கும் அதிகாரமும் உண்டு.



## மதிப்பீடு

(1) செனற்சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் மக்களுக்கு நேரடியாக பங்கு வழங்கப்படவில்லை.

(2) நிதி மசோதாக்களைப் பொறுத்தவரை பாராளுமன்றத்தின் அதிகாரம் குறைவானதாகும். பாராளுமன்றம் நிராகரித்த அல்லது ஏற்றுக் கொள்ளாத வரவு செலவுத் திட்டத்தைக் கூட அவசர ஆணைகள் மூலம் நடைமுறைப்படுத்தும் அதிகாரம் அமைச்சரவைக்கு உண்டு. எனவே, பிரான்ஸ் பாராளுமன்றத்தை ஒரு முழு இறைமை படைத்த பாராளுமன்ற மெனக் கூற முடியாது.

# 4. நீதித்துறை

பிரான்சின் சட்டம் உரோமானிய சட்டத்தின் அடிப்படையில் எழுந்த ஒன்றாகும். பிரான்ஸ் நிலமானிய நாடாக இருந்த போது வழக்காற்றுச் சட்டம் முக்கியமான இடத்தினை வகித்திருந்தது. இவ் வழக்காற்றுச் சட்டங்களே பிரதேச ரீதியாக நீண்டகாலம் நிலை பெற்றிருந்தன. 1789இன் பிரான்சியப் புரட்சி வரை பிரான்ஸ் நாடு முழுமைக்குமென ஒரு பொதுச் சட்ட அமைப்பு இருக்கவில்லை. வழக்காற்றுச் சட்டங்களோடு மன்னரால் அறிவிக்கப்பட்ட ஆணைகள், கட்டளைகள், மேலாணைகள் போன்றன சட்டச் செயற்பாட்டில் முன்னிலை வகித்தன.

பிரான்சியப் புரட்சியின் தலைவர்கள் பழைய சட்டங்களையும் புதிய சட்டங்களையும் இணைத்து சட்டத் தொகுப்பு ஒன்றினை உருவாக்கினர். தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடவடிமுறை சட்டக் கோவை என்பன உருவாக்கப்பட்டன.

நெப்போலியன் காலத்தில் பிரான்ஸ் சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. 1904இல் குடியியல் சட்டக் கோவை முன்னர் இருந்தவற்றை விட சில மாற்றங்களுடன் இயற்றப்பட்டது.

1959 இல் புதுவகைக் குற்றவியல் சட்டத் தொகுப்பு வெளியிடப்பட்டது. வர்த்தகச் சட்டத்திலும் பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

இறுதியில் நெப்போலியன் காலத்தில் உருவாக்கப்பட்ட சட்டத் தொகுப்பினை மறு ஆய்விற்கு உட்படுத்தி புதிய விடயங்களையும் இணைத்து புதிய சட்டத் தொகுப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அதுவே இன்று நடைமுறையில் இருக்கின்றது.

பிரான்ஸ் நீதித்துறை பல சிறப்புத் தன்மைகளைக் கொண்டதாக காணப்படுகின்றது. பிரான்சின் சட்டம் ஒரு தொகுக்கப்பட்ட சட்டமாகும். இத் தொகுக்கப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலும், பாராளுமன்றம் அவ்வப்போது இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையிலுமே நீதி விசாரணைகள்

நடைபெறுகின்றன. சட்டங்கள் அனைத்தும் எழுதப்பட்டவையாக இருப்பதோடு நாடு முழுவதிலும் ஒரு சீரான சட்டமுறை பின்பற்றப் படுகின்றது. சட்டங்கள் தெளிவான துல்லியமான மொழிநடையில் அமைந்திருப்பதோடு எளிதானவையாகவும் உள்ளன. அதேவேளை சாதாரண சட்டம், ஆட்சித்துறைச் சட்டம் என இருவகையான சட்டங்களும் நடைமுறையில் உள்ளன.

## நீதித்துறையின் அமைப்பு

பிரான்சில் இருவகையான நீதிமன்றங்கள் நடைமுறையிலுள்ளன. சாதாரண நீதிமன்றங்கள், ஆட்சித்துறை நீதிமன்றங்கள் என்பனவே அவ்விருவகைகளுமாகும்.

## சாதாரண நீதிமன்றங்கள்

சாதாரண நீதிமன்றங்கள் ஆட்சித்துறையுடன் சம்பந்தமில்லாத குற்றவியல், குடியியல் வழக்குகளை விசாரணை செய்கின்றன. ஒன்றன்மேல் ஒன்றாக படிப்படியாக உயர்ந்து செல்லும் படிமுறையிலான அமைப்பினைக் கொண்டுள்ளன. குடியியல், நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் என இருவகைகளான நீதிமன்றங்கள் சாதாரண நீதிமன்றங்களாகச் செயற்படுகின்றன.

## குடியியல் நீதிமன்றங்கள்

மக்களுக்கிடையிலான தகராறுகளை தீர்க்கும் நீதிமன்றங்களே குடியியல் நீதிமன்றங்கள் என அழைக்கப்படுகின்றன. பின்வருவன குடியியல் நீதிமன்றங்களாகக் கொள்ளப்படுகின்றன.

(1) முதல் நிலை நீதிமன்றங்கள்
(2) முதல்நிலை உயர்நீதிமன்றங்கள்
(3) சிறப்பு நீதிமன்றங்கள்
(4) மேன்முறையீட்டு நீதிமன்றங்கள்
(5) தலைமை நீதிமன்றம்

### 1. முதல் நிலை நீதிமன்றங்கள் (Trbunal de Grande Instance)

குடியியல் நீதிமன்றங்களில் மிகச் சிறிய நீதிமன்றம் இதுவேயாகும். இவை முன்னைய அமைதி காண் நீதிமன்றங்களுக்கு பதிலாக 1958ம் ஆண்டு சீர்திருத்தங்களின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வகை நீதிமன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்கு என்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. நாட்டில் மொத்தம்467 நீதிமன்றங்கள் இவ்வாறு செயற்படுகின்றன. ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒரு நீதிபதியே வழக்குகளை விசாரிப்பார். 300 பிராங்குகள் தொடர்புடைய வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன.



### 2. முதல் நிலை உயர்நீதிமன்றங்கள்

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு நீதிமன்றங்கள் மூலம் மொத்தம் 178 முதல் நிலை உயர் நீதிமன்றங்கள் நாடு முழுவதற்கும் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள் கடமையாற்றுவர். யூரிமுறை இங்கு கிடையாது. பெரிய குடியியல் வழக்குகளில் முதல் நிலை விசாரணை வழக்குகளை விசாரிப்பதோடு சிறப்பு நீதிமன்றங்களிலிருந்து வரும் மேன்முறையீடுகளையும் விசாரணை செய்கின்றன.

### 3. சிறப்பு நீதிமன்றங்கள்

#### அ. வர்த்தக நீதிமன்றங்கள் (Tribunaun de commerce)

வர்த்தகம் தொடர்பான வழக்குகளை இவை விசாரணை செய்கின்றன. உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் இவ் நீதிமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

#### ஆ. உடன்பாட்டு நீதிமன்றங்கள் (Conseil de Prvd Commrece)

முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையேயான தகராறுகளை விசாரணை செய்வதற்காக இவ் நீதிமன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. முதலாளிகளின் பிரதிநிதிகளும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் இவ் நீதிமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

முதல்நிலை நீதிமன்றங்களிலும் முதல்நிலை உயர்நீதிமன்றங்களிலும் நீதித்துறை சார்ந்தவர்கள் நீதிபதிகளாக உள்ளனர். ஆனால் சிறப்பு நீதிமன்றங்களில் அத்துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

### 4. மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் (Court of Appeal)

நாடு முழுவதிலும் மொத்தம் 31 மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் இயங்குகின்றன. இங்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள் கடமையாற்றுகின்றனர். முதல்நிலை மற்றும் சிறப்பு நீதிமன்றங்களில் இருந்து வரும் மேன்முறையீட்டு வழக்குகளையும் பெரும் மதிப்புள்ள குடியியல் வழக்குகளையும் இந்நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றது.பெரும்பாலும் சட்ட உட்பொருள் பற்றிய விசாரணைகளையே மேற்கொள்ளுகின்றது.குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்வதில்லை.

**5. தலைமை நீதிமன்றம்** (Court of Assation)

பிரான்ஸ் நாட்டு நீதிமன்றங்களில் இறுதித் தீர்ப்பினை வழங்கும் நீதிமன்றமாக தலைமை நீதிமன்றம் விளங்குகின்றது. இது குடியியல், குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்கிறது. மொத்தம் 83 நீதிபதிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர். முதல் விசாரணை அதிகாரம் இந்நீதிமன்றங்களுக்குக் கிடையாது. மேன்முறையீட்டு வழக்குகளை மட்டும் விசாரணை செய்கிறது.

இவ் நீதிமன்றம் குடியியல் பிரிவு-2 குற்றவியல் பிரிவு-1, சமூகவியல் பிரிவு-1, வர்த்தகப் பிரிவு-1 என ஐந்து பிரிவுகளாக பிரிந்து செயற்படுகின்றது. ஒரு வழக்கு இரண்டாவது மேன்முறையீடாக தலைமை நீதிமன்றத்தின் முன்வந்தால் ஐந்து பிரிவு நீதிபதிகளும் ஒருங்கிணைந்து விசாரணைகளை மேற்கொள்ளுகின்றனர்.

இவ் நீதிமன்றத்திற்கு முதல் விசாரணை அதிகாரம் கிடையாது மேல் விசாரணை அதிகாரம் மட்டுமே உள்ளது. மேன்முறையீட்டிற்கு வரும் வழக்குகளில் சட்டத்தின் பொருள் சரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதா? என்பதை முடிவுசெய்வது இதன் பொறுப்பாகும். இங்கு கொண்டுவரப்படும் வழக்குகள் தொடர்பாக இவ் நீதிமன்றம் கீழ்நீதிமன்றத்தின் தீர்ப்பினை உறுதி செய்யலாம் அல்லது மீண்டும் விசாரிக்கப்பட வேண்டுமென கீழ்நீதிமன்றத்திற்கு ஆணையிடலாம். கீழ்நீதிமன்றங்கள் மறுவிசாரணையின் போது சட்டத்திற்கு தலைமை நீதிமன்றம் கூறிய பொருளை ஏற்று அதனடிப்டையில் விசாரணையினை மேற்கொள்ளுவது அவசியமாகும். பொதுவாக ஐயப்பாடுள்ள சட்டங்களுக்கே இவ் நீதிமன்றம் விளக்கம் கூறுகின்றது.

## குற்றவியல் நீதிமன்றங்கள்

பின்வருவன பிரான்சின் குற்றவியல் நீதிமன்றங்களாகக் கொள்ளப்படுகின்றன:

(1) காவல்துறை நீதிமன்றம்

(2) திருத்த நீதிமன்றம்

(3) அசைஸ் நீதிமன்றம்

(4) உயர்நீதிமன்றம்

**1. காவல்துறை நீதிமன்றம்** (Tribunavx de Police)

குற்றவியல் நீதிமன்றங்களில் மிகவும் சிறிய நீதிமன்றம் இதுவாகும். அமைதிகாண் நீதிமன்ற நீதிபதிகளே இங்கும் நீதிபதிகளாக பணியாற்றுகின்றனர். சிறிய குற்றம் சம்பந்தமான வழக்குகளை இந்நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன.



**2. திருத்த நீதிமன்றம் /** (Trbunax Correctionels)

பயங்கரமான அல்லது கொடூரமான குற்றவியல் வழக்குகள் இந்நீதிமன்றங்களுக்குக் கொண்டு வரப்படுகின்றன. இதில் மூன்று நீதிபதிகள் அங்கம் வகிக்கின்றனர். யூரிமுறை இங்கில்லை. முதலில் இத்தகைய வழக்குகள் இரகசியமான முறையில் நீதிவான் ஒருவரால் விசாரணை செய்யப்படும். பின்னர், இந்நீதிமன்ற விசாரணைக்குத் கொண்டு வரப்படும்.

**3.அசைஸ் நீதிமன்றம்** (Courts of Assize)

குற்றவியல் வழக்குகளில் பெரிய வழக்குகளை இந்நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன.ஒவ்வொரு நீதிமன்றத்திலும் மூன்று நீதிபதிகளும் 9யூரிமார்களும் அமர்ந்து வழக்குகளை விசாரணை செய்கின்றனர். மொத்தமாக உள்ள 12பேரில் எட்டுப் பேருக்கு மேலானோரால் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்ப்பு நீதிமன்றத் தீர்ப்பாக அறிவிக்கப்படும். பொதுவாக யூரிமார்கள் நீதிபதிகளின் கருத்தினை ஏற்றுக் கொள்வதே வழக்கமானதாகும்.

**4. உயர் நீதிமன்றம்** (Courts of Assation))

உயர் நீதிமன்றம் குற்றவியல், குடியியல், வழக்குகளுக்கு எனப் பொதுவாக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இவற்றினை குடியியல் நீதிமன்றங்களுக்குள் பார்க்கலாம்.

## பிற நீதிமன்றங்கள்

**பாதுகாப்பு நீதிமன்றங்கள்** (Court of State security)

அரசாங்கத்தைக் கவிழ்க்க முயலும் குற்றங்களை இந்நீதிமன்றங்கள் விசாரணை செய்கின்றன. அரச நீதிபதிகள் மூவரும், படைத்தளபதிகள் இருவரும் இதில் அங்கம் வகிக்கின்றனர். இவ் நீதிமன்றத்தின் மேன்முறையீடுகள் தலைமை நீதிமன்றத்திற்கு செல்கின்றன.

இதைவிட, தொழிற்துறை நீதிமன்றங்கள், வர்த்தக நீதி மன்றங்கள் இளங்குற்றவாளிகள் பற்றிய நீதிமன்றங்கள், சமூக பாதுகாப்புக் குழுக்கள், நிலக்குத்தகை நீதிமன்றங்கள் போன்ற நீதிமன்றங்களும் செயற்படுகின்றன.

## ஆட்சித்துறை நீதிமன்றங்கள்

அரசு அதிகாரிகள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்திப் பணியாற்றும் போது எழும் வழக்குகளை விசாரணை செய்வதற்காக உருவாக்கப்பட்டவையே ஆட்சித் துறை நீதிமன்றங்களாகும்.

ஆட்சித்துறை நீதிமன்றங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன:

1) துறைகளுக்கிடையிலான குழுக்கள்
2) அரசுக்குழு
3) பூசல் ஒழிப்பு மன்றம்
4) உயர்நீதிமன்றம்

### 1. துறைகளுக்கிடையிலான குழுக்கள்

துறைகளுக்கிடையிலான குழுக்கள் ஆட்சித்துறை தொடர்பான உடைமை பற்றிய சிறிய வழக்குகளை விசாரணை செய்கின்றன. 23 துறைகளுக்கிடையிலான குழுக்கள் நடைமுறையில் செயற்படுகின்றன. ஒவ்வொரு குழுவிலும் ஒரு தலைவரும், நான்கு உறுப்பினர்களும் உள்ளனர், உள்ளூர் வழக்குகளையே இவை பெரும்பாலும் விசாரணை செய்கின்றன.

### 2. அரசுக்குழு

ஆட்சித்துறை நீதிமன்றங்களின் உயர்ந்த நீதிமன்றமாக இது தொழிற்படுகின்றது. இதில் 150க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இதன் நீதிபதிகள் ஆட்சித்துறைப்பள்ளி மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அரசுக்குழு வழக்குப்பிரிவு (Litigation Sectoin) என்னும் ஒரு பிரிவு உள்ளது. இப்பிரிவு பிராந்திய நீதிமன்றங்களிலிருந்து (Regional Courts) வரும் மேன்முறையீடு களைக் கவனிப்பதிலும், அரசாங்க ஆணைகள் சட்டத்திற்கு உட்பட்டனவா? என்பதை ஆராயும் நேரடி வழக்குகளைக் கவனிப்பதிலும் பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் ஈடுபட்டு வருகின்றது.

இந்நீதிமன்றத்தை அணுகுவது எளிதானதாகவும் சிக்கனமானதாகவும் இருக்கின்றது. மேல் முறையீடுகளை இக்குழுவிடம் கடிதம் மூலம் அளிக்கலாம். வழக்குத் தொடர்பவர் சிறிய கட்டணம் ஒன்றையே செலுத்துகின்றார். அக்கட்டணமும் தீர்ப்பு அவருக்கு சார்பாக இருந்தால் திருப்பி அவருக்கு அளிக்கப் படுகின்றது.

### சிறப்பு ஆட்சித்துறை நீதிமன்றங்கள்

பிரான்சில் ஏறக்குறைய 40 சிறப்பு ஆட்சித்துறை நீதிமன்றங்கள் செயற் படுகின்றன. இவற்றில் மதிப்பீட்டு நீதிமன்றம் (Courts of Accants) முக்கியமான ஒன்றாக உள்ளது.

சிறப்பு நீதிமன்றங்களின் பணிகளை அரசு நீதிக்குழு (council of State) மேற்பார்வை செய்கின்றது. ஒரு வழக்கு சாதாரண நீதிமன்றங்களுக்குரியதா? ஆட்சித் துறை நீதிமன்றங்களுக்குரியதா? என்பதையும் இக்குழு முடிவு செய் கின்றது.



### நீதித்துறை உயர்குழு

ஜனாதிபதி, நீதிஅமைச்சர், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 92 உறுப்பினர்கள் இதில் அங்கம் வகிக்கின்றனர். ஜனாதிபதி இக்குழுவின் தலைவராக விளங்குவார். தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகள், இவ் உயர் குழுவினால் நியமிக்கப்படுகின்றார்.

நீதிஅமைச்சரால் நியமிக்கப்படும் மற்றைய நீதிபதிகளின் நியமனங்கள் குறித்து இவ் உயர் குழுக்கள் தன் கருத்துக்களைத் தெரிவிக்கும்.

ஒழுக்கம் தவறிய நீதிபதிகளைப் பதவி நீக்குவதற்கும் இவ் உயர்குழு பரிந்துரை செய்கின்றது.

### அரசியலமைப்புக் குழு

பிரான்சில் நீதிமன்றங்களுக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் இல்லை. அதற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக் குழுவிற்கே இவ்வதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசியலமைப்புக் குழுவில் 9 உறுப்பினர்களும், முன்னாள் ஜனாதிபதிகளும் அங்கத்துவம் வகிப்பர். 9 உறுப்பினர்களில் மூவரை தேசிய பேரவைத் தலைவரும், மூவரைச் செனற்சபை தலைவரும், எஞ்சிய மூவரை ஜனாதிபதியும் நியமிக்கின்றனர். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை இதன் உறுப்பினர்களில் 1/3 பங்கினர் பதவி விலக, புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்த வகையில் இதுவொரு நிரந்தரமான குழுவாக உள்ளது.

ஜனாதிபதி தேர்தலை நடாத்தல், தேர்தல் வழக்குகளை விசாரணை செய்தல், மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பினை நடாத்தல், நெருக்கடி நிலைப் பிரகடனம் தொடர்பாக ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கல், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அரசியல் யாப்புக்கு அமைவானதா, இல்லையா எனப் பரிசீலித்து தீர்ப்பு வழங்குதல் போன்றன இதன் அதிகாரங்களாகும்.

## 5. கட்சி முறை

பிரான்ஸ் பல கட்சி முறையைப் பின்பற்றும் ஒரு நாடாகும். பொதுவுடமைக் கட்சி, சோசலிஷக் கட்சி, மக்கள் குடியரசு இயக்கம், புதிய குடியரசுகளின் ஒன்றியம் போன்ற கட்சிகள் நடைமுறையில் இயங்குகின்றன.

### கட்சிமுறையின் இயல்புகள்

(1) பல கட்சிகள் செல்வாக்குடைய கட்சிகளாகக் காணப்படுகின்றன.
(2) கட்சிகளின் கொள்கைகளுக்கிடையே பலத்த வேறுபாடுகள் காணப்படு கின்றன.

(3) கட்சிகள் திடீர் திடீரெனத் தோன்றி தீடீரென மறையும் போக்கு உள்ளது.

(4) கட்சிகளிடையே ஒழுக்கக் கட்டுப்பாடுகள் அதிகம் இருப்பதில்லை.

(5) சில கட்சிகள் தீவிரவாதக் கட்சிகளாகவும் சில கட்சிகள் மிதவாத கட்சிகளாகவும் விளங்குகின்றன.

(6) கட்சிகள் உறுதியாக அமைக்கப்படுவதில்லை.

(7) பல கட்சிகளுக்கு பாராளுமன்றத்திற்கு வெளியே நிலையான அமைப்புகள் இல்லை.

(8) நாட்டின் வடபகுதி தென்பகுதியை விட வலதுசாரிப் போக்குடையதாக இருக்கின்றது. மேற்பகுதியும் கிழக்குப் பகுதியும் கிறிஸ்தவ நெறியையும் மரபுகளையும் பழமைப் போக்கையும் ஆதரித்து நிற்கின்றன. நடுப்பகுதியும் தென்மேற்குப் பகுதியும் முற்போக்கு இயல்புகளைக் கொண்டனவாக உள்ளன.

## முக்கிய கட்சிகள்

### 1. பொதுவுடைமைக் கட்சி

பிரான்சில் பொதுவுடைமைக் கட்சி முக்கிய கட்சியாக ஒரு காலத்தில் திகழ்ந்தது. இக்கட்சியினர் புரட்சியின் மூலமாக உழைக்கும் வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தும் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களாக விளங்கினர்.

இக்கட்சி சில ஆண்டுகள் சோவியத் பொதுவுடமைக் கட்சியின் ஆலோசனைப்படியே செயற்பட்டது. கட்சியின் அமைப்பு வடிவமும் சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் அமைப்பு வடிவத்திலேயே அமைக்கப்பட்டது. கட்சியிலேற்பட்ட பிளவுகளினால் இதன் செல்வாக்கு தற்போது குறைந்துள்ளது.

இக் கட்சி அமெரிக்காவினால் வழங்கப்பட்ட மார்ஷல் உதவியினை எதிர்த்ததோடு நேட்டோ உட்பட பல்வேறு இராணுவ ஒப்பந்தங்களையும் கண்டனம் செய்தது. ஆசிய, ஆபிரிக்க நாடுகள் ஆக்கிரமிக்கப்படுவதையும் எதிர்த்தது. 1958 இல் ஜனாதிபதி டி. கோலுக்கு எதிராக கலகம் செய்யுமாறு மக்களைத் தூண்டியது. ஆனால் அல்ஜீரிய பிரச்சினையின் போது கட்சி ஜனாதிபதியை ஆதரித்தது.

### கட்சியின் அமைப்பு

இக் கட்சியின் அமைப்பு கோபுர வடிவில் அமைந்துள்ளது. கட்சியின் அடித்தளத்தில் தொழிலாளர்கள் குழுக்கள் சுரங்கங்கள், பட்டறைகள், தொழிற்சாலைகளில் இருக்கின்றன. ஒவ்வொரு குழுவிலும் மூன்றிலிருந்து முப்பது வரையிலான உறுப்பினர்கள் இருக்கின்றனர். இது வாரம் ஒரு முறை கூடி. தனது வேலைத்திட்டங்களையும் வேலை முறையையும் வகுக்கின்றது.



கட்சியின் மேல்மட்டக் கூறாக தேசிய காங்கிரஸ் விளங்குகின்றது. இதில் ஒவ்வொரு மாகாண மாநாட்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கின்றனர்.

கட்சியின் மத்திய குழுவில் 60 தொடக்கம் 80 வரையிலான உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்கள் தேசிய காங்கிரசினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

14பேரைக் கொண்ட அரசியல் குழுவே கட்சியின் அதியுயர் அதிகார பீடமாக இருக்கின்றது. இவ் அரசியல் குழுவையும் தேசிய காங்கிரசே தெரிவு செய்கின்றது.

### 2) சோசலிசக் கட்சி

1879ல் இக்கட்சி உருவாக்கப்பட்டது. சிறிது காலம் இக்கட்சி செல்வாக்குடைய கட்சியாக விளங்கியது. ஜனநாயகம் கலந்த சமதர்மக் கோட்பாட்டினை இது பின்பற்றியது. இதனால் புரட்சி முறையினாலன்றி வளர்ச்சி முறையில் சமுதாயத்தில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும் என இக்கட்சி நம்பியது. 2 வது உலகப்போரின் பின்னர் இக்கட்சி பலமாற்றங்களுக்கு உள்ளானது.

தேசியமயமாக்குதல், பொதுநல அரசினை நிறுவுதல், திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளில் முதலீடு செய்தல் போன்றன கட்சியின் பிரதான கொள்கைகளாக விளங்கின.

இக் கட்சி நேட்டோ அமைப்பு, ஐரோப்பிய பொருளாதார சமூகம், ஐரோப்பிய அணுசக்தி நிறுவனம் முதலியவற்றில் பிரான்ஸ் உறுப்பினராக இணைவதை ஆதரிக்கின்றது. குடியேற்ற நாடுகளின் விடயத்தில் அவ் நாடுகளுக்கு முழுமையான சுதந்திரம் கொடுப்பதை விட சுய ஆட்சி விரிவாக வழங்கப்படுவதை ஆதரித்தது.

1956ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இக் கட்சி வெற்றி பெற்று அரசாங்கத்தினை அமைத்தது. எனினும் 1958ம் ஆண்டு தேர்தலில் கட்சி தோல்வியைத் தழுவியது.

### கட்சியின் அமைப்பு

கட்சியின் ஆரம்ப உறுப்புக்கள் கன்ரன்களிலும். கம்யூன்களிலும் அமைக்கப் படுகின்றன. கட்சியின் உயர் அமைப்பாக தேசிய காங்கிரஸ் இருக்கின்றது. கட்சியின் நிர்வாகக்குழு கட்சியின் தேசிய காங்கிரசினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இதுவே கட்சியின் செயல்களை கட்டுப்படுத்தி கட்சிக் கட்டுப்பாட்டினை கீழ் மட்ட அமைப்புகளில் நிறுவுகின்றது.

### 3) புதிய குடியரசுகளின் ஒன்றியம் (U.N.R)

இக்கட்சி பிரான்ஸ் அரசியலின் நவீன தந்தை என அழைக்கப்பம். டீ. கோல் என்பவரினால் உருவாக்கப்பட்டது. புதிய அரசியல் யாப்பான 5 வது குடியரசு அரசியல் யாப்பினைத் தோற்றுவிப்பதற்கும் இதுவே காரணமாக அமைந்தது. டீ. கோலின் ராஜினாமாவைத் தொடர்ந்தும் அவரின் மறைவைத் தொடர்ந்தும் கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

பாராளுமன்ற அரசாங்க முறைமையும், ஜனாதிபதி அரசாங்க முறைமையும் இணைந்த ஒரு கொள்கையினை இக்கட்சி பின்பற்றியது.

ஆரம்பத்தில் இக்கட்சி டி. கோலின் தலைமையில் பிரெஞ்சு மக்களின் அணி (R.P.F) என்றே அழைக்கப்பட்டது. 1958இல் டி. கோல் ஆட்சிக்கு வந்த பின்னரே புதிய குடியரசுகளின் ஒன்றியம் என பெயர் மாற்றம் செய்யப்பட்து.

"காரிஸம்" என்ற தத்துவம் இக்கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும். ஒரு அதிகாரமிக்க தலைவரின் கீழ் ஓர் வலுவான அரசாங்கம் என்பதே காரிசம் என்பதன் அடிப்படைக் கருத்தாகும்.

இது பொதுவுடமைக் கொள்கைகளுக்கு எதிரானது. அதேவேளை பாசிஸம் என்ற எசேச்சதிகாரக் கோட்பாட்டுடன் இணைக்கப்பட்டது எனவும் விமர்ச்சிக்கப் படுகின்றது.

1947இல் இக்கட்சியிலிருந்து இடதுசாரி காரிஸம் என்ற பெயரில் முற்போக்குப் பிரிவு வெளியேறி தனியாகச் சென்றது.

# 6

# சோவியத் யூனியன் அரசாங்க முறை

சோவியத் யூனியன் என்பது உலக நிலப் பரப்பில் 1/6 பங்கைக் கொண்ட பிரமாண்டமான நாடாகும். 30 கோடி மக்களைக் கொண்ட சோவியத் யூனியன் உலக சனத்தொகையில் மூன்றாவது இடத்தினை வகித்திருந்தது. 16 குடியரசுகளைக் கொண்ட ஒரு கூட்டாட்சி நாடாக இது விளங்கியது. 185 மொழிகளைப் பேசுகின்ற 150 தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு வாழ்ந்தனர்.

சோவியத் யூனியனின் பூர்வீகக் குடிகள் "சிலாவியர்கள்" என அழைக்கப்படுவர். இவ்வினம் பின்னர் ஆசிய, ஐரோப்பிய கலப்பின நிலையையும் பெற்றிருந்தது. 1917 வரை சோவியத் யூனியனை 'ஜார்' எனப்படும் வம்ச மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். இவ் ஆட்சி நகர்ப்புற முதலாளிகளுக்கும், கிராமப்புறங்களில் வாழும் நிலப்பிரபுக்களுக்கும் சாதகமாக அமைந்திருந்தது. முதலாம் உலக யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடைந்ததைத் தொடர்ந்து முடியாட்சிக்கெதிராக இயங்கிய புரட்சிவாதிகள் 1917 மார்ச் மாதம் 2ம் திகதி மன்னனை அப்புறப்படுத்தி விட்டு அதிகாரத்தைக் கைப்பற்றினர். கிரன்சிகி என்பவர் தலைமையில் ஒரு இடைக்கால அரசாங்கமும் உருவாக்கப்பட்டது. இதுவே ரஷ்யப் புரட்சியின் முதலாவது கட்டமாகும். தொடர்ந்து இதே ஆண்டு அக்டோபர் மாதம் மிதவாதப் போக்கினைக் கடைப்பிடித்த கிரன்சிகி அரசை மார்க்சிச - தலைமையிலான போல்ஷெவிக் கட்சியினர் ஆயுதப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினர்.

புரட்சியை அடுத்து லெனினனால் உருவாக்கப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு 1992ம் ஆண்டு சோவியத் யூனியன் சிதைவடையும் வரை நடைமுறையிலிருந்தது. இவ்வரசே உலகில் தோன்றிய முதலாவது சோசலிச அரசாகும். புரட்சியை நடாத்திய போல்ஷெவிக் கட்சியே பின்னர் கம்யூனிஸ்ட் கட்சி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## அரசியல் யாப்பின் வளர்ச்சி

சோவியத் யூனியனின் முதலாவது சோசலிச அரசியல் யாப்பு 1918 ம் ஆண்டு யூலை மாதம் 10ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. இது 1924ம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்தது. 1924ம் ஆண்டு லெனின் மரணமடைந்ததைத் தொடர்ந்து ஜோசப் ஸ்ராலின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். இவர் புதியதோர் அரசியல் யாப்பினை அறிமுகப்படுத்தினார். இதுவே, நாட்டினுடைய பெயரை சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியம் என மாற்றியது.

1936 ம் ஆண்டு இன்னோர் அரசியல் யாப்பு அமுலுக்கு வந்தது. இவ்வரசியல் யாப்பின் மூலமே ஒவ்வொரு சமஷ்டிக் குடியரசும் தனக்கென ஒரு அரசியல் யாப்பினை உருவாக்கிக் கொள்ளவும். சமஷ்டி அரசுகள் விரும்பினால் பிரிந்து போகவும் உரிமைகள் வழங்கப்பட்டது.

இவ் அரசியல் யாப்பு 1977ல் பிரஸ்நேவ் , 1988ல் கொர்பச் சேவினாலும் சில மாற்றங்களுக்கு உட்பட்ட போதும் 1992ம் ஆண்டு சோவியத் யூனியன் சிதையும் வரை நடைமுறையிலிருந்தது.

## அரசியல் யாப்பினைத் திருத்துதல்

அரசியல் யாப்பு திருத்த மசோதா சோவியத் யூனியனின் சட்டத்துறையான சுப்ரிம் சோவியத்தின் இரு சபைகளினாலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். நாட்டில் ஒரு கட்சி முறை மாத்திரம் நடைமுறையில் இருந்தமையினால் அரசியல் யாப்பின் திருத்தச் செயற்பாடுகள் இலகுவானதாக இருந்தது.

## அரசியல் யாப்பின் சிறப்பியல்புகள்

### 1. ஒரு கட்சி ஆட்சிமுறை

சோவியத் அரசியல் யாப்பு ஒரு கட்சி முறையை அடிப்படையாகக் கொண்டதாக விளங்கியது. இங்கு கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே இயங்கக் கூடியதாக இருந்தது. இக்கட்சியே சோசலிச சமுதாயத்தின் வழிகாட்டியாகவும் விளங்கியது. இதுவே நாட்டின் உள்நாட்டுக் கொள்கையையும், வெளிநாட்டுக் கொள்கையையும் தீர்மானித்தது. இதன் நிலை அரசியல் யாப்பு ரீதியாகவே உறுதி செய்யப்பட்டிருந்தது.

### 2. சமஷ்டிக் கூட்டமைப்பு

ஒன்றியக் குடியரசுகள், தன்னாட்சிக் குடியரசுகள், தன்னாட்சிப் பிராந்தியங்கள், தன்னாட்சிப் பகுதிகள் என நான்கு வகையான சமஷ்டி உள்கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வுள் கட்டமைப்புக்கள் ஒன்றியக் குடியரசுக்குள்ளேயே அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றிய குடியரசுகளுக்கு மட்டும் பிரிந்துபோகும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.



சமஷ்டிக் கட்டமைப்பில் ஒன்றியக் குடியரசுகளே அதிக அதிகாரம் வாய்ந்தவையாக விளங்கின. அவை ஒவ்வொன்றும் தமக்கென ஒரு அரசியல் யாப்பினை வைத்திருக்க உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. வெளிநாடுகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கும் வெளியுறவு அதிகாரிகளை அந்நாடுகளுக்கு அனுப்பவும் ஒன்றியக் குடியரசுகளுக்கு உரிமைகள் வழங்கப்பட்டன.

இவ்வாறான சிறப்புக்கள் சோவியத் கூட்டாட்சி முறைக்கிருந்தபோதும் கூட்டாட்சிப் பண்புகளாக கருதப்படுகின்ற இரட்டைக்குடியுரிமை இரண்டாவது சபையின் சமபிரதிநிதித்துவம், நீதிப்புனராய்வு பெற்ற நீதித்துறை போன்றவை சோவியத்யூனியன் அரசியல் யாப்பில் காணப்படவில்லை.

### 3. பொதுப்பொருளாதார முறை

சோவியத் யூனியனில் பொதுப்பொருளாதார முறை அமுலிலிருந்தது. அங்கு பொருளாதார உற்பத்தியின் மூலங்கள் சோசலிச அரசின் உரிமைக்கு உட்பட்டதாகும். சோசலிச பொருளாதார முறையில் சொத்துக்கள் தனிமனிதருக்கு சொந்தமாக இருக்காது. நிலம், நீர், காடு, நிலத்திலுள்ள தாதுப்பொருட்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமாக இருக்கும். மக்கள் அனைவரும் அரசின் ஊழியர்களாக இருப்பர். உற்பத்தியும், விநியோகமும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

### 4. வெளியுறவுக் கொள்கை

லெனின் வகுத்த அமைதிக்கொள்கையை சோவியத் யூனியன் பின்பற்றியது. நாட்டில் போருக்கான பிரச்சாரம் தடை செய்யப்பட்டிருந்தது. இறைமைச் சமநிலை, எல்லைகளை மதித்தல், பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணல், மனித உரிமைகளை மதித்தல், போன்ற கொள்கைகளில் பிற அரசுகளின் அணுகுமுறை எவ்வாறு அமைந்திருந்ததோ, அதற்கேற்பவே அவ்வரசுகளுடன் சோவியத் யூனியனின் உறவும் அமைந்திருந்தது. மேலும் நாடுகளின் பாதுகாப்பு சர்வதேச நல்லுறவு என்பவற்றைப் பேணுவதற்கும் சோவியத் யூனியன் மேலும் முயலும் எனக் கூறப்பட்டிருந்தது.

### 5. தேர்தல் முறை

சோவியத் கூட்டாட்சியின் சட்டமன்றத்திற்குப் போட்டியிடும்போது அதற்கான வேட்பாளர்களுக்கு வாக்களிக்க 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சரிவரப் பணியாற்றாவிட்டால் அவர்களைத் திருப்பி அழைக்கும் மீட்புரிமை வாக்காளர்களுக்கு இருந்தது.

## 6. சட்டமன்றம்

சோவியத் சட்டத்துறை சுப்ரீம் சோவியத் என அழைக்கப்படுகின்றது. இது ஒன்றியங்களின் சோவியத், தேசிய இனங்களின் சோவியத் என்கின்ற இரு சபைகளைக் கொண்டதாக விளங்கியது. இரு சபைகளும் சமமான அதிகாரங்களைக் கொண்டிருந்தன.

## 7. நிர்வாகம்

சோவியத் யூனியனின் நிர்வாகத்துறை பிரிசீடியம், அமைச்சரவை எனும் இரு பிரிவுகளைக் கொண்டதாக விளங்கியது. இவற்றில் பிரிசீடியமே உயர்ந்த அமைப்பாகவும், சக்தி வாய்ந்த அமைப்பாகவும், விளங்குகின்றது.

## சோவியத்யூனியன் அரசாங்க முறையின் முக்கிய அம்சங்கள்

(1) சோவியத் கூட்டாட்சி முறை

(2) சோவியத் யூனியனின் உரிமைகளும் கடமைகளும்.

(3) சோவியத் யூனியனின் சட்டத்துறை

(4) சோவியத் யூனியன் நிர்வாகத்துறை

(அ) பிரிசீடியம் அல்லது தலைமை நிர்வாகக் குழு

(ஆ) அமைச்சரவை

(5) சோவியத் ஜனாதிபதி

(6) சோவியத் நீதித்துறை

(7) சோவியத் கட்சி முறை

(8) பெரெஸ் ரொய்காவும், கிளாஸ் நொஸ்டும்

(9) சோவியத் யூனியன் சிதைவு

## 1. சோவியத் கூட்டாட்சி முறை

சோவியத் யூனியன் கூட்டாட்சி ஏனைய நாடுகளின் கூட்டாட்சியுடன் ஒப்பிடும் போது அதிகார அலகுகள், அதிகாரப்பங்கீடு என்பவற்றில் வேறுபட்ட பண்புகளைக் கொண்ட கூட்டாட்சியாகும். அங்கு சிறிய சிறிய தேசிய இனங்களுக்கும் அதிகார அலகுகள் உருவாக்கப்பட்டிருந்தன. கூட்டாட்சிக் குடியரசுகள் (Union Re-Publics), தன்னாட்சிக் குடியரசுகள் (Autonomovs Regions) தன்னாட்சிப் பிராந்தியங்கள் (Autonomovs Regions), தன்னாட்சிப் பகுதிகள் (Autonomovs Areas) என அதிகார



அலகுகள் பிரிக்கப்பட்டுள்ளன. கூட்டாட்சிக் குடியரசுகளே இவற்றில் அதிகாரம் கூடியவையாகும். சோவியத்யூனியன் சிதையும் போது 16 கூட்டாட்சி குடியரசுகள் செயற்பட்டிருக்கின்றன. இவையே மாநிலங்கள் என அழைக்கப்பட்டன.

அதிகாரப் பங்கீட்டினைப் பொறுத்தவரை மத்திய அரசே கூடுதலான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், வெளிநாட்டு வர்த்தகம், பொருளாதாரத் திட்டமிடல், வரிவிதிப்பு, போக்குவரத்து, வங்கிகள், சமூகக் காப்புறுதி, பிரஜாவுரிமை, நீதி நிர்வாகம், குடியியல் சட்டங்களை உருவாக்குதல் போன்ற பல அதிகாரங்கள் மத்திய அரசிடமே உள்ளன. கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் அடிப்படைக் கொள்கைகளை வகுக்கும் அதிகாரமும் மத்திய அரசாங்கத்திடமேயுண்டு. மாநிலங்கள் தங்களுக்கென தனியான அரசியல் யாப்புகளை வைத்திருப்பதற்கு உரிமைகளைப் பெற்றிருக்கின்ற போதும் அவை மத்திய அரசின் யாப்புகளைப் போலவே இருக்க வேண்டும். மேலும் மத்திய அரசின் சட்டங்களுக்கும் மாநில அரசுகளின் சட்டங்களுக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படின் மத்திய அரசின் சட்டங்களே செல்லுப்படியானதாகும். மாநில அரசுகளின் அதிகாரங்களையும் கூட மத்திய அரசு கட்டுப்படுத்தி மத்திய அரசின் கொள்கைகளுடன் ஒருமுகப்படுத்தலாம். நீதித்துறை அதிகாரப்பங்கீட்டிற்கு உட்படவில்லை. அதன் அதிகாரம் மத்திய அரசிடமே இருந்தது.

இவ்வாறு மத்திய அரசு அதிக அதிகாரங்கரளைக் கொண்டுள்ள போதும் மாநில அரசுகள் முழுமையாக அதிகாரங்களை இழந்துவிட்டன எனக் கூற முடியாது. ஒவ்வொரு மாநில அரசுகளும் தமக்கென அரசியல் யாப்புகளை வைத்திருந்தன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலகளுக்கேயிருந்தன. பிரிந்து போகும் உரிமையும் மாநிலங்களுக்கு உண்டு. மேலும் மாநிலங்கள் வெளிநாடுகளுடன் தொடர்புகளைப் பெறவும், தூதுவர்களை நியமிக்கவும், உடன்படிக்கைகளை மேற்கொள்ளவும் உரிமை பெற்றிருந்தன. இதன் பயனாகவே உக்ரைன், பைலோரஸ்யா போன்ற மாநிலங்கள் ஐக்கிய நாடுகள் சபையிலும் தனியான பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருந்தன.

மத்திய அரசாங்கத்தின் இரண்டாவது சபையான தேசிய இனங்களின் சோவியத்தில் எல்லாவகையான அதிகார அலகுகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தது. மாநிலங்களுக்கு கூடிய பிரதிநிதித்துவமும், தன்னாட்சிப் பகுதிகளுக்கு குறைந்த பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டிருந்தது. இவ் தேசிய இனங்களின் சோவியத் முதலாவது சபையான குடியரசுகளின் சோவியத்திற்கு சம்மான அதிகாரங்களையும் பெற்றிருந்தது.

பொதுவாக கூட்டாட்சி நாடுகளில் உயர்நீதிமன்ற கூட்டாட்சி தொடர்பான மேலான அதிகாரங்களைப் பெற்றிருப்பது வழக்கமானதாகும். குறிப்பாக அரசியல் யாப்பின் மேலாதிக்கத்தினைப் பாதுகாப்பது வழக்கமானதாகும். இதற்காக நீதிப்புனராய்வு அதிகாரத்தையும், அரசியல் யாப்பிற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் அதிகாரத்தையும் உயர் நீதிமன்றம் பெற்றிருக்கும். ஆனால் சோவியத்யூனியனின் உயர்நீதிமன்றத்திற்கு இவை எதுவும் வழங்கப்படவில்லை. நீதிப்புனராய்வு அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்படவில்லை. அரசியல்

யாப்பிற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் அதிகாரத்தை உயர்நிர்வாக அமைப்பான பிரிசீடியமே பெற்றிருந்தது.

மேலும் அரசியல் யாப்பினைத் திருத்தும் பணியிலும் மாநிலங்களுக்கு பங்கு வழங்கப்படவில்லை மத்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளும் 2/3 பெரும்பான்மையுடன் திருத்தங்களை மேற்கொள்கின்றன. இவற்றினை விட அமெரிக்க கூட்டாட்சியில் உள்ளது போன்ற இரட்டைக் குடியுரிமை என்ற விடயமும் சோவியத் கூட்டாட்சியில் இருக்கவில்லை.

மொத்தத்தில் ஒரு கூட்டாட்சிக்குரிய பண்புகளை சோவியத்யூனியன் கூட்டாட்சி கொண்டிராத போதும், சிறிய சிறிய தேசிய இனங்களுக்கு அதிகாரப்பங்கீடு வழங்கப்பட்டமை, பிரிந்து போகும் உரிமை மாநிலங்களுக்கு வழங்கப்பட்டமை, ஐக்கிய நாடுகள் சபையில் தனியான பிரதிநிதித்துவம் வகிக்க மாநிலங்களுக்கு உரிமை வழங்கப்பட்டமை போன்றன கூட்டாட்சி சிந்தனைக்கு வழங்கப்பட்ட அபிவிருத்திகள் எனலாம். தனியொரு கட்சியான பொதுவுடமைக கட்சியின் ஆட்சியில் இச் செயற்பாடுகளின் சுயாதீனத்தன்மை குறைவாக இருந்த போதிலும் கூட்டாட்சி சிந்தனைகளுக்கு வழங்கிய அபிவிருத்திகளை மறுக்க முடியாது.

## 2. சோவியத் யூனியனின் உரிமைகளும் கடமைகளும்

சோவியத்யூனியன் அரசியல் யாப்பு சோவியத் பிரஜைகளுக்கு உரிமைகளோடு கடமைகளையும் வழங்கியுள்ளது. இந்த வகையில் உரிமைகளோடு கடமைகளை இணைத்த முதலாவது யாப்பாக சோவியத் யாப்பினைக் குறிப்பிடலாம். கடமைகளை மேற்கொள்ளாது உரிமைகளை அனுபவிக்க முடியாது என்பதே உரிமைகள் பற்றிய நவீன சிந்தனையாகும். மேலும் சோவியத் யாப்பானது உரிமைகளைக் குறிப்பிடுவதுமல்லாமல் அவை எவ்வாறு நடைமுறையில் செயற்படுத்த வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிடுகின்றது. இதைவிட வேறு நாடுகளின் யாப்புகளில் காணப்படாத இன்னோர் சிறப்பியல்பு வேலை உரிமை, ஓய்வு உரிமை, முதுமைக் காப்புரிமை, கல்வியுரிமை, போன்றவற்றையும் யாப்பில் சேர்த்துள்ளமையாகும்.

### யாப்பில் காணப்படும் அடிப்படை உரிமைகள்

(1) சோவியத் பிரஜைகள் அனைவருக்கும் வேலை செய்யும் உரிமை உண்டு.வேலையின் அளவிற்கும், தன்மைக்கும் ஏற்ப ஊதியம் பெறும் உரிமையையும் உண்டு உழைக்கும் உரிமை பெற்ற ஒவ்வொருவருக்கும் உழைப் பதற்கான கடமையும் உண்டு.

(2) ஓய்வு பெறும் உரிமை உண்டு. இதன்படி வேலை நேரம் பெரும்பாலான தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு 41 மணி நேரமாகக்குறைக்கப்பட்டது. விடுமுறைக் காலங்களில் தொழிலாளர்கள் ஓய்வு பெறுவதற்காக ஓய்வு இல்லங்களும் பொழுதுபோக்கு வசதிகளும் அமைக்கப்பட்டன.



(3) முதுமை, நோய் போன்ற இடர்க்காலங்களில் காப்புறுதியெனும் உரிமை அனைவருக்கும் உண்டு. தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ உதவியும், உடல்நல ஓய்வகங்களில் தங்கும் வசதியும் அளிக்கப் பட்டன. முதுமைப்பருவ ஓய்வூதியம் வழக்கமான ஊதியத்தில் 30 வீதம் தொடக்கம் 60வீதம் வரை வழங்கப்பட்டது. எதிர்பாரா இடர்களினாலும், தொழில் சார்ந்த நோய்களினாலும் உறுப்பிழந் தோறும், வேலை செய்யும் ஆற்றலிழந்தோறும் 50 வீதம் முதல் 100 வீதம் வரையிலான ஓய்வுதியத்தைப் பெற்றனர்.

(4) பிரஜைகள் அனைவருக்கும் கல்வி உரிமை உண்டு.கட்டாயக் கல்வி எல்லோருக்கும் உண்டு. கட்டாயக் கல்வி உட்பட உயர்கல்வி வரை இலவசமாகவே வழங்கப்பட்டது. கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மாணவர்கள் உதவித் தொகையை பெற்றனர். கல்வி தாய்மொழி மூலமாகவே வழங்கப்பட்டது.

(5) பிரஜைகளுக்கு அறிவியல், தொழில்நுட்ப, கலைப்படைப்பு உரிமை உண்டு. இவ் உரிமையின் இலக்கு பொதுவுடமைமையை வளர்ப்பதாகும்.

(6) மக்களின் நலனை மேம்படுத்தும் வகையிலும், சோசலிச அரசாங்க முறையினை வளர்க்கும் வகையிலும் பேச்சுரிமை, வெளியீட்டுரிமை, கூட்டம் கூடும் உரிமை, ஊர்வலங்கள் , ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் உரிமை உண்டு.

(7) பிரஜைகள் எல்லோருக்கும் மத வழிபாட்டு உரிமையும், மதத்திற்கு எதிரான கருத்துக்களைப் பரப்பும் உரிமையும் உண்டு.

(8) ஆளுரிமை உண்டு. இதன்படி நீதிமன்றத் தீர்ப்பின் பேரில் அல்லது வழக்கு அதிகாரியின் (சட்டமா அதிபர்) சம்மதத்தின் பேரில் மட்டுமே ஒருவரைக் கைது செய்யலாம்.

(9) பிரஜைகள் தங்கள் வீடுகளில் உரிமையுடன் வாழ்வதற்கும் கடிதப் போக்குவரத்தின் இரகசியங்களைப் பேணுவதற்கும் உரிமையுண்டு.

(10) சட்டத்தின் முன் அனைவருக்கும் சமமான உரிமையுண்டு. இதன்படி, பிறப்பு, பொருளாதார நிலை, மொழி, மதம், தொழில், இருப்பிடம் காரண மாக பிரஜைகள் எவருக்கும் பாகுபாடு காட்டக்கூடாது.சமூக, பொருளாதார, அரசியல், தொடர்புள்ள எல்லாச் செயல்களிலும் பிரஜைகள் அனைவரும் சமமாக நடாத்தப்பட வேண்டும்.

(11) ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமவுரிமையுண்டு. கல்வி, தொழில், பதவி உயர்வு, போன்றவற்றில் ஆண்களுக்கு நிகரான வாய்ப்புக்கள் பெண்களுக்கும் உண்டு

**யாப்பில் காணப்படும் அடிப்படை கடமைகள்**

(1) ஒவ்வொரு பிரஜையும் அரசியல் யாப்பிற்கு பணிந்து நடக்கவும், தொழிலாளர்களின் கட்டுப்பாட்டை காக்கவும், சோஷலிச உறவின் விதிகளை மதிக்கவும் கடமைப்பட்டுள்ளனர்.

(2) சோசலிசப் பொதுச் சொத்தினை பாதுக்காக்க வேண்டியது ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். பொதுச் சொத்தினை அழிப்பவர்கள் மக்களின் எதிரியாகவே கொள்ளப்படுவர்.

(3) நாட்டைப் பாதுகாப்பது ஒவ்வொரு பிரஜையினது புனிதமான கடமையாகும்.தாய் நாட்டிற்கு எதிரான துரோகம் மிகக் கொடிய குற்றமாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படும்.

(4) படைத்துறைப் பணி பிரஜைகளின் மதிப்பிற்குரிய கடமையாகக் கருதப்படும்.

(5) சோவியத் ஒன்றியத்திலுள்ள தேசிய இனங்களிடையே நட்புறவை வலுப்படுத்துவது மக்களின் கடமையாகும்.

சோவியத் யூனியனியனின் அரசியல் யாப்பிலுள்ள அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள் என்பன உரிமைகள் பற்றிய சிந்தனைக்கு அபிவிருத்தி களை செய்துள்ளன என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக, கட்டாய வேலை - உரிமை, ஓய்வுரிமை, கல்வியுரிமை என்பனவும், அடிப்படைக் கடமைகளிலுள்ள விடயங்களும் உரிமைகள் பற்றிய சிந்தனைக்கு பல அபிவிருத்திகளைச் செய்துள்ளன. இதன் பல கூறுகளை ஐக்கிய நாடுகள் சபையும் ஏற்றுள்ளது. எனினும் ஒரு கட்சி முறை நடைமுறையில் இருந்ததினாலும் சோசலிச பொருளாதார அரசியல் முறை இருந்ததினாலும் அடிப்படை உரிமைகள் வரையறைக்குட்பட்டனவாகவே இருந்தன.

## 3. சோவியத் யூனியனின் சட்டவாக்கத்துறை

சோவியத்யூனியனின் சட்டவாக்கத்துறை சுப்ரீம் சோவியத் என அழைக்கப்படுகின்றது. இது ஒன்றியங்களின் சோவியத், தேசிய இனங்களின் சோவியத் என்கிற இரு சபைகளைக் கொண்டது. இரு சபைகளிலும் தலா 720 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இரு சபைகளும் சமமான அதிகாரங்களைக் கொண்டிருந்தன. இரு சபைகளின் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் இரு சபைகளும் சமமான காலத்தில் கூடி சமமான காலத்தில் கலைந்தன. இரு சபைகளினதும் கூட்டும் கூட்டங்களுக்கு இரண்டு சபைகளும் மாறி மாறி தலைமை வகிக்கின்றன. இரு சபைகளினதும் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

இரு சபைகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படும்போது அதனை தீர்ப்பதற்காக இணைக்கக் குழுவொன்று இரு சபைகளினதும் சமமான உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது. இக்குழுவின் ஆலோசனைப்படி மாற்றங்கள் செய்யப்பட்டு பின்னர் கூட்டுக்கூட்டத்தில் அவை விவாதத்திற்கு எடுக்கப்படுகின்றன. இவ்விவாதத்திலும் உடன்பாடு காணப்படாவிட்டால் அம் மசோதா அடுத்த கூட்டத்தொடருக்கு ஒத்திவைக்கப்படும் அல்லது மக்களின் கருத்தறிய, மக்களின் வாக்கெடுப்புக்கு விடப்படும்.



### அ. ஒன்றியங்களின் சோவியத்

நாட்டு மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை இதுவாகும். இது மக்களினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 720 உறுப்பினர்களைக் கொண்டது. 3 லட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற வகையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சபையின் முதலாவது கூட்டத்தொடரில் சபை தனக்கென ஒரு தலைவரையும், உப தலைவரையும் தேர்ந்தெடுக்கிறது. சபையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

### ஆ. தேசிய இனங்களின் சோவியத்

இது நாட்டின் பல்வேறு பகுதிகளையும் தேசிய இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சபையாகும். இதன் உறுப்பினர்கள் பின்வரும் முறையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

(1) ஒன்றிய குடியரசு

(2) தன்னாட்சிக் குடியரசு

(3) தன்னாட்சிப் பிராந்தியம்

(4) தன்னாட்சிப் பகுதி

இச்சபை 720 உறுப்பினர்களைக் கொண்டது. இது ஒரு தலைவரையும் நான்கு துணைத் தலைவர்களையும் கொண்டது.

### சுப்ரீம் சோவியத் உறுப்பினர்களின் சிறப்பியல்புகள்

(1) உறுப்பினர்களில் 80வீதமானவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்கள் ஏனையோர் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்.

(2) உறுப்பினர்களில் 1/5 பங்கினர் பெண்கள். 40 வீதத்தினர் தொழிலாளர்; 20 வீதத்தினர் விவசாயிகள்.

(3) அங்கத்தவராக வருவதற்கு கட்சி அங்கத்துவம் ஒரு நிபந்தனையாக இல்லை. ஆனால் தேர்தலுக்கு வேட்பாளர்களாக நிற்க தனிநபர்களால் முடியாது. கம்யூனிஸ்ட் கட்சி, உழைப்பாளிகளின் கூட்டுறவுகள்,

தொழிற்சங்கங்கள், இராணுவ வீரர்களின் கூட்டமைப்பு என்பவற்றுக்கு இந்த உரிமை மட்டும் உண்டு.

(4) வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை அரசே பொறுப்பேற்கும்.

(5) உறுப்பினர்கள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் முன்னர் பணிபுரிந்த பணிகளில் தொடர்ந்தும் பணிபுரியக் கூடியவர்களாக உள்ளனர். சபைகளின் கூட்டங்கள் நடைபெறும் காலங்களில் அவர்களுக்கு பணிசெய்யும் இடங்களில் அனுமதி வழங்கப்படுகின்றது.

(6) உறுப்பினர்கள் அரசாங்க ஆவணங்களை பார்ப்பதற்கும், அரசாங்க அலுவலகங்களில் அவர்கள் பணிகள் தொடர்பாக கேள்வி கேட்பதற்கும் உரிமையுடையவர்கள்.

(7) உறுப்பினர்கள் தங்களது பணிகளைப் பற்றிய அறிக்கைகளை அவர்களை தேர்ந்தெடுத்த வாக்காளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். உறுப்பினர்கள் சரிவர பணியாற்றாவிட்டால் அவரைத் திருப்பியழைக்கும் மீட்புரிமை வாக்காளருக்கு உண்டு.

(8) உறுப்பினர்களை சுப்ரீம் சோவியத்தின் அனுமதியுடனேயே கைது செய்தல் வேண்டும்.

## சுப்ரீம் சோவியத்தின் அதிகாரங்கள்

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

மத்திய அரசுக்கென ஒதுக்கப்பட்ட எல்லா விடயங்களிலும் சட்டமியற்றும் அதிகாரம் சுப்ரீம் சோவியத்துக்கு உண்டு. இதனால் இயற்றப்படும் சட்டங்கள் அனைத்தும் சாதாரண பெரும்பான்மையுடனேயே நிறைவேற்றப்படுகின்றன. அரசியல் யாப்பு திருத்தங்கள் மட்டும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுகின்றது. வரவு - செலவு திட்டத்தை பொறுத்தவரை இதன் ஒப்புதலைப் பெற்ற பின்னரே அதனை நடைமுறைப்படுத்த நிர்வாகத்துறையால் முடியும். புதிய குடியரசுகளைச் சேர்க்கவும் குடியரசுகளின் எல்லைகளை மாற்றவும் சுப்ரீம் சோவியத்திற்கும் அதிகாரம் உண்டு.

சுப்ரிம் சோவியத்தின் சட்டமியற்றும் அதிகாரம் உயர்வானதாகும். இது இயற்றும் சட்டங்கள் தொடர்பாக எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது. அவ்வாறான நீதிப்புனராய்வு அதிகாரம் நீதிமன்றங்களுக்கு வழங்கப் பட்டிருக்கவில்லை.

மேலும் சட்டத்தை தொடக்கும் உரிமை சுப்ரீம் சோவியுத் உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல குடியரசுகள், பிரிசீடியம், உயர்நீதிமன்றம், தேசிய அளவிலான பொது அமைப்புகள் போன்றவற்றிற்கும் வழங்கப்பட்டுள்ளன.



### நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

பிரிசீடியத்தின் உறுப்பினர்கள் அமைச்சரவை உறுப்பினர்கள் என்போரை தேர்ந்தெடுத்தல், அமைச்சரவையை பதவிநீக்குதல், அமைச்சரவையின் செயல்கள் தொடர்பாக அமைச்சர்களை கேள்வி கேட்டல், ஆட்சித்துறையை விமர்சித்தல், வெளிநாட்டு ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளித்தல். போர்ப்பிரகடனம் அனுமதிப் பிரகடனம், அமைதிப்பிரகடனம் என்பவற்றுக்கு ஒப்புதல் அளித்தல். நிர்வாகத்துறையின் வரவு - செலவுதிட்டத்துக்கு ஒப்புதல் அளித்தல், உயர் நியமனங்கள், தேசிய பொருளாதார திட்டம் என்பவற்றுக்கு ஒப்புதல் அளித்தல் போன்றன சுப்ரீம் சோவியத்தின் நிர்வாகத்துறை, தொடர்பான அதிகாரங்களாகும்.

### நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல், உயர் நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்குதல் என்பன சுப்ரீம் சோவியத் நீதித்துறை தொடர்பான அதிகாரங்களாகும்.

## மதிப்பீடு

மறுப்பாணை அதிகாரம் இல்லை; நீதிப்புனராய்வு அதிகாரம் இல்லை; என்கின்ற விடயங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது அரசியல் யாப்பில் சோவியத் சட்டத்துறையின் சுப்ரீம் சோவியத் அரச அதிகாரத்தின் அதியுயர் கருவிபோல் தோற்றமளிக்கின்றது. ஆனால், நடைமுறையில நிர்வாகத்துறையின் உயர் அங்கமாகிய பிரிசீடியத்திற்கும் ஒரே ஒரு கட்சியாக இயங்குகின்ற பொதுவுடமைக் கட்சிக்கும் கட்டுப்பட்டதாகவே சுப்ரீம் சோவியத் காணப்படுகின்றது.

எதிர்க்கட்சிகள் இல்லாமையினாலும் வருடத்தில் சில நாட்கள் மட்டும் சுப்ரீம் சோவியத் கூடுவதனாலும் நீண்ட விவாதங்களுக்கோ, கேள்விகளுக்கோ அங்கு இடம் இருப்பதில்லை. குழுமுறைகாணப்பட்டாலும், இக்குழுக்கள் அமெரிக்க, பிரித்தானிய போன்று சக்தி வாய்ந்த குழுக்களாக விளங்குகின்றன.

## 4. சோவியத்தின் நிர்வாகத்துறை

சோவியத்தின் நிர்வாகத்துறையானது பிரிசீடியம் (தலைமை நிர்வாகக்குழு) அமைச்சரவை என 2 பிரிவுகளாகக் காணப்படுகின்றது. இவற்றில் பிரிசீடியமே உயர்ந்த சக்திவாய்ந்த அமைப்பாகக் காணப்படுகின்றது.

### அ.பிரிசீடியம்

இக்குழு 39 உறுப்பினர்களைக் கொண்டது. ஒரு தலைவர் ஒரு முதல் துணைத்தலைவர் ஒன்றியக் குடியரசு ஒவ்வொன்றிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 16 துணைத் தலைவர்கள் உட்பட 39 பேர் இதில் அங்கம் வகிக்கின்றனர். கம்யூனிஸ்ட் கட்சியின் பிரபல்யம் வாய்ந்த தலைவர்கள் இதிலும் அங்கம் வகிக்கின்றனர்.

பிரிசீடியத்தின் பதவிக்காலம் 5 வருடங்கள். எனினும், புதிய சுப்றீம் சோவியத் தேர்தல் முடிவடைந்த புதிய பிரிசீடியம் தெரிவு செய்யப்படும் வரை பழைய பிரிசீடியம் தொடர்ந்தும் பதவியிலிருக்கும். தேர்தல் முடிந்ததும் வரும் முதலாவது கூட்டத் தொடரில் சுப்றீம் சோவியத்தினால் பிரிசீடியத்தின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதன் தலைவரே ஜனாதிபதியாகவும், கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றுவார்.

## அதிகாரங்கள்

அரசியல் யாப்பினைப் பார்க்கும்போது சுப்ரீம் சோவியத்தே சக்திவாய்ந்த அமைப்பாகவும், அமைச்சரவை முக்கிய நிர்வாகத்துறை போலவும் தோற்றமளிக்கின்றது. ஆனால், உண்மையில் இவை எல்லாவற்றிலும் மேலாதிக்கம் செலுத்தும் அதிகாரம் படைத்த அமைப்பாக பிரிசீடியம் விளங்குகின்றது.

### சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) சுப்றீம் சோவியத்தின் இரண்டாவது சபைகளினதும் கூட்டத்தொடரைக் கூட்டுதல்.

(2) சுப்றீம் சோவியத்தின் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

(3) சுப்றீம் சோவியத்தினால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் தொடர்பாக விளக்கவுரையை வழங்குதல்.

(4) சுப்றீம் சோவியத்தின் தேர்தல் திகதிகளை நிர்ணயித்தல், தேர்தலை நடாத்துதல்.

(5) அரசியல் யாப்பிற்குப் பொருந்தாத இல்லாத சந்தர்ப்பங்களில் நாட்டிற்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல்.

(6) சுப்ரீம் சோவியத்திற்கு மறுப்பாணை அதிகாரம் இருக்கவில்லை. ஆனால் சுப்ரீம் சோவியத் நிறைவேற்றி அனுப்புகின்ற மசோதாவை மக்களின் ஒப்புதல் பெற மக்கள் வாக்கெடுப்பிற்கு விட வேண்டும் என நிறுத்தி வைக்கலாம்.(பின்னர் இவ்வதிகாரம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது).

### நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) நாட்டின் அரசியல்யாப்பு ஒழுங்காகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணித்தல்.

(2) குடியரசுகளின் சட்டசபைகள் இயற்றும் சட்டங்களும் அவற்றின் அரசியல் யாப்புகளும் நாட்டின் அரசியல் யாப்போடு பொருந்தும் வகையில் அமைந்துள்ளனவா என்பதைக் கண்காணித்தல்.



(3) பிரதமரது ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல்.

(4) வெளிநாட்டு உடன்படிக்கைகளை ஏற்று ஒப்புதல் அளித்தல்.

(5) இராணுவத்திலும் வெளியுறவுப் பணிகளிலும் பதவி நிலைகளையும் கௌரவ பட்டங்களையும் தீர்மானித்தல்.

(6) சோவியத் நாட்டின் குடி உரிமைகளை வழங்குதல்.

(7) குடியுரிமை பற்றிய விவகாரங்களை முடிவு செய்தல்.

(8) அரசியல் அடைக்கலம் கோரும் வெளிநாட்டினருக்கு அடைக்கலம் வழங்கல்.

(9) வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தல்.

(10) பாதுகாப்புப் படைகளின் உயரதிகாரிகளை நியமித்தல்.

(11) அமைச்சரவை எடுக்கும் முடிவுகளை ரத்துச் செய்தல்.

(12) நாட்டின் சில பகுதிகளுக்கோ அல்லது நாடு முழுவதற்குமோ இராணுவ சட்டத்தைப் பிரகடனப்படுத்தல்.

(13) நாட்டிற்கான பாதுகாப்புக் குழுவினை அமைத்தல்.

(14) சுப்ரீம் சோவியத் கூட்டத் தொடரில் இல்லாத சந்தர்ப்பத்தில் போர்ப் பிரகடனம் செய்தல்

பிரிசீடியம் செய்கின்ற நியமனங்களுக்கும், நீக்கல்களுக்கும் சுப்ரீம் சோவியத்தின் ஒப்புதல் அவசியம் ஆகும். மேலும் சுப்ரீம் சோவியத் கூட்டத் தொடரில் இல்லாத காலங்களில் அமைச்சரவை பிரிசீடியத்திற்கும் பொறுப்பானது. சுப்ரீம் சோவியத் மிக குறுகிய காலமே கூட்டுத் தொடரில் அமர்வதால் அமைச்சரவையை, கட்டுப்படுத்துவதில் பிரிசீடியமே பரந்த அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

### நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

(1) தனிநபர்களின் குற்றத்திற்கான தண்டனைகளில் குற்றமன்னிப்பு அளித்தல்.

(2) சுப்ரிம் சோவியத் சட்டம் சம்பந்தப்பட்ட குற்றங்களில் பொதுமன்னிப்பு வழங்குதல்.

(3) மத்திய அரசின் சட்டங்களுக்குப் பொருள் விளக்கம் தருதல்.

(4) மத்திய அமைச்சரவை மேற்கொள்ளும் முடிவுகள் நாட்டின் சட்டத்திற்கு எதிராக இருந்தால் அவற்றை செல்லாது என தீர்ப்பளித்தல்.

## ஆ. அமைச்சரவை

இது ஒரு தலைவர், ஒரு முதல் துணைத்தலைவர், துணைத்தலைவர்கள் அமைச்சர்கள், அரசு குழுக்களின் தலைவர்கள் என்போரைக் கொண்ட அமைப் பாகும். குடியரசுகளின் அமைச்சுக்கு அமைச்சர்களாக இருந்தவர்கள். அப்பதவியை வகிப்பதன் காரணமாக மத்திய அமைச்சரவையிலும் உறுப்பினர்கள் ஆகின்றனர்.

சில அரசாங்க நிறுவனங்கள் பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் தலைவர்களும் அமைச்சரவைத் தலைவரது ஆலோசனையின் பெயரில் அமைச்சரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் சுப்ரீம் சோவியத் இரு சபைகள் அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அமைச்சரவையின் தலைவராக பிரதமர் விளங்குவார்.

அமைச்சரவையில் 50 க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளதால் அமைச்சரவை தலைமைக் குழு ஒன்று தெரிவு செய்யப்படுகின்றது. இதில் அமைச்சரவையின் தலைவர், துணைத்தலைவர், பொது உடமைக் கட்சியின் தலைமைக்குழுவின் உறுப்பினர்கள் என்போர் இடம் பெறுகின்றனர்

பிரதமரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை நீக்க, மாற்ற பிரிசீடியத்திற்கு அதிகாரம் உண்டு. மேலும், சோவியத் அமைச்சரவையில் 2 விதமான அமைச்சர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

(1) மத்திய அரசின் அமைச்சர்கள்.

(2) குடியரசுகளின் அமைச்சர்கள்.

இதில் தேசிய பொருளாதாரத்துடன் தொடர்புடைய திணைக்களங்களை நிர்வகிக்கும் அமைச்சர்கள் மத்திய அமைச்சர்கள் ஆவர். விமானப் போக்குவரத்து, தொழில் துறை, வெளிநாட்டு வர்த்தகம் என்பவற்றின் அமைச்சர்கள்.

குடியரசுகளின் உதவியுடன் செயலாற்ற வேண்டிய அமைச்சர்கள் ஒன்றியக் குடியரசு அமைச்சர்கள் ஆவர். (உ-ம் : உள்விவகார அமைச்சர், உயர் கல்விக்கான அமைச்சர்).

### பணிகளும் அதிகாரங்களும்

(1) வரவு செலவுத் திட்டம், தேசிய பொருளாதாரத் திட்டங்கள் என்பவற்றை உருவாக்குதல்.

(2) பொருளாதார, அறிவியல் தொழில்சார்ந்த நிறுவனங்களை நிர்வகித்தல்.

(3) குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாத்தல், நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.



(4) சர்வதேச உடன்படிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப் படுத்தல்.

(5) வெளிநாடுகளுடன் வர்த்தக, கூட்டுறவு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்.

(6) ஒன்றியக் குடியரசுகளின் அமைச்சர்கள் எடுக்கும் முடிவுகளையும் ஆவணங்களையும் மத்திய அரசின் நடவடிக்கைக்குப் பாதகமாக இருந்தால் ரத்து செய்தல்.

மேற்கூறிய அதிகாரங்களை அமைச்சரவை பெற்றிருந்தாலும் அமைச்சரவை பிரிசீடியத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கட்டுப்பட்டதாகவே உள்ளது.

## 6. சோவியத் யூனியனின் நீதித்துறை

சோவியத் யூனியனின் நீதித்துறை ஏனைய நாடுகளின் நீதித்துறையில் இருந்து வேறுபடுகிறது. மார்க்ஸிச, லெனினிஸ தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நீதித்துறை உருவாக்கப்பட்டது. சட்டங்களை மறுபரிசீலனை செய்யும் நீதிப்புனராய்வு அதிகாரம் நீதிமன்றங்களுக்கு கிடையாது. ஏனைய நாடுகளைப் போல நீதிபதிப்பதவி அங்கு ஒரு வாழ்க்கைக் கால பதவியும் அல்ல. சட்டத்தகுதியும் நீதிபதிகளுக்கு தேவைப்படுத்தப்படவில்லை.

நீதிபதிகள் குறிப்பாக தலைமை நீதிபதிகள் சுப்ரீம் சோவியத்தினால் 5 வருட பதவிக் காலத்திற்கெனத் தெரிவுசெய்யப்படுகிறார்கள் தெரிவு செய்யப்படுவர்கள் மீட்புரிமைக்கு உட்படுபவர்கள் யாரால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அவர்களால் மீட்கப்படலாம்.

சோவியத் யூனியன் நீதித்துறையில் சட்டத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் செயற்படுவது இல்லை. நீதியை மிக விரைவாகவும் குறைந்த செலவிலும் பெறுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

நீதிபதிகள் நியமிக்கப்படும்போது அவர்களுடன் சேர்ந்து மதிப்பீட்டாளர்கள் என்போரும் நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு நீதிபதிகளுக்குள்ள அதிகாரம் உண்டு. சட்டங்களுக்குப் பொருள் விளக்கம் கொடுக்கும் அதிகாரம் உண்டு. தேசிய அளவில் புராக்யுரேட்டர் ஜெனரல் ஒருவர் தெரிவு செய்யப்படுகின்றார். கீழ்மட்டங் களில் பல புராக்யுரேட்டர்கள் உள்ளனர். இவர்கள் சுப்ரீம் சோவியத்தினால் தெரிவு செய்யப்படுகின்றார்கள். சுப்ரீம் சோவியத்திற்கு இவர்கள் பொறுப்பானவர்கள். சுப்ரீம் சோவியத் கூட்டத் தொடரில் இல்லாத சந்தர்ப்பங்களில் பிரிசீடியத்துக்குப் பொறுப்பானவர்கள் இவர்களுக்கு பல நீதித்துறை அதிகாரங்கள் இருக்கின்றன.

### தலைமை நீதிமன்றம்

நாட்டின் மிகப் பெரிய நீதிமன்றம் இதுவாகும். இது ஒரு தலைவரையும், துணைத் தலைவர்களையும் மக்கள் மதிப்பீட்டாளர்களையும் கொண்டது. ஒன்றியக்

குடியரசுகளின் தலைமை நீதிமன்ற தலைவர்கள் அப்பதவிகளில் இருப்பதால் இந்த நீதிமன்றத்தின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

நீதிபதிகளின் எண்ணிக்கை அடிக்கடி மாறுகின்றது. சாதாரணமாக 80 நீதிபதிகளும், 80 மதிப்பீட்டாளர்களும் உறுப்பினர்களாக இருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

இத்தலைமை நீதிமன்றம் 5 பிரிவாகத் தொழிற்படுகிறது. அவை குழுக்கள் எனப்படும்:

(1) சிவில் குழு.

(2) கிரிமினல் அல்லது குற்றவியல் குழு.

(3) இராணுவக் குழு.

(4) இரும்புப் பாதைக் குழு.

(5) நீர் போக்குவரத்துக் குழு.

இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை தலைமை நீதிமன்றம் முழுமன்றமாக அமைகிறது. அதற்கு எல்லா நீதிபதிகளும் வருகை தருகின்றனர். குழுக்கள் அளித்துள்ள தீர்ப்புக்களை இம்முழுமன்றம் பரிசீலனை செய்கின்றது. புராக்யுரேட்டஸ் ஜெனரலும் இம்முழுமன்ற வட்டத்திற்கு வருகை தருகின்றார்கள். நாட்டில் உள்ள எல்லா நீதிமன்றங்களுக்கும் ஆணைகள் பிறப்பிப்பதற்கு இம்முழுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

### மக்கள் நீதிமன்றங்கள்

நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் மிகச்சிறிய நீதிமன்றங்கள் இவையே ஆகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு நீதிமன்றமாவது உள்ளது. இந்நீதிமன்றங்கள் அப்பகுதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட நீதிபதிகளையும், மக்கள் மதிப்பீட்டாளர்களையும் கொண்டது. நீதிபதிகளின் பதவிக்காலம் 5 வருடங்களாகும். மதிப்பீட்டாளர்களின் பதவிக்காலம் 2 1/2 வருடங்களாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளும், மதிப்பீட்டாளர்களும் சரிவர பணியாற்றாவிட்டால் அவர்களை மீட்கும் மீட்புரிமை அவர்களை தெரிவு செய்த மக்களுக்குண்டு. இந்நீதிமன்றங்கள் சிறியளவிலான குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்கின்றன.

### தோழமை நீதிமன்றங்கள் (Comradely Courts)

இவை சம்பிரதாயத்துக்கு அப்பாற்பட்ட நீதிமன்றங்களாகும். சோவியத் யூனியனின் நீதித்துறையின் ஒரு பகுதியாக இவை கொள்ளப்படுவதில்லை.

தொழிற்சாலைகள், சிறைச்சாலைகள், குடியிருப்புக்கள், பயணக் கப்பல்கள் அமைக்கப்படுகின்றன. இதன் நீதிபதிகள் அந்தந்த இட உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.



### ஒன்றியக் குடியரசுகளின் தலைமை நீதிமன்றம்

ஒவ்வொரு ஒன்றியக் குடியரசுகளிலும் ஒவ்வொரு தலைமை நீதிமன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. இதன் நீதிபதிகள் ஒன்றியக் குடியரசின் சுப்ரீம் சோவியத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். மக்கள் மதிப்பீட்டாளர்களும் இதில் அங்கம் வகிக்கின்றார்கள்.

குடியரசுகளின் சட்டங்களுக்கு உட்பட்ட வழக்குகளையும் மேன்முறையீடு களையும் இந்நீதிமன்றம் விசாரணை செய்கின்றது.

## 7. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அல்லது பொதுவுடைமைக் கட்சி

சோவியத் புரட்சியை திட்டமிட்டு நடாத்திய போல்ஷெவிக் கட்சியே பின்னர் கம்யூனிஸ்ட் கட்சி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது மாக்ஸிச, லெனினிஸ கொள்கைகளை கோட்பாடாகக் கொண்டு செயற்பட்ட கட்சியாகும்.

### கட்சியின் முக்கியத்துவம்

சோவியத் யூனியனின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்வைத் திட்டமிட்டு வழிநடாத்துவது கம்யூனிஸ்ட் கட்சியே ஆகும். இதுவே சோவியத் மக்களையும் அரசாங்கத்தையும் இணைக்கிறது. சோவியத் யூனியனின் தனியொரு ஸ்தாபனமும் இதுவேயாகும். இதுவே, அரசாங்கத்தின் அச்சாணியாகவும் உள்ளது. கட்சியின் சித்தாந்தங்களும், செயன்முறைகளுமே சோவியத் அரசாங்க முறையின் உயிரோட்டமாக உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய ஆய்வே சோவியத் அரசாங்க முறை பற்றிய ஆய்வாகவும் உள்ளது. சோவியத் யூனியனில் செயற்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சியை பாட்டாளிகளின் சார்பில் பிரதிநிதித்துவப் படுத்தியதும் கம்யூனிஸ்ட் கட்சியே ஆகும்.

இக்கட்சியே பாட்டாளிகளை ஒழுங்கமைத்து அறிவூட்டி, தலைமைத்து வத்தை வழங்கி வழிகாட்டுகிறது. இதனால் தான் லெனின் கம்யூனிஸ்ட் கட்சியை பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படை என்றார்.

### அனைத்து ஒன்றியக் காங்கிரஸ்

இதுவே கட்சியின் மிக உயர்ந்த அமைப்பாகும். கட்சியின் மிக உயர்ந்த அதிகாரங்கள் இதனிடம் உள்ளன. இது குடியரசுகள், பிராந்தியங்கள், பகுதிகள் என்பவற்றில் உள்ள கட்சி அமைப்புகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது. இதன் பிரதிநிதிகள் 1000 உறுப்பினர்க்கு ஒருவர் என்ற வகையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அனைத்து ஒன்றிய காங்கிரஸின் கூட்டம் 4 வருடங்களுக்கு ஒரு தடவை கூட்டப்படுகின்றது. கட்சியின் மத்திய குழுவே இதனைக் கூட்டுகின்றது. இதைவிட

காங்கிரஸின் 1/3 உறுப்பினர்கள் வகுக்கும் வேண்டுகோளின் பெயராலும் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டலாம்.

மத்திய குழு மற்றும் கட்சி அமைப்புக்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை இக்காங்கிரஸ் ஆய்வு செய்கின்றது. அடுத்த காங்கிரஸ் கூடும் வகையிலான முக்கிய தீர்மானங்களையும் எடுக்கின்றது.

## மத்திய குழு

காங்கிரஸ், மத்திய குழுவை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கின்றது. இதன் அங்கத்தவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டு இருக்கவில்லை. காலத்திற்குக் காலம் மாற்றப்படுகிறது. இம்மத்திய குழு, கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையே இணைப்பாகச் செயற்படுகிறது.

குடியரசு அளவில் உள்ள கட்சி அமைப்புக்களின் செயலாளர்கள் தேசிய அளவிலான தலைவர்கள், இராணுவ அதிகாரிகள் என்போர் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இம்மத்திய குழு ஆண்டுக்கு இரு தடவை வருகிறது. இது பெரிய அமைப்பாக உள்ளதால் தனது முடிவுகளை நடைமுறைப்படுத்த ஒரு செயலகத்தையும், அரசியல் குழுவையும் காங்கிரஸ் தெரிவு செய்கிறது.

## செயலகமும் அரசியல் குழுவும்

செயலகம் தலைவர் உட்பட 5 உறுப்பினர்களைக் கொண்டது. மத்திய குழுவின் பணிகளை இதுவே ஆற்றுகின்றது.

அரசியல் குழுவும் 5 உறுப்பினர்களைக் கொண்டது. 1952இன் பின் இக்குழு தலைமைக்குழு என அழைக்கப்பட்டது. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு ஒரு தடவை அரசியல் குழுவின் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்றனர். இக்குழுவே நாட்டின் மிக சக்தி வாய்ந்த அமைப்பாகும். இதில் அங்கம் வகிப்பவர்கள் நாட்டின் உயர் நிர்வாகப் பணிகளையும் வகிக்கின்றனர். கட்சியின் பொதுச் செயலாளராக இருப்பவரே நாட்டின் ஜனாதிபதியாகவும் பதவிவகிக்கின்றார்.

அரசியல் குழுவுக்கு கீழ் கட்சிக் கட்டுப்பாட்டுக்குழு, மத்திய தணிக்கைக் குழு என்பன உள்ளன.

## கீழ்மட்ட கட்சி அமைப்புக்கள்

அனைத்து ஒன்றியக் காங்கிரசின் கீழ் குடியரசு காங்கிரஸுகள் உள்ளன. ஒவ்வொரு குடியரசிலும் ஒரு காங்கிரஸ் உள்ளது. சுயாட்சிப் பிராந்தியம், சுயாட்சி பகுதிகள் என்பவற்றில் இவை மாநாடு என அழைக்கப்படுகின்றன. காங்கிரசும் மாநாடுகளும் 18 மாதங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றன. இவை தமக்குள் ஒரு செயற்குழுவை தேர்ந்தெடுக்கின்றன. மாவட்டங்கள் நகரங்கள் என்பவற்றில் கட்சிப் பணிகளை இது கவனித்துக் கொள்கிறது.



கட்சி அமைப்பின் சிறிய அமைப்புக்களாக கலங்கள் உள்ள (Cells) இவை தொழிற்சாலைகள், பண்ணைகள், கிராமங்கள், இராணுவப் பிரிவுகள், அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற இடங்களில் அமைக்கப்படுகின்றன.

ஒரு கலத்தில் குறைந்த பட்சம் 3 உறுப்பினர்களாவது இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் இது கூடுகின்றது. தனக்கென ஒரு செயற்குழுவையும் கொண்டுள்ளது. புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதும் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் கலங்களின் கடமையாகும்.

## கட்சி சார்பு அமைப்புக்கள்

(1) **சிறு அக்டோபர் வாதிகள்** (Little october rists)
8-11 இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் இதில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். அக்டோபர் புரட்சி பற்றியும், கம்யூனிசம் பற்றியும் ஆரம்பப் போதனைகள் இங்கு வழங்கப்படுகின்றன.

(2) **இள முன்னோடிகள்** (Young pioneer)
11-16 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இதில் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். இவ்வமைப்பிலும் சிறு அக்டோபர் வாதிகளில் உள்ளது போன்று செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இரு அமைப்புக்களிலும் சோசலிஸ சமுதாயத்துக்கு ஏற்றவாறு மாணவர்களை மாற்றுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(3) **இளைஞர் அமைப்பு** (Komsomal)
கம்யூனிஸம் பற்றிய போதனை பயிற்சி என்பன இங்கு வழங்கப்படுகின்றன. இறுக்கமான கட்சிக் கட்டுப்பாடுகளும், ஒழுங்கு விதிகளும் அமுலில் உள்ளன.16-26 வயதிற்குட்பட்ட ஆண்களும், பெண்களும் கம்யூனிஸ சமுதாயத்துக்குத் தம்மாலான பணிகளைச் செய்யக்கூடியவாறு மாற்றப்படுகின்றனர்.

## ஜனநாயக மத்தியத்துவம்

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஜனநாயக மத்தியத்துவம் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை பின்வரும் பண்புகளைக் கொண்டது.

(1) கீழிருந்து உச்சிவரை தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள்.

(2) குறிப்பிட்ட கால அளவுகளில் கட்சி அமைப்புக்கள் தங்களுக்கும் மேலாக அமைப்புக்களுக்கு பொறுப்புக் கூறுதல்.

(3) கண்டிப்பான கட்சிக் கட்டுப்பாடும், பெரும்பான்மை முடிவிற்கு சிறுபான்மை கட்டுப்படுவதற்கான ஏற்பாடுகள்.

(4) கட்சி மேல்மட்ட அமைப்புகளில் முடிவுகள் எவ்வித நிபந்தனையும் இன்றி கீழ்மட்ட அமைப்புக்களால் ஏற்றுக்கொள்ளப்படல்.

கட்சியின் அடிப்படை அமைப்புக்கள் நகர் மட்ட, மாவட்ட மட்ட அமைப்புக்களுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. நகர, மாவட்ட அமைப்புக்கள் சுயாட்சிப் பகுதிகள், சுயாட்சிப் பிராந்தியங்கள், சுயாட்சிக் குடியரசுகள் என்பவற்றின் அமைப்புக்களுக்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். அவை அனைத்து ஒன்றியக் காங்கிரஸின் உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கின்றன. இவ்வாறு கட்சியின் ஒவ்வொரு அமைப்பும் தனக்குக் கீழ் உள்ள அமைப்பால் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு மட்டத்திலும், செயற்குழு மாநாட்டிற்கு சபைப் பணிகளைப் பற்றி அறிக்கைகளை சமர்ப்பித்து அதற்கு பொறுப்புக் கூறுகிறது.

மேலும், கம்யூனிஸ்ட் கட்சியில் கட்சிக் கட்டுப்பாடு மிகவும் வலியுறுத்தப்படுகின்றது. படைவீரர்களிடம் காணப்படும் கட்டுப்பாடும், கடமை உணர்வும், கட்சி உறுப்பினர்களிடமும் காணப்படுகின்றது.

கட்சி உறுப்பினர்களின் நடத்தைக்கென சிலவிதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. கட்சியில் உறுப்பினராக இருப்பவர் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக தொழிற்பட வேண்டும். அவர், சமுதாயத்துக்கு உகந்த வகையில் செயற்பட வேண்டும். கட்சி நூல்களைப் படித்து கருத்துக்களை முன்கொண்டு செல்ல வேண்டும்.

கட்சி உறுப்பினரை ஒருவர் எந்த கட்சி அமைப்பால் சேர்க்கப்பட்டாரோ அந்த அமைப்பு ஆண்டு தோறும் அவரது கட்சிப் பணிகளை கணிப்பீடு செய்கிறது. சரியான முறையில் கணிப்பீடு செய்யமுடியாதவர்கள் கட்சியை விட்டு விலக்கப் படுகின்றனர்.

## 8. பெரஸ் தொராய்க்காவும் கிளாஸ் நாஸ்டும் (Perestroika and Glasnost)

சுமார் 73 வருடங்காலமாக நிலவி வந்த சோவியத்யூனியன் ஆட்சி முறையில் மாற்றங்களைக் கொண்டு வருமுகமாகவே 1980களின் நடுப்பகுதியில் பெரஸ் தொராய்கா, கிளாஸ் நாஸ்ட் கொள்கைகள் அதிபர் கோபர்ச்சேவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ரஸ்ய மொழியில் உள்ள பெரெஸ்தொராய்க்கா என்ற சொல்லுக்கு மறுசீரமைப்பும் கிளாஸ் நாஸ்ட் என்ற சொல்லுக்கு வெளிப்படைத் தன்மை என்பதுமே அர்த்தமாகும்.

இவ்விரு கொள்கைகள் பற்றியும் நீண்டகாலமாக விவாதங்கள் நடைபெற்று வந்தன. பிரஸ்னேவின் காலத்தில் வெளிப்படைத் தன்மை என்ற கொள்கை விவாதிக்கப்பட்டது.

1985இல் நடைபெற்ற கம்யூனிஸ் கட்சியின் மாநாட்டில் இவ்விரு கொள்கைகளும் தீவிரமான விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. கட்சியினரும் இப்புதிய மாற்றங்களை வரவேற்றனர். இறுதியில் கட்சியின் 27ஆவது மாநாட்டில் கட்சி இக்



கொள்கைகளை நடைமுறைப்படுத்த அனுமதியினை வழங்கியது. 1985 தொடக்கம் இக்கொள்கைகள் பல்வேறு வழிகளிலும் நடைமுறைக்கு வந்தன.

## 8. பெரெஸ் தொராய்க்கா (மறுசீரமைப்பு)

இக் கொள்கை சோவியத் அரசாங்க முறையின் பல்வேறு அம்சங்களையும் மறுசீரமைப்பதை நோக்கமாகக் கொண்டது. பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட தேக்கமே இக்கொள்கை அறிமுகத்துக்கான பிரதான காரணமாகும். தொழிற்சாலைகளின் உற்பத்தியை பெருக்கவும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பெறச் செய்யவும் இவ் மறுசீரமைப்பு அவசியமாக இருந்தது.

பொருளாதாரத்தை விட அதிகார வர்க்கத்தின் பாரம்பரியமான அணுகுமுறைகளையும் மாற்ற வேண்டிய தேவை இருந்தது. மறுசீரமைப்பு அதனையும் கவனத்தில் கொண்டிருந்தது. பிரதானமாக மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்துவது பற்றி கவனத்தில் கொள்ளப்பட்டது.

## கிளாஸ் நாஸ்ட் (வெளிப்படைத் தன்மை)

அக்டோபர் புரட்சி ஏற்பட்ட நாளிலிருந்து மக்களின் கருத்துச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஊடகங்கள் அரசினால் தணிக்கை செய்யப்பட்ட செய்திகளை மட்டுமே வெளியிட அனுமதிக்கப்பட்டன கம்யூனிஸ்ட் கட்சியினதோ, அரசாங்கத்தினதோ, கொள்கைகளை , செயன்முறைகளை விமர்சனம் செய்யும் உரிமை மக்களுக்கு வழங்கப்படவில்லை. கிளாஸ் நாஸ்ட் இவற்றை மாற்றி கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், எனபனவற்றை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

### மாற்றங்கள்

இவ்விரு கொள்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பல மாற்றங்கள் சோவியத் அரசாங்க முறையில் ஏற்பட்டன. பொதுவுடமை கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்த நாட்டில் தனியார் சொத்துரிமைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. சில துறைகளில் தனியாரின் பங்கேற்புக்கும் வழிசெய்யப்பட்டது.

அரசியலமைப்பிலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன அதிகாரங்கள் மிக்க ஜனாதிபதி பதவி உருவாக்கப்பட்டது. அவர் மக்களினால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஒரு கட்சி முறை மாற்றப்பட்டு பல கட்சி முறை அமுலுக்கு வந்தது. மக்களது அரசியல் உரிமைகளும் அங்கீகரிக்கப்பட்டன. தொழிலாளர்களது வேலை நிறுத்த உரிமை அங்கீகரிக்கப்பட்டது. ஊடகங்களுக்கும் சுதந்திர உரிமை வழங்கப்பட்டது. சமய வழிபாடுகளைச் செய்வதற்கு மக்கள் உரிமை பெற்றனர்.

சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றங்கள் சோவியத் சார்பு கம்யூனிச நாடுகளிலும் மாற்றங்களை உருவாக்கின. ருமேனியா செக்கோஸ்லேவாக்கியா, போலந்து, ஹங்கேரி, போன்ற நாடுகளிலும் சோசலிச அரசாங்க முறை நீக்கப்பட்டு

ஜனநாயக அரசாங்க முறை அமுலுக்கு வந்தது. கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் இணைந்தன. இரு வல்லரசுகளுக்கும் இடையில் நீண்டகாலம் நிலவி வந்த பனிப்போரும் முடிவிற்கு வந்தது. கம்யூனிச நாடுகளின் கூட்டமைப்பான வார்சோ அமைப்பும் கலைக்கப்பட்டது.

## 9. சோவியத் யூனியன் சிதைவு

சோவியத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய மாற்றங்களை தீவிர கம்யூனிஸ்டுக்கள் ஏற்கவில்லை. இம்மாற்றங்கள் கம்யூனிச கொள்கைகளை முற்றாக சிதைத்து விடும் என்றே அவர்கள் கருதினர். இதனால் 1991 ஆகஸ்ட் 19 இல் கோபர்ச்சேவ் அரசாங்கத்திற்கு எதிராக புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றினர். எனினும் சோவியத் மாநிலங்களில் ஒன்றான ரஷ்யக் குடியரசின் தலைவர் ஜெல்ஸ்ட்சின் மக்களை இணைத்து புரட்சி அரசாங்கத்திற்கெதிராக மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடாத்தினார். அதனால் மூன்று நாட்களில் புரட்சி முறியடிக்கப் பட்டது.

1991 டிசெம்பர் 25 இல் கோபர்ச்சேவ் சோவியத் அதிபர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார். பால்டிக் நாடுகளான லத்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா என்பன முதலில் தனி நாடுகளாக மாறின.

கிரெம்ளின் மாளிகையில் பறந்து கொண்டிருந்த செங்கொடி இறக்கப்பட்டு வெள்ளை, நீலம், சிவப்பு நிறம் கொண்ட ரஸ்யக் கொடி ஏற்றப்பட்டது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிலும் சோவியத்யூனியனுக்கு இருந்த அங்கத்துவத்தை ரஸ்யா பெற்றுக் கொண்டது. சோவியத்யூனியனிலிருந்து உடைந்த 16 நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையில் தனித் தனியாக அங்கத்துவம் பெற்றன.

அதேவேளை பழைய உறவுகள் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்பதற்காக முன்னைய சோவியத்யூனியனின் பால்டிக் நாடுகள் தவிர்ந்த 11 நாடுகள் இணைந்து புதிய காமன்வெல்த் அமைப்பு ஒன்றும் உருவாக்கின.



**பொது**

| | அமெரிக்கா | இங்கிலாந்து | இந்தியா | பிரான்ஸ் | சோவியத் யூனியன் |
|---|---|---|---|---|---|
| **அரசியல் யாப்பு** | எழுதப்பட்ட நெகிழா அரசியல் யாப்பு | எழுதப்படாத நெகிழும் அரசியல் யாப்பு | எழுதப்பட்ட நெகிழா அரசியல் யாப்பு | எழுதப்பட்ட நெகிழா அரசியல் யாப்பு | எழுதப்பட்ட அரசியல் யாப்பு |
| **அரசாங்க முறை** | ஜனாதிபதி அரசாங்க முறை | பாராளுமன்ற அரசாங்க முறை | பாராளுமன்ற அரசாங்க முறை | பாராளுமன்ற அரசாங்க முறையும் ஜனாதிபதி அரசாங்க முறையும் இணைந்த அரசாங்க முறை | சோசலிஸ அரசாங்க முறை |
| **ஆட்சி முறை** | கூட்டாட்சி ஆட்சி முறை | ஒற்றையாட்சி முறை | கூட்டாட்சி முறை | ஒற்றையாட்சி முறை | கூட்டாட்சி முறை |
| **கட்சி முறை** | இரு கட்சி முறை | இரு கட்சி முறை | பல கட்சி முறை | பல கட்சி முறை | ஒரு கட்சி முறை |

## சட்டத்துறை

| | அமெரிக்கா | இங்கிலாந்து | இந்தியா | பிரான்ஸ் | சோவியத் யூனியன் |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | காங்கிரஸ் | பாராளுமன்றம் | பாராளுமன்றம் | பாராளுமன்றம் | சுப்ரீம் சோவியத் |
| **அமைப்பு** | இரு சபைகளை உடையது. | இரு சபைகளை உடையது. | இரு சபைகளை உடையது. | இரு சபைகளை உடையது. | இரு சபைகளை உடையது. |
| **அ.** | **பிரதிநிதிகள் சபை**<br>இது 435 உறுப்பினர்களை கொண்டது. இவர்கள் மக்களால் இரு வருடத்திற்கு ஒரு முறை தெரிவு செய்யப்படுவர். | **பொதுமக்கள் சபை**<br>இது 659 உறுப்பினர் களைக் கொண்டது இவர்கள் மக்கள னால் நேரடியாகத் தெரிவு செய்யப்படு கின்றனர். பதவிக் காலம் 5 வருடங்க ளாகும். | **மக்களவை**<br>இதில் 545 உறுப்பி னர்கள் அங்கம் வகிக்கின்றனர். இதில் 543 பேர் தேர்தல் மூலமும் ஏனைய இருவர் ஆங்கில இந்திய பிரதிநிதிகளாக ஜனாதிபதியால் தெரிவு செய்யப் படுவர்பதவிக்காலம் 5 வருடங்கள். | **தேசிய சபை**<br>இது 490 உறுப்பினர்களை கொண்டது. உறுப்பினர்கள் அனைவரும் 5 வருட பதவிக் காலத்திற்கு மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுவர். | **ஒன்றியங்களின் சோவியத்**<br>மக்களால் நேரடி- யாக தெரிவு செய்யப் பட்ட 720 உறுப்பினர் களை உடையது. பதவிக்காலம் 5 வருடங்கள் ஆகும். ஒரு தலைவர் ஒரு உபதலைவர் காணப்படுவர். |
| **ஆ.** | **செனட் சபை**<br>உலகில் உள்ள 2ம் மன்றங்களில் அதிகூடிய அதிகாரம் மிக்க அவை. ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் 2 பேர் வீதம் 100 பேர் தெரிவு செய்யப் படுவர். பதவிகாலம் 6 வருடம். ஆனால் இருவருடத்துக்கு ஒரு தடவை 1/3 பங்கினர் பதவி விலக புதிய உறுப் பினர் சேர்த்துக் கொள்ளப்படு கின்றனர். | **பிரபுக்கள் சபை**<br>தற்போது பரம்பரைப் பிரபுக்கள் 92பேரும், சமயப்பிரபுக்கள் 26பேரும், சட்டப்பிரபுக்கள் 9 பேரும், ஸ்கொட்லாந்துப் பிரபுக்கள்16பேரும் அங்கம் வகிக்கின் றனர். பரம்பரைப் பிரபுக்கள் அரசியற் கட்சிகளினால்பெயர் குறித்து நியமிக்கப் படுகின்றார். சமயப் பிரபுக்கள் இங்கி லாந்து திருச்சபை யின் பிரதிநிதி களாகஉள்ளனர். சட்டப்பிரபுக்கள் | **மாநிலங்கள் அவை**<br>இது 250 உறுப்பினர்களை கொண்டது. இதில் 12 பேர்கலை, இலக் கியம், அறிவியல், ஆகிய துறை களுக்கு ஆற்றிய பணி காரணமாக ஜனாதிபதியால் தெரிவு செய்யப் படுவர். பதவிக் காலம் 6 வருடம் இதில் 1/3 பங்கினர் இருஆண்டுகளுக்கு ஒரு தடவை பதவி விலக புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். | **செனட் சபை**<br>இது 293 உறுப்பினர்களை கொண்டது இவர்கள் மறை முகமுகமான முறையில் மக்களால் தெரிவு செய்யப்படுவர். பதவிக்காலம் 9 வருடம். ஆனால் 3 வருடங் களுக்கு ஒரு தடவை 1/3 பங்கினர் பதவி விலக புதியவர் நியமிக்கப்படுவர். | **தேசிய இனங்களின் சோவியத்**<br>இது நாட்டில் உள்ள தேசிய இனங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் 720 உறுப் பினர்களைக் கொண் டது.5வருட பதவிக்- காலம். உறுப்பினர் பின்வருமாறு தெரிவு செய்யப்படுவர்.<br>i. ஒன்றியக் குடியரசு - 32<br>ii. தன்னாட்சி குடியரசு - 11<br>iii. தன்னாட்சி பிராந்தியம் - 5<br>iv. தன்னாட்சி பகுதி - 1 |

| அதிகாரங்கள் சட்டத்துறை தொடர்பானவை | பிரதிநிதிகள் சபை | பொதுமக்கள் சபை | மக்களவை | தேசியச் சபை | ஒன்றியங்களின் சோவியத் |
|---|---|---|---|---|---|
| | | முடியினால்நியமிக் கப்படுகின்றனர். ஸ்கொட்லாந்துப் பிரபுக்களின் பிரதிநி கள் ஸ்கொட்லாந்து பிரபுக்களை நியமி கின்றனர். | | | ஒரு தலைவர், நான்கு துணைத் தலைவர் காணப்படுவர். |
| | சாதாரண மசோதாக்களை அறிமுகம்செய்ய லாம். நிதிமசோதா இங்குமட்டுமே அறி முகம் செய் யப்படும். யாப்பு திருத்தம் இரு சபையிலும் 2/3 பெரும் பான் மையு டன் திருத்தப்படல் வேண்டும். | சாதாரண மசோ தாக்களை அறிமுகம் செய்ய லாம். நிதிமசோதா இங்குமட்டுமே அறி முகம் செய் யப்படும். யாப்பு திருத்தம் இரு சபையிலும் 2/3 பெரும் பான் மையு டன் திருத்தப் படல் வேண்டும். | மத்திய பட்டியல், பொதுப் பட்டியல் விடயங்களில் சட்டமியற்றும் அதிகாரம் இதற்கு உண்டு. நிதி மசோதாக்கள் இங்கு மட்டுமே அறிமுகம் செய்யப்படும். 2ம் மன்றத்தின்கருத்தை மீறி செயற்படும் அதிகாரம் இதற்கு | தேசிய சபை, செனட் சபை இரண்டுமே சட்டங் களை இயற்றலாம். நிதி மசோதா இங்கு மட்டும் அறிமுகம் செய்யப்படும். அர சியல் யாப்பு திருத்த மசோதா இங்கும் நிறைவேற்றப் பட வேண்டும்.இணக்கம் காணமுடியாத | நாடு முழுவதும் எல்லா விடயம் தொடர்பாக சட்டமி-யற்றல் சட்டங்கள் அனைத் தும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறை வேற்றப்படும். யாப்புதிருத்த மசோதாபெரும்பான் மையுடன் நிறை வேற்றப்படும். |



| | செனட் சபை | பிரபுக்கள் சபை | மாநிலங்கள் அவை | செனட் சபை | தேசிய இனங்களின் சோவியத் |
|---|---|---|---|---|---|
| | | | உண்டு. இதன்வரவு செலவுதிட்டத் தினை மாநிலங்கள் அவை ஏற்றே ஆக வேண்டும். | விடயங் கள் இதன் விருப்பப்படியே நடை பெறும் | வரவு செலவு திட்டம் இதன் ஒப்புதலை பெறவேண்டும். புதிய குடியரசுகளை சேர்க்க, மாற்ற இதற்கு அதிகாரம் உண்டு. |
| | சட்டமியற்றலில் பிரதிநிதிகள் சபையுடன் அதிகாரங்களை பகிர்கின்றது. நிதி மசோதாவை இங்கு கொணர முடியாது. ஆனால் அதன் தலைப்பை தவிர ஏனையவற்றை திருத்தும் அதிகாரம் உண்டு. | சட்டங்களை இங்கும் அறிமுகப்-படுத்தலாம்,நிதி மசோதாவை இங்கு அறிமுகப் படுத்த முடியாது மசோதாக்கள் இங்கும் நிறைவேற் றப்படல் வேண்டும். நிதிமசோதாவினை ஒருமாதத்திற்கு மேலும்சாதாணர | சட்டமியற்றலில் மக்களவையுடன் இது அதிகாரங் களை பகிர்கின்றது. நிதிமசோதாக்களை இங்கு அறிமுகம் செய்யலாம். நிதி மசோதா தொடர் பான மாற்றங்கள் பரிந்துரைகளை மசோதாவை பெற்ற 14 நாட்களுக்குள் | நிதி மசோதாக்கள் தவிர்ந்த ஏனைய வற்றை இங்கும் அறிமுகப்படுத்த முடியும். அவசர கால நிலையினைப் பிரகடனப்படுத்த முன்னர் இச்சபை யுடன் கலந்தா லோசிக்க வேண்டும்.மக்கள் தீர்ப்பிற்கும்இதன் | ஒன்றியங்களின் சோவியத்துடன் எல்லாவிடயங்களி லும்சமமான அதி காரங்களைக் கொண்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மசோதாக்களை ஒரு வருடத்திற்கு மேலும் தாமதப் படுத்தி வைத்திருக்க முடியாது. ஒப்பீட்டு ரீதியில் சட்ட ஆக்கம் தொடர்பாக பொது மக்கள் சபையினைவிட குறைந்த அதிகாரத்தையினை யே பெற்றுள்ளது. | அனுப்புதல் வேண்டும். | சம்மதம் தேவை. | |
| **சட்டப் பிணக்கு தீர்த்தல்** | சட்டவாக்கம் தொடர்பாக பிணக்கு ஏற்படும் பட்சத்தில் இரு சபையில் இருந்தும் சமமாக 3 - 9 பேர் வரையிலான உறுப்பினர்கள் | சட்டபிணக்குகளின் போது பொது மக்கள் சபையின் முடிவே இறுதியான தாகும். | சட்டப்பிணக்கு ஏற்படும் போது ஜனாதிபதி கூட்டுக் கூட்டத் தொடரை கூட்டி மசோதாவை வாக்கெடுப்பிற் விடுவார். பெரும் பான்மை வாக்குப் | சட்டவாக்கம் தொடர்பாக பிணக்கு ஏற்படும் பட்சத்தில் இரு சபையில் இருந்தும் சமனானஉறுப்பினர் தெரிவு செய்யப் பட்டு முடிவு பெற | சட்டப் பிணக்கு ஏற்படும் போது இரு சபையில் இருந்தும் சமனாக உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டு இக்குழுவின் ஆலோசனைப்படி மாற்றங்கள் |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இணைந்து உருவான இணைப் புக் குழு மூலம் பிரச்சினை தீர்க்கப் படும். | | படி முடிவு செய்யப் படுகின்றது. | முடியும். இல்லா விட்டால் தேசிய சபையில் அது ஒப்படைக்கப்படும். | மேற்கொள்ளப்படும். அதிலும் திருப்தி-யான பதில் கிடைக் -காவிட்டால்மக்கள் தீர்ப்புக்குவிடப் படும். |
| **அதிகாரங்கள்** **நிர்வாகத்துறை தொடர்பானவை** | **பிரதிநிதிகள் சபை** | **பொதுமக்கள் சபை** | **மக்களவை** | **தேசிய சபை** | **ஒன்றியங்களின் சோவியத்** |
| | அமெரிக்க அரசியல் யாப்புப் படி சட்டத்துறைக் கும் நிர்வாகத் துறைக்கும் நேரடி தொடர்பு இல்லை. வரவு செலவு - திட்டத்தை அங்கீகரித்தல், ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மையை யாரும் பெறாத பட்சத்தில் முதல் | அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும்உரிமையுண்டு பிரதமர் உட்பட பெரும்பான்மையான அமைச்சர்கள் இச் சபையிலிருந்தே நியமிக்கப்படுகின் றனர். அமைச்சர் களை கேள்வி கேட்கும் உரிமை சபை உறுப்பினர் களுக்குண்டு | பிரதம மந்திரி உட்பட பெரும்பான் பான்மை அமைச்சர்கள் இங்கிருந்தே தெரிவு செய்யப்படுகின்றனர். அமைச்சரவை இச்சபைக்கு பொறுப்புடையது. அமைச்சரவையை பதவி நீக்க, அவர்களின் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு | அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் அதிகாரம். உண்டு | பிரிசீடியம். அமைச்சரவை உறுப்பினர்களை தெரிவு செய்தல். அமைச்சரவை சுப்ரீம் சோவியத்திற்கு பொறுப்பானது அது கூட்டத் தொடரில் இல்லாத காலங் களில் பிரிசீடி யத்துக்கு பொறுப்-பானது. அமைச்சர வையை பதவிநீக்கும் அதிகாரம். ஆட்சித் |

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்று நிலையில் உள்ள ஒருவரை ஜனாதிபதியாக தெரிதல். போர், அமைதி பிரகடனம் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளல் புதிய மாநிலங்களை அங்கீகரித்தல், மத்திய அரசு அதிகாரங்களை பதவி நீக்கல். | அதற்குபதிலளிக்க வேண்டிய கடமையும் அமைச்சர் களுக்குண்டு.நிதிக் கட்டுபாடுவிதிக்கும் அதிகாரமும் இச் சபைக்குண்டு. இச் சபையிலிருந்தே நியமிக்கப்படுகின்றனர். அமைச்சர் களை கேள்வி கேட்கும் உரிமை சபை உறுப்பினர் களுக்குண்டு அதற்குபதிலளிக்க வேண்டிய கடமையும் அமைச்சர் களுக்குண்டு.நிதிக் கட்டுபாடு விதிக்கும் அதிகாரமும் இச் சபைக்குண்டு. | வர. அவர்களின் பணி தொடர்பாக கேள்விஎழுப்ப அமைச்சரவை அதற்கு பதிலளிக்க வேண்டிய கடமை என்பன உண்டு. மேலும் வரவு செலவு திட்டம் இச்சபையின் அங்கீகாரம் பெற வேண்டும். ஜனாதிபதியை பதவி நீக்கும் தீர்மானம் இங்கு கொண்டு வரலாம். துணை ஜனாதிபதியை பதவி நீக்கும் தீர்மானம் இங்கும் நிறைவேற்றப்படல் வேண்டும். | அமைச்சரவையை கேள்வி கேட்கும் உரிமையுண்டு அதற்கு பதிலளிக்க வேண்டிய கடமைகளும்அமைச்சர் களுக் குண்டு. அமைச்சர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை ஜனாதிபதியை பதவி நீக்கும் தீர்மானம் இச் சபையிலும் நிறைவேற்றப்படல் வேண்டும். | தொடர்பான அமைச்சரவை உறுப்பினர் களை கேள்வி கேட்கும் அதிகாரம், சட்டத் துறையை விமர்சிக்கும் அதிகாரம், புலனாய்வு மற்றும் தணிக்கை செய்யும் அதிகாரம், குழுக்களை நியமித்தல், வெளி நாட்டு ஒப்பந் தங்களை மேற்கொள்ளல், போன்ற அதிகாரங்கள் உள. போர்ப் பிரகடனம், அமைதி பிரகடனம் செய்தல், உயர்பதவி நியமனங்கள்,தேசிய பொருளாதார திட்டம், வரவு செலவு திட்டம் என்பன மேற்கொள்ளும் போது இதன் அங்கீகாரம் பெறல் வேண்டும். |



| சென்ற் சபை | பிரபுக்கள் சபை | மாநிலங்கள் அவை | சென்ற் சபை | தேசிய இனங்களின் சோவியத் |
|---|---|---|---|---|
| ஜனாதிபதியின் நியமனங்கள், வெளிநாட்டு ஒப்பந்தங்கள் என்பனவற்றுக்கும் செனட் சபையின் சம்மதம் பெறல் அவசியம். | நீதிஅமைச்சர் உட்பட இரண்டிற்கு குறையாதஅமைச்சர்கள் இச் சபையிலிருந்தே தெரிவு செய்யப்படுகின்றனர். அமைச்சர்களை கேள்விக் கேட்கும் உரிமை சபை உறுப்பினர்களுக் குண்டு.அதற்குப் பதிலளிக்கும் கடமையும் அமைச்சர் களுக்குண்டு. | நிர்வாகத்துறைக்கு பொறுப்பான அமைச்சர்கள் இங்கிருந்தும் தெரிவு செய்யப்படுவதோடு, கூட்டங்களுக்கும் இவர்கள் வருகை தருகின்றனர். அமைச்சர்களிடம் கேள்வி எழுப்ப அவர்கள் அதற்கு பதிலளிக்க . வேண்டிய கடமை உண்டு. அமைச்சரவை இச்சபைக்கு பொறுப்பானதல்ல. | அமைச்சர்களை கேள்விக் கேட்கும் உரிமையுண்டு. அதற்கு பதில் அளிக்க வேண்டிய கடமை அமைச்சர் களுக்குண்டு ஜனாதிபதியை பதவி நீக்கும் தீர்மானம் இச்சபையிலும்நிறைவேற்றப்படல் வேண்டும் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்றும் அதிகாரம் செனற்சபை தலைவருக்கு உண்டு. | ஒன்றியங்களின் சோவியத்திற்கு உள்ள எல்லா நிர்வாக அதிகாரங்களும் உண்டு. |

| அதிகாரங்கள் நீதித்துறை தொடர்பானவை | பிரதிநிதிகள் சபை | பொதுமக்கள் சபை | மக்களவை | தேசியச் சபை | ஒன்றியங்களின் சோவியத் |
|---|---|---|---|---|---|
| | ஜனாதிபதி மீதான குற்றப் பிரேரணை இங்கே அறிமுகம் செய்யப்படும். மத்திய அரசின் நீம உருவாக்கல், நீதிபதிகளின் சம்பளம், பிற சலுகைகளை தீர்மானித்தல், தலைமை நீதிபதியை விசாரணை செய்து பதவி நீக்கல். | நீதிபதிகளை பதவிநீக்கும் அதிகாரம் உண்டு. | ஜனாதிபதி மீதான குற்ற விசாரணை பிரேரணையை அறிமுகம் செய்தல், தலைமை நீதிமன்ற நீதிபதிகள் மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகள் என் போரை பதவி நீக்கும் தீர்மானம் இச் சபையில் நிறைவேற்றப்படல் வேண்டும். மாநிலங்கள் அவை ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணை கொணந்தால் அதை விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு. | உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல் பதவி நீக்கும் அதிகாரம் உண்டு. | உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல், பதவி நீக்கல். |



| அதிகாரங்கள் நீதித்துறை தொடர்பானவை | பிரதிநிதிகள் சபை | பொதுமக்கள் சபை | மக்களவை | தேசியச் சபை | ஒன்றியங்களின் சோவியத் |
|---|---|---|---|---|---|
| | ஜனாதிபதி மீதான குற்றப் பிரேரணை இங்கே அறிமுகம் செய்யப்படும். மத்திய அரசின் நீம உருவாக்கல், நீதிபதிகளின் சம்பளம், பிற சலுகைகளை தீர்மானித்தல், தலைமை நீதிபதியை விசாரணை செய்து பதவி நீக்கல். | நீதிபதிகளை பதவிநீக்கும் அதிகாரம் உண்டு. | ஜனாதிபதி மீதான குற்ற விசாரணை பிரேரணையை அறிமுகம் செய்தல். தலைமை நீதிமன்ற நீதிபதிகள் மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகள் என் போரை பதவி நீக்கும் தீர்மானம் இச் சபையில் நிறைவேற்றப்படல் வேண்டும். மாநிலங்கள் அவை ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணை கொணந்தால் அதை விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு. | உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல் பதவி நீக்கும் அதிகாரம் உண்டு. | உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல், பதவி நீக்கல். |

| அதிகாரங்கள் நீதித்துறை தொடர்பானவை | பிரதிநிதிகள் சபை | பொதுமக்கள் சபை | மக்களவை | தேசியச் சபை | ஒன்றியங்களின் சோவியத் |
|---|---|---|---|---|---|
| | ஜனாதிபதி மீதான குற்றப் பிரேரணை இங்கே அறிமுகம் செய்யப்படும். மத்திய அரசின் நீம உருவாக்கல், நீதிபதிகளின் சம்பளம், பிற சலுகைகளை தீர்மானித்தல், தலைமை நீதிபதியை விசாரணை செய்து பதவி நீக்கல். | நீதிபதிகளை பதவிநீக்கும் அதிகாரம் உண்டு. | ஜனாதிபதி மீதான குற்ற விசாரணை பிரேரணையை அறிமுகம் செய்தல், தலைமை நீதிமன்ற நீதிபதிகள் மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகள் என் போரை பதவி நீக்கும் தீர்மானம் இச் சபையில் நிறைவேற்றப்படல் வேண்டும். மாநிலங்கள் அவை ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணை கொணந்தால் அதை விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு. | உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல் பதவி நீக்கும் அதிகாரம் உண்டு. | உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல், பதவி நீக்கல். |

## நிர்வாகத்துறை - அமைச்சரவை குறிப்பாக

| | அமெரிக்கா | இங்கிலாந்து | இந்தியா | பிரான்ஸ் | சோவியத் யூனியன் |
|---|---|---|---|---|---|
| அமைப்பு | நிர்வாகத் துறை அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது. அமெரிக்க அரசியல் யாப்பின் படி அமைச்சரவையின் தேவை பற்றி கூறப்படவில்லை. எனினும் வழக்காற்றின் அடிப்படையில் ஓர் அமைச்சரவை வளர்ந்து நடைமுறையில் உள்ளது. நிர்வாகத்துறையில் உள்ள பல துறைகளுக்கு செயலாளர்களை நியமித்துக் கொள்ள யாப்பு இடமளிக்கின்றது. இதன்படி ஜனாதிபதி | நிர்வாகத்துறையாகஅமைச்சரவை உள்ளது. பிரதமரையும்,ஏனைய அமைச்சர்களையும் கொண்டகுழுவே அமைச்சரவை என அழைக்கப்படுகின்றது.பிரதமர்அமைச்சரவையின் தலைவராக விளங்குவார். | நிர்வாகத் துறையின் தலைவராக பிரதமர் விளங்குவார். அமைச்சரவை பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் கொண்ட குழுவாகும். | ஜனாதிபதியும் அமைச்சரவையும் அதிகாரத்தை பங்கிட்டு கொள்கின்றது.பிரதமரையும் ஏனையும் அமைச்சர்களையும் கொண்ட குழுவே அமைச்சரவை எனப்படும். | சோவியத் யூனியனின் நிர்வாகத் துறை இரு வகைப்படும்.<br>i. பிரிசீடியம்<br>ii. அமைச்சரவை<br>இது 39 உறுப்பினர்களைக்கொண்டது பதவி காலம் 5 வருடங்கள் இது ஒரு தலைவரையும், ஒருமுதல் துணைத் தலைவரையும், 16 குடியரசுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 16 துணைத் தலைவர்களையும் கொண்டது இதன் தலைவரே நாட்டின் ஜனாதிபதியாகவும்,கம்யூனி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நியமிக்கின்ற இத் தலைவர்கள் அமைச்சர்களாக செயற்படுகின்றனர். பொதுவாகஇவர்கள் செயலாளர்கள் என்றே அழைக்கப் படுகின்றனர். | | | | ஸ்ட்கட்சியின் பொதுச் செயலாளராகவும் பதவி வகிப்பார். |
| **அதிகாரங்கள்** **சட்டத்துறை தொடர்பானவை** | | பாராளுமன்ற கூட் டத் தொடரை தீர்மானித்தல், நிகழ்ச்சி நிரலைத் தீர்மானித்தல், அரசாங்கமசோதாக் களை உருவாக்கு தல்மசோதாக்களை அமைச்சரவையின் அனுமதியுடன் | பா/ம தேவையான மசோதாக்களை உருவாக்குதல் அவற்றை பா/ம அறி முகம் செய்தல், மசோதா தொடர்பான விமர்சனங்களுக்கு பதில் அளித்தல். அவசரகால சட்டங் | | சுப்ரீம் சோவியத் தின் கூட்டத்தொடர் களை கூட்டுதல் தேர்தலை நடாத்து தல் சுப்ரீம் சோவி யத் கூட்டத் தொட ரில் இல்லாத காலத் தில் அவசர சட்டங் களை இயற்றுதல். சுப்ரீம் சோவியத் |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல், நிறை உதவுதல், பாராளு மன்றம் கூட்டத் தொடரில்இல்லாத சந்தர்ப்பங்களில் சட்டங்களை ஆணைகள் மூலம் உருவாக்குதல்,ஒப் படைக்கப்பட்ட சட்டங்களை இயற் றுதல் . பாராளு மன்றத்தில் வரும் கேள்வி களுக்கு பதில்களை வழங் குதல் என்பன அமைச்சரவையின் சட்டத்துறை தொடர்பான பணி களும் அதிகாரங் களும் ஆகும். | களை உருவாக் குதல்,ஜனாதிபதி ஆற்றும் தொடக்க உரையைதயாரித் தல் . பா/ம உறுப் பினர்கள் கேட்கும் வினாக்களுக்கு பதில் அளித்தல். | | தால் நிறைவேற்றப் பட்ட மசோதா பிரி சீடியத்தின் தலை வர் மற்றும் செய லாளர் கையொப் பங்களை பெற்ற பின்னர் வெளியி டல். சுப்ரீம் சோவியத் நிறைவேற்றி அனுப்பு கின்ற மசோதாவை மக்களின் ஒப்புதல் பெற மக்கள் வாக் கெடுப்பிற்கு விடல். (இவ்வதிகாரம் பின் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அதிகாரங்கள்** **நிர்வாகத்துறை தொடர்பானவை** | நிர்வாகத்துறை தொடர்பான விடயங்களில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் கடமை அமைச்சரவைக்கு உண்டு. ஆனால் ஜனாதிபதி அதை கேட்ககட்டாயமில்லை அமைச் சர்கள் காங்கிரஸின்குழுக்களின்முன் தோன்றி மசோதா தொடர்பான ஜனாதிபதியின் கருத்தை விளக்கவும், நிர்வாகத் துறையின்கருத்தை விளக்கவும் அதிகாரம் பெற்றுள்ளனர். | நாட்டின் முக்கிய கொள்கைமுடிவுகளைத் தீர்மானிதல்.தேசியரீதியாக வும்சர்வதேசரீதியாகவும் வரும் பிரச்சினைகளைத் தீர்த்தல் திணைக்களங்களையும்,அமைச்சுக்களையும்மேற்பார்வை செய்தல். வரவு செலவுதிட்டத்தினை தயாரித்தல்.வெளி நாட்டுகொள்கையினைத்தீர்மானித்தல் போன்றனஅமைச்சரவையின்நிர்வாகத் துறை தொடர்பான பணிகளும்அதிகாரங்களுமாகும். | அமைச்சர்கள் தாம் பொறுப்பெடுத்த துறையை நிர்வகித்தல். வரவு செலவு திட்டத்தினை தயாரித்தல். முக்கிய பதவி நியமனங்களை ஜனாதிபதிக்கு பரிந்துரைசெய்தல். நெருக்கடி நிலை பிரகடனம் தொடர்பாக எழுத்து வடிவில்ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல். | நாட்டின் கொள்கைகளை முடிவு செய்தல். போர்க் காலங்களில் படையினரின் நிர்வாகத்தை மேற்கொள் எல். அமைச்சு தொடர்பான ஆணைகளில் அவ் அவ் அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சர்கள் கையொப்பம் இடல் வேண்டும். | நாட்டின் அரசியல் யாப்பு ஒழுங்காக பின்பற்றப்படுகின்ற-தா என கண்காணித்-தல். ஒன்றியக் குடி-யரசுகளின் சட்டங்களும், அரசியல் யாப்போடுஒவ்வும் வகையில் அமைந்துள்ளனவா என கண் காணித்தல் பிரதமரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை நியமித்தல் நீக்குதல். வெளி நாட்டுஉடன்படிக்கைகளை ஏற்றுஒப்புதல் அளித்தல்வெளிநாட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல். |
| | | | | | வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தல். |
| **அதிகாரங்கள்** **நீதித்துறை தொடர்பானவை** | | குற்றவாளிகளுக்குமன்னிப்பு வழங்குதல், தண்டனையைகுறைத்தல் தொடர்பாகமுடிக்கு ஆலோசனை வழங்குதல்பிரபுக்கள் சபையின் தலைவரான சான்சலர் பிரபு நீதியமைச்சராக இருப்பதுடன் நீதிபதிகளை நியமிக்கும் விடயத்திலும் அதிகாரங்களைப் | நீதித்துறை நியமனம் தொடர்பாக ஜனாதிபதிக்குஆலோசனை வழங்கல், குற்ற மன்னிப்பு, பொது மன்னிப்பு வழங்கல் போன்ற விடயங்களில் ஜனாதி பதிக்கு ஆலோசனை வழங்கல். சில குறிப்பிட்ட நிகழ்ச்சி or குற்றம் தொடர்பாக நீதி விசாரணை ஆணைக்குழு | | தனி நபர்களின் குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்கல் மத்திய அரசாங்கத்தின் சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளித்தல். மத்திய அரசாங்கத்தின் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களின் குற்றங்களில் குற்ற மன்னிப்பு வழங்கல். அமைச்சரவைமேற்-கொள்ளும் முடிவுகளில் நாட்டின் |

சட்டத்திற்குஎதிராக இருந்தால் செல்லாது என தீர்ப்பளித்தல்.

**அமைச்சரவை**

இது ஒரு தலைவர், ஒரு முதல் துணைத் தலைவர், துணைத் தலைவர்கள், அமைச்சர்கள், அரசுக் குழுக்களின் தலைவர்கள் என் போரைக் கொண்ட அமைப்பு ஆகும். இவ் அமைச்சரவையில் இரு விதமான அமைச்சர்கள் காணப்படுகின்றார்கள்.

பெற்றிருத்தல் என்பன நீதித்துறை தொடர்பானபணிகளும் அதிகாரங்களுமாகும்.



மத்திய அரசுக்குரிய அமைச்சர்கள் இவர்கள் தேசியபொருளாதாரத்துடன் தொடர்புடைய திணைக்களங்களை நிர்வகிப்பர். குடியரசுக்குரிய அமைச்சர்கள் இவர்கள் குடியரசின் உதவியுடன் செயலாற்ற வேண்டிய அமைச்சர்கள் இவ் அமைச்சரவை உறுப்பினர் அனைவருமே சுப்ரீம் சோவியத்தின இரு சபை களில்இருந்தும்தெரிவு செய்யப்படுவர்.அமைச்சரவையின் தலைவர்பிரதமர் ஆவார். 50க்கும்

மேற்பட்டஅமைச்சர்கள் உள்ளதால் அமைச்சரவைதலைமைக் குழு ஒன்றும் காணப்படுகிறது.



**பணிகளும், அதிகாரங்களும்**

வரவு செலவுத் திட்டம். தேசிய பொருளாதாரத் திட்டம் என்பனவற்றை உருவாக்குதல். பொருளாதார அறிவியல் தொழில் சார்ந்தநிறுவனங்களைநிர்வகித்தல். சர்வதேச உடன்படிக்கையில் உள்ள விடயங்களைநடைமுறைப்படுத்தல். குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாத்தல் நாட்டின் பாதுகாப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நடவடிக்கைகளை மேற்கொள்ளல். வெளி நாடுகளுடன் வர்த்தக கூட்டுறவு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல். ஒன்றியக் குடியரசு களின்அமைச்சர் கள் எடுக்கும் முடிவு களை மத்திய அரசு க்கு பாதகமாக இருந்தால் ரத்து செய்தல். |



## நீதித்துறை

| | அமெரிக்கா | இங்கிலாந்து | இந்தியா | பிரான்ஸ் | சோவியத் யூனியன் |
|---|---|---|---|---|---|
| **அமைப்பு** | அமெரிக்காவில் மத்திய அரசின் நீதித்துறை, மாநில அரசின் நீதித்துறை என இருவகையான நீ/ம காணப்படுகின்றன. இவற்றில்மத்திய அரசின் அரசியல் யாப்பினால் உருவாக்கப்பட்ட நீதிமன்றம் உயர் நீதிமன்றம் ஆகும். ஏனைய<br>i. சிறப்பு நீ/ம<br>ii. மேன்முறையீட்டு நீ/ம.<br>iii. மாவட்ட நீ/ம<br>என்பன காங்கிரசினால் உருவாக்கப்பட்டவை ஆகும்.<br>மாநிலங்களை பொறுத்தவரை | இங்கிலாந்தில் குடியியல்நீதிமன்றம்,குற்றவியல் நீதிமன்றம் எனஇருவகையானநீதிமன்றங்கள் உள்ளன.<br>குடியியல் நீதிமன்றங்களாக மாவட்ட நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றம் என்பன உள்ளன.உயர்நீதிமன்றம் அரசியின் நீதிமன்றப் பிரிவு, நீதித்துறைமுதல்வர் மன்றப் பிரிவு,விறுப்புறுதி மெய்ப்பிதம், விகாரத்துகடற்படைத் துறைப்பிரிவு என மூன்றாக பாகுபடுத்தப்பட்டுள்ளது. | இந்தியாவில் மத்திய அரசிற்கும் மாநிலஅரசுகளுக்குமெனதனித்தனியான நீதித்துறை இல்லை. ஒற்றை நீதித்துறையே காணப்படுகின்றது. உச்சநீதிமன்றம் மிக உயர்ந்தநீதிமன்றமாகும். இதற்கு கீழ் உயர் நீதிமன்றம் உள்ளது. கீழ்நிலை நீதிமன்றங்களில் மாவட்டநீதிமன்றங்கள் பிரதானமானவையாக உள்ளன. | பிரான்சின்சாதாரண நீதிமன்றங்கள், ஆட்சித் துறை நீதிமன்றங்கள் என இரு வகையான நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. சாதாரணநீதிமன்றம் இரு வகையாக காணப்படுகின்றன.<br>i. குடியியல் நீதிமன்றம்<br>ii. குற்றவியல் நீதிமன்றம்<br>குடியியல் நீ/ம பின்வரும் பிரிவு நீ/ம காணப்படுகின்றன.<br>i. அமைதிகாண் நீ/ம<br>ii. முதல் நீ/ம<br>iii. மேன்முறையீட்டு நீ/ம<br>iv. உயர் நீ/ம | மாக்சிஸ, லெனிஸ தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நீதித்துறை உருவாக்கப்பட்டது. ஏனைய நாடுகளைப் போல் நீதிபதிப்பதவி ஒரு வாழ்க்கைக் கால பதவியாக இங்கு காணப்படவில்லை. சட்டத்தகுதியும் நீதிபதிகளுக்கு தேவை இல்லை. நாட்டின் மிகப்பெரிய நீதிமன்றம் தலைமை நீதிமன்றம் இது சிவில் குழு கிரிமினல் குழு இராணுவக் குழு இரும்புப் பாதைக் குழு நீர்ப்போக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒவ்வொரு மாநிலத் திற்கும் ஒரு தலைமை நீ/ம உண்டு. அதுவே உயர் அந்தஸ்து கொண்ட நீதிமன்றமாக விளங்கும். இதைவிட இங்கு<br>i. இடைநிலை மேல் விசார ணை நீதிமன்றம்<br>ii. மாவட்ட நீதிமன்றம் என்பன உண்டு. | இதை விடவர்த்தக ஒப்பந்த நீதிமன்றம் ஒன்றும் உள்ளது இந்நீதிமன்றங் களிலிருந்து மேன்முறையீடு களைமேன்முறை யிட்டுநீதிமன்றத்திற் கும்பின்னர்பிரபுக்கள் சபைக்கும்முறையீடு செய்யலாம். குற்ற வியல் நீதிமன்றங் களாகஅமைதிகாண் நீதிமன்றங்கள், உதவி பெறும் . குற்றவியல் நீதிமன்றம் உதவிப் பணம் பெறும் தலை நகர நீதிமன்றம் இளம்குற்றவாளிகள் நீதிமன்றமும் - திருமணம் சார்ந்த நீதிமன்றம் மணி முடிநீதிமன்றம் | | குற்றவியல் நீ/ம பின்வரும் பிரிவு நீ/ம உள்ளன.<br>i. காவல் துறை நீ/ம<br>ii. திருத்த நீ/ம<br>iii. முறையீட்டு நீ/ம<br>iv. உயர் நீ/ம<br>(குடியியல் உயர் நீ/மன்றம் இங்கும் உயர் நீ/மன்றம் விளங்குகின்றது. ஆட்சித்துறை நீதிமன்றங்களில் பின்வரும் பிரிவு நீ/ம உள்ளன.<br>i. துறைகளுக்கு இடையிலான குழுக்கள்.<br>ii. அரசுக்குழு<br>iii. பூசல் ஒழிப்பு நீ/ம<br>iv. உயர் நீ/ம | வரத்துக் குழு என 5 பிரிவாக தொழிற் படுகிறது. இதை விட நாட்டின் மிகச் சிறிய நீதிமன்றமாக மக்கள் நீதிமன்றம் தொழிப் படுகிறது. சம்பிர- தாயங் களுக்கு அப்பாற் பட்ட நீதி மன்றமாக தோழமை நீதிமன்றம் விளங்குகிறது. மேலும் ஒன்றியக் குடியரசுகளில் ஒவ்வொரு ஒன்றியத் தலைமை நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | என்பன உள்ளன. இந்நீதிமன்றங்களின் மேன்முறையீடுகளை முதலில் மேன் முறையீடுட் நீதி மன்றத்திற் கும் பின்னர் பிரபுக்கள் சபைக்கும் முறையீடு செய்யலாம். | | | |
| **நீதிப்புனராய்வு அதிகாரம்** | அமெரிக்க நீதித்துறையில் உயர் நீதிமன்றத் திற்கு நீதிப்புனரய்வு அதிகாரம் உண்டு. | உள்ளன. இவ்நீதி மன்றங்களிலிருந்து மேன்முறையீடுகளை முதலில்மேன்முறை யீட்டுநீதிமன்றத்திற் கும்பின்னர்பிரபுக்கள் சபைக்கும் முறையீடு செய்ய லாம். இங்கிலாந்து நீதித்துறைக்கு நீதிப்புன -ராய்வு அதிகாரம் இல்லை. | இந்திய நீதித்துறை யில் தலைமை நீ/ம நீதிப்புனராய்வு அதிகாரம் பெற்ற நீதிமன்றமாகவும் விளங்குகிறது. | பிரான்சிய நீதித் துறைக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் வழங்கப் படவில்லை. அது அரசியல் குழுவிட- மே வழங்கப்பட்டுள் ளது. | சோவியத் யூனியனின் நீதித் துறைக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் இல்லை. |

## கட்சிமுறை

| | அமெரிக்கா | இங்கிலாந்து | இந்தியா | பிரான்ஸ் | சோவியத் யூனியன் |
|---|---|---|---|---|---|
| கட்சிமுறை | அமெரிக்கா இரு கட்சி முறையை பின்பற்றும் ஒரு நாடாகும். இங்கு குடியரசு கட்சி ஜனநாயக கட்சி என இரு கட்சிகள் காணப் படுகின்றன. குடியரசு கட்சி மாநிலங்களுக்கு அதிக அதிகாரங் களை வழங்க வேண்டும் என கூறும் கட்சியாக உள்ளது. ஜனநாயக கட்சி மத்திய அரசுக்கு அதிகாரம் வேண்டும் என வலியுறுத்தும் கொள்கை உடையது. அமெரிக்காவில் கட்சிகள் வெறும் தேர்தல் தொகுதி இயந்திரங்களாகவே கணிக்கப்படுகின்றன. ஏனெனில் அவை தேர்தல் காலங்களில் மட்டும் உயிர் பெற்று பிரசார வேலைகளில் சுறுசுறுப்பாக இயங்கும். ஏனைய நாடுகளில் உள்ள கட்சிகளைப் போல இவை அரசாங்கத்தின் செயற்பாட்டிலோ, ஆட்சிதுறை விடயங்களிலோ செல்வாக்கு செலுத்துவது கிடையாது. | இங்காலாந்தில் இரு கட்சிமுறை நிலவு கின்றது. பலகட்சி கள் செயற் படுகின்ற போதும் தொழிற்கட்சியும், கன்சேர்வடிங் கட்சியுமேமாறி மாறி ஆட்சியினை அமைக்கக்கூடிய கட்சிகளாகவும் உள்ளன. இவ்விரு கட்சிகளையும் விட பிரித்தானிய லிபரல் கட்சி கம்யூ னிஸ்ட் கட்சி பிரித் தானிய யூனியனின் பாஸிஸ்குகள், வேல்ஸ் தேசியக். கட்சி ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி, அர் ஸ்டர் யூனியனிஸ்ட் கட்சி, சமூக தொழிலாளர் கட்சி சின் பெரின் கட்சி என்பனவும் செயற்படுகின்றன. | இந்தியா பல கட்சிமுறையைக் கொண்ட நாடாகும். இங்கு காங்கிரஸ் கட்சி பாரதீய ஜனதா கட்சி என்பன தேசிய அளவில் வளர்ச்சி யடைந்த கட்சி களாக விளங்கு கின்றன. எனினும் மாநிலங்களில் மாநிலக் கட்சிகள் அதிக செல்வாக்கு பெற்ற கட்சிகளாக விளங்குகின்றன. (உ+ம்) தமிழ் நாடு - திராவிட முன்னேற்ற கழகம், அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம். ஆந்திரா - தெலுங்கு தேசம் இதனால் தேசிய அளவிலான கட்சிகள் இரண்டும் மாநில கட்சிகளு டன் கூட்டணி அமைத்தே ஆட்சி யைஅமைக்கின் றன. இங்கு இரு அணிக்கூட்டு கட்சி முறை நிலவுகிறது எனலாம். இதைவிட இந்தியாவிலே சாதி ரீதியான, மதரீதி யான கட்சிகள் அதிக செல்வாக்கு உடைய கட்சிகளாக விளங்குகின்றன. இவை வன்முறை வழியை பின்பற்றும் கட்சிகளாகவும் உள்ளன. | பிரான்ஸ் பல கட்சிமுறையை பின்பற்றும் ஒரு நாடாகும் பொதுவுடமை கட்சி, சோசலிஸ கட்சி, மக்கள் குடியரசு இயக்கம், புதிய குடியரசுகளின் ஒன்றியம் என்பன நடைமுறையில் இயங்கும் கட்சி களாக உள்ளன. இவற்றுள் புதிய குடியரசு களின் ஒன்றிய கட்சியே தற்போது உள்ள யாப்பு முறையின் தாபகராக உள்ளது. இங்கு பல கட்சிகளும் செல்வாக்குள்ள கட்சிகளாக காணப்படுகின்றன. கட்சிகளின் கொள்கை களுக்கு இடையேயும் ஒருமைத் தன்மை காணப் படவில்லை. சில கட்சிகள் தீவிரவாத கட்சிகளாகவும், சில கட்சிகள் மிதவாத கட்சிகளாகவும் காணப்படுகின்றன. கட்சிகளிடையே ஒழுக்க கட்டுப் பாடுகள் கூட காணப் படுவதில்லை. | சோவியத் புரட்சியை திட்ட மிட்டு நடாத்திய போல்சேவிக் கட்சியே பின் கம்யூனிஸ்ட் கட்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது ஒரு கட்சி முறை யைக் கொண்ட சோவியத் யூனியன் அரசியல், சமூக, பொருளாதாரம் என சகலதுறைகளிலும் கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்கு செலுத்தியது. இது அரசின் அச்சாணியாக விளங்கியது. |

# உசாத்துணை நூல்கள்


## தமிழ் நூல்கள்

1 கோமதி நாயகம் . பி . (1991), **தற்கால அரசாங்கங்கள்**. மதுரை.

2 நடராஜன் ச. அ. (1996), **இந்திய அரசியல் சாசனம்**. சென்னை.

3 ஜெயபாலன் நா, ஜோசப். செ (1997), **தற்கால அரசாங்கங்கள்**. சென்னை.

4 கஷ்யப் . சி. சுபாஸ் (1997), **நமது அரசியலமைப்பு**. புதுடில்லி.

5 வள்ளுவன் கிளாரன்ஸ். மோ, (1972), **அரசியல் அமைப்புக்கள் ஓர் ஒப்பீடு**. **தமிழ்நாடு பாடசாலை நூல்**. சென்னை.

6 செங்கோட்டி. கே. (1978), **இங்கிலாந்தின் அரசாங்கமும் அரசியலும்**. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை.

7 கண்ணையா . வீ . (1972), **ஆங்கிலேயப் பாராளுமன்றம்** தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை.

8 செந்தில் நாதன். ச. (2000), **இந்திய அரசியல் சட்டம் ஒரு அறிமுகம்**. இந்திய மாணவர் சங்கம், சென்னை.

9 சிவராஜா . அ ( 2000 ) **ஒப்பீட்டு அரசியல்**. **குமரன் புத்தக இல்லம்**. கொழும்பு.

## ஆங்கில நூல்கள்

1 Appadurai .a . (1952) **The Substance of Politics, Madras**

2 Strong . C. F. **Modren Political Constitutions.**

3 Sharan .p, **Political organisation and Comparative Government.**

4 Sydney . D. Bailey . (1958) **British Parliamentary Democracy.**

5 Manro .W. B. **Goverment of Europe.**

6 Easton David. (1971) **Political Systems.**

7 Almond . G..A. (1972) **Comparative Politics.**

8 Monsma . S. V. (1973) **American Politics-a System Approach.**

9 Pickies, Dorothy (1978) **The Fifth French Re - public.**

10 Foreign Common Wealth office, **The uk's System of Goverment, London,**

11 Pyiee . M.V, **Constitutional Goverment of India.**

12 Palmer, Normand . D, **The Indian Political System.**

## இணையத் தளங்கள்

1 http : // www . direct . gov. uk.

2 http : // www . statistics . gov. uk.

3 www . labour . org. uk.

4 www . dup . org. uk.

5 www . snp. org.

6 www .dup . org. uk.

7 url : http : // www us Constitution / 2004. html

# ஒப்பியல் அரசாங்கம்

**சி. அ. யோதிலிங்கம்**

அரசறிவியலில் ஒப்பீட்டு அணுகுமுறை என்பது நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வந்த ஓர் அணுகுமுறையாகும். கடந்த கால, நிகழ்கால அரசியல் நிறுவனங்களையும் அரசியல் நடவடிக்கை களையும் ஒப்பீடு செய்வதன் மூலம் அரசறிவியலில் சில பொது முடிவுகளையும் விதிகளையும் அடைவதற்கு எத்தனிக்கின்ற ஒரு முறையே ஒப்பீட்டு அணுகுமுறையாகும்.

இந்நூல் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், சோவியத்யூனியன் ஆகிய ஐந்து நாடுகளின் அரசாங்க முறைகளை ஒப்பிடுகின்றது. இவ் ஒப்பீட்டு அணுகுமுறையில் அரசாங்க முறையின் வரலாற்றுப் பிண்னணி, சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, அரசியற்கட்சிகள், அமுக்கக்குழுக்கள் என்பனவும், அடிப்படை உரிமைகள் வழிகாட்டி நெறிகள் என்பனவும் இந்நூலில் ஆராயப்படுகின்றன.



*சி. அ. யோதிலிங்கம் (1956) இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் அரசறிவியல் துறையில் முதுமாணிப் பட்டத்தி னையும், இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டத்தரணி பட்டத்தினையும் பெற்றவராவர். கூடவே பண்டாரநாயக்கா சர்வதேச கற்கை நிலையத்தில் சர்வதேச விவகாரங்களில் பட்டப் பின்னிலை டிப்ளோமாவையும் தேசிய கல்வி நிறுவனத்தில் பட்ட பின் கல்வி டிப்ளோமாவையும் பெற்றிருக்கின்றார். இலங்கையின் அரசியல் யாப்புகள், இலங்கையின் இனக்குழும அரசியல், இலங்கையின் அரசியல் கட்சி முறைமை, இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும், சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள், இலங்கையின் இனப்பிரச்சினையின் வரலாறு ஆகிய இவரது ஆறு நூல்கள் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றன. கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் வருகை விரிவுரையாளராக பணியாற்றியுள்ள இவர் தற்போது கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடத்தில் ஆசிரியராக பணியாற்றுவதுடன் இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான ஆய்வகத்தின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.*

ISBN 955-659-001-3

9789556590012

குமரன் புத்தக இல்லம்

*விடயம்: அரசறிவியல்*

விலை ரூ 295.00